உ

[illegible] துணை.

# தேவி பராக்கிரமம்.

---

இஃது

சென்னை கிறிஸ்டியன் காலேஜ் மாஜி தமிழ்ப்பண்டிதரும்.

உபாசிரியரும், சைவப்பிரசாரணருமாகிய.

கநாநி - இரத்தினவேலு முதலியாரவர்களால்,

இயற்றப்பட்டு

கோ. பெருமாள் முதலியாரால்,

சென்னை.

சரஸ்வதி அச்சு இயந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

1914.



கணபதி துணை.

# தேவீ பராக்ரமம்.

---

## விநாயகர் துதி.

[illegible]

[illegible]

[illegible]

### வெண்பா.

[illegible]

[illegible]

## தேவியின் துதி.

### கட்டளைக் கலித்துறை.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

## பதிகம்.

### அறுசீர்க்கழிநெடில் விருத்தம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

உ

கணபதி துணை.

# தேவீ பராக்ரமம்.

---

## விநாயகஸ்துதி.

### ஶ்லோகம்.

ஓங்கார நிலயந்தேவம் கஜவக்த்ரஞ் சதுர்புஜம்
பிசண்டில மஹம்வந்தே ஸர்வவிக்நோபசாந்தயே

### வெண்பா.

உலகு துதிசெய்ய மும்பன் முகத்தோன்
நலகருளைச் செய்க வினிது.

## தேவீஸ்துதி.

### கட்டளைக் கலித்துறை.

பூவின் கிழத்தி யலரயன் றேவிநற் புங்கவர்கள்
தேவின் மனைவி கஜநா யகிவல்லி தேவனொடும்
பாவின் மொழியிற் பராவி வரம்பெறு பாவை முக்கட்
கோவின் கிழத்தி யருள்வாய் குயின்மொழிக் கோமளையே.

## பலதேவர்.

### அறுசீர்க்கழிநெடில் விருத்தம்.

ஆதியில் வணங்குந் தேவராம் ஐங்கர னவன்பின் வந்த
சோதிவேற் குமரன் மேருத் துரோணமா வளைத்த சிவன்
யாதுமை வடுகன் வீரன் மால்மலர் மருவு செய்யாள்
துர்கா யந்ரி யின்னோ ருறுதுணை புரிக மாதோ.

உ


ஸுபமஸ்து

# நூல் வரலாறு.

சர்வ மங்களப் பிரதையாகிய மகா தேவியே ஸமஸ்த ஜகதாதார காரண பூதையென்றும், அப்பரா சத்தியின் திருவருளாலேயே அடைதற்கரிய அரும்பெரும் பதவிகளனைத்தும் அடைதலாமென்றும், அவ்வன்னையேபிரமாதிதேவர்கட்கெல்லாங்கிருபாநோக்கம்வைத்துச் சிருஷ்டியாதிகளை யியல்புற நடத்துவாளென்றுமுணர்ந்த வசிஷ்டர், புலத்தியர், சுகர், சம்வர்த்தர், சம்புபத்தர், சநாதநர், சுநச்சேபர், மாண்டவியர், துருவாசர், வேதாரணியர், ஆத்திரேயர் புலகர், சமதக்கினி, சங்கர், சௌநகர், மாதேசர், லிகிதர் பராசர் கர்க்கர் நாரதர் குர்சர் பரத்துவாசர் காசிபர் வாமதேவர் உத்தாலகர் கண்ணுவர் விசுவாமித்திரர் முதலிய முனிசிரேஷ்டர் முன்னொருகாலத்தில் பிரமதேவனை நோக்கி நாங்கள் தவஞ் செய்தற்குரிய புண்ணியபூமியொன்றனை யடியேங்கட்குக் குறிப்பித்தருளவேண்டுமென வேண்ட, சதுர்முகன் அவர்கள் கருத்திற்கிணங்கித் தருப்பையொன்றைச் சக்கரமாக வளைத்து நிலமிசை புருட்டி முனிவர்களே! இந்நேமியைத்தொடர்ந்து செல்லுங்கள். இது நிற்குமிடமே நீங்கள் தவம் புரிதற்குரிய விடமெனவிடுப்ப, முனிவர்கள் அதனைப்பின்பற்றிச் சென்றனர்: அது தங்கிய வனமே நைமிச வன மெனப்படும். [நேமி-சக்கரம். நேமி சம்பந்தம் நைமிசம்] முனிவர்கள் ஆங்கே ஒருங்குகூடி அநேக வருடங்கள் செய்தற்குரிய சத்திரயாகத்தை நடத்துபவராய்த்திருவெண்ணீறணிந்து அக்கமாலை சூடிச்சிவத்தியான பரராய் வேதாகமாதிகளாற் பரம்பரனையும் பராசத்தியையுந் துதிசெய்து வதிந்திருந்தனர்.

## நூல் வரலாறு.

அக்காலத்தில் சதுர்வேத ஷடங்க அஷ்டாதசபுராணங்களை
வியாசமுனிவர்பால் ஐயந் திரிபு அறியாமையென்னு முக்குற்ற
மகலக்கற்ற புண்ணிய சொரூபியாகிய சூதமுனிவர் அங்கெழுந்
தருள. முனிவர்கள் கண்டு ஆனந்தங்கொண்டு எதிர்சென்றழைத்து
அருக்கிய பாத்திய ஆசமனாதிகளாலுபசரித்து, உயர்ந்த பீடத்தி
லிருத்தி. மலரகிதஞான மகாநுபாவரே! அடியேங்கள் செய்தவப்
பயனால் தேவரீரை ஈண்டெழுந்தருளப் பெற்றோம். தேவரீர் அடி
யேங்கட்குப்பன்முறை செய்த உபதேசத்தினால் சிவபெருமானைப்
பிரியாது தீயிற் சூடுபோல அபின்னையாயிருக்கும் அமலையாகிய
மகாதேவியே அவ்விறைவன் செயலையு மியக்குகின்றவளென்றும்,
அவள்திருவடியே நற்கதியளிப்பதென்றும். யாங்கள் ஒருவாறுணர்ந்
திருந்தும் அவ்விறைவியின் புகழைக்குறிக்கும் பல சரித்திரங்
களைக் கேட்டிருந்தும். அத்தேவியானவள் அடியார்க்கெய்திய
துக்கங்களைந்து இஷ்டசித்திகளை யருளும்படி சகலீகரித்த சரி
த்ரங்களை நன்கறிய மனநாடியுள்ளோம். திருவாய் மலர்ந்தருள
வேண்டுமென, சூதமுனிவர் அகமகிழ்ந்தருளி அசைவறவிருந்து
அம்பிகையின் அடிமலர்போற்றி, அருந்தவச செல்வர்களே! அகில
மாதாவின் சரிதசாகரம் அளவிடற்பாலதன்று. முன்னொரு காலத்
தில் சிவபராக்கிரமமாகிய அஷ்டாஷ்டமூர்த்தங்களை உங்கட்குக்
கூறியுள்ளோம். இப்போது நீங்கள் விரும்பிய சரிதையைச்சுருக்கித்
தேவீபராக்கிரமமென அஷ்டாஷ்டலீலைகளைச் சொல்லுகின்றோம்.
பெரியோரைச் சேவித்தது வீணாகாமற் பயனுண்டாகச் செய்தீர்க
ளென்று சிறிது நிஷ்டைகூடித்தேவியின் திவ்விய மங்கள சொரூ
பத்தை மனதிலிருத்தி அவர்கட்குக் கூறியருள, அதைக்கேட்ட
நைமிசாரணிய வாசிகள் பேரின்பப் பெருக்கிலாழ்ந்து உரைகுழற
உடலசைய உள்ளமுருகப் பாடிப்பரவி ஆநந்தக்கூத்தாடிப் பரவச
ராய்ப் பக்தி சிரத்தையோடு தேவியின் திருவருளுக்கிலக்காய்
இனிது வீற்றிருந்தார்கள்.



## முதலாவது

# கணபால சிருஷ்டி.

உலக முழுவதையும் பெறாது பெற்ற உமாதேவியார் தமது தோழிகளாகிய ஜயை விஜயை முதலாயினாரோடு விளையாட்டயர் கையில், விஜயை விமலையைப் பணிந்து, தாயே! நமது சிவபெருமானுக்கு நந்தி பிருங்கி முதலிய பிரமத கணங்கள் கணக்கின்றியுள்ளன. நமது திருவாயிலைச் சிவகணங்களே காக்கின்றனராதலின், அவர்கள் சிவாக்கினைப்படி நடப்பார்களன்றி ஒரு காலத்தில் நமது கட்டளையைக் கொள்ளமாட்டார்கள். தேவி! உமக்கென்றோர் உத்தம கணபாலனும் சிலகணங்களுமிருத்தல் நலமென்றனள். சின்னாட்பின்னர், தேவியார் தோழிகளோடு நீராடிக்கொண்டிருக்கையில், ஒருநாள் சிவபெருமான் திருவாயிலிலிருந்த நந்தி பகவானைச் சமயந்தேராது உட்புகுத, அம்மையார் உபசாரவஸ்திரமணிந்திருந்தாராகலின் நாணெய்தி நமது தோழி விஜயை சொன்ன விடயம் மெய்யே. நமது கட்டளையின்றி இவ்வந்தப்புரத்தில் அணுமாத்திரமும் ஒன்றும் நடக்கப்படாதென்று கருதி, கையில் ஜலங்கொண்டு உடலைத் தேய்த்துருட்டிச் சிவத்தியானஞ் செய்து பிரணவஸ்வரூபமும் யானை முகமும் திரிநேத்திரங்களும் மங்கள ரூபமுமுடையராய் வெள்ளிய வஸ்திரமணிந்து ஸர்வ வியாபியாய் விளங்கும் கணேசனெனும் புத்திரனை நிர்மித்துப் பிராணனைக் கொடுத்துத் திருவாயிலிலிருத்தி, “நீ நமதாணையின்றி எவரேயாயினும் உள்ளேவிட்டற்க” என்றாஜ்ஞை தந்து, “நீயென் பிரிய புத்திரன் நீ தீர்க்காயுளாயிரு” என்றாசீர்வதித்துக்கூற, கணபாலன் “யான்செய்யும் பணிவிடைகள் யாவை” என; யாமவனை “நீ

இப்போது துவாரபாலகனுயிரு" என்றொரு தண்டமளித்து முத்த மிட்டு ஆலிங்கனஞ்செய்து அந்தப்புரமடைய, கணபாலர் திரு வாயிலி லெழுந்தருளி யிருந்தனர்.

ஏவம்விசார்யஸாதேவீ ஜலம் ஜக்ராஹ பாணிநா |
தேஹம்ஸ்தம்ருத மாதாய சயாத்வாரூபம் ப்ரபோஸஸுபம் ||
நிர்மாயப்ரணவாகாரம் சதுர்பாஹூம் த்ரிலோசநம் |
ஸுசலாம் பாதரம் விஷ்ணும் கஜவக்த்ரம் ஸிவாக்ருதிம் ||

பின்னொருநாள், சிவபெருமான் பிரமத கணசகிதமாய்த் தேவியின் அந்தப்புரமடைய, கணபாலர் ஒருவரையும் உள்ளே செல்லவிடாது தண்டத்தைக் கையிலெடுத்துத் தடைசெய்ய சிவ பெருமான் "நான் யார்? சிவனென்றறியாயா?" என. "சிவனுனு லென்ன? தாயின் கட்டளையின்றி விடமாட்டேன்" என. "நானே உன் தாயின் நாயகன்" என. கணபாலர் "ஆயினுமாகுக! இங்கேயே நிற்கவேண்டும்" என. பிரமத கணத்துடன் சண்டை தொடங்கியது கண்டு கணபாலர் கோபித்துக் கையிலிருந்த முசலத்தாற் பலரையும் பலவாறு புடைத்துத் துரத்த. சிவபடர் களும் பிரமன் விஷ்ணு நந்தி பிருங்கி முதலினோரும் சமீபித்தற் கஞ்சி நெடுந்தூரத்தினிற்கும் பெருமானை யணுகி. நாங்கள் அவனை வெல்ல வலியில்லோமென. சங்கரன் களிபொங்கிக் கணக்கில்லாத வர்களாகிய நீங்கள் அவ்வொருவனுக்கு ஆற்றாது புறங்காட்டி யோடி வந்தது விந்தையே, விரைவில் அவனை யப்புறப்படுத்தி வழி செய்யுங்களென மந்தகாசத்துடன் கூற, அவர்கள் மீண்டும் கணபாலரை யடைந்து, சதுர்வித வுபாயத்தாலும் அவர் இணங்காமை கண்டு வருந்துகையில், அந்தப்புரத்திலிருந்த தேவிமாரிடம் விஜயையடைந்து விர்த்தாந்தங்களை வெளியிட. தேவி அபிமானத்தினுல் ஒருவரையும் விடவேண்டாமென்று கண பாலருக்குக் கட்டளை யனுப்ப, கணபாலர் தாய் மொழிப்படி

உடையை யிறுக்கிக்கட்டிக் கிரீடமணிந்து தொடைதட்டி. பிரமத கணங்களே! உங்களை யடித்தெறிந்து விடுவேன். நானே பார்வதி புத்திரன். நீங்களோ சிவகணங்கள். நாமிருவரும் சமானர். நீங்கள் சிவாக்கினையைக் காத்துக் கொள்ளுங்கள். நானும் தாயின் கட்டளைப்படி நடந்துகொள்வேன். நீங்கள் உட் புகுதவேண்டுமாயின் என்னை வென்றாவது வேண்டிக்கொண்டாவது போகக் கடவீர்களென. அப்பிரமத கணங்கள் மீண்டும் சிவபெருமானையடைந்து விண்ணப்பிக்க. சிவபெருமான் பிரமத கணங்களாகிய நீங்கள் விநயத்தாற் செல்வது நாணமான செயல் எனக்கூறிவிடுப்ப. அவர்களில் நந்தி பிருங்கி முதலினோர் கணபாலரோடு போர்க்குத் தொடங்க. கணநாதர் இருப்புலக்கையால் எதிர்த்தோருடைய மண்டை கை கால் கன்னம் முதலியன உடைபடப்புடைத்தனர். அதனால் எண்ணில்லார் கீழ்விழுந்தனர். சிலர் ஓடினர். சிலர் கணபாலனைத் துதித்து வேண்டிக்கொண்டு சிவசன்னிதியடைந்தனர். சிவபெருமான் சிறிது சினங்கொண்டு பிரமன் விஷ்ணு முதலிய தேவர்களையனுப்ப. அவர்களெய்தித் தமது அஸ்திரங்களை விடுத்தனர். இதனை யறிந்த அம்பிகை இருசக்திகளைப் படைத்துக் கணபாலர்க்குதவி செய்ய அனுப்பினள். அவர்களில் ஒரு சக்தி கோரரூபமும் பெரிய மேனியும் மலைபோன்ற முகத்திற் குகைபோலத் திறந்த வாயுமுடையவள். மற்றொருத்தி மின்னல் போன்ற வடிவமும் எண்ணிறந்த கரங்களு முடையவள். இவ்விருவரும் அமரர் செலுத்திய அஸ்திரங்களை யத்தத்தாற் பற்றி வாய்பெய்து விழுங்க. கணபாலரொருவரே இருப்புலக்கையா லடித்து. பூர்வம் கடல் முழுவதையும் ஒரு மந்தர மலையே கலக்கினாற்போலத் தேவர் சேனையைக் கலக்கினர். நாரதர் முதலிய மகரிஷிகள் வேடிக்கை பார்த்தார்கள். யாவரும் கலங்கினர் கடலுந்திசையுங் கலங்கின. மலைகள் குலுங்கின. திசைகள் செவிடுற்றன. அச் சமயத்தில் இந்திராதி தேவர்களும் உயிர் கொண்டிருந்த பிரமத கணங்களும்

சிவபெருமானை யடைந்து, ஸ்வாமீ! அக்கணனை வெல்ல முடியா தென, பிரமனும் விஷ்ணுவும் கணபாலனிடம் போர்புரிகையில் சிவபெருமானே வஞ்சகமாக அவரைப் பாசத்தால் வீக்க. நாரதர் தேவியாரிடம் சென்று, தாயே! மானத்தை விடக்கூடாதெனக் கூறி மறைந்தனர்.

பிராட்டிபெருஞ்சினமெய்தி அநேக சக்திகளையுண்டு செய்ய. அவர்கள் மகாதேவியின் கட்டளை பெற்று அங்கங்கசுப்பட்டவர்களை வாயிற் பெய்து கபளீகரித்தும் வாயை யங்காந்துகொண்டும் கோர ரூபங் காட்டியும் தலையசைத்துக்கொண்டும் பெரிய யுத்தஞ் செய்கையில், இச்சங்காரத் தொழிலைக் கண்ட விஷ்ணுவாதி தேவர்களும் முனிவர்களும். ஐயோ அகாலத்தில் மகாப்பிரளயஞ் சம்பவித்ததே யாது செய்வோம்? ஈசுவரி கிருபையிருந்தாலன்றி இஃதடங்காதென்றெண்ணி யிருக்கையில். சக்திகள் தராதரமின்றி யாவரையுந் துன்பியற்றினர். பார்வதி தேவி மகாதேஜஸோடு அக்கினிமயமாக விளங்குவது கண்டு யாவரும் பிரமித்து நின்றனர். அதுகண்ட நாரத முனிவர் தேவமுனிவர்கட்கு இதஞ்செய்யக் கருதியவராய்ப் பிரமாதி தேவர்கள் வேண்டுகோளால், சில்முனிவர் களோடு பார்வதி தேவியாரிடமெய்தி.

ஜகதம்ப நமஸ்துப்யம் ப்ரக்ருத்யைதே நமோஸ்துதே |
அபர்ணாயை நமஸ்துப்யம் கிரிஜாயை நமோஸ்துதே |
பவாந்யைதே நமஸ்சைவ துர்காயைதே நமோஸ்துதே |
பத்ராயை நமஸ்துப்யம் ப்ரக்ருத்யைதே நமோஸ்துதே |
சண்டிகாயை நமஸ்சைவ காத்யாயந்யை நமோஸ்துதே |

ஜகந்மாதாவே! பிரகிருதிரூபியே! சருகுபக்ஷணமுமின்றித் தவஞ் செய்பவளே! இமாசலமன்னன் புதல்வியே! பவானியே! துர்க்கஸம்ஹாரியே! சர்வமங்களையே! ஆதியானவளே! சண்ட முண்டஸம்ஹாரியே! காத்தியாயனியே! நமஸ்காரம் நமஸ்காரம் நமஸ்காரமென்று தோத்திரஞ்செய்யும், அவர்களைப் பாராமலும்


ஒன்றுஞ் சொல்லாமலுமிருந்தமையின், முனிவர்கள் பயந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, மாதா! சிவபெருமானும் நாங்களும் பெருங்கஷ்டமெய்துதலின் சாந்த மடையவேண்டும். நாங்கள் யாவரும் உம்மால் சிருஷ்டிக்கப் பட்டவர்கள். சாந்தமாகவேண்டும் க்ஷமிக்க வேண்டும் க்ஷமிக்க வேண்டு மெனப் பலவாறு பிரார்த்திக்க, அன்னை அவர்கள் விஷயத்தில் அன்பு கூர்ந்து, என் மகன் மூர்ச்சை தெளிந்தெழுந்து உங்கள் யாவராலும் பூஜிக்கப்பட்டு உலகிற்கு முதற் கடவுளாகு மட்டும் சங்காரமு மொழியாது. நீங்களுஞ் சுகமெய்தீர்கள் எனக்கூற, அவர்கள் யாவரும் சிவ பெருமான்பால் ஓட்டமாயடைந்து கூற, சிவபெருமானும் தேவ முனிவர்களுடன் யோசித்து, உலகிற்கு க்ஷேம முண்டாவது முக்கியம். தேவியின விருப்பத்தின்படி நடக்கவேண்டுவது தானெனத்தீர்மானித்து, துரோணுசலத்தை வருவித்து இறந்த பிரமத கணங்கள் முதலிய யாவரையும் எழுப்பி, பாசபத்தராக விருந்த கண்பாலரைப் பார்த்து வருந்திப்பாசத்தை யகற்றித் தமது திருக்கரத்தாற்றடவ. கணபாலர் உடனே யெழுந்து என் முசல மெங்கே? என்னொடு போர்செய்த தேவர்களெங்கே? எனக்கூறிக் கொண்டே முசலத்தை யேந்தி முன்னே நிற்க, தேவர்களும் நாரதாதி முனிவர்களும் மனங்களிக்க, சிவபெருமான் திருமால் முதலானோரை நோக்கி இனிப்பார்வதி தேவி விரும்பிய காரியங்கள் உங்களாற் செய்து முடிவுறவேண்டு மென்றூர்கள்.

தேவர்கள்யாவரும் மனமகிழ்ந்து, சுந்தராகாரமுடையகணனை, கணத்தியக்ஷர்களாயிருக்கும் விஷ்ணுவாதி தேவர்கள் யாவரும்கண நாதனாக விருக்கும்படி பட்டாபிஷேகஞ் செய்து வஸ்திராபர ணுதிகளாலலங்கரித்து, புதல்வனெழுந்தானென்று களிப்பெய்திக் கோபந்தணியப் பார்வதிதேவியால் அழைத்துச் சென்றுகாண்பிக்க, அம்பிகையகங்குளிர்ந்து, கணபதியைச் சகல சாம்பிராஜ்யங்களு முண்டாக ஆசீர்வதித்து அவருடலைத் தடவி, மகனே! நீவருந்தித்

தன்யனுயினே. நீ இன்று முதல் முதலிற் பூசிக்கத்தக்கவனுகுக. உன்னைச் செஞ்சந்தனம் செம்மலர்கள் நைவேத்தியம் நீராஞ்சனம் தாம்பூலம் அர்க்கியம் பிரதக்ஷிண முதலியவற்ருற் பூசிப்போர் சகல காரிய சித்தியும் பெறுகவென்று கூறி. முன் கோபத்தில் விடுத்த சக்திகளை யழைத்துத் தம்மிடத்தொடுக்கிக் கொண்டனர். தேவர்கள் சந்தோஷமெய்திச் சிவபெருமானை யழைத்துச் சென்று தேவியாரோடு சமாதான வார்த்தைகள் கூறி, அருகே யமர்த்தி. கணபதியை யெடுத்து வந்து சிவபெருமான் தொடைமேலிருத்தினர். சிவபெருமான் சித்தங்களித்து. கஜமுகர் சிரமிசைத் திருக்கரம்வைத்து இவன் என் மகன் எனக்கூற, கணபதி உடனே துடையினின்றிழிந்து சிவபெருமானையும் தேவியையும் நமஸ்கரித்து. தேவர்களே! நான் செய்த குற்றத்தைப் பொறுக்க வென்றனர். அப்பொழுது சிவபெருமான். விஷ்ணுவே! பிரமனே! நாம் உலகிற் பூசிக்கப்படுதல்போல இக்கணேசன் எல்லாராலும் பூசிக்கத்தக்குரியன். அன்றியும் இவனை முதலிற் பூசித்தே நம்மைப் பூசிக்கக்கடவர். அப்படி இவனைப்பூசியாதவர் காரியஞ் சித்திபெய்தாரென்று கூறினர்.

அதன்பின், சிவபெருமான் முதலிற் கணபதியைப் பூசித்தனர். இரண்டாவது விஷ்ணுவும், மூன்ருவது பிரமனும். நான்காவது பார்வதியும். ஐந்தாவது ஏனைத்தேவர்களும். அதன்பின் முனிவர்களும் எல்லோரும் பூசித்தார்கள். யாவரும் ஆசீர்வதித்தனர். தேவர்கள் கந்தர்வர்கள் அப்சரசுகள் வாத்திய நாட்டிய சங்கீதங்கள் செய்தனர். இக்கணபதி விரதம் உத்தம விரதங்களி லொன்றென்று உணரத்தக்கது.

சதுர்த்யாந்த்வம் ஸமுத்பந்ந ஊர்ஜேமாஸிகணேஶ்வரா|
அஸதே சததாபேக்ஷ சந்த்ராஸ் யோதய நேமஷே|
ப்ரதமேசததாயாமே ஜாதேச கிரிஜாஸதீ|
நிர்மதாமாஸதே ரூபம் தஸ்மாத்தே வ்ரத முத்தமம்.



## இரண்டாவது

# ஸ்கந்தோத்பவம்.

---

சிவபெருமானை யிகழ்ந்து தக்கன் செய்த யாகத்தில் பல தேவர்களும் வந்திருந்தமைக்காக வெகுண்ட திருநந்திதேவர் ததீசி முனிவர் முதலானோர் சாபத்தால், காசிபப்பிரமாவுக்கும் மாயைக்கும் பிறந்த சூரபன்மன் சிங்கமுகன் தாரகனென்னும் அசுரர்கள் சிவபெருமானை நோக்கிப் பெருந்தவமியற்றி ஆயிரத் தெட்டண்டங்களை நூற்றெட்டு யுகமெல்லையும் அரசு செய்ய வரம்பெற்று. தேவர் முனிவர்களைப் பலவாறு வருத்தினமையின், சகிக்கமுடியாத தேவர்கள் மகா கைலாயமடைந்து சிவபெருமான் தேவியாரோடு திருவோலக்கங் கொண்டெழுந்தருளி யிருக்கும் சந்நிதானத்தில் சாஷ்டாங்கமாகப் பணிந்து கூட்டங்கூட்டமாய்க் கைகட்டி வாய்பொத்தி நின்று, எம்பெருமானே! நாங்கள் "சூராதியர் துன்பைச் சகிக்ககில்லேம்" என விண்ணப்பிக்க, பரமேசுவரன் "தேவர்களே! நீங்கள் மிகவும் மெலிந்தீர்கள். யாது வரம் வேண்டினும் தடையின்றித் தருவோம். அஞ்சாதீர்கள்" என்றநுக்கிரகிக்க, "எம்பெருமானே! தேவரீர் மலையரசகுமாரி யாகத் திருவவதாரஞ் செய்தருளிய உமா பிராட்டியாரைத் திருமணம் புரிந்தும் எங்கள் இக்கணகலத் தேவரீரைப்போன்ற ஒரு திருக்குமாரனைப் பெறுதல் கேட்டோம். அதனையே விரைவில் திருவருள் புரிதல் வேண்டும்." எனப் பிரார்த்திக்க, அமலன் "அமரர்களே! அங்ஙனமே யாகுக" என்று திருவாய் மலர்ந் தருளி, ஈசானம் தற்புருஷம் அகோரம் வாமதேவம் ஸத்தியோ ஜாதமென்னும் "ஐந்து முகத்தோ டதோமுகமுந்தந்து—திரு முகங்களாறாகிச் செந்தழற்கணாறு-மொருமுகமாய்த் தீப்பொறியா

றுய்ப்ப" என்றபடி—ஐந்து திருமுகங்களோடு அதோமுகமொன்றனையுந் தோற்றுவித்து ஆறு திருமுகங்களோடும் விளங்கி, தேவர்கள் அஞ்சித் துதிபுரிகையில், தமது ஆறு திருமுகங்களிலுள்ள நெற்றித் திருவிழிகடோறும் ஒவ்வொரு புலிங்கம் [நெருப்புப்பொறி] உண்டு செய்தனர். அவை பிரமாதி தேவர்களில் எவரேனும் நெருங்க முடியாத அதியுஷ்ணத்தோடு கூடியதாய் அண்ட முழுவதும் விரவிப்பரவின. அச்சமயத்தில் பக்கலிலிருந்த அம்மையார் துணுக்குற்றுச் சிங்காதனத்தை விட்டெழுந்து அ விரைவில் அந்தப்புரமெய்தினர். அப்படி விரைந்து செல்லுகை அன்னையார் திருவடியிலிருந்து ஒன்பது ரத்தினங்கள் சிந், [இதன் தொடர்ச்சி நவரத்தின வல்லியாரிற் காண்க] இது க டஞ்சி யெங்கும் பரவிய தேவர்கள் மீண்டுங் குழுமி, சிவ சந்நிதியடைந்து, "எந்தையே! சூரனுதியரைத் தொலைக்க ஒரு மைந்தனை யருள வேண்டிய வெங்கட்கு, எல்லையில்லாத தீப்பிழம்பையருளினால் அடியேங்கள் உய்வ தெங்ஙனம்? தேவரீர் திருநுதலிற் றோன்றிய தீப்பொறிகள் எல்லா வுலகங்களிலும் பரவின. விரைவில் அவற்றை மாற்றுவிடின் யாவு மழிந்து போதலில் ஐயமின்று. அக்கினிக் காற்றுது நீங்கிய நாங்கள் தேவரீரையன்றி வேறு சரணின்மையால் தேவரீர்பால் அடைக்கலம்புக்கேம்." எனப் பலவாறு பதுமகாபனுதியோர் பிரார்த்திக்க சிவபெருமான் "அஞ்சலிர்" என்று கையமைத்து ஒரே தி முகத்தோடுற்றிருந்து, தமது நெற்றித் திருவிழியி லுதித்த தீ யொளி வருமாறு கருதவும், அவை ஆறு பொறிகளாய் அண்ணை றன் நண்ணின. உடனே இறைவர் வாயுதேவனையும் அக்கினி தேவனையு நோக்கி "நீங்கள் இப்பொறிகளைக் கங்கையில் விடுக் -வீர்கள்" எனக் கட்டளையிட்டு, அதற்கியைந்த வலிமையுந் தருள, அவ்விருவரும் மாறி மாறி யெடுத்துச் சென்று மகிமை ங்கிய கங்கையை யடைந்து அதில் வைத்தார்கள். கங்காதேவியும்

அப்பொறிகளைச் சிரமிசைத் தாங்கிக் கணமொன்றில் சரவணப் பொய்கையில் விடுத்தனள். திருமால் முதலிய தேவர்கள் பத்துத் திசைகளிலுமிருந்து பொய்கையைப் பாதுகாத்தனர் அப்போது அச்சரவணப் பொய்கையில் ஆறு திருமுகங்களும் பன்னிரு திருப் புயங்களும் விளங்க, சிவபெருமானே குமாரசுவாமியாகத் தாமரை மலர்மிசை வீற்றிருப்பத் தேவர்கள் தரிசித்தார்கள். கார்த்திகை மாதர் அறுவரைப் பாலூட்டி வளர்க்கத் திருமால் முதலினோர் கட்டளை தர, அவ்வனிதையர் ஆண்டுற்றபோது, ஆறு குழந்தை களாகி அவர்கள் பால்முலையுண்டு திருவிளையாடல் செய்து கொண் டிருந்தனர். பின்னொரு பகலில் சிவபெருமான் தேவியாரோடும் விடையூர்ந்து சரவணப் பொய்கையை யடைந்து தேவியாரை நோக்கி, உன் மகனைக் கொணர்கவென, பிராட்டியார் அதி னிழிந்து ஆறு குழந்தைகளையும் ஒரு சேர அன்போடெடுக்கையில் ஆறு திருவுருவேற்றிருந்த குமாரக் கடவுள் ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் ஒரே திருமேனியுமாக விளங்க, தேவியார் தமது திருத்தனங்களினின்று சொரியும் பாலைப்பொன் வள்ளத்தினேற்றுப் புகட்டி யெடுத்துச் சென்று சிவபெருமானைப் பணிவிக்க, சிவபெருமான் தமது திருக்கரத்தா லெடுத்துத் திரு மார்பிலணைத்துப் பக்கலிலிருத்தினர். தேவியாரும் இடபவாகன மிவர்ந்து திருக்கைலாயகிரி யடைந்தனர்.

அந்த வேலையிற் கவுரியை நோக்கியெம் மைய
னிந்த நின்மகன் றனைக்கொடு வருகென வியம்பச்
சுந்த ரங்கெழு விடையினுந் துண்ணென வெழுந்து
சிந்தை கொண்டபே ராதரந் தன்னொடுஞ் சென்றாள்.

சரவ ணந்தனிற் றனதுசே யாறுருத் தனையு
மிருக ரங்கனா லன்புட னெடுத்தனள் புல்லித்
திருமு கங்களோ ராறுபன் னிருபுயஞ் சேர்ந்த
வுருவ மொன்றெனச் செய்தன ளுலகமீன் றுடையாள்.

எந்தை சத்திக ளுயிரெலா மொடுங்குறு மெல்லை
முந்து போலவொன் றாகியே கூடிய முறைபோ
லந்த மில்லதோர் மூவிரு வடிவுமொன் றாகிக்
கந்த னென்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்.

---

## மூன்றாவது

# தாக்ஷாயணியவதாரம்.

---

ஒரு காலத்தில் பிரமதேவன் செய்த சிருட்டிகளெல்லாம் விருத்தி யடையாமையின் மனத்திருப்தி யின்றித் துக்காவகிரந்தனாய், இனி மாதர் முயக்கத்தாலுண்டாகுஞ் சிருட்டியைச் செய்யவேண்டு மெனக் கருதியவனாய், சர்வேசனால் பெண்கள் சிருஷ்டிக்கப் படவேண்டுமன்றி, அவ்வாறு நானே படைக்க வலியில்லேன். இவ்விடயத்தில் சிவசிவைகளின் அநுக்கிரகம் பெறுவேனென்று, உமாபரமேசுவரரை இதய தாமரையிலிருத்தி உக்கிரதவஞ் செய்கையில், அப்பெருந் திறலாளர் மனங்களித்து அர்த்தநாரீச்சுவர மூர்த்தமாகப் பிரத்தியட்சமாக, பிரமதேவன் சாஷ்டாங்கமாகப் பணிந்து. அஞ்சலியஸ்தனாய்ப் பக்தி சிரத்தை யோடு மதுரமான வியாகரணலக்ஷண சப்தத்துடன் கூடிய தோத்திரங்களால் மஹாதேவனையும் மஹாதேவியையும் அன்பின்மய மாகி நின்று பக்தி சிரத்தையுடன் பின்வருமாறு தோத்திரஞ் செய்யலாயினன்.



2

“ஜயதேவமஹாதேவ ஜயேஶ்வரமஹேஶ்வர
ஜயஸர்வகுணஶ்ரேஷ்ட ஜயஸர்வஸுகாதிப|
    ஜயப்ரக்ருதிகல்யாணி ஜயப்ரக்ருதிநாயிகே
    ஜயப்ரக்ருதிதூராங்கி ஜயப்ரக்ருதிஸுந்தரி|
ஜயாமோகமஹாமாய ஜயாமோகமநோரத
ஜயாமோகமஹாலீல ஜயாமோகமஹாபல|
    ஜயவிஶ்வஜகந்மாத ர்ஜயவிஶ்வஜகந்மயி
    ஜயவிஶ்வஜகத்தாத்ரி ஜயவிஶ்வஜகத்ஸகி|
ஜயஶாஶ்வதிகைஶ்வர்ய ஜயஶாஶ்வதிகாலய
ஜயஶாஶ்வதிகாகார ஜயஶாஶ்வதிகாநுக|
    ஜயாத்மத்ரயநிர்மாத்ரி ஜயாத்மத்ரயபாலிநி
    ஜயாத்மத்ரயஸம்ஹர்த்ரி ஜயாத்மத்ரயநாயிகே|
ஜயாவலோகநாயத்த ஜகத்காரணப்ரும்ஹண
ஜயாபேக்ஷாகடாக்ஷோத்த ஹுதபுக்புக்தமௌக்திக|
    ஜயதேவாத்யவிஜ்ஞேய ஸ்வாத்மஸூக்ஷ்மத்ருஶோஜ்வலே
    ஜயஸ்தூலாத்மஶக்த்யம்ஶ வ்யாப்தவிஶ்வசராசரே|
ஜயநாநைகவிந்யஸ்த விஶ்வதத்வஸமுக்கய
ஜயாஸுபீரோஙிஷ்ட ஶ்ரேஷ்டாநுககதம்பக|
    ஜயோபார்ஜிதஸம்ரக்ஷா ஸம்விதாநபடூயுஷி
    ஜயோந்மூலிதஸம்ஸார விஷவ்ருக்ஷாம்குரோத்கமே|
ஜயப்ராதேஶிகைஶ்வர்ய வீர்யஶௌர்யவிஜ்ரும்பண
ஜயவிஶ்வபஹிர்பூத நிரஸ்தபரவைபவ|
    ஜயப்ரணீதபஞ்சார்த ப்ரயோகபரமாம்ருத
    ஜயபஞ்சார்தவிஜ்ஞாந ஸுதாஸ்ரோதஃ ஸ்வரூபிணி|
ஜயாதிகோர ஸம்ஸார மஹாரோக பிஷக்வர
ஜயாநாதிமலாஜ்ஞாந தம:படலசந்த்ரிகே|
    ஜயத்ரிபுரகாலாக்நே ஜயத்ரிபுரபைரவி
    ஜயத்ரிகுணநிர்முக்த ஜயத்ரிகுணமர்திநி|

ஜயப்ரமதஸர்வஜ்ஞ ஜயஸர்வப்ரபாதிகே
ஜயப்ரசுரதிவ்யாங்க ஜயப்ரார்திததாயிநி|
க்வதேவதேபரந்தாம க்வவயம்க்வசநோவசஃ
ததாபிபகவந்பக்த்யா ப்ரலபந்தம்க்ஷமஸ்வமாம்"

இத்தோத்திரத்தாற் களிகூர்ந்த அர்த்த நாரீசுவரர், பிரஜா விர்த்தியைக் கருதிச் செய்த உன் தவத்தைவியந்தோம். அதனை நிறைவேற்றுவோ மென்று தமது வாமபாகமாகிய சக்தியைப் பிரிய, பிரமதேவன் பரமேசுவரியும் சமஸ்த லோகங்கட்கும் மகேசுவரியும் சர்வஞ்ஞையும் சர்வ வியாபியுமாகிய மகாதேவியை அஷ்டாங்க பஞ்சாங்கமாக நமஸ்கரித்து, யான் படைத்தற் றொழிலைச் செய்யும்படி படைக்கப்பட்டு என் படைப்புகள் விர்த்தி யடையாமையின், இனி ஸ்திரீபுருஷ சங்கமத்தால் உலக சிருஷ்டி யாகவேண்டுமென்று இச்சைகொண்டேன். பூர்வம் ஸ்திரீ சமூ கங்கள் இதுகாறும் படைக்கப்படாமையின் அஃதெனக்குச் செய்ய இயலாததாயிற்று. எல்லாச் சக்திகளும் தேவரீராலேயே உண்டா தலின் அதுவிஷயமாகத் தேவரீரைப் பிரார்த்திக்கின்றேன். சரா சரப்பிரபஞ்சங்கள் ஈடேறும்படி தேவியாரின் ஓரம்சத்தால் என் புதல்வனை தக்ஷனுக்குக் குமாரியாக அவதரிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்க, பார்வதிதேவி தன் புருவமத்தியில் ஒரு சக்தியை யுண்டுசெய்து, அப்படித் தோன்றிய சக்தியை நோக்கி, நீ பிரமன் பிரியப்படி செய்க வெனக் கட்டளையிட்டு, சிவபெருமானுடன் கைலாயகிரியை யடைந்தனர்.

"தக்ஷிணாங்கபவோ ப்ரஹ்மா வாமதஸ்ச ஜநார்த்தந:" என்ற படி சிவபெருமானுடைய வலப்புறத்துதித்த பிரமதேவன், பார்வதி தேவியின் புருவ மத்தியிலுதித்த சக்தியைப் பணிந்து, தாயே! நீயென் மகனான தக்ஷப்பிரஜாபதிக்கு மகளாகி, உலகவிர்த்தியை யுண்டுசெய்ய வேண்டுமென்றிரப்ப, அத்தருணம் தக்ஷப்பிரஜாபதி

யும் பார்வதிதேவியின் அம்சமான குமாரியைப் பெறத்தவஞ் செய்து கொண்டிருந்தமையின், அச்சக்தி அப்படியே தக்ஷப் பிரஜாபதிக்குத் தனையையாகினள். அதுமுதலாக மாதர்களும் டருஷர்களுஞ் சையோகஞ்செய்து மக்களைத் தருவாராயினர் தக்ஷன்மகளாகத் தோன்றிய காரணத்தால் தாக்ஷாயணியென அம்மையாருக்கு அபிதான முண்டாயிற்று.



## நான்காவது

## மதுகைடப

# சங்காரசத்தி யநுக்கிரகம்.

---

மகா சமுத்திரம் பெரு வெள்ளமாகப் பெருக், அதில் மூவுலகங்களும் மூழ்கியழிய, திருமால் சேஷசயனத்தில் அறிதுயிலமர்ந்திருக்க, அவர் காதுகளிலிருந்த குறும்பியினின்று மஹாபலிஷ்டரும் அசுரத் தொழிலுடையவருமான மது கைடபன் என்னும் தைத்தியர் தோன்றி அக்கடலிலேயே வளர்ந்து பெரிய சரீரமுடையராய் அங்கேயே விளையாடி யுலாவிக்கொண்டிருக்கையில், தமக்குள் "காரணமின்றிக் காரியம் நிகழாதென்பதும் ஆதாரமின்றி ஆதேயப்பொருள் நிலைபெறாதென்பதும் உண்மையாகலின் நாம் ஆதார ஆதேயங்களின் றன்மையை யறியவேண்டும். இக்கடலுக்கு ஆதாரம் யாது? இது யாவருடைய படைப்பு? நாமிருவரும் யாரால் எப்படிப் படைக்கப் பட்டோம்? நமது தந்தை யெங்குள்ளார்?" என்றிவை முதலியன கருதிச் சிந்தித்து இருவரில். கைடபன் "மதுவே! இச்சலார்ணவத்தில் நம்மை நிலை பொறுத்தும் சத்தியே காரணமென்பது என் கருத்து. இக்கடலும் அச்சத்தியால் வியாபிக்கப் பட்டது. நம்மிருவர்க்கும் யாவர்க்கும் மேம்பட்ட அத்தேவியே காரணியாயிருக்கின்றன" ளென்றான். மதுவும் அங்ஙனமே அபிப்பிராயப் பட்டான். இவ்வாறிருவர்கள் யோசிக்கையில், வாக்பீஜமாகிய அக்ஷரமொன்று ஆகாயத்தி லுண்டாகக் கேட்டு மனதிற்கொண்டனர். உடனே மின்னொளி தோன்றிற்று. ஒளியும் இசையுங் கண்டு கேட்டு அவ்விருவரும் நன்றாராய்ந்து "வெற்றொளியுமன்று வெற்றொலியு

மன்று என்று நிச்சயித்துத் தமதுணைவையொழித்துப் பஞ்சேந்திரியங்களை யடக்கி மனதை அக்ஷரத்தில் நிறுத்தி, சமாதியோகத்தில் உடலையிருத்தி ஆயிரவருடம் அருந்தவம் ஆற்றினர். பராசத்தி அவர்களுக்குப் பிரசன்னையாய் அசரீரியாக விரும்பிய வரத்தைக் கேட்பீர்களாக என, தேவீ! யாங்கள் விரும்பும்போதுதான் எங்கட்கு மரணமுண்டாக அநுக்கிரகிக்க வேண்டுமென வேண்ட, அங்ஙனமே யநுக்கிரகித்தனர்.

மதுகைடபர் வர சிரேஷ்டத்தால் மகா வீரத்துடன் விளையாடிக் கொண்டிருக்கையில், உலக சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமதேவன் அவர்கட்கு முன்னே திடீரெனச் செல்லக்கண்டு. அவர்கள்களித்து ஓ பிரமதேவனே! நீ யெங்களோடு யுத்தஞ்செய்க. இன்றேல் உனக்காசனமாகிய தாமரையைவிட்டு எங்கேனுஞ் செல்க. வலியற்ற உனக்குச் சுகாசனமேதுக்கு? என்றனர். பிரமன் இவர்களோடு போர் புரிய நமக்கு ஆற்றல் சாலாது. யாது செய்வோமென்று தன்னுள் ஆலோசித்து, நமது வலியின்மையை இவர்களறிந்தால் விபரீதமாம். ஒருவனே நம்மைத் துவம்சஞ் செய்து விடுவானென்று பயந்து, விஷ்ணுமூர்த்தியை மனதாற் சரணமடைந்து அவர் துயிலுணரும் பொருட்டு, "தீனநாத! ஹரே! விஷ்ணோ! வாமந! மாதவ! விஸ்வம்பர! விசாலாக்ஷ! புண்ய ஸ்ரவண கீர்த்தன! ஜகத்யோநே! நிராகார. ஸர்க்கஸ்தித்யந்த ஹேதவே" என்றித்யாதி வசனங்களால் ஸ்துதிசெய்து இந்த இரண்டசுரரும் என்னைக் கொல்ல விருப்புற்றனர்: இவர்களினின்றும் என்னைக் காத்தருள வேண்டுமென்று பல்வாறு பிரார்த்தித்தும், விஷ்ணு நித்திரை தெளியாமையின் [illegible]

பஞ்சபௌதிக குணங்களாகிய சப்தாதிவிஷயங்களின் [illegible] யெவன் உணராததைப்போல இவ்விஷ்ணுவும் நித்திரை[illegible] [illegible]

சித்திராசத்தியையும் லக்ஷ்மியையும் துதித்து அவர்களுக் திருமாலைத் துயிலெழுப்ப முடியாமையின் இவர்களெல்லாம் சுதந்திரரல்லர்- பரதந்திரர். அம்பிகையொருத்தியே சுதந்தரை. ஆதலின் சங்கரியையே பலவாறு துதித்துக் காரிய சித்திபெற வேண்டுமென்று நான்குவகையாகத் துதிசெய்ய அக்கருணாகரியின் அநுக்கிரகத்தினால் விஷ்ணுமூர்த்தியின் சரீரத்தினின் றும்தாமசரூபமான நித்திராசக்தி அவ்விஷ்ணுவானவரையும் ஒழிக்கும் பொருட்டு வெளிப்பட்டு ஆகாயத்திற் கட்புலனுக் கெட்டாதிருந்த அம்பிகையின் பக்கலில் நின்றனள். உடனே விஷ்ணு தேஜோரூபியாய்ப் பிரகாசித்துத் தன்னுடைய உடலை யசைத்தனர். கெம்பீரத்தோடு பிரமனை நோக்கி நீ தவத்தைவிட்டு இங்கேன் வந்தனை. பயங்கொண்ட மனதோடிருப்பதேன்? என, பிரமன் எந்தையே! உமது செவிக்குறும்பியினுதித்த இவ்வசுர ரிருவரும் என்னைக் கொல்ல வருகின்றனர். யான் தேவரீரைச சரணடைந்தேன் என விண்ணப்பிக்க, திருமால் இதோ ஒரு நிமிஷத்தில் இவர்களை யொழிக்கின்றேன். என் வலிமையை யுணராது உன்னைத் தொடர்ந்து என்னோடும் போர் செய்ய எத்தனிக்கின்றார்கள் எனச் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே மதுகைடபர் நான் முகனைப் பரிகசித்துப் போருக்கழைத்து, உன்னையுங் கொன்று உனக்காகப் பேசும் சேஷசயனியையும் பின் கொன்றுவிடுவோம். தவறினுல் உங்களுக் கடிமை யென்றார்கள்.

அவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில். மதுவென்பவன் முற்பட்டோடி விஷ்ணுவின்மேற் பாய்ந்து யிறுக்கிக் கட்டிக்கொண்டு மற்போர் செய்தனன். விஷ்ணு அவனோடு பெரும்போர் செய்து அவனை யோடும்படி செய்தனர். அது சமயத்தில் கைடபன் அவனைப்போலவே பெரும்போர் செய்தனன். இப்படியே இரண்டாயிரம் வருடம் ... ஆயிரம் வருடம் திருமாலோடு போர் புரிந்தனர். ... அதனால் விஷ்ணு பெரிதும் இளைத்து நின்றனர்.

இவர்கள் செய்யும் யுத்தத்தைப் பிரம தேவனும் நித்திரா சத்தியும் ஆகாயத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது விஷ்ணு இவ்வசுரர் மகாதேவியின் வரத்தால் தாங்கள் விரும்பிய போதன்றி யிறவாதவர்கள். இதனை யறிந்திருந்தும் ஐயாயிர வருடமாக அரும்போர் செய்தோம். இவர்களை வஞ்சனையாற் கொல்ல வேண்டுமென்று கருதி. அசுரர்களே! நீங்களிருவரும் ஒவ்வொருவராகத் தனித்து என்னோடு போர்புரிதலின் நீங்கள் இளைக்கவில்லை நானோ பெரிதும் இளைப்புற்றேன். எனக்குச் சிறிது அவகாசந் தந்து அதன்மேல் போர் செய்தல் தகுதியென, அவர்கள் அதற்கிணங்கி யங்கே யிருந்தனர். விஷ்ணு நெடு நேரம் யோசித்துத் தேவியின் கருணையன்றி முடியாதென் றுணர்ந்து. சோதி சொரூபமாய் நிற்குந் தேவியை அஞ்சலி செய்து "புவனேஸ்வரி! மஹாமாயி! புத்திமுத்திப் பிரதாயினி! ஸ்ருஷ்டிஸம்ஹாரகாரணி! யானுன்னை நமஸ்கரிக் கின்றேன். மனங்கலங்கித் திகைக்கின்றேன். யானுன் மாயையான நித்திரா சத்தியால் கவரப்பட்டு பிரக்ஞையற்றுக் கிடந்தேன். அப்போது பிரமன் என்பால் வந்து நான் இந்திரிய சேஷ்டை யற்று அசேதனனா யுறங்குவது கண்டு என்னை யெழுப்ப முயன்று எழுந்திராமையால். தேவரீரைத் துதிக்கத் தேவரீர் என்னை விழிக்கச் செய்தீர் அதுமுதல் ஐயாயிர வருடமாக மதுகை டபரோடு போர் செய்திளைத்தேன். அவர்களோ உமது வரத்தால் வன்மையுற்றவர்கள். நான் அவர்களோடு போர் புரிய வியலாது மறைந்து விட்டால் அவர்கள் பிரமனைத் தடையின்றிக் கொல் வார்கள். ஆகலால் என்னையும் பிரமனையுங் காத்தருளவேண்டு மென்று சரணமடைந்தேன். அநுக்கிரகிக்குந் தருணம் இதுவே. இப்பொழுது அநுக்கிரகஞ் செய்யாவிடின் அசுரர் எங்களைக் கொன்று விடுவார்கள். யான் என்ன செய்வேன்? எங்கே போவேன்" என்று கண்ணீர் பெருகி அழுது கின்றனர்.

தேவி கருணைமிகுந்து, "விஷ்ணுவே! அஞ்சற்க. நீ போருக்குச் செல்க. உனக்குச் சயமுண்டாக அவர்களை மோகிப்பித்து வஞ்சிக்கின்றேன். அத்தருணம் அவர்களை வெற்றி கொள்க" என விளம்ப, பெரிதுங்களித்து, விடை கொண்டு கடலிடையே போர்த் திறங்காட்டித் தோள் கொட்டி நிற்க, மதுகைடபர் சிரித்து "ஆ ஆ போருக்குவருக. பூர்வம் உன்னால் எம்மினத்தவர் தோல்வியுற்றுள்ளார். இப்போது நீ யெங்களால் தோல்வியடையப் போகின்றாய்" என, விஷ்ணு வெகுண்டு கை முஷ்டியால் இருவரையுங் குத்த இருவரும் முஷ்டியுத்தஞ் செய்ய, திருமால் சலித்து அம்பிகையைப் புத்தியானினைக்க, ஜகன்மாதா திருமாலுக்கருள் கூர்ந்து அசுரர் முற்றொன்றி கடைக்கண்ணாகிய காம பாணத்தைப் பிரயோகித்து, புன்னகைத் தீயை மூட்டி, அபிநய நாடகத்தாற் போர் புரியவொட்டாது மயக்கி, சங்கீத கானத்தால் மோகாந்தகாரத்தில் மூழ்குவித்து, வெறிபிடித்தார் போலத் தம்மையே பார்த்திருக்கச் செய்தனள். அத்தருணத்தில் விஷ்ணு அசுரர்களே! உங்கள் வலியை மகிழ்ந்தேன். உங்களுக்கு யாது வரம் வேண்டுமென்றனர். மதுகைடபர் மயங்கியிருந்தும் விஷ்ணுவின் வார்த்தைக்குச் சகியாமல். "நாங்கள் உன் சமர்த்திற்கு மெச்சினோம். நீ விரும்பிய வரத்தைக் கேள்" என, விஷ்ணு உள்ளமகிழ்ந்து, "உங்களுக்குக் கொடுக்குந்திறம் உண்மையாயிருந்தால் நீங்கள் என்னாற் கொல்லப்பட வேண்டும்" என்று கூறி, அவர்கள் ஜலமில்லாத விடத்திற் கொல்லப்பட வேண்டுமென, விரும்பியபடியே தமது துடையை நீட்டி அதனை நிர்ஜலப் பிரதேசமாகக் காட்டி. அத்துடைகளில் தங்கள் தலையை வைக்கச் செய்து தமது சக்கராயுதத்தினாற் சங்கரித்துத் தேவியைப் பலவாறு துதித்துப் பிரமதேவனுக்குற்ற இடையூற்றினை நீக்கினர்.

நமோதேவி மஹாமாயே ஸ்ருஷ்டி ஸம்ஹாரகாரிணி
அநாதி நிதநே சண்டி புக்திமுக்திப் பிரதேசிவே

நதே ரூபம் விஜ்ஞாமி ஸகுணம் நிர்குணம்ததா
சரித்ராண்யக்ருதோ தேவி ஸங்க்யா நிதா நியாகிதே.
அநுபூதோ மயாதேத்யா ப்ரபாவஸ்சாதி துர்கட:
யத்ஹம் சித்ரயா லீந: ஸத்யா தோஸ்மி நிசேதந:
ப்ரஹ்மணைசாதியத்ரேண போதி தோதி புந: புந:
நப்ரபுத்தஸ் ஸர்வதாஹம் ஸங்கோசித ஷடிந்த்ரிய:

---

ஐந்தாவது

# குபேரநேத்ரோத்பாடநம்.

---

பண்டுபெருமகர்ப விறதியில், கலிங்கநாட்டரசன் அருந்தவஞ் செய்தளித்த தமனென்பவன். முற்சனனத்தில் தெய்வகதியர்கச சம்பவித்த புண்ணியத்தால் சிவாலயங்களில் எங்கெங்குந் தீபங்களை யேற்றி உத்தம தருமங்களை யபரிமிதமாகச் செய்து, சுபகரமான விரதங்களை முறைப்படி அநுஷ்டித்து, புண்ணிய சொரூபியாக விளங்கினமையின் அவன் குபேரனுக்கப்பட்டு அளகாபுரியின் அதி கரிமையும், இயக்ஷ வித்தியாதர குய்யக கின்னராதிகட்கு ஆதி பத்தியமு மெய்தினன்.

நவனமாக்க் குபேரனுக்கப் பெற்றது. தான் பூர்வத்திற் புரிந்த திருவிளக்குத் தொண்டின் விசேடமென நன்குணர்ந்து அதனையே [illegible] [illegible] ஒரு [illegible] பிரதிஷ்டைசெய்து [illegible] தகுளியினன்பு [illegible], [illegible]



ஞானவொண் செழுஞ்சுட ரேற்றி, ஆசில் கொள்கையோன் பர்பகல் யோகினி லடைந்தான்"—வெகுகாலந் திருவிளக்குத் தொண்டினைச் சிறப்பாக நடத்திப் பரமேசுவரனையும் பார்வதி தேவியையும் சிறந்த பக்தியோடு வணங்கி வந்தனன். அவன் செய்த அருந்தவத்திற்கு அகமகிழ் வெய்திய அரவாபரணரும் அம்பிகையும் அவ் விலிங்கத்தினுள்ளே சோதிமயமாகக் காட்சி தந்து "உனக்கு வேண்டிய வரம் யாது?" எனக் கேட்க, "சர்வஜகத்திற்கும் பிதா மாதாக்களே! எண்ணல்லாத சூரியர் ஒரே காலத்தில் உதயமானாற் போன்ற சோதிரூபத்தைத் தரிசிப்பதற்கு எளியேன் கண்கள் கூசுகின்றன. அவை நன்கு தரிசிக்கத்தக்க ஆற்றல் பெறுமாறு அருளவேண்டுவதே அடியேன் வேண்டும் வரம்" என விண்ணப் பிக்க, திருமால் பிரமேந்திராதி தேவர்களும் மனத்தாலும் வாக்காலும் காண்டற்கரிய அத்தேஜோ ரூபத்தைக் கண்டு களிக்கும்படி அநுக்கிரகிக்கவும், சிவபெருமானைத் தரிசித்து அவ் விறைவனோடு பிரியாது விளங்கும் பரமேசுவரியாரது விசேடித்த ரூபலாவண்ணிய சௌந்தரியத்தைக் கண்டு மயங்கி "இறைவ ரோடு கூடி நிற்கும்படி புரிந்த தவம் யாதோ" என அறிவீனத்தாற் கருதி உற்றுநோக்குகையில், அவனுடைய ஒரு விழி மறைந்தது. உடனே உலக மாதா "இவன் யாவன் வஞ்சகன்" என்று சிவ பெருமானோடுரைப்ப, அண்ணல் "உமையே! இவன் உன்னுடைய மகிமா விசேடங்களை மதித்தானன்றிப் பிறிதொன்றுஞ் சொல் லிலன். நீ வருந்தற்க. இவன் மறைந்த விழியை யருள் புரிக" எனக் கூறவும், மாதேவி அங்ஙனமே மனமகிழ்ந்து அவனது இழந்த விழியை யருள்புரியவும் அது பொற் கண்ணாயது. இழந்த விழியை மீண்டும் பெற்ற இயக்கர் தலைவன் சந்திர சேகரனையும் சாம்பவியையுஞ் சரண கமலங்களிற் பணிந்து பலவாறு துதித்து வாழ்த்தினன்.


அப்பொழுது சிவபெருமான், தங்களிருவர் தாட்டாமரையிற் சாஷ்டாங்கமாக வீழ்ந்து கிடந்த தன்றனைத்தமது கரகமலத்தினாற் றடவி யெழுப்பி “நீ இன்றுமுதல் என்னுயிர்த்தோழன். நீ வழிப் பட்டலிங்கம் குபேரலிங்கமென வழங்குக” என வரந் தந்தனர் அம்பிகை “நீ குபேரனெனும் பெயரால் யக்ஷ வித்தியாதர குய்ய காதிகளுக்குத் தலைவனாய், அளகாபுரியில் பெரு வளங்களோடு வாழ்க” என்றருள் புரிந்தனர்.

“தொழுத வேந்தனைத் துணைமலர்க் கைகளாற் றைவந்
தெழுக வின்றுதொட் டென்னுயிர்த் தோழனீ யென்னப்
பழுதி னல்வர மருளிநீ பரவிய விலிங்கம்
விழையு நின்னுடைப் பெயரினால் விளங்குக வென்றான்.
இயக்கர் விஞ்சையர் குய்யகர் கின்னர ரிறைஞ்சி
வியக்க நீணிதிக் குபேரனும் பெயரொடு மேவிப்
புயகு நல்வளந் தளகையிற் பரிவின்வாழ் கென்ன
முயற்க ணங்கமின் மதிமுகத் துமையிவை மொழிந்தாள்.”

ஆறுவது

# ஞானஸம்பந்தாநுக்ரஹம்.

பண்டொருகாலத்தில், பார்வதி பரமேச்வரர்களுடைய [illegible] விசேஷங்கள் காலகதியால் மங்கியது போலக் கிரமப்பட [illegible] முதுகுரவரும் அதனைப் பண்டுபோலப் [illegible] தோணியிருக்கையில், காழியெனும் [illegible] நாதம் [illegible] பெறப்பெற்ற காரணத்தால் சீகாழியென்னும் பெயர் பெற்ற [illegible]



சிவக்ஷேத்திரத்தில் வசித்திருந்த அந்தணரில் கௌணியகோத்ரோத்பவராகிய சிவபாத விதயரென்னும் பக்த ரொருவர் தமக்குப் புத்திரப்பேறின்றி வருந்தியவர், புறச் சமயங்களை நிராகரித்துச் சைவப்பயிரைத் தழைப்பிக்க வல்ல சற்புத்திரனைப்பெற வேண்டியவராய், அரும்பெருந்தவஞ் செய்ய, அவர்தந்தவத்தின் விசேடத்தால் அகங்களிதுளும்பிய அம்பிகையும் அரவாபரணரும் அவ்வேதியருக்கு அவர் அவாவிய அடைவே அருமறைக் கொழுந்தனைய ஆண் மகவொன்றையருளினர். அக்குழந்தை ஆளுடையபிள்ளையாரெனுந் திருநாமஞ் சூடப் பெற்று வளர்பிறைச சந்திரன் போல நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து மூன்று வயதடைந்தது.

அக்காலத்தில் ஒருநாள் சிவபாத விதயர் தமது நியதிப்படி ஸ்நானத்திற்குச் செல்லத் தொடங்குகையில், ஆளுடைய பிள்ளையாரும் அவரைவிடாது பலவகைத் துயர் செய்து ரோதனம் புரிய, குழந்தையை நிறுத்திப்போகும் வண்ணம் எண்ணிறந்த வகை செய்யினும், ஆளுடைய பிள்ளையார் எவ்வாற்றானும் பிரியாராய்த் தந்தையாரைக் கைப்பற்றிக் கலுழ, உன் செய்கை யிங்ஙனமாயின் வருகவென்று உடன்கொண்டு சென்று, அங்குள்ள தீர்த்தக் கரையை யடைந்து அதன்கண் அரியகுழந்தையை யமர்த்தி, தமது குழந்தை சலத்திலிறங்காவகை சாம்ப சிவனைப் பணிந்து தடாகத்தில் மெல்லென விழிந்து மூழ்குகின்றவர் கும்பகத்தோடு கூடி அகமருஷணஞ் செபித்து மேலே யெழும்புமுன்னர், ஆளுடைய பிள்ளையார் தமது தந்தையைக் காணப் பெறாது அழுதரக்க உலகினர் கருதவோ அல்லது தமக்குரிய சிவஞானத்தினைப் பெறுவதற்குக் காரணமாகவோ அச் சீகாழியிலுள்ள திருத்தோணியாலயத்தின்கண் ணெழுந்தருளிய தோணியப்பரையும் திருநிலை நாயகியாரையும் நோக்கிக்கொண்டு அம்மே அப்பா வென்றழவும்

ஸமஸ்தலோக பிதாமாதாக்களாகிய அவ்விருவரும் ஒன்றாக இடபாரூடராய்த் தீர்த்தக்கரையணுகிக் காட்சி தந்தனர். அவ்வமயத்தில் அகிலாண்ட நாயகியாகிய அன்னையார் அக் குழந்தையின் அழுகையை அகற்றிக் கண்ணீரைத் துண்ணெனத் துடைத்து. தமது உண்ணாமுலையின் பாலை மாற்றயர்ந்த பொன் வள்ளத்திற் கூர்ந்து சிவஞானமுண்டாகப் புகட்டியருளினர் அதனால் ஆளுடைய பிள்ளையார் பரமஞானமெய்திச் சிவஞான சம்பந்தப் பிள்ளையாராய ஆநந்த பரவசராய் வீற்றிருக்கையில். சிவபாத விருதயர் ஸ்நானமுடித்துக் கரையில் வந்து குழந்தையைக் கண்டு. நமது ஆசாரங் கெடும்படி யாவர் கொடுத்த பாலையுண்டனை? நீயோ உனக்கிதனைக் கொடுத்தோரைக் காட்டுகவென்று அங்கிருந்த ஒரு கோலைக் கையிற் கொண்டு பயமுறுத்த. திருஞான சம்பந்தர் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து ஒரு திருக்கரத்தைச் சிரமிசைத் தூக்கிக் ககனவழியே விடையூர்ந்து செல்லும் உமாமகேசுவரரைச் சுட்டித் திருப்பதிகத்தால் விளக்கி யருளினர்.

"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி பூசியென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே."


## ஸௌந்தர்யலஹரீ.

"தபஸ்தந்யம் மந்யே தரணிதர கந்யே ஹ்ருதயத:
பய பாராவார: பரிவஹதி ஸாரஸ்வதமிவ.|
தயாபத்யா தத்தம் த்ரவிட ஶிஶுராஸ்வாத்ய தவயத்
கவீநாம் ப்ரௌடாநாமஜநி கமநீய: கவயிதா ||"

## மேற்படி

"தருண மங்கலை யுனது சிந்தை தழைந்த பாலமு தூறினால்
அருண கொங்கையி லதுபெ ருங்கவி யலையெ டுங்கட லாகுமே
வருண நன்குறு கவுணி யன்சிறு மதலை யம்புயல் பருகியே
பொருண யம்பெறு கவிதை யென்றொரு புனித மாரி பொழிந்
[ததே.

இச்சரிதையின் றொடர்ச்சி தாளஸப்தநாணத்திற் கண்டு கொள்க.



## ஏழாவது

# தாளவஸ்ப்ததாநம்.

---

சீகாழிப்பதியில் தீர்த்தக்கரையில் ஆளுடைய பிள்ளையார் சுட்டிக் காட்டப் பார்வதீ பரமேசுவரரைத் தெரிசித்து ஆனந்த மேலிட்ட புண்ணிய சீலராகிய சிவபாதவிதயர் திருக்குமாரரைத் தோண்மிசைக் கொண்டு அவரோடு ஆலயமெய்தி அப்பனையும் அம்மையையும் அடிபணிந்து தோத்திரஞ் செய்து தம்மனையிற் புகுதுகையில் அந்நகர்ப் பிராமணர் முதலினோர் கண்டுங் கேட்டும் அடங்கா அன்பும் மகிழ்வுங் கொண்டு ஞான சம்பந்தப் பிள்ளையாரை யெய்தி "காழியர் தவமே! கவுணியர் தனமே! கலை ஞானக் கடலே! கடலமுதே! எழிசைமொழியாள் திருவருள் பெற்ற இளஞ் சிங்கேறே! மறைவளர் திருவே! வைதிகநிலையே! ஞான முநிவே! காவிரியீன்ற முத்தே! வேத வொளியே! புண்ணிய முதலே! கண்ணிறை கதிரே! கலைவளர் மதியே! என்றிப்படிப் பலவாறு துதி செய்தார்கள்.

மற்றைய தினத்தில், பாலரூவாயராகிய ஆளுடைய பிள்ளையார் தமது தந்தை சிவபாதவிதயர் தோண்மேற் றூங்கிவரத் திருக் கோயிலையடைந்து "தங்கள், தாதையாரையும் வெளியே தாங்க[illegible] மெய்யன்பர்களை[illegible] [illegible] வந்து போதமுலை சார்த்தளித்த பு[illegible] [illegible]ரையுமன் [illegible]ப் போற்றி, மேதகைய வருள்பெற்[illegible] திருக்[illegible] விருப்பிற் சென்றார்"—என்[illegible] பின்னையுமப்பரைப் பணிந்து விடைகொண்டு திருக் கோல[illegible] வென்னும் சிவஸ்தல மெய்தித் தக்கராக மென்னும் பண்[illegible] துதி செய்தனர்.

"மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீ
ழுடையுங்கொண்ட வுருவமென் கொலோ"

என்னும் முதலேயுடைய திருப்பதிக மோதித் திருக்கரத்தால் தாள மொத்திட்டுப் பாடுகையில், சிவபெருமான் அவர் தம் திருக்கரம் வருந்துவது சகியாது சிவநாமம் வரைந்த செம்பொற் றாளங்கள் திருவருளால் அவர் கரத்திலெய்துமாறு அநுக்கிரகித்தனர். அதற்குத் தக்க இன்னொலி யெய்துமாறு அம்பிகையார் பாலித் தருளினர். இதுகாரணமாக அந்தஸ்தலத்தில் பிராட்டி பாருக்கு ஓசை கொடுத்த நாயகியெனும் பெயர் பிரசித்தமாக இன்றும் விளங்குகின்றது.

---

எட்டாவது

## சிஷ்யபாவம்.

---

ஸர்வ ஜகந்மாதாவாகிய மஹாதேவி மணியுமொளியும் மலருமணமும், தீயுமுஷ்ணமும், நீருந் தட்பமும், போலப் பரசிவத்தோடு அபின்னேயாகி அவ்விறைவன் குறிப்பின்படி பஞ்சகிருத்தியங்களை நடத்தி நிற்பள். அக்கருணை யுருவாகிய சத்தியே பஞ்சகிருத்திய காரணமாகக் கிருத்திய பேதத்தினுலே பலவகைப்படும். அவை "பரை யாதி விருப்பறிவு தொழிலாகி புலகமெலாம் படைத்துக் காத்து, வரையாது துடைத்து மறைத்



ருளி—" என்றபடி முறையே பராசத்தி ஆதிசத்தி இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தி என்பனவாம். அவற்றுள், பராசத்தி பரசிவத்தில் ஆயிரத்தொரு கூறுகொண்டது, ஆதிசத்தி பராசத்தியில் ஆயிரத்தொரு கூறுகொண்டது. இச்சாசத்தி ஆதிசத்தியில் ஆயிரத்தொரு கூறுகொண்டது. ஞானசத்தி இச்சாசத்தியில் ஆயிரத்தொரு கூறுகொண்டது. கிரியாசத்தி இச்சாசத்தியில் ஆயிரத்தொரு கூறுகொண்டது.

இவற்றுள், ஆதிசத்தி ஆன்மாக்களுக்கு விஷய சுகத்தைப் பொருத்தும், இச்சாசத்தி சிருஷ்டியை நடத்தும். ஞானசத்தி சர்வான்மாக்களுடைய கன்மங்களையும், அந்தக் கன்மங்களுக்கிடான தநு கரண புவன போகங்களையும் உபாதானத்திரயங்களினின்றும் உண்டாக்கும்.

## வாதுளாகமம்.

"தச்சிவேது பராஶக்திஸ் ஸஹஸ்ராம்ஶா தஜாயத
தச்சக் தேஸ்து ஸஹஸ்ராம்ஸா தாதிஶக்தி ஸமுத்பவ:
அஸ்யாம்ஶக்தேஸ் ஸஹஸ்ராம்ஸா திச்சாஶக்தி ஸமுத்பவ:
தச்சக்தேஸ்து ஸஹஸ்ராம்ஶாத் ஜ்ஞாநஶக்தி ஸமுத்பவ;
அஸ்யாம்ஶக்தேஸ் ஸஹஸ்ராம்ஶாத் க்ரியாஶக்தி ஸமுத்பவ:
ஏதானைவ ஶக்தய: பஞ்ச நிஷ்களத்வே நகீர்த்திதா:
ஶிவஸ்ருஷ்டி ரியம் ப்ரோக்தே"

இப்படித் தோன்றிய ஐவகையசத்திகளில், பின்வரும் பராசத்தியானது பக்குவமலராகிய ஆன்மாக்களைக் கருணையால் அநுக்கிரகிக்கும். ஆதி சத்தியானது ஆணவமலம் பக்குவமாம்படி செலுத்தும். ஞானசத்தி சத்தர்க்கு ஞான ஜொளியாகி சர்மசதாசிவாதி பக்கிரகதியமான தேஜோரூபமாம்.

இவ்வகைய பஞ்சசத்திகளின் * தசாம்ச பேதத்தால் சகள நிஷ்களமாகிய சதாசிவ ரூபமாம்.

## வாதுளாகமம்.

"பராஶக்தேர் தஶாம்ஶேந ஶிவஸா தாக்யஸம்பவ:
ப்ராஶக்த்யுத் பவத்வாச்ச ஶக்த்ததத்வாச் சிவஉச்யதே"

இது கருத்துப்பற்றியே "சிவஞ்சத்தி தன்னையீன்றும் சத்தி தான் சிவத்தையீன்றும் உவந்திருவரும் புணர்ந்து... லாமீன்றும் * * *" என அருணந்தி சிவாசாரி ... மருவாய மலர்ந்தருளினர். "பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்த வண்ணம், காத்தவளே பின் கரந்தவளே கறைகண்டனுக்கு மூத்தவளே * * *" என்றெடுத் தாண்டதும் இப்பெற்றி நோக்கியே யென்க.

## வாதுளாகமம்.

கர்மேஶஸ்ய ஸஹஸ்ராம்ஶாந் மஹேஶஸ்ய ஸமுத்பவ:
மஹேஶம் ஸகளம் வித்யாத் ஸ்ருஷ்டிஸ்திதி லயாத்மக: ||

இங்ஙனமாகவும், வெள்ளிமலையாகிய ஸ்ரீகைலாயகிரியி னுச்சியில் எண்ணில் சூரியர் இலகினாற்போலக் காந்திவீசும் நவரத்தினகசிதமான ஆயிரக்கால் மகாமண்டபத்தில் பக்தர்கட்கநுக்கிரகிக்கும் வண்ணம், சிவபெருமானும் மகாதேவியும் திருவோலக்கங் கொண்டெழுந்தருளி யிருக்கையில். திருமால் பிரமன் முதலிய தேவர்களும், பதினொருகோடி யுருத்திரரும், இந்திரன் முதலிய வெண்டிசைப் பாலரும், அஷ்டவசுக்களும், முப்பத்துமுக்கோடி

* தசாம்சமென்றதால், பத்திலொன்று அம்சமாகிய சாதாக்கியமாம். விரிப்பிற் பெருகும்

தேவர்களும் நாற்பத்தெண்ணாயிர முனிவர்களும், சநகாதிமகருஷி களும், நவசித்தர்களும், கருடகாந்தர்வ சித்தவித்தியாதர யக்ஷ கின்னராதி பதினெண்கணங்களும் கூட்டங் கூட்டமாகத்துதி,

∴ இமையோர் பணிவெற் பிறைவா சரண
மிமயத் தரசன் மகனே சரண
மமைவாமிடபத் துசனே சரண
மரியின் கொடிசே ரனையே சரணங்
கமழ்பூ திபின்மே னியனே சரணங்
களபம் புனைமெய் யுடையாய் சரண
மெமையாள் கருணை விழியாய் சரண
மிருதா மரையா னயனீ சரணம்.

பொருஞ்சு லமெடுத் தவனே சரணம்
புனைதா மரைசேர் கையாய் சரணம்
அரிதா கியதிக் குடையாய் சரண
மணிதா யொளிபட் டுடையாய் சரணம்
தெரியா டரவக் குழையாய் சரணந்
திகழ்மா மணித்தோ டுடையாய் சரணம்
வரிவே ணியிளம் பிறையாய் சரணம்
மலர்கொந் தளகப் பிறையாய் சரணம்.

நாசினிக்குந் தந்தையே போற்றி போற்றி
கடலுலகின் றருடாயே போற்றி போற்றி
வேகமதன் றனைக்காய்ந்தாய் பெரியோய் போற்றி
பெரியமதன் றனையேவல் கொள்வாய் போற்றி
தோயகுறவேடர் விடநுகர்ந்தாய் போற்றி போற்றி
பின்னைமுத னுகர்ந்தாயே போற்றி போற்றி
தேகபெறு மகேசுரனே போற்றி போற்றி
செந்திருக்கொங் [illegible] போற்றி போற்றி.

என்று தங்கடங்கட் கியைந்தவாறு தோத்திரஞ்செய்து அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் புரிந்து கைகட்டி வாய் பொத்தி நிற்கவும், வேதங்கண் முழங்கவும், தும்புருநாரதர் பாடவும், அரம்பையார் நடிக்கவும், கூட்டத்தைத் திருநந்திதேவர் பொற்பிரம்பு கொண்டடித்து விலக்கவும், இஷ்டசித்திகளை யெய்த வெண்ணினோர் வரங்கேட்டுக் கையேந்தி நிற்கவும், ஸ்ரீபார்வதி பரமேசுவரர் இரத்தின சிங்காசனத்தில் திருவோலக்கங் கொண் டெழுந்தருளியிருந்து பக்தியே வடிவமான பிருங்கி முனிவர் நடிக்கும் நடனத்திற் சிறிது திருக்கண் சாத்தி, அதன்பின் அவ ரவர்கட்குச் சிரகம்பன மந்தஹாஸாதி குறிப்புகளால் விரும்பிய வரங்களையளித்துத் தத்தமிடஞ்செல்ல ஆஞ்ஞை தந்தனுப்பி ஏகாந்தமாக விருந்தனர்.


## சிவஞான சித்தியார்.

“ சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்று
முவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரெல்லா மீன்றும்
பவன்பிரம சாரி யாகும் பான்மொழி கன்னி யாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் றெரியு மன்றே.”

என்றபடி சிவசத்திகளிருவரில் ஒரு சிறிதும் பேதமில்லையாயினும், தேவியார் இலீலாமாத்திரையாகத் தாமொரு சிஷ்ய கோலமும் சிவபெருமானே ஒரு குருகோலமுமாக. விளங்கி நிற்கத்திருவுளங் கொண்டு இறைவி இறைவரடிகளைப்பணிந்து [“ நகர ] யாசத்தின் னுண்மை நிலைமையும், [illegible] வகையும், அவற்றை அகன் றோர் அடைபுத்தன்மையும், [illegible] உற்பத்தியும், அவை அநாதியென் றுணர்த்துதற்கு ஏதுக்காட்டிய [illegible] பசக்தி ஏகலிய வாக்குகளுக்கு அதிஷ்டா[illegible] [illegible]

ரீர் வாமபாகத்திலமர்ந்ததும் இவ்விவ்வரலாற்றினென்று திருவாய் மலர்ந்தருள வேண்டும்."]— எனக்கூற, உம்பர் பெருமான் "உமையே! இரு" எனத் தமது வாமபாகத்திலிருத்தி ஒரு திருமுகமும் ஆறுதிருக்கரமுந்தாங்கி எல்லா ஆசனங்களிலு முயர்ந்த ஸுகாசனத்திலிருந்து அவ்வினாக்கட்கெல்லாம் தக்கவிடையிறுத்தருளினர்.

வையகமெல்லாந் தந்த மாதேவி, ஐயன்பாற் கையேற்றுச் சிஷ்யகோலங்கொண்ட காரணத்தினால் சிஷ்யபாவை யெனப் பட்டனள்.



## ஒன்பதாவது

# தாண்டவப்பிரியகௌரீ.

பண்டொரு காலத்தில், தவமே முத்திதரத்தக்க தெனக் கருதிய தாருவன முனிவர் தவத்தையும், கற்பின் மிகையாற் கர்வித்திருந்த அம்முனி மங்கையர் கற்பையும் அழிக்கத் திருவுளங் கொண்ட சிவபெருமான் திருமாலைத் தம்பால் வரத் திருவுளஞ் செய்ய, கமலை நாயகன் கடவுள் கருத்தறிந்து கைலையை யடைய. சிவபெருமான் "விஷ்ணுவே! நீ பண்டுகொண்ட மோகினியுரு வெய்துக" எனப் பன்னகசயனன் அன்னணமே யரிவையுருவாக,

### தாருவனக்ரீடா விலாஸம்

### வாசிஷ்டலிங்கம்.

விஷ்ணுஸ்ஸமாயயாப்ரஹ்மபார்யாபூர்மமஸுந்தரி |
தயாஸஹமஹாக்ரீடாங் க்ருத்வாவேஷந்திகம்பரம் ||

என்றபடி மோகினி வடிவேற்ற திருமாலாகிய பெண்ணோடு சிவபெருமான் திகம்பரராய்ப் பிக்ஷாடனராகி "அடியிற் றொடுத்த பாதுகையு மசைந்த நடையு மிசைமிடறும். வடிவிற் சிறந்த நட்டுருவி" என்றபடி மிதியடி தொடுத்துக் கபாலமுஞ் சூலமுங் கையிற் கொண்டு உள்ளாளப்பண் பாடி வீதியிற் செல்ல, முனி மங்கையர் பண்ணொலி கேட்டுப் பிக்ஷாடனரைக் கண்டு காமநோயிற் கலையவிழ்ந்து வளைகழன்று நாணமழிந்து இறைவர் மகா மாமாயர் சாலவித்தைபோல் அம்மங்கையர் நாற்பத்தெண்ணாயிரம் புதல்வரை ஈன்றனர். இறைவர் அக்குமாரர்களைத் தம்மையடைய தவஞ் செய்யக் கட்டளை தந்தனுப்பி, நகரின் புறம்பே போகவனை.

மோகினியின் வடிவு கண்ட முனிவர்கள் தவச் செயலகன்று தத்தம் பெண்டிரை யணுகிச்சென்று கண்டு "நம்மாதர் இத்திகம்பரனாற் கற்பழிந்தனர். நாமுமொரு பெண்ணாற் றவமிழந்தோம்" என வருந்தி. சிவபெருமானைக் கொல்ல விரும்பி அபிசார வேள்வி செய்து அதிற்றோன்றிய புலி நாகம் மான் பூதர்கள் வெண்டலை தமருகம் முயலகன் அக்கினி முதலியவற்றைப் ப்ரயோகித்தார்கள். அவை யொன்றும் எமது சிவபெருமானை யொரு சிறிதும் ஊறு செய்யாதனவாயின.

"காது வெம்புலி பாசு நவ்வி கடும்ப ணித்திரள் பூதர்கள்
மோது வெண்டலை திண்டி றற்றுடி முயல கன்றனை யேவினார்.

"வேங்கை தன்னை யுரித்து டுத்தனன் மிக்க சாரதர் தானையாய்ப்
பாங்கு றும்படி யோதி னானொரு பாத பங்கமலத்தினா
லேங்கு றும்படி முயல கன்றனை யீடி றுமி தித்தனன்
வாங்கருங்கவி னுற்ற மேனியின் மற்றை யாவு மணிந்தனன்."

என்றபடி, புலியை யுரித்தணிந்தும், பூதர்களைச் சேனையாக்கியும், முயலகனைத்தாளின் கீழ்மிதித்தும், ஏனையபாம்பு மான் அக்கினி தமருகம் இவற்றைத் திருக்கரத் தேந்தியும், திருத்தெளிச்சேரியில் திருநடம்புரிந்தருளிப் பரமாதியர் துதியினையேற்று, அதுகண்ட முனிவர் அபசாரமன்னிப்பு வேண்ட அவர்கட்கநுக்கிரகித்து, இனி நீவிர் சிவசின்னந்தாங்கி எம்மைப் பணிந்து இவ்வுலகிலிருந்தி ரென விடுத்து, திருமாலுடன் திருக்கைலாய மெய்தினர்.

இவ்விடயத்தை யறிந்த எமதன்னையாராகிய பார்வதி தேவியார் அக்கினிக்குஷ்ணம் போலவும், நீர்த்தட்பம் போலவும். பூ[illegible]ணம்போலவும் அபின்ன சக்தியாகிய நான் இங்கிருக்க[illegible] [illegible]லைத மதவீர் சக்தியாகவென்று தாருகவன[illegible] [illegible]ராவும் வியக்கத்தக்க மதனுரு வருவுள்ளத்திற் றிடமா[illegible]

கொண்டார்போல ஊடல் காட்டவும், இறைவர் பெரிதும் யோசித்து, ஏ பராசக்தி!

## ஆகமசாஸ்த்ரம்.

ஏகைவஶக்தி: பரமேஶ்வரஸ்ய ப்ரயோஜனார்த்தாய சதுர்விதாபூத் |
போகேபவானீ புருஷேஷு விஷ்ணு: க்ரோதேசகாளீ ஸமரேசதுர்க்
[கா ||

என் அரும்பெருஞ் சக்தியாகிய நீயே பரையாகவும், ஆண்வடிவுற்றபோது விஷ்ணுவாகவும், கோபமெய்தியபோது காளியாகவும் யுத்தகாலத்திற் றுர்க்கையாகவும் விளங்குகின்றனை, நின்னையன்றி நிகழ்ந்த தொன்றுமில்லை. நீ வெகுளற்க வெனப் பெரிதும் வேண்ட, விமலை ஒருவாறு ஊடல் தணிந்தார் போன்று, அங்ஙனமாயின் தேவரீர் திருத்தெளிச்சேரியில் நடத்திய தாண்டவத்தை யான் தரிசிக்க ஈண்டுமொருமுறை யியற்றல் வேண்டுமெனவியம்ப, இறைவர் இக்கட்டளையே சாலுமெனக் களித்தாராகி, தாருவன முனிவர் செலுத்திய அபிசாரஹோமாக்கினியிற் றோன்றிய பல பொருளுந் தாங்கிய திருக்கோலத்துடன் கௌரியம்மையார் சந்நிதியில் அவ்வம்மையாரே திருக்கரத்தாற் றாளமிடவும் திருமால் முழவொலி செய்யவும் நடனஞ் செய்தருளினர். அது கண்டு அன்னையார் அகங்களி துளும்பி ஐயனை ஆலிங்கனஞ் செய்து ஆனந்தமுற்றாராய் அந்தப்புரத்தி லமர்ந்திருந்தனர்.

சிவபெருமானைத் தமக்காக நடனஞ் செய்யும்படி செய்த பெருமையுடைமையின் தாண்டவப் பிரிய கௌரீ யெனப்பட்டனர்.


பத்தாவது

# தக்ஷசாபம்.

---

அமரேசனாகிய இந்திரன், பல இமையவர் தன்னைப்புடைசூழ விருக்குஞ் சமயத்தில், நாம் காமதேனு கற்பகவிருக்ஷம் சங்கநிதி பதுமநிதி சிந்தாமணி முதலிய செல்வத்தையும், அரமகளிர் சுகத்தையும் இதுகாறுமநுபவித்துப் பல்வகைய பாவமும்புரிந்திருக் கின்றோம். அவை கழியுமாறெங்ஙன மெனக் கவலையுற்றேங்கி, அண்டமுகட்டையுருவி யுயர்ந்து பல முனிவர் தவமியற்றுங் குகைகளாலும் அருவிகளாலும் அழகுற்று விளங்கும் இமாசல மெய்தி, பார்வதி பரமேசுவரரைத் தரிசித்துப் பற்பல வரங்கொண்டு தேவர்களைத் தத்தம் நகரெய்த விடுத்துத் தானும் அமராவதி யடைந் தனன்.

அச்சமயத்தில், தக்ஷன் தன் மகளாகிய சதிதேவியையும் மரு மகனாகிய சங்கரனையுங் காண விரும்பியவனாய் அவ்விமாசலத்திற்குத் தேவரோடு வந்திருந்தான். பார்வதி தேவி அங்கெய்தியிருந்த தேவர் முனிவர் முதலானோரோடு தக்ஷனையுஞ் சமமாக நினைத்து வசனித்தாள். தக்ஷன் தன் அஞ்ஞானத்தால், சதிதேவியைச் சர்வ லோகமாதாவென்றுணராது, தன்னைத் தன் மகள் விசேடமரியாதை செய்யவில்லையென்று துவேஷமெய்தி, விதிவசத்தால் சர்வே வரனையுஞ் சதிதேவியையும் அவமானஞ் செய்யக் கருதி, பெருமானுக்கும் மாதேவிக்கும் அவியளிக்காமல் ஒரு யாகஞ்செய்ய நினைத்துத் தன்நகரமெய்தி, இவர்களை விளியாமல் ஏனைய குமாரிகளையும் மருகர்களையும் பத்திரிகைகளால் வருவித்தான். அதனை சிவபெருமானும் தாக்ஷாயணியு நீங்கிய எல்லாத் தேவரும் ஆவருமறிந்திருந்தனர். அதனையுணர்ந்த நாரத பகவான் [illegible]



பாலுற்று நடந்த விர்த்தாந்தங்களை யுரைக்க, சதிதேவி தானும் அவ்யாகத்தைக் காணவேண்டுமென்று சிவபெருமானிடஞ்சொல்ல, சிவபெருமான் நீ அங்கேகியின் அவமானமடைவாய். அவன் சிறிதும் நம்மிருவரையு மதித்திலன் எனப்பலவாறு மறுப்பவும், தேவியின் விருப்பைத் தடுக்க முடியாதவராய் அநுமதிகொடுப்ப, சதிதேவி எல்லாத் திக்குகளிலும் முகங்களும் திவ்விய சோபனங் களுமுடைய புடமிட்டபொன்னாற் செய்யப்பட்டதும் இரத்தினங்க ளிழைக்கப் பெற்றதும், முத்துவிதான முடையதும், புஷ்ப மாலைகள் தொங்கவிட்டதும், நூறு சித்திரப்பதுமைகள் கட்டப் பெற்றதும், நவரத்தின கசிதமான தூண்களுடையதும், பவளத்தால் தோரணம் கட்டப்பெற்றதும், மலர் மெத்தை பரப்பியுள்ளதுமாகிய விமானத்தில், சித்திர விசித்திர ரத்தினங்களிழைக்கப்பட்டு வசிர ரத்தினத்தால் விளிம்பிழைக்கப்பெற்ற விநோதமான சிங்கா தனத்தில் உட்கார்ந்தனள். அவ்விமானத்திற்கு இடபத்துவஜமுஞ் சிங்கத்துவஜமும் கட்டப்பட்டன.

சதிதேவி புறப்படுகையில், வச்சிர கஞ்சுகமணிந்தவர்களும், விசித்திரமான பிரம்பேந்தியவர்களும், நானாவகை வேஷ மணிந்த வர்களும், பலவான்களும், மிருதங்க வீணை வேணு முதலிய வாத்திய முழக்குவோர்களுமாகிய எண்ணிறந்த பரிசன மாதர்கள் தேவியைப் புடைசூழ்ந்து அவ்விமானத்தில் மெய்க்காப்பாளரா யேறினார்கள். அவருள் இருவர் வச்சிரதண்டம் பொருந்திய சாமரை வீசினர். அவை இரண்டன்னங்களையும் அச்சாமரைகட்கு இடையிலுள்ள தேவியின் முகத் தாமரை மலரையும் ஒத்திருந்தன. சுமாலினி யெனும் கன்னிகை பூரணசந்திரன்போன்ற குடையைப் பிடித் தனள். சுபாவதி மாதேவியோடு கவறாடினள். ஒரு கன்னி தேவியின் பாதுகைகளை மார்போடணைத்தனள். ஒருத்தி கண்ணாடி காட்டிநின்றனள். ஒருத்தி தம்பலப்படிக்க மேந்தினள். ஒருத்தி

கிளியைக் கரத்திலேந்தினள். ஒருத்தி மலர்மாலை யேந்திநின்றனள். மற்றொருத்தி ஆபரணப் பெட்டக மேந்தினள். இவ்வாறு எண்ணிறந்த மாதர் தத்தமக்குவிதித்த பணிகளைச் செய்து கொண்டிருந்தனர். அவர்கட் கிடையே விளங்கிய சதிதேவீ நக்ஷத்திர சமூகங் கட்கிடையே விளங்குஞ் சந்திரரேகையைப் போலப் பிரகாசித்து விளங்கினள்.

பிரயாணத்தை விளக்கத்தக்க பேரிகை சங்கம் பூரி வேணு மத்தள முதலிய பலவகை வாத்தியங்களும் அநேக ஆயிரங் காஹளங்களு மொலிக்கவும், எண்ணுயிரங் கணநாதர் முழக்குடன் முன் செல்லவும், குமாரக்கடவுள் கஜாரூடராக வந்தாற்போலச் சோமநந்தி யென்னுங் கணநாயகன் இடபமூர்ந்து முன்னே செல்லவும், தேவதுந்துபிகள முழங்கவும் அப்சரசுகள் நடிக்கவும் முனிவர்களுஞ் சித்தர்களும் யோகீஸ்வரர்களும் சந்தோஷிக்கவும் மேகங்கள் புஷ்பவருஷஞ் சிந்தவும் விமானமானது புறப்பட்டது. இவ்வாறுசென்றசதிதேவீ தக்ஷன் யாகசாலையையணுக. புத்திரியின் வருகையைக் கண்ட தக்ஷன் அகங்கரித்துச் சிறிதும் மரியாதை செய்யாமலும் உபசார வார்த்தைகள் சொல்லாமலும் எதிர்கொண்டழையாமலும் தன்னழிவு காலத்தினால் மிகவுங் கோபங் கொண்டு ஏனையசாமானிய புத்திரிகளை விசேஷமாகக் கௌரவப்படுத்தினன்.

அதுகண்டு கடுங்கோபமெய்திய சதிதேவீ, பலதேவர்கட் கிடையே தன் மனைவி வேதவல்லியோடேற்றிருந்த தக்ஷனை நோக்கி, ஜகந் நாதனாகிய சங்கரபகவானைப் பூஜிக்க மறந்தது யாது காரணம்? அஃதிருக்கட்டும் உன் புதல்வியரில் பெரியவளாகிய வென்னை ஏனைய புதல்விமார் போல வேனும் கருதிமதியாமல் என் கணவனைப் போல என்னையும் அவமதித்தது யாது காரணம்? என, தக்ஷன் வெகுண்டு ஓ சதி! உனக்கிளையோராகிய என் குமாரத்திகள் விசேஷித்த குணவதிகள். உன் கணவனைக் காட்டிலும் என்

மருகர்கள் புத்திமான்களும் பலவான்களுமாயுள்ளார்கள். ஆதலின் உங்களிருவரைப்போலன்றி அவர்கள் பூசித்தற்குரியவர்களே. உன் கணவன் பித்தம் பிடித்து மயானத்திற் பேய்பிசாசுகளோடு நின்று கூத்தாடுபவன். உத்தம லக்ஷணஞ் சிறிதுமின்றி என்புமாலையுங் கபாலமாலையு மணிந்தவன். அவன் என் விரோதி. ஆனதால் அவனும் அவன் மனைவியாகிய நீயும் இவ்யாகத்திற்கு வரும் யோக்கியதை யுடையவர்களல்லீர் என்றான். சதிதேவி சாலவும் வெகுண்டு தக்ஷனை நோக்கி யாகசாலையிலிருந்த யாவருங் கேட்க அடா கொடியோய்! சிவபெருமானைத் தூஷித்த நீ மகா பாவியானாய். மகேசனுடைய கோபத்திற்கு இரையாகுக. விரைவில் தண்டிக்கப் படுவாயென்று சபித்து உடனே கைலைமலைக்குத் திரும்பினர்.

---

## பதினொன்றாவது


# வீரபத்திரகாளிகாசிருஷ்டி.

---

தக்ஷயாக மெய்தித் தக்கமரியாதை பெறாது வெகுண்டு அவனையும் அவ் யாகத்தையும் அழியும்படி சபித்துவந்த பரமேசுவரி அம்மட்டிற் சினந்தணியாது, தாமே அவனையும் அவன் செய்யும் யாகத்தையும் அழிப்பது உசிதமன்றென்றுன்னி, சிவபகவானைப் பார்த்து "நாயகா! நம்மை மதியாத தக்கன் செய்யும் யாகத்தை யழிக்கவேண்டும்" என, சிவபகவான் தேவியின் கருத்திற்கிசைந்து மகாபலசாலியும், கணங்கட்கெல்லாந் தலைவனும், ஆயிரந்தலைகளும்

ஈராயிரம் கரங்களும் மூவாயிரங் கண்களுமுடையவனும், சூலம் டங்கம் வேல் வில் வாள் சக்கரம் வச்சிரமுதலிய அநேக ஆயுதங்களை ஏந்தியவனும், சந்திர சூடனும், மின்னல்போன்ற தலைமயிரும் வக்கிர தந்தங்களும் பெருவாயும் செந்நாவும் தொங்கிய உதடும் சமுத்திர கோஷம் போன்ற தொனியுமுடையவனும், உதிரஞ் சிந்தும் புலித்தோலுடுத்தவனும், பிரம விஷ்ணுக்களின் கபால மாலிகை தரித்தவனும், வீரக்கழல் வாகுவலயம் இரத்தினாபரணம் பூண்டு, சரப சார்த்தூல சிங்கங்கள்போன்ற பராக்கிரமமும் மத வேழம் போன்ற நடையும் சங்க சாமரங்கள் போன்ற வெள்ளிய தேகமும் பனித்துளிகளுடன் கூடிய இமாசலமே நடந்துவந்தாற் போல முத்துமாலைகளசைய நடந்து வருகையுமுடைய பிரளய காலாக்கினிக்குச் சமானமான வீரபத்திரனைச் சிருஷ்டித்தனர். அப்பொழுது அம்பிகையும் தனக்குறற மகாபகநால் எண்ணிறந்த சிங்கார முதலியவற்றுடன் வீரபத்திரருக்கிணையாய வீரத்தன்மையோடு கூடிய கரிய திருமேனியையுடைய காளியைப் படைத்தனர்.

சிவபெருமானும் பார்வதி தேவியும், வீரபத்திரரையும் காளியையும் நோக்கி "உங்களுக்கு மங்கள முண்டாகுக" என்றாசீர் வதித்தனர். அப்பொழுது வீரபத்திரர் இருபெருங் குரவரை நோக்கி "எனக்கு யாது கட்டளை?" எனக் கேட்க சிவபெருமான் "வீரபத்திரா! தக்ஷன் கங்காத்துவாரத்தில் யாகஞ் செய்கின்றான், நீ இக்காளியோடுங் கடைந்து அவன் யாகத்தை யழிக்கக்கடவாய், நாமும் தேவியுமாக அதற்கருகிலுள்ள ரைப்பியமுனிவனாச்சிரமத்தில் வந்திருந்து காண்கின்றோம்" எனக் கட்டளையிட, மகாதேவி வீரபத்திரரையுங் காளிகாதேவியையும் ஆலிங்கனை மூர்த்தாக்ராணம் முதலிய செய்து புன்னகை யரும்பி, "குழந்தாய் பத்திரா! நீ யெனக்குப் பிரியமுண்டாக்கப் பிறந்தவனாதலின் என் கோபத்தைத் தொழிக்க வேண்டும். அஃதெதன்னெனின், நீ காளியோடு போய்,



சிவபெருமானை மதியாத தக்கனுடைய யாகத்தை யழித்துத் தக்ஷனையும் அங்குள்ளாரையுங் கொன்றுவிடவேண்டும் எனக் கூற. வீரபத்திரர் அவ்விருவர் சொல்லையுஞ் சிரமேற் கொண்டு காளியோடு புறப்படுகையில், தனக்குத் துணைவர்களைப் படைக்கவேண்டுமென்று கருதி, தன் கோபத்தால் தன்னுடைய உரோமங்களிலிருந்து உரோமஜரென்னுங் கணங்களையும், தக்ஷிண புயத்திலிருந்து நூறுகோடிகணங்களையும், வாமபுயத்திலிருந்து மனைவியரோடு கூடிய அநேக புத்திரகணங்களையும், பாதத்திலிருந்து கடுங்கோபமுடைய அளவில்லாத அநேக ருத்திரர்களையும், தொடை புஷ்டம் முகம் பக்கம் குய்யமுதலிய அவயவங்களிலிருந்து அநந்தகணங்களையுஞ் சிருஷ்டி செய்தனர். அவர்கள் யாவருந் தன்னைப் போலவே ஆயிரக் கணக்கான கரஞ் சிர முதலியனவுடையவர்களும், அநேக வகையான ஆயுத மேந்தியவர்களும் இந்திரன் முதலானோரிற் பெருவலியுள்ளவர்களும் திரிநேத்திரர்களும் ஜடாதரர்களும் சிங்கவாகனருடர்களுமாய், ஆகாயத்திற் குதித்துங் கொக்கரித்துங் கூத்தாடியும் மேகம்போலுங் கோஷித்து விளங்க, வீரபத்திரர் அப்பெருஞ் சேனையை யுடன்கொண்டு, பிரளய காலாக்கினிருத்திர பகவான் போன்று காளிகாதேவியுடன் இடபவாகனமேறி இடபக்கொடி தாங்கிப் புறப்பட்டுச் செல்லுகையில், சிலர் முத்துக்குடை தாங்கினர். சிலர் சாமரையிரட்டினர். சிலர் தத்தமக்குரிய பணிசெய்தனர். பாநுகம்பன் தன் ஆயிரம் வாய்களாலுஞ் சங்கமுழக்கினன். தேவதுந்துபி முழங்கின. புஷ்பவருஷஞ் சொரிந்தது. மலர்மணத்துடன் கூடிய மந்தமாருதம் வீசியது. கணங்கள் யாவரும் போரில் விருப்ப மிகுந்து சந்தோஷத்தால் மெய்ம்மறந்து நிருத்த கீத முதலியன செய்தார்கள். புத்திர கணங்கட்கிடையே காளியோடு விளங்கும் வீரபத்திரன், உருத்திர கணங்கட்கிடையே சாம்பவியோடு விளங்குஞ் சங்கரபகவானையொத்திருந்து, க்ஷணத்திலேயே கணத்தோடு தக்ஷன் யாகஞ்செய்யு

விட்டதை நோக்கிப் பிரளய காலத்திற் பிரளய காலருத்திரன் புவனங்களை நோக்கிச் செல்வது போலச் சென்றனன். [இதன் றொடர்பைத் தக்ஷசங்காரத்திற் காண்க.]

---

பன்னிரண்டாவது

## ஹயக்கிரீவாநுக்ரகம்.

---

மிகப் பழயதோர் காலத்தில், விஷ்ணுமூர்த்தி பதினாயிர வருடம் அசுரரோடு கோரமான யுத்தஞ்செய்து சோர்வெய்தி, சயகரமான தோரிடமுற்றுப் பத்மாசனராய் நாண் பூட்டிய வலிய வில்லை நிலத்திசையூன்றிக் கண்டப் பிரதேசத்தில் நாட்டி, அவ்விற் றுணியில் உடற்பொறையை யிறுத்தி நித்திரை செய்யத் தொடங்கி இளைப்பினாற் பேருறக்கங் கொண்டனர். அக்காலத்தில் தேவர்கள் ஓர் யாகஞ் செய்யக்கருதி, வைகுந்த மெய்திச் திருமாலைக்காணாது ஞான திருஷ்டியால் அவர் பாலடைந்து அவர் தம்பேருறக்கத்தைக் கண்டு சித்தாகுலமாகி அவரை நித்திரை தெளிவிக்கவல்லவி[illegible] காரிய சித்தியுண்டாகாதென்க் கருதிய இமையவர் [illegible] இந்திரன் செல்லுருவெய்திச் [illegible] [illegible] வில்லின் அடி நுனியைக் கறிக்க உடனே [illegible] நுனியும் மேலே நிமிர்ந்தது. உடனே [illegible] [illegible] தேவர்கள் [illegible] [illegible]



வின் மகுடகுண்டலங்களோடு கூடிய சிரமானது அறுபட்டுப் போன விடந் தெரியாதாயிற்று. அதனைப் பார்த்த தேவர்களும் முனிவர்களும் பெரிதும் வருந்திக் கலங்குகையில், பிரமதேவர் தேவர்காள்! வருந்தன்மின் உடலுள்ளவரையிலுந் துன்பமகலாது. யான் சொல்வதைக் கேளும். மஹாமாயை யென்றும், வித்யை யென்றும், சநாதநியென்றும், நாராயணியென்றும், பிரசித்தி யெய்திய தேவியைத் தியானஞ் செய்தால் அப்பரதேவதை நம் அபீஷ்டத்தை நிறைவேற்றுவாள் என்று தேவர்கட்குக் கூறி, பின்னர். தேவ காரிய சித்தியின் பொருட்டு நான்கு வேதங்களையும் நான்கு புருஷர்களாக்கி, வேத புருஷர்களே! நீங்களும் மஹாதேவியைத் தோத்திரஞ் செய்யுங்களெனக் கட்டளையிட, அவர்கள் யாவரும் பற்பலவகையாகத் தோத்திரஞ் செய்து, தலைமையானவளே! நீ சமுத்திரன் மகளான திருமகளிடங் கோபங்கொண்டனையோ? அத்திருமகளை நாதனற்றவளாகப் பார்ப்பது எதற்கு? அக்கமலாசநி உனக்கு அபராதஞ் செய்திருப்பாளாயினும் அவள் உன் அம்சபூதையாதலின் க்ஷமிக்கப்பட வேண்டியவளன்றோ? இனி விஷ்ணுவை யெழுப்பிக் கமலாசநியையும் அடியேங்களையுங் களிக்கச் செய்ய வேண்டும். ஆதிதேவி! அமிர்தமானது தேவர்களைச் சீவிக்கச செய்யுந் தொழிலாற்றலுடையது போல நீயே உலகிற்குப் பிராணனை யுதவுந் தொழிலாற்றலுடையவள் என்றிவை போல்வனவாகிய வாக்கியங்களால் குணநிதையாயும் மஹா மாயா சொரூபையாயுமுள்ள மகாதேவியைத் துதிக்க, அத்தேவி பிரசன்னையாய் ஆகாயத்தில் தோன்றிப் பலர்க்கும் ஆனந்தந் தரத்தக்க சுபகரமான அசரீரிவாக்கால் தேவர்களை நோக்கிக் கூறுகின்றாள்.

தேவர்களே! நீங்கள் யாவரும் புரிந்த தோத்திரங்களால் களிப்புற்றுள்ளமையால் [illegible]. இனி [illegible] [illegible]. இப்பிரபஞ்சத்தில் [illegible] [illegible] சம்பவிப்பதில்லை. ஒருகால் இஹ

விஷ்ணு, சமுத்திரராஜகுமாரியும் தன்னருகேயுள்ளவளும் பிரிய பாரியையுமாகிய லக்ஷ்மியினுடைய முகத்தை நோக்கி இகழ்ந்து கூறினன். லக்ஷ்மிதேவி நமது பிரபுவான பகவான் நம்மை ஏன் பரிகசிக்கின்றார். நமது முகம் எக்காரணத்தால் அவருக்கு இப்போது விரூபமாகக் காணப்படுகிறது அது நம்மாலறியப்படவில்லையே. ஆயினும், காரணமின்றி நம்மை ஏன் பரிகசிக்கின்றார்? ஒருபோதுமில்லையே. அதற்குக்காரணம் நம்மிலுஞ் சிறந்த சௌந்தர்யவதியாகிய காமக்கிழத்தியொருத்தி நம்மையிப்படி யிகழும்படி சொல்லியிருக்கவேண்டுமென்று தனக்குள்ளே யாலோசித்துக் கோபமெய்தித் தமோகுணப் பிரதானையாயினள். அதனால் திருமகள் தாமசசக்தியாற் கவரப்பட்ட தேகமுடையவளாய், உக்கிரவேசமுற்று விஷ்ணுவை நோக்கி, என்னைக் குறைவாய்ப் பேசிய உன்சிரமறுக வென்னுங்கடுஞ் சொல்லைச் கோபமிகையால் தத்தித் தத்திக் கூறினள். [வைதவ்யத்தாலெய்துந் துக்கத்திலுங் காமக்கிழத்தியால் வருந் துக்கங் கொடியதென்று கருதித் தாமசசக்தியால் இங்ஙனங் கூறினள். லக்ஷ்மிதேவி நாம் சாபமிட்டால் பதியையிழந்து சுகத்திற்கு அழிவும் அமங்கலத்துவமும் உண்டாமேயென்றுங் கருதாது, மாற்றாளிடங் கொண்ட பகைமையால் தன் கணவன் அவளுக்குதவாமற் போகவேண்டுமென்பதையே பெரிதாகக் கொண்டனளென்க] இந்த விஷ்ணுவின் சிரசானது உப்புக்கடலில் வீழ்ந்து போயிற்று.

இதுவேயன்றி வேறொரு காரியமுமுண்டு. அதனால் உம்பராகிய உங்கட்கு மகத்தான காரியானுகூலம் உண்டாகப் போகிறது. அஃதென்னவென்றால், மகாபராக்ருவான ஹயக்ரீவனென்னும் பிரசித்தி பெற்ற ஓரசுரன் எனது மாயா பீஜாத்மகமான ஏகாக்ஷரமந்திர ஜபத்தோடு நிராகாரனாய் ஆயிர வருஷங்கள் [illegible] யாம் அவனுக்குக் காக்ஷிதர, அவன் [illegible].

பிறந்து இறப்பதும் இறந்து பிறப்பதும் உலக வியற்கை. இதற்கு முறையைக் கேட்கவேண்டாமென. அவன் அம்பிகே! எனக்கு ஹயக்கிரீவனிடத்திலேயன்றி வேறொருவர்பால் மரணமுண்டாகக் கூடாதெனக் கேட்க, அங்ஙனமே வரமளித்தோம். அவன் தேவர் முனிவரைத் துன்புசெய்து தருக்கித்திரிகின்றான். ஆதலால் பிரமன் ஒருமனோஹரமான அசுவத்தின் சிரசையறுத்துச் சிரோபங்கமான விஷ்ணுவினுடலிற் பொருத்தின் ஹயக்கிரீவனாக விஷ்ணுவெழுந்திருப்பான். அந்த அசுரனையும் வெல்லலாகுமென்று விளம்பினள். பிரமன் அங்ஙனமேபுரிய, திருமால் உயிர் பெற்று விழித்தெழுந்து மாதேவியின் கருணைவிசேடத்தால் தேவர்கள் காரியத்தை நிறைவேற்றினர். சில நாட்கள் சென்ற பின்னர், மதோன்மத்தனும் தேவசத்துருவுமான ஹயக்கிரீவ தைத்தியனை, யவிஷ்டரும் தேஜிஷ்டரும் விஷ்ணுமூர்த்தியுமாகிய ஹயக்கிரீவர் யுத்தஞ்செய்து சங்கரித்தார்.


க்ருஹங்கச்ச மஹா பாஹ க்ருஹராஜ்யம் யதாஸுகம் |
ஹயக்ரீவாத்ருதேம் ருத்யு: நதே நாசம்பவிஷ்யதி ||
இதிதத்வா வரம் தஸ்மா அநந்தர் தாணம் கதா கதா
ஸுதம்பரமிகாம்ப்ராப்ய ஸேஸீ ஸ்வபவநம்கத: ||
ஸபீடயதிதுஷ்டாத்மா முநீம் வேதாம் ஸ்சஸர்வஶ:
நகோபி வித்யதே தஸ்ய ஹந்தாய புவநத்ரயே ||
தஸ்மாத்சேஹயஸ்யாஸ்ய ஸமுத்ருத்ய மநோஹரம்
தேஹேத்ர விஶிரோவிஷ்ணோ: த்வஷ்டாஸம்யோஜயிஷ்யதி ||
ஹயக்ரீவோத பகவாந் ஹநிஷ்யதி தமாஸுரம்
பாபிஷ்டம் தாநவம்க்ரூரம் தேவாநாம்ஹிதகாம்யயா ||

# பதின்மூன்றாவது

# கிருஷ்ணசர்ப்ப சாபம்.

முன்பொருகாலத்தில் ஊழிதோறோர்க்குமோங்கலாகிய மகா கைலாயத்தில் சிவபெருமானுடன் உமாதேவியார் அந்தப்புரத்தில் விநோதார்த்தமாக வெழுந்தருளியிருக்கையில் பஞ்சாயுத மேந்திய பன்னகசயனன் ஆண்டெய்தித் திருவாயிலில் விளங்கும்மூத்தபிள்ளையாகிய கணபாலரைக் கைகூப்பிப்பணிந்து சன்னதிக்குள் சார்க்ருதி மூன்னிதிபோலவிளங்குஞ்சிலாதர புத்திரராகிய திருநந்தி பகவான் சீலினசரணங்களை யேத்தி விடைகொண்டு திருச்சன்னிதானத்திறுட்சென்று சர்வலோக பிதாமாதாக்களாகிய சங்கரனையும் சங்கரியையும் சாஷ்டாங்கமாகச் சேவித்து அவ்விருபெருமூர்த்தியோர் அநுமதியால் ஆண்டு வீற்றிருந்தனர்.

அத்தருணத்தில் அமலன் அமலையை யன்போடு நோக்கி, அணங்கே! சண்டிச்சமயத்தில் இவ்விண்டு கண்டிருக்க விநோதமாகச் சூதுவிளையாடுவோம்; அங்ஙனம் ஆட்டயர்கையில், நீ எனக்குத் தோற்றனையாகில் உன் பணிமுதலியன வெனக்குத்தருக; அவ்வண்ணம் வென்றனையாகில் எம்மொருபாதியாகிய [illegible] [illegible] கொள்ளுகவென உள்ளமகிழ்ந்து [illegible] மையர்க்கதற்கு [illegible] [illegible]; சிவபெருமான் [illegible], [illegible] [illegible] விளையாடுதற்கு [illegible] யாக நிற்கவென. [illegible] [illegible] ஆடுதல் கட்டளை[illegible] கைக்கொண்டு [illegible] [illegible]



சுந்தரர்முதலாகச் சூழநின்றவர் அந்திவண்ணன் ஆக்கினைப் படி பலகையுங்கவறுங் கொணர்ந்தனர். இறைவர் அருகிருந்த ஐம்படைக்கிறைவனை நோக்கி இக்காய்களைச்சரியான நிலைமையில் வையென. அன்னவன் சொன்னமுறையாக உடனேபொருத்தவும், தேவியைத்தமது திருமுன்னரிருத்தித் தாமே முற்படக்கவற்றினை யுருட்ட. பிராட்டி பின்னேயுருட்ட, இவ்வண்ணமாக எவற்றினு மேம்பட்ட விருவரும் விளையாடினர். சிவபெருமான் எவ்வகைத் திருவுள்ளத்தினாலோ அறியோம். தம்மோடாடி யசங்கரியார்க்குத் தோற்றனர். அங்ஙனமாகவும், சிவபெருமான் துணைவனை உமா தேவியாரை நோக்கி, நங்காய்! நின்வலி நன்றாயிருந்தது! என்று நகையாடி நீ நம்மை வென்றாயில்லை, தோற்றனை ஆதலின், முற்கூறியபடி நின்மலர்மாலைகளையும் ஆபரணங்களையும் இப்பொழுதே கொடுத்திடுகவென, சர்வலோகங்களினு முள்ள சகலான்மாக்களையும் பெற்ற தாயாகிய சர்வமங்களப் பிரதை அவ்வார்த்தையைக் கேட்டவுடன் எதிர்த்துக்கேளாமல், திருமால் முகத்தைச் செவ்வே நோக்கி நீ சாட்சியாயிருந்தனையாதலின் வென்றோர் தோற்றோரிவ ரென விளம்புக வெனக் கட்டளைதர, சுதரிசனன் பரனே வென்றா னெனப்பகர. தேவி சினங்கொண்டு நல்ல உண்மையைச் சொன்னாய் நன்றாயிருந்தது. கண்ணனெனப் பெயருற்றாய் நீ ஆசையாற் பொய் பேசினை. வஞ்சனை மிக்காய் ஆதலின், நீ பாம்பாகுக வெனச்சபிக்க, உடனே உரகவுருவுற்றனன்.

அதுகண்ட அச்சுதன் அச்சமெய்தி அரவாபரண னடிமலர் பரவி அடியேனுக் குற்ற அரவடிவெவ்வாற்றா னகல்வதென்றருள வேண்டுமென வேண்ட, ஆண்டகை தென்றிசையில் பாலவன மொன்றுள்ளது. அங்கே யொரு பெரிய ஆலமரமுண்டு. அதின் பொந்திலிருந்து தவஞ்செய்க. அவ்விடத்திற் கெமது புதல்வனான கணபாலனென்பதுவன். நீ யவனைக் கண்டவுடன் இவ்வடிவு மாறுவை. விண்டுவே! வருந்தற்க செல்க வெனப்பணிக்க, சாரங்கன்

இதுவேசாலு மென்று மனங்கொண்டு, புராரியால் விடைகொண்ட முராரி திருக்கைலையை நீங்கித் தென்றிசை யெய்தி அவ்வனத்தில் ஆகாயமளாவிக் கிளைத்துப் படர்ந்த வடதருவைக்கண்டு அதன் பொந்திற் புகுந்து பன்னெடுநாள் அரும்பெருந்தவஞ்செய்து தமது சாபநீங்கும் வகையை யெண்ணிக்கொண்டிருந்தனர். இங்ஙனநிகழ்கையில், கயமுகாசுரன் செய்த விடுக்கண் பொறாத தேவர்கள் வேண்டுகோளால், சிவபெருமான் கட்டளை பெற்ற கணபாலர் அவனைக் பொருதுபல்லாற்றானும் அவன் இறவாவரமேற்றவனுகலின் பெருச்சாளி வடிவேற்க அதன்மீதாரோகணிக்க, அமரர் யாவரும் ஆநந்தபரவசராய் ஐங்கரக்கடவுள் அடிமலரைப் பாடியும் பரவியும் துதித்தும் பின்றொடர, அவ்வனத்திலெய்தினர். அதனை யுணர்ந்த திருமால் உடனே ஓடோடிவந்து கணபதியின் சந்நிதியிற் சாஷ்டாங்கமாகப் பணிந்து தரிசித்தமாத்திரத்தில தமது பண்டைய வடிவெய்தினர்.

## தக்ஷகாண்டம் அநந்தன் சாபநீங்கு படலம்

புக்கதொரு பொழுதிலங்கண் முந்தோ ராலம்
பொந்தினிடை யிருந்தமலன் பொற்றா ளுன்னி
மிக்கதவம் புரிமாலைங் கரத்து முன்னோன்
மேவியது மனங்கொண்டு விரைவி னங்கே
யக்கணமே யெதிர்சென்று வழுத்திக் காண
வம்மையளித் தருள்சாப மகற லோனுஞ்
சக்கரமே முதலியவைம் படைக ளேந்தித்
தனதுதொல்லைப் பேருருவந் தன்னைப் பெற்றான்.



## பதினான்காவது

# தக்ஷயாகத்வம்சம்

---

உமாமஹேசுவரர்களின் கோபாவேசத்தாலுதித்த வீரபத்திரர், தம்பக்கலிற் காளிகா தேவியோடும் தம்மைப் புடைசூழ்ந்து வரும் எண்ணில்லாக் கணங்களோடும் சர்வாடம்பரபூரணராய்ச் சப்தசாகரங்களும் நிலைகலங்கவும் அஷ்டகுல பர்வதங்களும் அஷ்டதிக்கஜங்களும் இடம்பெயரவும். ஆதிசேடன் முடிகுலுங்கவும், தமது திருமுடி அண்டமுகட்டையும் தமது கரங்கள் அஷ்டதிக்குகளையுந் தொடவும். கண்களில் வடவாமுகாக்கினி சிந்தவும், படகம் பம்பை குடமுழா சங்கு பூரி தாளம் சின்னம் காகள முதலிய வாத்தியங்களொலிக்கவும், வேல் வில் வாள் தோமரம் பிண்டி பாலம் முசலம் ஈட்டி முதலிய எண்ணில்லா ஆயுதந்தாங்கிய அநந்தங் கணவீரர்கள் கொக்கரித்துத் தொடரவும், தக்ஷயாக சாலையை யணுகினர்.

இவ்வகையாக வீரபத்திரர் சேனை வருதலாலுண்டாகிய பேராட்டகாசவோசை செவிப்புலத் தேற்ற திருமால் திசைமுகன் முதலிய தேவர்களும் பற்பலமுனிவர்களும் இஃதென்னவென் றெண்ணித் தியங்கி முறைதவறி உலகமுழுதும் முடியுந்தக்க ஊழி காலம் உற்றதோவென்று உள்ளத்திலுன்னி யொன்றுந் தோன்றா திருக்கையில். சிற்சில சேனைவீரர் யாகசாலையைத் தீமூட்டினார்கள். சிலர் யூபஸ்தம்பங்களை யொடித் தெறிந்தார்கள். சிலர் அங்கிருந்த தேவர்களை வதைத்தார்கள், சிலர் அங்கே யமைத்திருந்த அவிசுகளை யுட்கொண்டார்கள். அங்குள்ளாரிற் சிலரை அண்டமுகட்டில் வீசினர். பலரைக் கடலிலெறிந்தனர். திக்கஜங்களின் வாயைப்

ற்றிச் சுழற்றி விடுத்தனர். சிலர் தமக்குற்ற தாகத்தால் சப்த மேகங்களையும் பிடித்துத் தீயெழக்கையால் முறுக்கிப் பிழிந்து நடித்தனர். சிலர் முத்தழல்களை யவித்தனர். சிலர் யாகப்பசுக் ளைக் கட்டறுத்துவிடுத்தனர். சிலர் ஆங்குற்ற யக்ஷ கின்னரர்களைப் தைக்கும்படி நாவினை யறுத்தனர். சிலர் கடலேழையுங் கையி லற்றுப் பருகினர். சிலர் ஆதிசேடனைப் பிடித்துப் படத்தைக் ழித்தனர். சிலர் சேடன் மணிகளைப் பறித்துக் கோத்து மாலை ண்டனர். சிலர் மாலைகளைப் பறித்துப் பந்தாடிப் புழுதிபட்டுதிர சினர்.

இவ்வகையாகத் துன்பு நிகழக்கண்ட இந்திரன் மனங் கொதித் து தன் ஐராவதத்திலேறி ஆயுதங்களைத் தாங்கிப் போர்க்கோலங் கொண்டனன். இந்திரன் கருத்தையறிந்த இயமன் அக்கினி நிருதி ருணன் வாயு சூரியன் சந்திரன் மருத்துக்கள் வசுக்கள் பிற தவர்கள் ஆகிய பலரும் போர்க் கோலங் கொண்டாராய்ச் சூலம் வல் தோமரம் ஈட்டி பல்லயம் வாள் வில் அம்பு முதலியன காண்டு கணங்களை யெதிர்த்துப் போர்புரியத் தொடங்கினர். அப் பொழுது இருதிறத்தவர்க்கும் பெரிய யுத்தம் நிகழ்ந்தது. இந்திரன் ரபத்திரர்மீது வச்சிராயுதத்தைச் செலுத்த. வீரபத்திரர் முன்னே து வீழ்ந்து சாம்பராயழிந்தது. அதனால் வெகுண்டு வில்லை ளைத்து நாணொலிசெய்து எல்லையில்லாத அம்புகளைவிட, வீர த்திரர் அவனுடைய ஐராவதமானது உதிரத்தைச் சொரியும்படி ரையறுத்து இந்திரனையும் பலவாறு புடைப்ப அவன் போர் [illegible] குயிலுருவேற்றுப் பறந்துபோயினன். அக்கினி னுடைய [illegible] ஏழுகாலைக் குறைபடும்படி [illegible] [illegible] இப்பான்று வாகனமாகிய எருமைக்கடாவின் கொம்பினைத் [illegible] அவ்வியமனைப்பற்றி அவன் கண்கள் பிதுங்கும்படி [illegible] பிறகைக்கட்டித் தலையைத் [illegible]

பூதம் வருணன் தலைமயிரைப் பிடித்துத் தரைமேலிடித்து அவன் வயிற்றை நகத்தாற் பிளந்து ஈருளையெடுத்து வாயிலிட்டுக் கொண்டது. ஒருபூதம் நிருதியைப்பிடித்துத் தனதொரு கையினாலே நெருக்குண்ணும்படி யழுத்தி அவன்வாயினின்று உதிரம் பெருக் கெடுக்கும்படி புடைத்தது. மற்றொரு பூதம் வாயுவைக் கண் களித்துப் பார்த்து. அவனுயிர் பதைக்கும்படி மயிர்க்கால்கடோறும் உதிரமொழுகும்படி மூச்சையடங்கச் செய்தது. பிறிதொருபூதம் பகனென்னும் சூரியனைப் பிடித்துக் கோபத்தோடு அவன் கண்ணை வேருடன் பறித்துச் சபையிற் கிடத்தி யிழுத்தது. இன்னுமொரு பூதம் அரியமாவெனுஞ் சூரியன் தோளைவாளால் வெட்டி அவ் விறைச்சியை வாயிலிட்டுக் கூத்தாடியது. வேறொரு பெரியபூதம் பலநாள்களாக யாகங்களில் அவிசுண்டு பருத்த உடலையுடைய பூட னென்னும் சூரியனைக் குத்தி அவன் பல்லை யுதிர்த்தது. மணிமா னென்பவன் யக்ஷராசனையும் அஷ்டவசுக்களையும் மருத்துவரிரு வரையும் கோபித்துத் கதையாலடித்து அவர்களுடலின் நவத் துவாரங்களிலும் செந்நீர் பெருகச் செய்தனன். சண்டனென்பவன் சந்திரனோடு வாட்போர்புரிந்து அவனுடைய வாளை யழித்துத் தோளைக்கட்டிக் கிரீடத்தைப் பொடிசெய்து அவனை நிலமிசைத் தள்ளிப் பூமியிற் காலால் தேய்த்தனன். அதுகண்டு அருகே யடைந்த தக்ஷபுத்திரர் பதின்மரை, ஒருபூதம் தன்வாளினால் உயி ரொழித்தனன். இங்ஙனம் வீரபத்திருடைய ஏவலர்கள் புரிந்தனர்.

காளிகாதேவியோடு அங்கிருந்த தேவமங்கையர் முனி மங்கையரை வெகுண்டு சிவபெருமானையும் மாதேவியையும் நிந்தனை செய்யுமிடத்தே வந்த அந்த மங்கையர் வருந்தும்படி புரிந் ததையுங் கேட்டீர்களாக, புலோமன்மகளாகிய இந்திராணியின் தனங்களை அவளிடையிடை பொடியச்செய்யுமென்றோ இயமனைப் பெருவேக் கதுமுகளைக்குன்பு செய்யுமென்றோ கருதி, அவன் இரு.

குசங்களை வாளாலரிந்தனர். தக்கன் மனைவியாகிய வேதவல்லியின் நெடிய கூந்தலைக் களைந்தனள். அதிதி யென்பாளை உதிர வெள்ளம் பெருகும்படி அதரம் அறுக்கப் பட்டது. சில முனிவர்களையும் சில தேவமாதரையும் யூபஸ்தம்பத்தில் தலைகீழாகக் கட்டிக் கோபத் தோடு மார்பிலுதைத்தனர். ஈருள் மூளை தோல் எலும்பு தசை குடர் நரம்பு உதிரம் இவை சிந்தச் சிலரைக்காலால் மிதித்தார்கள். சிலரை நிலமிசைக் கிடத்தி யரைத்தார்கள். சிலரைக் கைவிசை யோடு மேகமண்டலத்திற் போகும்படி தூக்கி யெறிந்தார்கள். விழுதுவிட்டாற்போலக் கொத்தாகிய கைகளையுடைய தேவர்கள் வீரபத்திரராலும் காளிகா தேவியாலும் தண்டிக்கப்பட்டவர்களாய், சிலர் கும்பிட்டுக்கொண்டும் பல்லைக்காட்டிக்கொண்டும் இறந் தார்கள். சிலர் அழுதுகொண்டு மனம் வருந்தி மாண்டார்கள். சிலர் கழுகுகள் கொத்தும்படி குத்துயிராய்க் களத்திற் கிடந் தார்கள். சிலர் காலறுபட்டவர்களும், சிலர் கையிழந்தவர்களும், சிலர் தோளறுபட்டவர்களும், சிலர் விழி பறிக்கப்பட்டவர் களும் ஆனார்களன்றி. ஸ்ரீகண்டத்தையுடைய பரமேசுவரனையும் ஜகன் மாதாவாகிய சாம்பவியையும் இழந்தோரிற் பிழைத்தவரு ளரோ? இவ்வகையாகத் தக்ஷயாகத்துவம்சம் நிறைவேறியது. [இதன் தொடர்பைத் தக்ஷஸம்ஹாரத்தின் காண்க.]


---

பதினைந்தாவது

## தக்ஷஸம்ஹாரம்

---

மகா. கோரவீர ரூப வீரபத்திரக் கடவுள் தன் பத்தினியாகிய காளிகாதேவியோடும் பூதசேனைகளோடும் தக்ஷயக்ஞசாலையின்



யாகசாலையை யழித்துவிட்டு, யாகபதியாகிய தக்ஷன் எங்குள்ளான் எனக்கூறித்தேட, கட்டளைப்படி சிவகணங்கள் விரைந்து செல்லு கையில், யாகபுருஷன் ஆண்கலைமான்போல நடந்துசெல்ல, ஒரு பூதம் அதனைக்கண்டு வளைந்த கொம்பைப்பிடித்து நெடிய சிரசைக் திருகி வாட்படைதாங்கிய வீரபத்திரர்க்குமுன்னே கொணர்ந்தது, ஐயனே! இந்திராதி தேவர்கள் அழிந்தார்கள். விஷ்ணுமூர்த்தி ஒருவர்தாமிருக்கின்றனரென, பத்திரர் எங்குளாரென்று வெகுண் டெழுந்து, ஆண் யானையின் மேற்பாயும் ஆண் சிங்கம்போல் விரைந்து சென்று கண்டு, யாகத்திற்குத் தலைவனாக வந்த நீ தக்ஷனைக் காத்துக்கொண்டு போர் புரிவையோ? அத்தீயோனைப் பிடித்துத் தருவையோ? உன்னுயிரைத் துறப்பையோ? சொல்லுக வென்றனர். திருமால் யான் தக்ஷனைக் காப்பேனென்று கருட வாகன மூர்ந்தனர்.

"கருமு கைச்செழும் பூவைபோன் மேனியங் கண்ண
புரியும் வேள்வியம் புருடனீ தக்கனைக் காத்துச்
செருவி னைத்தியோ தீயனை யறிவொடும் பற்றித்
தருதி யோவுயி ரிழத்தியோ சாற்றுதி யென்றான்.

தவல றுந்திறற் றக்கனைக் காக்குவ னென்னு * *
கவன வேகவெங் கலுழன்மே லிவர்ந்தனன் கடிதின்."

திருமால் போர்க் கோலங் கொள்ளக்கண்ட வீரபத்திரர் வெகுளிமீக்கொண்டு போர் செய்யக் கருதியபோது, சிவ கடாக்ஷத் தால் ஆங்கெய்திய தேரிற் காளிகாதேவியோடு ஆரோகணித்து, பிரமன் சாரதியாயிருக்கத் தேரைச் செலுத்தினர். இருவருக்கும் பெரியயுத்தம் நிகழ்ந்தது. அநேக தேவாஸ்திரங்களை விடுத்தனர். ஒருவரையொருவர் வெல்லக் கருதிய அவசரத்தில் திருமால் தமது [சுதர்சனம்] சக்கிராயுதத்தைப் பிரயோகிக்க, வீரபத்திரர் அதனைப்

பற்றி விழுங்கிவிட்டனர். * விஷ்ணு தமது வாட்படையைத் தூக்கிக்கொண்டு குறுக, பத்திரர் ஹுங்காரஞ் செய்தனர். உடனே திருமால் செயலின்றிச் சித்திரம் போல நின்றனர். வீரபத்திரர் கடுங்கோபங் கொண்டனர். அப்பொழுது சிவபெருமான் அசரீரியாக, மகனே! கோபங் கொள்ளற்கவெனக் கூறுவிக்க. கோபந் தணிந்து விண்டுவைப் பிழைக்கும் வகையாக விடுத்தனர்.

"அங்காழிப் படைவருதல் தெரிந்தா
னடல்வீரன் கடிதுபிடித் தயின்றான்
கொங்காரு நறுந்துளப நெடியோன்
கொடுவாள்கொண் டிறையோன்முன் குறுக
உங்காரஞ் செய்தனனெம் பெருமா
னேவியம்போன் மாயவனும் குறைந்தான்
மங்காத பெருஞ்சினமென் னிலைந்தோ
மருவினு னுதல்விழியான் மதலை.

எம்பெருமான் சினந்திடலுஞ் சினவே
லெனவிசும்பின் வாசகமொன் றிசைப்ப
உம்பர்பிரான் றனதுசுத னதுகேட்
டுள்ளெழுவெஞ் சினமகன றங் குறலும் * *"

அதன் பின்னர் அருகிலிருந்த தக்கனுக் கெதிரே யோடி, நீ செய்யத் தொடங்கிய யாகம் நிறைவேறியதோ வென்று வீர நகை செய்து அவனைத் தலைதுணித்தனர். தக்கனது சிந்திய தலையை வீரபத்திரப்பெருமான் திருக்கையா லெடுத்துத் தீயில் வீழ்த்தி முன்னே தண்டித்த தேவர்கள் நீங்க எஞ்சிநின்றோர் உடலைப் பிழிந்து உயிருண்டு, ஊழிகாலத்திலே ஆநந்த நடனஞ் செய்யும்

* பின்னொருகாலத்தில் திருமால் விட்டகூதநாடி அவரைக் களிப்பித்துத் தமது சக்கரத்தைப் பெற்றுக்கொண்டனர்.

சிவபெருமானென்று கண்டோர் சொல்லும்படி யுத்தத்திலே ரடித்தனர்.

செய்யு மாமக முடிந்த தோவென
நகைத்து நைத்துவாளர் செந்நிறக்
கையினுலுருமி னெற்ற வெற்புறழ்
களத்தொ ளிந்தலை தெறித்ததே.

தெறித்த சென்னியை யெடுத்த வீரனுயர்
செங்கை வன்னியின் மடுத்துமுன்
னுறுத்த வானவரை யொழிய நின்றவர்க
முடல்பி ழிந்துயிர் குடித்துவெம்
பொறித்த ழற்சிகையி னுலகம் யாவுமுயிர்
பொன்று காலையி னடித்திடு
மறித்த டக்கையுடை மழுவ லானென
வயங்கொள் வெஞ்சமரி னுடினன்."

அச்சமயத்தில் சிவபெருமானும் உமாதேவியும் ஆகாயத்தில் விளங்கினர். திருமால் முதலான தேவர்கள் பணிந்து இறந்த இவர்களையெல்லாம் எழுப்பியருள வேண்டுமெனப் பிரார்த்திக்க, அவ்விரு பெரியோர் திருவருளால் வீரபத்திரர் அவர்களையெல்லாம் எழுப்பி உயிர் தந்தருளினர். தக்ஷன் நீங்கிய யாவரும் பிழைத்து எழுந்தது கண்ட பிரமன் பிராட்டியையும் பெரிய பெருமானையும் பணிந்து என்மகன் தக்கனும் பிழைக்கும்படி திருவருள் புரிய வேண்டுமெனப் பலவாறு பிரார்த்திக்க, வீரபத்திரர் தக்ஷனுடலில் ஆட்டின் சிரமொன்றனைக் கூட்டித் தக்ஷ! எழுந்திரு என, அவன் உயிர்கொண்டு நடுங்க, அஞ்சேலென்றநுக்கிரகித்து, நீ யறிவு குன்றினமையின் ஆட்டுத்தலையெய்தினை யென விடுத்தனர். வீரபத்திரருக்கு ஒருலகம் அநுக்கிரகம் புரிந்து அரனும் அம்பிகையும் அந்தர்த்தானமாயினர்.

அதன்பின் தக்ஷன் தன் தந்தையாகிய பிரமன் சொற்படி காசிப்பதியடைந்து சிவலிங்கார்ச்சனை செய்து சிவகடாக்ஷமெய்திச் சிவகணத் தலைவரிலொருவனாயினான்.

---


## பதினாறுவது

## ஸுகோத்பத்தி.

# வியாஸஸுகாநுக்ரஹம்.

---

பராசர முனிவர் புதல்வராய்த் துவாபரயுகத்திலுதித்து வேதங்களை நான்காகப் பிரித்துப் பதினெண் மஹாபுராணங்களையும் ஓதியருளிய வியாசமுனிவர் முன்னொரு காலத்தில் சரசுவதி நதிதீரத்திலுள்ள ஆச்சிரமத்தில் வசித்திருக்கையில், ஆண் பெண்ணாகிய ஊர்க்குருவிகள் லீலா விநோதமாயிருக்கக் கண்டு மிகவும் வியப்பெய்தினர். அவ்விரு குருவிகளும், கூட்டில் தாமிட்ட அண்டத்தினின்று வெளிப்பட்ட குஞ்சுகளிடம் களிகூர்ந்து, உணவைத் தேடி ஊட்டுந் தொழிலில் மிகவும் வருந்திக் கொணர்ந்து அப் பார்ப்புகளுக்குப் பன்முறை சிறுதுளிகளாய் ஊட்டிக் கொண்டும், அவற்றின் உடம்போடு தம்முடம்பை அணைத்துக் கொண்டும் முகத்தில் அன்போடு முத்தமிட்டுக் கொண்டும் மகிழ்ந்து கொண்டிருந்தன. அவ்வூர்க் குருவிகளின் பிரேமாதிசயத்தைக் கண்டு வியாசமுனிவர் தம்மில் ஆலோசித்து, ஆ ஆ என்ன ஆச்சரியம். பட்சிசாதிகளுக்கும் தம் குஞ்சுகளிடம் எவ்வளவு ஆராமையுள்ளது. இதனையாராயுங்கால் புத்திரப் பேற்றினால் தாங்கள் பெருமையடைய



விரும்பும் மாநுடர் புத்திரர்பால் வாஞ்சை வைப்பது ஓரதிசயமா
மென்றுட் கொண்டனர். பின்னர், "குழலினி தியாழினி தென்
பதம்மக்கண்-மழலைச் சொற் கேளாதவர். மக்கண் மெய் தீண்ட
லுடற்கின்பமற்றவர்-சொற் கேட்டலின்பஞ் செவிக்கு." என்
னும் இத்தியாதி வசனங்கள் சிறந்த பொருளுடையனவே. புத்தி
ரனைக் காட்டிலும் எந்தச் சாதனமும் பரலோக சாதனமாக மாட்
டாது. மநுமுதலிய நீதிநூலாசிரியர்களும் புத்திரப் பேறுடையான்
சுவர்க்க மடைவானென்றும், அஃதில்லாதவன் சுவர்க்க மடைவ
தில்லை யென்றும் கூறியிருக்கின்றார்கள். அது அநுமானத்தாற்
சாதிக்கப் பட்டதன்று. பிரத்தியக்ஷமாகவே காணப்படுகிறது.
அன்றியும் புத்திரவான் பாவத்தினின்று விடுபடுகிறானென்னும்
வேதவாக்கியம் நிச்சயமாயிற்று. என்றிப்படிப் பலவாறு சிந்தித்து
மிக ரமணீயமான மேருபர்வதசிகரத்தில், புத்திரப் பேற்றினைய
வாவி, நாரத மகா முனிவரால் வாக்பீஜமென்னும் ஏகாக்ஷரமந்தி
ரோபதேசஞ் செய்யப்பெற்று, அதனை யிடைவிடாது ஜபித்துவந்து
அம்பிகையின் மாயையால் மாதேவியை மறந்து, பஞ்சபூதங்களுக்
குள்ள வன்மை வாய்ந்த ஒரு புத்திரனைத் தரவேண்டுமென்று சிவ
பெருமானைத் தியானஞ் செய்து அன்னபானாதிகளை யகற்றி நூறு
வருடம் உக்கிரமான கடுந்தவம் புரிந்தனர். அங்ஙனந் தவமியற்றி
யும் மகப் பேற்றிற்குக் காரணமான குறி குணங்கள் காணப்படாது.
கவலை கூர்ந்து, நாம் முதலில் யாரைத் தியானித்தோம். இப்
பொழுது யாரைத் தியானஞ் செய்கின்றோம். நாரத முனிவர்
நமக்குபதேசித்தது தேவி மந்திரமல்லவா? மஹாதேவனை மாத்திரம்
தியானிக்கின்றோமே. இது மடமையன்றோ? உலகத்தில் சக்தி
யுடையவனைப் புகழ்தலும், சக்தியில்லாதவனை யிகழ்தலும் யாவர்க்
கும் இயற்கையாயிருக்க, நாம் மஹா பூஜ்யையான பராசக்தியை
விலக்கிப் பரசிவத்தை மட்டுந் தியானித்ததால் தவம் வீணாயிற்று.
யாது செய்வோ மென்றுள்ளநைந்து மேருமலையை விலகி, கனி

களும் மலர்களும் நிறைந்து அழகான வனப்பிரதேசங்களுடைத்தாய், தேவர் முனிவர் ஆதித்தர் உருத்திரர் வசுக்கள் மருத்துகள் அசுவினிகள் பிரமநிஷ்டர்கள் முதலியோராற் சூழப்பெற்ற தாய், கந்தர்வகானமொலிக்கப் பெற்றதாய், மஹாதேவிசகுப் பிரியகரமாய் விளங்கும் இமாசலத்துச்சிகரிற் சென்று தேவியோடு பரசிவத்தைத் தியானம் செய்து தவம் புரிக்தனர்.

அவர் செய்யுந் தபாக்கினியானது சர்வ லோகங்களையும் இந்திராதி தேவர்களையுந் தகித்தது. இந்திரன் பயந்து சிவபெருமானைப் பணிந்து விண்ணப்பிக்க, சிவபெருமான் "இந்திரா! அஞ்சற்க. அத்தபஸ்வியிடத்தே நீ கோபிக்க வேண்டாம். பயமில்லை. அவ்வியாச முனிவன் ஒரு சற்புத்திரன் வேண்டுமென்று நூறு வருடமாகத் தவஞ் செய்கின்றான், அவனுக்கு நாம் அநுக்கிரகிக்கப் போகின்றோம். நீ செல்கவென இந்திரனை யனுப்பினர். வியாசர் பார்வதி பரமேசுவரரைத் தியானித்துத் தவஞ் செய்தலின், தேவியாரும் சிவபெருமானுமாக அவர்பா லணுகித் தரிசனந்தந்து உன் தவத்தை வியந்தோம். நீ கருதியபடி தேஜோரூபியும் ஞானியும் கீர்த்திமானும் இவ்வுலகிற்கு நாயகமணியும் சாந்த சீலனும், சத்தியவானுமாகிய ஒரு புத்திரனை உனக்குத் தந்தோமென்றனர். அது கேட்டு ஆநந்த மெய்திய வியாச முனிவர் விமலையோடு விடையூர்தியைப் பன்முறை பணிந்து அநந்த வகையாகத் துதித்து நிற்கையில், இருபெருந் தகையினரும், தம்முருக் கரந்தனர். உடனே வியாசர் தம்மிடமடைந்து தவம் புரிகையில் விடுத்திருந்த அக்கினி காரியத்தை அப்பொழுதே செய்யக் கருதி, அரணியில் மத்தைப் பூட்டிக் கடைகையில், அவர் மனதில் மகோற்பத்திக்குக் காரணமான ஒருவகைக் காம விருப்புண்டாயிற்று. எங்ஙனமெனில், இவ்வரணியில் மத்தைச் சேர்த்துக் கடைவதாலல்லவா அக்கினியுண்டாகிறது. மத்தை அரணியோடு சேர்க்காவிட்டால் எப்படி அக்கினி

யுண்டாகும்? அங்ஙனமே நாம் ஒரு மாதோடு கலந்தாலன்றோ புத்திரனுண்டாவான். அல்லாவிடிற் புத்திரனேது? ஆகலால், யௌவனமும் சுந்தரமும் உயர்குடிப் பிறப்பும் கற்பும் வாய்ந்த மனைவி நமக்குக் கிடைக்கவேண்டுமே. அப்படிக் கிடைத்தாலும் அவளுக்குப் புத்திரோற் பத்தியுண்டாவதும் கற்பழியா திருத்தலும் நிச்சயமாமா? அப்படி நிச்சயமாகச் சித்திப்பினும் அவள் காமியாயிருப்பின் நம்மை எப்போதும் நிர்ப்பந்தித்துச் சிற்றின்பத்திலமிழ்த்திப் பேரின்பத்தைப் போக்குவாளே? சிற்றின்பம் சிவத்தியானிகளையும் கெடுக்கும் பெரும்பாசமாதலின் யான் கிருகஸ்தாசிரமத்திற் புகேன். பிரமசரியத்தை விடேன். என்று தம்முட் கருதிக்கொண்டிருக்கையில், மின்னற் கொடிபோன்ற வடிவுடைய தேவரம்பை அவருக்கருகே ஆகாயத்திற் றோன்றினள்.

அவ்வரம்பையின் ரூபலாவண்ணியத்தைக் கண்டு மயங்கி மாரன் விடுத்த மலர்க்கணைகளால் மனம் வருந்தி, யாது செய்வேன்? தவநெறியை மேற்கொண்ட யான் காமாக்கினியாற் சுடப்பட்டேனே. இதனைத் தணிக்க இவளை யங்கீகரிப்பின், உலகினர் நகைப்பார்களே. சிற்றின்ப விருப்பால் அசேதனமான பெண்ணைக் கண்டு மயங்கியது என்மடமை யென்று பெரியார் கூறுவரே யென்று தவத்தைக் கைவிடற் கஞ்சி வருந்தி இறுதியில், பலரால் நிந்திக்கப் படினும் ஒப்பற்றபுத்திர சுகம் உண்டானாற் போதும். இம்மை மறுமையின்பங்கள் புத்திரப் பேற்றாலுண்டாகுமென்று கருதியன்றோ ஞானிகளும் இல்லறத்திலிருந்து மோட்ச மெய்தியதாகக் கேட்டிருக்கின்றோம். தெய்வகதியாகக் கிடைத்த இவளை அங்கீகரிப்போம். ஆனால் ஊர்வசியைக் கூடிய புரூரவ சக்கிரவர்த்தி அவமான மெய்தினனென்றாலும் இவ்வரம்பை அப்படிப் பட்டவளல்ல ளெனத் தோன்றுகின்றாள் என்றிப்படியெல்லாஞ் சிந்தித்தும், கூடியவரையில் தமது அறிவாற் காமத்தையடக்கியும் அரணியில் மத்தைப்பூட்டி விடாமல் நெருப்புத் தோன்றும்படி

கடைகையில். இவர் வீரியம் அரணியிற் சிதறியது. அதனால் அக்கினிக்கு அநுசிதமுண்டாயிற்றென்று மீண்டும் விடாது கடைந்து கொண்டிருந்தனர். அப்பொழுது அவ்வ ணியிலிருந்து அவரைப் போல் ஓர் சற்புத்திரனுதித்தான். வியாசர் ஆநந்தமெய்தி, அரணியிலுதித்த இவன் புனிதமானவன் என்று கருதி அவ்வ ணியினின்றும் அக்கினியை வெளிப்படுத்தி. இது பார்வதி ப மேசுவரருடைய வரப் பிரசாதமென்று களித்து. குழந்தையைத் தழுவிக் கையிலெடுத்து, கங்கையில் ஸ்நானஞ்செய்து சுகரூபியான ஊர்வசியைக் கண்டு மோகித்து இப்புத்திரனுண்டானமையால், சாதகாதிகிரியைகள் முடித்துச் சுகனென்று நாமகரணஞ் செய்தனர். அப்பொழுது புஷ்பமாரி வருஷித்து ; தேவதுந்துபி முழங்கின. நா தாதி முனிவர்கள் ஆசீர்வதித்தார்கள். அம்பிகையின் அருளால் ஆகாயத்தினின்றும் தண்டமும் கமண்டலமும் கிருஷ்ணாஜினமும் வியாசருக்கெதிரே விழ சுகர் அவற்றையெடுத்துத் தரித்துக் கொண்டு மகா ஞானியாக விளங்கினர்.

---

## பதினேழாவது

# லக்ஷ்மீசாபவிமோசநம்.

---

பொற்பூணூலணிந்த மார்புடையவரும், கமண்டலமுந் தருப்பையு மேந்திய கையையுடையவரும், சடைமுடி தரித்தவரும். மானதோலுடுத்தவரும், தருமநெறி தவறாதவரும், தவத்தொழில் பூண்டவரும், குறுகிய வுருவினரும், வளர்ந்த வுடலினரும், வேத



சாஸ்திர புராணாதிகளை நன்குணர்ந்தவரும், காமவெகுளிமயக்கங்களை யகன்றவரும், சாந்த சீலருமாகிய வாலகில்லிய ரென்னுங் கூட்டமாகிய தவசிகள் பண்டொரு காலத்தில் ஒரு யாகஞ் செய்யக் கருதி, சங்கு சக்கர கதாகட்க சோர்தண்டதரராய்ப்பன்னகசயனனாக விளங்கும் திருமாலைக் காணவேண்டி வைகுந்த மெய்தினர். அப்பொழுது திருமாலின் திருமார்பில் விளங்கும் செந்தாமரை மங்கையாகிய திருமகள் அவர் தங் குறூரவடிவினைக் கண்டு மனதில் அவர்களை யலக்ஷியஞ் செய்து இவர்களென்ன கோரமாகவும் கத்தரிக்காயிற் காலுங்கையும் முளைத்தாற் போலக் குறுகியுங் காணப்படுகின்றனரே. இப்படியும் உலகத்திலிருப்பாருளரோ வென்று மனதிலிகழ்ந்து கருதியதைப் பெருந்தவசிகளாகிய வாலகில்லியருணர்ந்து வருந்திய மனத்துடன் திருமகளை நோக்கி

"ஏர்தரு வடிவினீ யெம்மை யிவ்வுழி
நேர்தர விகழ்ந்ததா னீயும் போய்நெடும்
பார்தரு மகளிர்தம் பண்பி னுகுகென்
றூர்தரு சாபமிட் டனர ருந்தவர்"—

நளினமங்காய்! நீ யெங்கள் வடிவினைக் கண்டு இப்பொழுது இகழ்ந்தாயாதலின், நீயும் இவ்வுயர் பதவியை விலகி உலக மாதர்களில் ஒருத்தியாகுகவெனச் சபித்தனர். வேத வித்துக்களாகிய அம்முனிவர் சாபம் அக்கணத்திலேயே அலர்மகளையடைய, இலக்குமி வில்க்கற்கரிய தன் குற்றத்திற்காகப் பெரிதும் கவலைப்பட்டனள். திருமால் அதுகண்டு, ஏடி! உனக்குற்றதுயர் யாதெனவினவி யுணர்ந்து, ஐயோ! ஆழமறியாது காலிட்டுக் கொண்டனையே. அவர்கள் மிகப் பெரியோராயிற்றே. அவர்களையும் அவமதிக்கலாமோ? அப்பெருந் தவசிகளை நானும் மனமொழி மெய்களால் வழிபடற்குரியனன்றோ? கெடுத்தனையே! அவர்கள் சொல் தவறவே மாட்டாது. யாது செய்வோம்? ஆயினும் இதற்கொரு

சூழ்ச்சி சொல்லுவேன் ஜகந் மாதாவாகிய பரமேசுவரியின் வழி பாடு நாம் விரும்பியவற்றை யெல்லாங் கொடுக்குமென்பது நீயு மறிந்ததே. சோதிவனமெனும் க்ஷேத்திரம் புண்ணிய பூமியாகவும் தவத்திற்குமனோரம்மியமாகவும் நிர்மலமாகவும் விளங்குதலின் ஆண்டெய்தி அம்பிகையை நோக்கி அருந்தவம் புரிந்து அவர்கள் தந்த சாபத்தை மாற்றுக. யானும் அவ்யாகத்தை முடித்து ஆங் குறுவேனென்று அவளைத் தேற்றிச் சோதிவனத்திற்கனுப்பி, வந்த வாலகில்லியருடன் வழிக்கொண்டு அவர்கள் யாகத்தை முடிப்பித் தனர். இது நிற்க.

விண்டுவின்பால் விடைகொண்டு பண்டைய தெய்வ வடிவு நீங்கி மண்ணுலக மாதர் வடிவு வாய்க்கப் பெற்று மாநிலத்தெய்தி, தூய்தாக விளங்குஞ் சோதிவனமுற்று, திருமகள் தேவியின் கமல சரணங்களைக் கருத்திலிருத்தி அருத்தியோடு ஆங்குள்ள கௌரி தீர்த்தத்தின் கீழ்த்திசையில் தன் பெயரால் ஒரு தீர்த்தங் கண்டு, அத்தீர்த்தத்திலும் கௌரி தீர்த்தத்திலும் மூழ்கி நாடோறும் பக்தி யோடு பரமேசுவரியை நோக்கிப் பலகாலந் தவம் புரிந்தனள். அங் ஙனம் இலக்குமி தவம் புரிகையில், பூரணை கூடிய ஒரு சுக்கிர வாரத்தில், உக்கிரமான தவத்திற்கு உவந்த உமாபிராட்டியார் தமது சேனு சமூகத்துடன் காட்சி தந்து புன்னகை யரும்பி, பின்னையே! முன்னையே நீ யெமது தயையுடையவள். பெரியோராகிய தவசி களை யிழித்துக் கருதிய பாவம் இன்றோடகன்றது. உனது நிஜ வடிவை யுறுக.

“ ஓங்கிய மாதவத் துயர்கு லத்தவர்
நீங்கருஞ் சாபமு நீங்கி நின்னுருப்
பாங்கமர் முன்னினும் பதின்ம டங்குறீஇ
யாங்கெழி னெடியவ னுக மன்னுக ”—என்றும்,

"கலக்கமி லன்பினீ கண்ட தீர்த்தமு
மிலக்குமி தீர்த்தமென் றிலங்க"—என்றும்
அநுக்கிரகித்து அந்தர்த்தானமாயினர்.

அக்காலத்தில்: வாலகில்லியரோடு யாகத்திற்கெய்திய மாதவன் அதனை முற்றுவித்து, அம்பிகையை நோக்கித் தவஞ்செய்யும் மனைவியைத் தேடிக்கொண்டு சோதிவனமெய்தித் தூயையாய் விளங்கும் தேவியைக் கண்டு, பராசக்தியின் கருணை விசேடத்தைப் புகழ்ந்து கைப்பற்றி யழைத்துத் தமது வைகுந்த மெய்தி வாழ்ந்திருந்தனர்.



பதினெட்டாவது

# துர்க்கன்வதை துர்க்கை.

---

உலகினையெல்லாம் தன் சுவாதீனஞ் செய்து இந்திராதி தேவர்களைத் தங்கள் பதவியினின்று துரத்தித் துன்புறுத்திய துர்க்கனது கொடுங் கோலரசிற்குத் தேவர்கள் பயந்து அவன் கட்டளையின்படி கீழ்ப்படிந்து நடக்குங் காலத்தில். பிரமதேவனும் விஷ்ணுமூர்த்தியும் இத்தீராத்துயரினின்று தேவர்களை விலக்கக் கருதி, பார்வதி பரமேசுவரர்களைப் பணிந்து தங்கள் குறையைக் கூறி யாசிக்க, மாதேவி தேவர்காள்! அஞ்சன்மின் அவனைக் கொன்று உங்கள் துயரை யொழிப்போம் என்றருளிச் செய்து. காளராத்திரி யெனுஞ் சத்தியை நோக்கியவுடனே, காளராத்திரி காந்தண்மொட்டினைப் போன்ற கைவிரல்களைக் குவித்துப் பணிந்து நிற்க, அடி பெண்ணே! நீ துர்க்கன்பாற் சென்று இந்திராதி யிமையவர் பதங்களைக் கைப்பற்றியவற்றை யெல்லாம் அவர்கட்குக் கொடுத்துப் பிழைக்கப் போகின்றனையா அல்லது உன் பந்து மித்திரர்களோடு யுத்தத்தில் இறக்கப் போகின்றனையா? என்று கேட்டு, அவன் கருத்தையுணர்ந்து வருகவென் றாக்கியாபித் தனுப்பினர். காளராத்திரி அக்கட்டளையை மேற் கொண்டு அந்நகரையடைந்து துர்க்கன் கொலுவிருக்குஞ் சபையைச் சேர்ந்து, கண்ணிமைகள் தீப்பொறி சிந்தும் துர்க்கனை நோக்கி, இந்திராதி தேவர்கள் செல்வங்களைக் கொடுப்பையோ போரிலிறப்பையோ? உன் கருத்தேது? என வினவவும், காளராத்திரியின் கட்டழகைக் கண்டு கழறுகின்றான். மூவுலகங்களிலும் இத்தகைய சௌந்தரியமுள்ள பெண்ணைக் கண்டதேயில்லை. என கற்றவப் பயனால் இங்குற்ற விவளை விடாது பிடியுங்களென, கஞ்சுக மூணித்தவர்களும் பொற் பிரம்

பேந்திரியவர்களுமாகிய அசுரர்கள் அவளைப் பிடிக்கத் தொடங்கு கையில். காளராத்திரி அடா துர்க்கா! தீய மனமுடையவனே! மன்னவராவார் நற்கருமந்தவறித் தூத மாத்தரை வசப்படுத்தலழ காமா? என்று மந்தகாசஞ் செய்து, கன்னியராசை கருத்திலிருந் தால் உமாதேவியார் பால் கணக்கில்லாதாருளர். சூலப்படை உன் மாமிசத்தைப் புசிக்கும் என்றோதித் தன்னைத் தொடர்ந்த அசுரர்களைக் கட்கடைசிவந்து நோக்க, கணப்பொழுதிலே அவ் வசுரர் கூட்டஞ் சாம்பராயது. அதனால், துர்க்கன் கோபித்து விடுத்த சுரேந்திரதபனன், யாக சத்துரு, மிருகாக்கன், தேவ கம்பன், உரோமன் முதலிய அசுரத் தலைவர் பெருஞ் சேனையோடு காளராத்திரியைச் சூழ்ந்து கொள்ள, அவள் சினமிகுந்து செய்த நிசுவாச வேகத்தால் யாவருங் குப்புற்று வீழ்ந்தனர்.

அதுகண்ட துர்க்கன், வடவாமுகாக்கினி போலக் கொதித்து. இரதகஜதுரகபதாதிகளாகிய தன் கணக்கில்லாத சேனை முழுவதை யுஞ் சேர்த்துக் கொண்டு யுத்தத்திற்குப் புறப்படவும், காளராத்திரி யானவள் அழகிய மின்னற் கொடிபோல ஆகாய மார்க்கமாகச் சென்று. மாதேவியின் சந்நிதியடைந்து. தாயே! துர்க்கன் பெருஞ் சேனையோடு போர்க்கோலங் கொண்டான் என்று கூறி நமஸ்கரித் தாள். அதனைக் கேட்ட அம்பிகை அவண் முன்னெழுந்தருள. இக்குணந் துர்க்கன். சேனைத் தலைவர்காள்! இவளைத் தந்திரத்தா லாவது வீரத்தாலாவது கொண்டு வருவீர்களாயின் உங்கட்குத் தேவர் செல்வத்தைக் கொடுப்பேனென்றான். அதற்கிணங்கிய சேனைத் தலைவர்கள் தேவரீர் கட்டளையை முடிப்பதே காரிய மென்று தமது சேனா சமுத்திரத்தோடெதிர்வர, எம்மையாளாக வுடைய இறைவியானவள் தமது திருமேனியிலிருந்து பலகோடி சத்திகளைப் படைத்துப் போர் புரியும்படி எதிரே விடுத்தனள். அச் சத்திகள் அசுரரைச் சேனையை யழித்து வாயிலிட்டு வெற்றிமாலை

யணிய. துர்க்கன் தன் சேனைகளழிவதும் பின்னிடைதுங் கண்டு, ஙாட்படையை யசைத்து விழிகளில் தீப்பொறி சிந்தி. அம்பறாத் தூணியும் வில்லு மேந்தி, கொடிக் கட்டிய தேரிலேறித் தேவியை யெதிர்த்துப் பல அஸ்திரங்கள் சிந்த, அம்பிகை அவற்றை மாற்றி அவன் ஆயுதங்களை யெல்லாமழிக்க, துர்க்கன் தன் வெற்றிவேலை விடுப்பத் தேவி யதனை வாளால் வெட்ட. துர்க்கன் சக்கராயுதம் விடச் சாம்பவி கதையால் சிதைப்ப, துர்க்கன் மேலுஞ் சூலத்தை விட மாலின்றங்கை சூலத்தை யொத்த தமது சூலத்தை யேவித் துண்டிக்க, துர்க்கன் கதையான் மோத அம்பிகை தனதடித் தாமரையாலுதைத்தனர். அவ்வுதையால் அக்கதை அக்கணமே யநேக துண்டுகளாக அழிந்ததன்றி. துர்க்கனும் துண்ணென நிலமிசை விழுந்து நெடுநேரம் மூர்ச்சையாய்க் கிடந்தான். துர்க்கன மூர்ச்சையானபோது சாம்பவி யனுப்பிய சத்தியானது அவனுடைய யானை குதிரை தேர் காலாளாகிய சதுரங்க சேனை முழுவதையும் அழித்தது.

பெருமாட்டியின் உதையாலுண்டாய மூர்ச்சையினின்று வெகு நேரங் கழிந்து தெளிந்தெழுந்த துர்க்கன் தன் சேனை முழுவதும் அழிந்தது கண்டு, இனி போர் செய்வது அசாத்திய மென்று பயந்து ஆகாயத்தி லொளித்துப் பாய்கின்ற பாணங்களை விட. அன்னையார் அக்கினிமுக பாணங்களால் அவற்றை விலக்கினர். துர்க்கன் எண்ணிறந்த மலைகளைப் பறித்தெறிந்தனன். கோடிக் கணக்கான அஸ்திரங்களால் அவற்றை நுண்ணிய மணலாக்கினர். துர்க்கன் ஒரு யானை வடிவாயினன். தாயை அதன் துதிக்கையை வாளால் வெட்டித் துணித்தனர். இறுதியில் எருமைக் கடா வடிவேற்றனன். உமாதேவியார் சூலாயுதத்தைச் செலுத்தி அதனை யழித்தனர். உடனே அக் கொடியோன் ஆயிரஞ் சிரமும் ஆயிரம் ஆயுத மேந்திய ஆயிரங் கரமுங் கொண்டு அன்னையாரை யெதிர்க்க, அன்

னையார் அஸ்திரமொன்றினாலே அவனுருயிரையழித்தனர். அமரர் மலர்மாரி சொரிந்து ஆநந்தக் கூத்தாடினார்கள். துர்க்கனைச் சங்கரித்த காரணத்தால் மாதேவிக்குத் துர்க்கை யென்றொரு திருநாம மெய்தியது. [துர்க்கை பூசை மங்கலவாரம்-சதுர்த்தசித்திதி-புரட்டாசிமாத அஷ்டமி நவமிகள்-இக்காலங்களில் செய்யின் விசேட பலன்றருமென நூல்கள் கூறுகின்றன] இத்துர்க்காரி காசிப்பதியில் சொப்பனேசுவரி பீடத்தில் எழுந்தருளியிருப்பாள். சொப்பனேசுவரி பீடம் சத்தி பீடங்கள் அறுபத்து நான்கனு ளொன்று.

---

பத்தோன்பதாவது

அருணை ச

# சம்பந்தாண்டாநுக்ரஹம்.

---

திருவண்ணாமலையிலிருந்த வோருருத்திர கணிகைக்குப் புதல்வராயுதித்த அருணகிரிநாதரென்பவர், தமது இளமைப் பருவத்திலேயே தாயிறந்தமையின், தமது சகோதரியிடம் வளர்ந்து குமாரக் கடவுளின் றிருவருட் பிரசாத பலத்தாற்றம்மி லொப்பாருமிக் காருமின்றிச் சந்தக்கவி பாடுதலில் வல்லுநராய், அருணாசலத்தி லெழுந்தருளி யிருக்கையில், ஸ்ரீவில்லி புத்தூராழ்வாராங்குற்று இவர் சந்தம் பாடுதலில் வல்லவரென் றுணர்ந்து பிரபுட தேவராஜனது விருப்பின்படி இவரோடு வாது செய்ய வருகையில் கந்தார்த்தாதி கூறிவர, ஆழ்வார் பொருள் சொல்லிக்கொண்டு வந்து,



" திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்த திதித்தித்த தேதுத் துதித்திதத்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததீ தேதுதை தாததத்து
திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதி தீதொத்ததே. "-என்றுந்

தகரவிகற்பச் செய்யுளொன்றுக்குப் பொருள் கூற மயங்கித் தோல்வியுற்று, தம்மிடந் தோற்றவர் காதுகளைத் தாமரிந்து கொண்டு வந்தது போலத் தமது காதை யரிந்து கொடுக்க வியைய, இனி யொருவர் காதினையும் அரியாதவரமெனக்குத் தருகவென்று அவரைக் காதுகளோடு செல்ல விடுத்தவர்.

அதன் பின்னர். சம்பந்தாண்டா னென்னுஞ் சத்தியுபாசக ரொருவரும் அருணகிரி நாதரும் பிரபுட தேவராஜனுக்கு மிகநெ ருங்கியவர்களாகவிருந்தமையின், அரசன் சம்பந்தாண்டானைச்சத்தி தரிசனஞ் செய்விக்க வேண்டு மென்றும், அருணகிரியாரைச் சுப் பிரமணிய தரிசனஞ் செய்விக்கவேண்டு மென்றும்பன்னாள் பிரார் த்தது வந்தானாக, சம்பந்தாண்டான் குறித்த வொரு தினத்திற் சத்தியைக் காட்டுவெனெனச் சபதங்கூறித் தேவியை வேண்ட, சத்தி " நீ யெமதன்பனாகலின் தரிசனந் தந்தாம். அரசன் முன்னர் வாரோம் " என மறுப்ப " அங்ஙனமாயின், அருணகிரி நாதர் விருப் பின்படி முருகக் கடவுள் அங்கெய்தாது காத்து என்னைக் கனப் படுத்துக, "·என்று வேண்டிக்கொண்டமையின் மாதேவி. முரு கக் கடவுளைக் குழந்தையாகச் செய்து தம்மடி மீதிருத்தி விளையா டிக்கொண்டிருந்தமையின், அருணகிரி நாதர் நியமனப்படி அருணா சலவாடபுரத் தம்பத்தில் வருவித்துக் காட்ட வியலாது தடைபட, அருணகிரியார் சீர்பாத வகுப்பு முதலிய வொவ்வொன்றனால் துதித்தும் அறுமுகப் பெருமான் ஆங்கடையாமை கண்டு மயில் வகுப்பினை யோதி அதனை யனுப்ப அது ஆங்குற்று திருக்கஞ் செய்து கொண்டிருக்கையில், இறைவர் அதன் மீதாரோகணித்து

அருணகிரியார் விருப்பின்படி பிரபுட தேவராஜனுக்குக் காட்சி தந்தருளினர்.

அதலசேட னாராட வகிலமேரு மீதாட
 வபினகாளி தானாட வவளோடன்
றதிரவீசி வாதாடும் விடையினேறு வாராட
 வகிலபூத வேதாள மவையாட
மதுரவாணி தானாட மலரில்வேத னாராட
 மருவிவானு ளோராட மதியாட
வனசமாமி தானாட நெடியமாம னாராட
 மயிலுமாட நீயாடி வரவேணும்
கதைவிடாத தோள்வீம னெதிரியான போர்மீளி
 கருதொணாத மாசேனை பொடியாகக்
கதறுகாலி போய்மீள விசயனேறு தேர்மீது
 கதிர்கொள்வீறு கோடேதி யலைமோது
முதுதிமீதி லேசாயு முலகமூடு சீர்பாத
 முவணவூர்தி மாமாயன் மருகோனே
யுதயதாம மார்பான ப்ரபுடதேவ மாராஜ
 னுளமுமாட வாழ்தேவர் பெருமாளே.

அவ்வாறு முருகனைக் கண்ட பிரபுட தேவன் கண்கள் ஒளியின்றிமாழ்க அருணகிரியார் விபூதி பிரசாதித்துக் கண்ணொளியை விளக்கினர். இது முதற் சம்பந்தாண்டாருக்கு இவரிடம் பகைமை யதிகரித்து எவ்வாற்றானும் இவரை முடிக்கவேண்டுமென்னுங் கருத்து மனத்துள்ளே யுண்டாயிருந்தது.

பின்னொரு காலத்தில் மன்னவன் அவ்விருவரையு நோக்கிக் கற்பக மலரைக் கொண்டுவர வல்லீர் யாவரென, சம்பந்தாண்டார்

அருணகிரியாரே அஃகாற்றவரென்று கூறி அதனை யியற்று மாற் புறத்தினமையின் அவ் வேண்டுகோளுக்கிரங்கி அருணை நெடுங் கோபுரத்தில் தமது பூதவுடலை யிட்டு ஆங்கிறந்து கிடந்த ஒரு கிள்ளையுடலிற் பிரவேசஞ் செய்து தேவருலகடைந்து ஒரு கல்லை [தொன்னை]யில் சிறிது மலர்களைக் கொண்டு திரும்பினர். அதனுள் சில தினங்களாயின்மையின் சம்பந்தாண்டார் அருணகிரியாரது விர்த்தாந்தங்களை யுணராது அவரெங்ஙனம் மெய்தினரெனத் தேடிக் கோபுரத்து விட்ட வுடலைக் கண்டு அரசனிடத்தெய்தி "அருணகிரியார் கற்பக மலர் கொண்டு வரமுடியாது உயிர் விட்டனர். அவர் பெரியராகலின் அவர் தேகத்திற்கு உடனே சமஸ்காராதிகள் செய்து முடிப்பது தகுதி" என்று கூறி அங்ஙனமே செய்வித்தனர். கிளியுருக் கொண்டு மலர்க் கல்லையை வாயிலேந்தி வந்த முருகக் குழவி கோபுரத்தில் விட்ட உடலைக் காணப் பெறாது மன்னவன் சபையை நோக்கி வந்தனர்.

அவர் அந்த நகரை யடையுமுன்ரே தெய்வமணம் நகர் முழுவதுங்கமழயாவரும் இஃதென்னென வியக்கையில் கிளியுருவொடு அம்மலரை அரசன் முன்வைத்து, மன்னன் முதலியோர்தாம் செய்த அபசாரத்தைப் பொறுக்கவெனவேண்ட அங்ஙனமே யங்கீகரித்து, கந்தரனுபூதி கந்தரலங்காரம் பலதிருப்புகழ்கள் முதலியன அருளிச்செய்து சிலகாலம் அருணகிரியில் பலர்க்குங் காக்ஷிதந்திருந்து. இறுதியில் பரமேசுவரியார் திருக்கரத்திற் கிளிரூபமாகவே விளங்கியிருக்கும்படி மகாதேவியாரால் அநுக்கிரகிக்கப்பெற்றனர். சம்பந்தாண்டாரும் சிலகாலஞ் சென்றபின்னர் அம்பிகையின் அடிமலர்கட்கு அனுக்கராயினர். [அருணகிரியார் குமாரக் கடவுள் திருக்கரத்திற் கிள்ளைவடிவாக விருப்பதாகக் கூறுவாருமுண்டு: அங்ஙனமாயினும் இழுக்காது. கணபதி ஸ்கந்தரென்னும் இருகுமாரர்களில் மூத்தபிள்ளையாருக்குச் சிவாம்ச மிகுதி


யென்றும், இளையபின்ளையாருக்குச் சக்தியம்சம்மிகுதியென்றும் பலர்க்கும் பிரசித்தமாகலின்.]

---

## இருபதாவது
# பார்வதி யவதாரம்.

---

மலரின் மணமும் நீரிற்றட்பமும் அக்கினியிற் சூடும்போலச் சிவபெருமானுடன் அபின்னையாக விளங்கும் பரமேசுவரி ஒரு காலத்திற் கைலாயகிரியிற் சகல தேவர்களும்பணியத் திருவோலக் கமுழ்ந்தெழுந் தருளியிருந்த சிவபெருமானைத் துண்ணென்றெழுந் துபணிந்து, தேவரீரை வணங்காத தக்கன் மகளென்னும் காரண மாயுதித்த தாக்ஷாயணி யென்னும் பெயரையும் அவனாற்போஷித்த உடலையும் மாற்ற விரும்புகின்றேனென விளம்ப, சிவபெருமான், மாதே! மலையரையன் உன்னை மகளாகப்பெற மகத்தாகிய தவம் புரிகின்றான். அவன்பாற் குழந்தையாயிருத்தி. உரிய பருவத்தி லேயாம் வந்து மணம்புரிவோமென வாய்மலர்தருள, அன்னையார் அரவாபரணர் அநுஜ்ஞைக்கிணங்கி இமோத்கிரியை யெய்தி அதி லுள்ள ஒரு தாமரைத் தடாகத்திலே. ஒருமலர்த் தவிசின்மேரில் மூன்று வயதுள்ள பெண்குழந்தை வடிவு தாங்கி யெழுந்தருளி யிருக்க, ஆங்கெய்திய மலைமன்னன் கண்டு பேரானந்தப் பெருக் கெய்தி, தோண்மிசைச் சுமந்து சென்று தன் மனைவியாகிய மேனை யென்பாள் கையிற் கொடுக்க, அவளுக்குப் பால் சுரக்க அதனை யூட்டி வளர்த்தனள். நாளொரு மேனியாக வளர்ந்து ஐந்து வய தெய்தித் தன் தந்தையாகிய பர்வதராஜனுக்குணர்த்தி அவன் சம்



மதம் பொற்று, இமாசலச்சாரலிற் பர்ணசாலையொன்று செய்வித்து அதிற் சேர்ந்து சிவபெருமானை நோக்கித் தவச் செயல் மேற்கொண்டு தோழிகளோடு வசித்திருந்தனர்.

[அப்பொழுது சிவபெருமான் தம்பாலெய்தி மனமொடுங்க விரும்பிய ஸநகாதி நால்வர்க்கும் ஞானோபதேசஞ் செய்துகொண்டிருந்தனர். அதனால் உலகமானது மாதர் முயக்கற்றுப் படைப்புத் தொழில் தடைபடக் கண்டதேவர் அதனை யகற்றக்கருதி, மதனனை விடுப்ப அவன் மலர்க்கணையெய்து நெற்றிவிழித்தீயாற் சாம்பராயினன். அக்காலத்தில் அவனருகிருந்த அவன் மனைவி இரதி தன்கணவனைத் தரவேண்டுமெனப் பிரலாபிக்க, சிவபெருமான் யாம் இமாசலத்திற் பர்வதன் மகளாயிருக்கும் பார்ப்பதியை மணந்த பின்னர் உன் நாயகனை நல்குவோமென நவின்றனர்.]

சிவபெருமான் ஸநகாதிகட்கநுக்கிரகித்து விடுத்து, இமாசலமெய்தி அன்னையாரருந்தவங்கண்டு அகமகிழ்ந்து அந்தணவடிவெய்தி, நீயாதுகருதித் தவம்புரிகின்றனை என, உமாதேவி சங்கரனை மணக்க விரும்பியுள்ளேன் என, பெண்ணே! அவன் சாமானியன். என்னைவிவாகஞ்செய்துகொள் என, தேவிசினந்து தீயோனே! செல்க என, விமலர் விடையேறிக்காட்சியளிப்ப, அம்பிகை அஞ்சிக் கைகுவித்து, அறியாமற்செய்த அபசாரத்தை மன்னிக்க என, இறைவர் அவை நம்மைத்துதித்தனவாகக்கொண்டோம். இனித்தவமொழிக மணம்செய்வோம் என்று, அந்தர்த்தானமாயினர். பார்வதிதேவியார் நிகழ்ந்தனவற்றை யுணர்த்த, பர்வதன் மனக்களிமிகுந்திருந்தான்.

## இருபத்தோன்றுவது

# பார்வதி திருமணம்.

---

இறைவியார் இமாசலமன்னர், புதல்வியாராய்த் தவச்செயல் மேற்கொண்டிருந்தபோது சிவபெருமான் திருக்கைலாயகிரியிலிருந்து சப்தருஷிகளைவருவித்து நீங்கள் பர்வதன் மகளாயிருக்கும் உமையை மணம்பேசுக எனக்கட்டளையிட, அவ்விருடிகள் சிவபெருமான் கருத்தின்படி அருந்ததியோடு இமோத்கிரியடைந்து மலை மன்னனைக்கண்டு மகாதேவர் மனக்கருத்தை யுணர்த்த, அவன் அதற்கங்கீகரித்ததை ஐயன்பால் விண்ணப்பித்துத் தத்தமிடஞ் சேர்ந்தனர். மலையரசன் விச்சுவகர்மனால் நகரலங்காரஞ் செய்வித்து விசேஷ சிறப்புக்களாக்கினன். பின்னர், பங்குனியுத்திரத்தினம் உத்தமோத்தம தினமாதலின் உமையம்மையைத்திருமணஞ்செய்து கொள்க என விண்ணப்பிக்க, சிவபெருமான் திருநந்திதேவரை விளித்து, தேவர் முதலினோரை வரச்செய்க என, நந்திபகவான் சிந்தனைசெய்தவளவில், கோடியுருத்திரர்-நூற்றுவருருத்திரர்-கீழண்டகடாகத்துள்ள காலாக்கினியுருத்திரர்-கூஷ்மாண்டர்-ஆடகேசுவரர்-தாரகேசுவரர்-திருமால்,பிரமன் இந்திரன்முதலிய எண்டிசைக்காவலர்-நவக்கிரகங்கள்-நவசித்தர்கள்- அஷ்டவசுக்கள்-சப்தருஷிகள்-யக்ஷகின்னர கருட காந்தர்வர் முதலியகணங்கள்-வேதாகமசாஸ்திரங்கள்-யுகாதி காலபேதங்கள் முதலியயாவருங்கூடிவந்து திருவாயிலையடைந்து நந்திபகவானைப் பணிந்தனர்.

அப்பொழுது சிவபெருமான் அராக்கலன் முதலியன பொற்பணியாக விளங்க மணக்கோலஞ்செய்துகொண்டு இடபவாகன



மூர்ந்து தேவர்கள் மலர்மாரிபெய்யவும், ஸ்ரீகணேசர் ஸ்கந்தர் வீரபத்திரர் வைரவர் திருமால் பிரமன் முதலானோர்தத்தம் வாகனங்களில் வரவும், ஸப்தருஷிகள் ஆசீர்வதிக்கவும், பாநுகம்பன் ஆயிரம் வாய்களாலுஞ் சங்கத்தொனிசெய்யவும், வாணாசுரன் ஆயிரங் கைகளாலுங் குடமுழவடிக்கவும், கணத்தலைவர்கள் பலவாத்திய முழக்கவும், திருநந்திதேவர் பொற்பிரம்பேந்தித் தேவர் முனிவர் கூட்டத்தை விலக்கிக்கொண்டு முன்னேசெல்லவும், இந்திரன் களாஞ்சி தாங்கவும், ஈசானர், அடைப்பை யெடுக்கவும், வாயு ஆலவட்டம் பணிமாறவும், அக்கினிதூபமேந்தவும், வருணன் பூரணகும்ப மெடுக்கவும், நிருதி கண்ணாடிகாட்டவும், குபேரன் நவநிதிகள் சொரியவும், இயமன் கஞ்சுகத்தொழில் புரியவும், நாகர்கள் மாணிக்கத் தீபமேந்தவும், வேதங்கள் திருவடியைச் சுமக்கவும், கங்கைகாவிரி முதலிய நதிக்கன்னியர் சாமரையிரட்டவும், குண்டோதரன் குடைபிடிக்கவும், பிரமவிஷ்ணுக்கள் இருபுறத்திலும் கைகூப்பிவரவும், சுந்தரேசப் பெருமான் திருநீற்றுப் பெட்டகமும் திருப்பள்ளித்தாமமு மெடுத்துக் காட்டவுமமைந்த சர்வாலங்காரத்துடன் இமாசலமெய்தி, கண்டமாதர்கள் காதல் கொள்ளத்திருவுலாப்போந்து பர்வதராஜன் மாளிகையடைந்து திருமால் கைலாகுகொடுக்க இடபவாகனத்தி னின்றும் இறைவரவரோகணித்தனர்.

பர்வதன்மனைவி மேனை மாங்கல்யமாதர் பலருடன் பசுவின் பால் கொணர்ந்து பரமன் பாதங்களை விளக்கி நாணத்தோடு உட்சென்றனள். பிரமன் திருமணச்சடங்கு நடத்தினன். சிவபெருமான் நவரத்தின சிங்காதனத்தில் வீற்றிருந்தனர் ஏனையோர் தங்கடங்கட்கேற்ப அமைந்திருந்த ஆதனத்திலிருந்தனர் * அம்மையார் அநேக ஆடையாபரண அலங்கிர்தையாய்த் தோழிமார் புடைசூழ மாதேவர் பால்வந்துபணிய, மங்கே! பக்கலிலிரு என இரு

வரும் ஏகாசனத்திலிருந்தனர். பர்வதராசன் மேனையோடு சிவபெருமான் திருவடியைப்பூசித்து, பார்ப்பதிகையைப் பரமேசுவரன் கையிலளித்தனன். சிவபெருமான் திருமாங்கல்யந்தரித்து மணவினைமுடித்தனர் † பின்னுல் இறைவியாரோடு திருக்கைலாயகிரியையடைந்தனர். தேவர் முனிவர்தத்தமிடஞ் சார்ந்தனர்.

---

## இருபத்திரண்டாவது

# சாவித்திரிக்கநுக்கிரகம்.

---

மத்திர தேச மன்னனுகிய அசுவபதி யென்பான் மாளவியென்னும் மனைவியோடு வாழ்ந்து அரசு புரிகையில் எல்லாப் பாக்கியங்களுமிருந்தும் புத்திரப் பேறின்றி வருந்தி, சாவித்திரியம்மையை நோக்கி அருந்தவம் புரிய, சாவித்திரிதேவி பிரசன்னையாய் அரசனே! நீ புத்திரப் பேறு கருதினை. உனக்கொரு பெண் குழந்தையைத் தந்தோம். அவளோ கற்பிற் சிறந்த கட்டழகுடையாள் அவளால் நீ பெரும் பாக்கியவானுகுவை யென்றருளி மறைய, மாளவி கருப்பமெய்திப் பெண்குழந்தையைப் பெற்றனள். அக்குழந்தைக்குச் சாவித்திரியென நாமஞ் சாத்தி வளர்க்க வளர்ந்து மங்கைப் பருவமடைய, மன்னவன் அவ்வனிதைக்கு மணஞ் செய்

---

* யாவரும் ஓரிடத்து கூடியதால் வடமுனைதாழ்ந்தும் தென்முனையுயர்ந்தும் பூமி சமநிலை மாறியது. இனி உலகமழியு மென்ற தேவர் வேண்டுகோட்கிரங்கிச் சிவபெருமான் அகத்திய முனிவரைத் தென்றிசைக்கனுப்பி அதனைச் சரிபாக்கினர். அவர் விரும்பிய திருமணக் காட்சியைத் தலங்கடோறுந் திருவருள்செய்தனர்.

† இரதி தன் கணவனை யளிக்கும்படி வேண்ட, சிவபெருமான் கருணைபூத்தவராய் அவன் வடிவுகொண்டெழச்செய்து, நீ இரதிக்குமட்டுங் கருவுருவாகவும், ஏனையோருக்கு அருவமாகவு மிருந்து உன் தொழிலை நடத்துக வென்றருளினர்.



யுஞ் சருத்தினனாகித் தக்க வரனைத் தேடும் பிரயத்தின முடைய வனாயிருந்தனன். அப்பொழுது நாரத முனிவர் அங்கடைய அர சன் அவரை அர்க்கிய பாத்திய ஆசமனாதிகளாற் பூசித்து உயர்ந்த ஆதனத்திருந்தி அவருக்கருகே தானும் வீற்றிருக்கையில், சாவித் திரிகண்டு முனிவனையும் தந்தையையும் பணிந்து நிற்க, அரசன் முனிவரை நோக்கி, என் தவப்புதல்விக் கேற்ற கணவனைக் கிடைக் கப்பெற்றிலேன். அது காரணமாக மனம் வருந்துகின்றேனென, நாரதர் அரசனே! நின்குமாரியை நீ விரும்பியவனுக்கு மணஞ் செய்ய வேண்டாம். அவள் விரும்பியவனுக்கே யளித்தல் வேண்டு மென, தந்தை சாவித்திரியை வினவ, சாவித்திரி நாணமெய்தி முன்னே மாதர்கள் பலர் வியந்து சொல்லக் கேட்ட சாலுவதேய மன்னவன் புதல்வனாகிய சத்தியவானுக்கு என்னைக் கொடுக்கவென் றனள். அப்பொழுது அருகிருந்த நாரதமுனிவர் அச்சத்தியவான் மிகப் புனிதமானவன், சொல் தவறாதவன். மன்மதன் போலும் அழகுடையவன். ஆனால் அவன் இன்றுமுதல் ஓராண்டிலிறப் பான் என, மன்னவன் சாலுவ மன்னன் குருடனாகிச் சத்துருக்க ளுக்கு நாட்டை யிழந்து மனைவியோடும் மகனோடும் காட்டில் வசிக்கின்றான். அவனுக்கு எப்படி யுன்னைக் கொடுப்பது வேறொ ருவனை வரிப்பாயாக வென, சாவித்திரி, தந்தையே! சிலமாதர்கள் சொல்லால் அவனைக் காமுற்ற என் மனம் வேறொருவனைக் கரு தாது எனத் திடமாகக் கூற, நாரதரும் அங்ஙனமே புரிக வெனக் கூறிச் செல்ல, அசுவபதி அப்படியே சாவித்திரியைச் சத்தியவா னுக்கு மண முடித்தனன்.

பின்னர், சாவித்திரி கணவன்பாற் சென்றடைந்து ஆபர ணாதிகளை விலக்கித் தவக் கோல மெய்தி மாமன் மாமிகட்கும் கணவனுக்கும் குறைவறப் பணி செய்து கற்பிற் சிறந்த காரிகை யென அவர்களாற் புகழப் பெற்றிருந்தனள். அப்படியிருக்கையில்

நாரத முனிவர் கூறிய காலத்திற்கு நான்கு தினங்களிருந்தன. சாவித்திரி கௌரி விரதத்தை மேற்கொண்டு ஏகாக்கிரசித்தமாய் அன்னபானாதிகளையும் நித்திரையையும் விலக்கி ஒருவரோடும் வசனியாமல் விதிமுறையாக அநுஷ்டித்து அம்பிகையின் பூரண கடாக்ஷமெய்தப் பெற்று. மூன்று தினங்களுமகல நான்காந்தினமடையவும், சத்தியவான் வழக்கப்படி வனத்திற்குச் செல்லுகையில், யானும் வனத்தைக் காண உம்மோடு வருவேனென. சத்தியவான், பெண்ணே! மூன்று தினங்கள் விரதமிருந்தனை. இன்று புசித்துக்களை தீருக. நாளை யென்னோடு வருகவென. நான் இரவு கண்டன்றிப்பாரணஞ் செய்யேனன்றியும். துயிலேனாகலின் பகற்பொழுதை உம்மோடு கழிப்பேனென. சத்தியவா னதற்கிணங்கி வருகவென, சாவித்திரி மாமன் மாமிகளைப் பணிந்து விடைகொண்டு கணவனோடு காட்டை யடைந்தனள். சத்தியவான் வழக்கப்படி காடு முழுவதும் சுற்றித் தருப்பையறுத்தும் சமிதையொடித்தும் மரங்களிலேறிக் காய் கனிகளைப் பறித்தும் மலர்களைக் கொய்தும் உழன்று கொண்டிருக்கையில். சாவித்திரியும் அவன் நிழல்போல 'விடாது பின்றொடர்ந்திருந்தாள். அப்படி யிருக்க. சத்தியவான் ஒரு மர நிழலிலிருந்து மனைவியோடு இதனைச் சொல்லுகின்றான்.

பெண்ணே! என் கைகால்கள் நடுங்குகின்றன. கண்கள் சுழலுகின்றன. ஒன்றுந் தெரிகிலேனென்று கூறி, பின்னர் மனைவிமடியில் தன் சிரசை வைத்து அரசகுமாரன் நிலமிசைத் தூங்கினான். அப்பொழுது தென் புலத்திறைவனாகிய இயமன் வாடாத மலர்மாலை மார்பில் விளங்கவும், பாசமுந் தண்டமுங் கையிலிலங்கவும் பதிவிரதையாகிய சாவித்திரி கண்ணுக்குப் பிரத்தியட்சமாகத் தோன்றி, சத்தியவானுயிரைக் கவர்ந்து செல்லுஞ் செயலைக் கண்டு, சாவித்திரி தன் கணவனுடலை நிலமிசைக்கிடத்தி

இயமனை நோக்கி, நீ யாவன் என் கணவனுயிரை ஏன் கொண்டு செல்கின்றனை யென வினவ, இயமன் புன்னகை புரிந்து, கற்புக் கரசியே! யான் இயமதருமன். உன் கணவனுக்கு ஆயுள் முடிந்தமை யாலும் அவன் சற்பாத்திரனாதலாலும் யானே வந்து அவனுயிரைக் கொண்டேன். பிறப்புண்டானால் இறப்புண்டு. இது பொதுத்தரு மம். நீ தேவியை யர்ச்சித்துக் கடாக்ஷம் பெற்றமையின் என்னை நேரே கண்டாய். யான் போகின்றேன். நீ நில்லென, அண்ணலே! நான் கணவனைப் பிரிந்திரேன். என்னையும் உடன் வரக்கட்டளை தருகவென, தருமன் கணவனோடே யுயிர்விடுதல் உலகவியற்கை யன்று. கணவனுயிரை யன்றி வேறு நீவிரும்பும் வரமிருந்தால் கேட்கத் தருவேனென, சாவித்திரி அங்ஙனமாயின் சாலுவதே சாதிபனான என் மாமன் கண் பெறுமாறு வரந்தருகவென அவ் படியே யாகுக வென்று நடந்தான். சாவித்திரியும் பின்றொட இயமன் தடுத்து இன்னும் யாது வரம்வேண்டுமென. என் மாதுல னுக்கு அரசுரிமை பண்டுபோ லெய்துகவென. அப்படியே தந்து செல்ல, மீளவும் பின்றொடர்ந்து என்னையுங் கணவனோடு கொண்டு போகுகவென, இயமன் உன்புருஷனையன்றி வேண்டிய வேறு வரங்கேளென, சாவித்திரி என் தந்தை மைந்தரில்லா திருத்தலின் நூற்றுவர் மைந்தரைப் பெற வரந்தருக வென்றாள். அப்படியே தந்தேனென்று இயமன் நடக்கையின் மேலும் பின் றொடர இவ்வனத்தில் நீ யென்னோடு வருதல் தகுதியன் றெனப் பலவாறு தடுத்த தருமனை நோக்கிச்சாவித்திரி. தருமசொரூபியே! நல்லோர் பெரியோரைக் கண்ட பலன் வீணாகாதென்னும் பழ மொழி குற்றமாகும்படி தேவரீரைப்பணிந்து அடைக்கலமெய்திய யான் குறைமதியோ டிருக்க விடுவது தருமமோ? கணவனை யிழந்த பெண்ணால் யாருக்கு யாது பயன்? என் கணவனுயிரைத் தந்தே செல்ல வேண்டு மென்று அழலிடைப்பட்ட மெழுகென வுருகின்ற சாவித்திரியை இயமன் குளிர்ந்த பார்வையோடு

நோக்கி, நங்கையே! நீவிரும்பியது கொடுப்பேனென, சாவித்திரி பலவாறு வருந்தி என் கணவனைத்தருகவென, இயமன் தந்தேனென்றான். சாவித்திரிகளித்தனள். நீயுன் கணவனோடு பல காலம் நாட்டில் வசித்துப் புதல்வரைப் பெற்றுவாழ்க வென்று வரமளித்து இயமன் சென்றனன்.

சாவித்திரி சந்தோஷ சித்தத்தோடு பண்டைய மரநிழலடைந்து கணவனுடலைத் தூக்கி அச்சிரசைத் தொடைமிசை யிருத்தினள். கணப்பொழுதில் சத்தியவான் துயின் றெழுந்தவன் போல உயிர்பெற் றெழுந்து யான் நெடுநேரந் துயின்று விட்டேன். அக்கனவில் சுந்தரமான ஒருபுருஷன் என்னைக்கட்டிக் கொண்டுபோனான். ஒரு பெண் யாசித்து என்னைக்கொணர்ந்தாள் என்றுகூறி, அஃதென்னெனவினவ, சாவித்திரி நிகழ்ந்த வரலாற்றினை வெளியிட்டு, பிறகு சத்தியவானோடு மாமன் மாமியரிடஞ் சேர்ந்தனள். இவர்கள் பெற்ற வரவிசேடத்தால் அரசுரிமை முதலிய சகல பாக்கியங்களு மநுபவித்துப் பலகாலம் வாழ்ந்திருந்தார்கள்.

கௌரி விரதத்தினால் சாவித்திரியடைந்த பெரும் பேறு கருதி, சுமங்கலிகளால் ஆனிமாச பூரணையில் சாவித்திரி விரதம் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இது வைதவ்யத்தை விலக்கத் தக்கதென்று நூல்களில் நுவலப்பட்டது.



## இருபத்துமூன்ருவது

# மோஹினிரூபதானம்.

ஹரிஸ்த்வாமாராத்ய ப்ரணதஜந ஸௌபாக்ய ஜநநீம் |
புராநாரீ பூத்வா புரரிபுமபிக்ஷோப மநயத் ||

தேவர்கட்கும் அசுரர்கட்கும் அடிக்கடி பெரும்போர் நிக ழ்ந்து கொண்டிருந்த சமயத்தில், திருமால் பன்முறை தேவர் கட்கு உதவி புரிந்துவந்து தம்முள்யோசிக்கின்ருர். நமக் குள்ள பல்வகை யாற்றலோடும் எண்ணிய வகையான காம ரூபங்கள் எடுக்கும் ஆற்றலு மிருத்தல் இன்றியமையாத தொன்ரும். அதனிலும் அதிசௌந்தரியம் வாய்ந்த மங்கைவடி வெய்துதல் மாட்சிமை பெற்ற தொன்ரும். அஃதொன்று அநேக அவசரங்களில் நம்மைக் கனப்படுத்தும். காரிய சித்தியைத்தரும். பலரைக் காமுறச்செய்யும். நாம் எவரையு மயக்கிக் கீழ்ப்படுத் தலாம். இதனிற் சிறந்த சித்தியென்ன விருக்கின்ற தென் றெண்ணி, இஃதெவர்பாற் பெறற் குரித்தெனப் பன்னெடு நாள் யோசித்து, ஜகந்மாதாவும் திரிபுர சுந்தரியுமாகிய மாதேவியே பேரழகுடையவள். அவளே அத்தகைய வரமருளற் குரியளெனத் தன்னுட்டுணிந்து. அம்பிகையை நோக்கி அநேக காலம் அருந்த வம் ஆற்ற, அகிலாண்ட நாயகி அருண்மடை திறந்து அன்னவற் கருள உன்னினளாகிப் பன்னுதற்கரிய எழில் மிகுத்து காட்சிதந் ருள், பன்னக சயனன் எண்ணின கருமம் முற்றிய தென்று மனங் களித்து, மாதேவியைப் பணிந்து கைகட்டி நேர்நின்று உலகன் னையே! ஒருவரும் சமமில்லாத திரிபுரசுந்தரி! அடியேன் பேரழ குடைய தேவியின் திருவடிவைப்போன்ற அழகுடைய வடிவ

பெடுக்கும் வல்லபமுடைய வரத்தைப்பெறுமா றருள்புரிகவென்று பன்முறை வேண்டிப் பிரார்த்திக்க, சர்வமங்களப்ரதை. தாமோதா! நீ என்னைப் பணிந்தும் துதித்தும் தியானித்தும் என் ஸ்ரீசக்கரத்தைப்பூசித்தும் என்னைத் தரிசித்தனை. நீவிரும்பிய வரம் தந்தோமென்றநுக்கிரகித்தனர்.

இவ்வரப்பிரதாபத்தினாலேயே, திருமால் பின்னொருகாலத்தில், க்ஷீராப்திமதனத்திலுண்டான அமிர்தத்தை அசுரர்கட்களிக்காது வஞ்சிக்கக் கருதி அரிவையர் சிரேஷ்டரான மோகினிவடிவேற்று என்னை விரும்புகின்றீர்களோ அமிர்தத்தை விரும்புகின்றீர்களோ வென்று வினவி வஞ்சனையால் மயக்கி, அவர்களை வேற்றிடங்கொண்டுசென்று உங்களில் வெற்றிகொண்ட வொருவனுக்கே யானுரியனென்று அவர்கள் யாவரையு போரில் இறக்குமாறு புரிந்தனர்.

அன்றியும். சிவபெருமான் பிக்ஷாடனராகத்தாருவனமடைந்த காலத்தும், பஸ்மாசுரனைக் கொல்லவேண்டிய அமயத்தும், ஹரிஹரபுத்திரனெனும் ஐயனாரையளித்த அவசரத்தும் அத்திருமால் கொண்ட மோகினிப் பெண்வடிவிற்கும் இதுவே மூலகாரணமாம்.

## சௌந்தரியலகரி.

மாயன் வணங்கியுன் மால்வடி வங்கொள
  வாடு மரன்றயர் போதாதோ
தூய மதன்றொழ வாண்வடி வம்புணர்
  தோகைகண் வண்டயி றேனேபோன்
மேய வழங்குமு ரூபம தென் சொல
  மேவிது கண்டவர் வாழ்வாரோ
நீயகி ரஞ்சகி மோகன வஞ்சகி
  நீசெய்வ தொன்றல மாதாவே.



## இருபத்துநான்காவது
# நவமணிச்சத்திகளின் தோற்றம்.

சிவபெருமான் தேவர்கள் வேண்டுகோளுக்கிணங்கித் தம்போலும் ஒரு புதல்வனைத் தருவதாக வாக்களித்து ஆறு நெருப்புப் பொறிகளைத் திருநெற்றிவிழிகளினின்றும் வெளிவிடுத்தபோது விரைந்து அந்தப்புரஞ்சேர்ந்தவிமலை [ஸ்கந்தோத்பவத்திற்காண்க] திருமால் முதலிய தேவர்கள் ஈசனைவணங்கி யொருபுதல்வனைத் தருகவென வேண்ட இறைவர் தீப்பொறியினால் சரவணத்திற் குழந்தையாயிருக்கச் செய்தனரென்றுணர்ந்து, என்பால் சிவகுமாரன் உதியாமல் தடுத்தவர்களாகிய இந்திரன் பிரமன் திருமால் முதலானவருடைய மனைவியர்க்கும் புத்திரர்களில்லாமற் போகுகவெனச் சபித்துச் சிவசந்நிதியடைய, சிவபெருமான் தம்பக்கலிலமர்த்தினர். முன்னே தேவியார் அந்தப்புரஞ்சென்றபோது திருவடிச் சிலம்பினின்றுதிர்ந்த நவமணிகள் அங்கு விளங்கின. அவை பார்வதிதேவியார் திருவுள்ளக்கருத்தின்படி அவ்வம்மையாருடையஒளியமைந்த சிறந்த உருவங்களாகவாயின. அத்திருவுருவங்களையெல்லாம் சிவபெருமான் திருநோக்கத்தாற் பார்த்தருளிவருகவெனக் கட்டளையிடவும், ஒருவகைரத்தினத்திற்கொரு சத்தியாக ஒன்பது வகை ரத்தினங்கட்கும் ஒன்பது சத்திகளாகித் தேவர்களுடைய சிறந்த தவத்தால் வந்தனர். அவர்கள் முத்துவல்லி, மரகதவல்லி மாணிக்கவல்லி, வைடூரியவல்லி, கோமேதகவல்லி, புஷ்பராகவல்லி, பச்சைவல்லி, வச்சிரவல்லி, நீலவல்லி யெனப்படுவோர்.

துளிரின்மெல்லடிப் பரிபுர மாயின தணைந்து
மிளிரு மங்கல மணிகளி னுணையால் விமலை
யொளிரு நல்லுருத் தோன்றின வைம்முகத் தொருவன்
றெளிரு முச்சுட ரகத்திடை யமர்ந்திடுஞ் செயல்போல்.

## இருபத்தைந்தாவது

# நவவீர ருற்பவம்,

உமாபிராட்டியார் சிலம்பின் நவரத்தினங்களினின்று அவ்வன்னையால் திருவுள்ளத்தின்படி யுதித்த நவசத்திகளும் சிவபெருமான் திருவடிகளில் வணங்கி அப்பெருமான்பால் எண்ணத்துடன் சேர்ந்த இச்சைகொண்ட மாத்திரமே முனிமங்கையர்போற்கருப்பமெய்தினார்கள். உலகங்களையெல்லாம் அநாதியே விருப்போடு பெற்ற உமாதேவியார் அச்செயல்கண்டு வெகுண்டு. நீங்கள் எனக்கு மாறுபட்டீர்கள். அம்மாறுபாட்டினால், பாரமாகிய இக்கர்ப்பத்தோடு ஓரினத்தவர்களாகிய நீங்களெல்லீரும் பலகாலம் இருப்பீர்களாகவெனச் சபித்தனர். [ஏனெனில்இவர்கள் அம்மையார் திருவடியினின்றுதித்தவர்களாதலின்அவர்பாற்கட்டளைபெற்றுஅதன்படியொழுகவேண்டிய தமது செயல் தவறி நேரே சிவபெருமானைப்பணிந்துகாமுற்றுக் கருவேற்றது அவர்கள் பாற்குற்றமாகலின்] அச்சாபத்தைக்கேட்ட ஒன்பதின்மருந்நடுநடுங்கிப்பயந்து உடல்வியர்த்தார்கள். அவ்வியர்வினின்று அருக்கர் தொகுதிபோல அழியாதஆற்றலுடைய இலக்கம் வீரர்களவதரித்தார்கள். அவ்விலக்கம் வீரரும் இடிபோல வெடிபடு சொல்லுடையவர்களும் பீதாம்பரமணிந்தவர்களும் வாளுங்கேடகமுமேந்திய கையையுடையவர்களுமாக நெருங்கிச் சிவபெருமானைப்பணிந்து துதிசெய்து நிற்க சிவபெருமான், புதல்வர்காள்! நீங்கள் சூரசங்காரத்திற்காக எழுந்தருளும் நமது குமாரசுவாமிக்குச் சைநியங்களாகக்கடவீரென்று கட்டளை தந்தனர். அக்கட்டளை பெற்றுச் சிவசந்நிதியில் அணுக்கத் தொண்டர்களாயிருந்தனர். சாம்பவியின் சாபமேற்ற சத்திகள் தங்கள் கருப்பத்தைக்கழிக்க மாட்டாதவர்களாய்ப் பலகாலம் சுமந்து வருந்தி



யிருக்க, அவர்கள் கர்ப்பத்தில் சிவகணாதிபர்கள் சிவத்தியான பாரக ஒப்பற்ற காளைப்பருவமுடையவர்களாய் வளர்ந்து வீற்றிருந்தார்கள். அவ்வீரர்கள் சிவத்தியானத்துடன் செய்கின்ற யோகத்திலிருந்ததால் சகிக்கமுடியாத சுமையாய்ப் பாரமதிகரித்துவிடவே, அச்சத்திகள் பார்வதிதேவியாரோடு பரமேசுவரனையும் பணிந்து, நாங்கள் இதுகாறும்இக்கருப்பச்சுமைதாங்கினோம். இனி தாங்ககில்லோம் எங்களுக்குத் திருவருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்க, சிவபெருமான் பிராட்டியைநோக்கி, நங்காய்! உன் பாதங்களிலணிந்தசிலம்பிற் பிறந்தவர்களாகிய இவர்கள் உன்சாபகாரணமாகக் கருப்பத்தால் மிகவருந்தி வெகுகாலம்சுமந்துகொண்டிருந்தார்கள். ஆதலால் இனி இவர்கள் புதல்வரைப்பெறும்படி திருவருள்புரிகவென வேண்டினர். சிவகட்டளையைக்கொண்ட தேவியார் பெண்களே! இனி நீங்கள் வீரர்களைப் பெறக்கடவீர்களெனப் புன்னகையோடுரைக்க, அம்மங்கையர்பேரானந்தப்பெருக்கில்மூழ்கியவர்களாய்இருபெரு முதியோரையும் வணங்கி விடைகொண்டு ஓரிடஞ்சேர்ந்து புதல்வர்களைப் பெற்றனர். எங்ஙன மெனில் மாணிக்கவல்லி வீரவாகு தேவரையும், முத்துவல்லி வீரகேசரியையும், புட்பராகவல்லி வீரமகேந்திரரையும், கோமேதக வல்லி வீரமகேச்சுவரையும், வைடூரியவல்லி வீரபுரந்தரரையும், வயிரவல்லிவீரராக்கதரையும், மரகதவல்லி வீரமார்த்தாண்டரையும், பவளவல்லி வீராந்தகரையும், நீலவல்லி வீரதீரரையும் முறையே பெற்றனர். இந்த நவவீரர்கள் தாய்மாரின் நிறத்தோடுபீதாம்பரதரராய்ப் பலகாலம் வளர்ந்த வளர்ச்சியுடன்பிரமன்போல நவசத்திகளின் உந்தி வழியே யுதித்தார்கள். அவர்கள்உடனேசத்தியையடைந்துபணிய, பெண்ணே இவர்கள் நமது நந்திகணத்தவர்கள். நம்புதல்வரென, தேவி அவர்களுக்குக் கைவேலும், பெருமான் வாளுமுதவினர். நீங்கள் ஒன்பதின்மரும் வியர்விலுதித்த இலக்கத்தவரும் குமாரக்கடவுள் துணைவராய் யுத்தபூமியிற் செல்லக்கடவீர் எனவியம்ப, அதற்கு


அவர்கள் அங்கீகரித்து அன்னையையும் அப்பரையும் பணிந்து கொண்டு அங்கிருந்தனர். நவசக்திகள் அம்பிகையின் தொண்டு செய்து கொண்டிருந்தனர்.

---

## இருப்பத்தாறுவது
# குமாரசுவாமிக்கருளியது

---

குமாரக்கடவுள் எண்ணிறந்த திருவிளையாடல்கள் செய்து கொண்டிருந்து பின்னர் கந்தமாதனகிரியிலிருந்து தமது இலக்ஷத் தொன்பது வீரரோடும் பூதகணங்களோடுஞ்சென்று திருக்கைலாயகிரி யடைந்து தமது மாதாபிதாக்களை வணங்கி அவர்கட் கிடையே யெழுந்தருளியிருந்தனர். அக்காலத்தில் தேவர்களும் இந்திரனும் தங்கள் மனத்திலுற்ற குறைகளை விண்ணப்பித்து, திருமாலையும் பிரமனையும் அழைத்துக் கொண்டு கைலாயகிரியை யடைந்து, வெகுகாலங் காத்திருந்து திருநந்தி தேவர் விடை பெற்றுச் சந்நிதியடைந்து முறைப்படி வணங்கினர். அதற்குள், இந்திரன் துயரமிகுந்தவனாய், அம்மையப்பரே! அநேக யுகங்களாய்ப் பெருவல்லபமுடைய சூரனாதி அசுரர்களால் பெருந்துய ரெய்தி வல்லமையின்றி ஒடுங்கி யிருக்கின்றோம். தேவமாதர்களும் அடியேன் மகனாகிய சயந்தனும் அநந்த தேவர்களும் வீரமகேந்திர நகரிற் சிறையிலிருக்கின்றார்கள். அசுரர்களால் என் நகர் சீர் கெட்டது. யாவுந் தெரியுமே. யான் முன் தவஞ் செய்த போது விரைவில் ஒரு குமாரனுதிப்பான். அவனைக் கொண்டு அசுரர் துயரை யகற்றுகின்றோ மென அருளிய வரத்தை இன்னும் கைகூடச் செய்யவில்லை. குமாரக்கடவுளும் திருவவதாரஞ் செய்துள்ளாரே! இன்னும் எங்கள் கவலை தீர



வில்லையே, இன்னும் யாரோடு நாங்கள் முறையிடுவோம் ஒருவரும் ஆதரவில்லையே, திருக்கைலாயமன்றிப் புகலிடமில்லையே, இத்துயரை இன்னுஞ்சகித்தல் இயலாது, துன்புற்ற குழந்தை கட்குச் சுகத்தை யுண்டு செய்வது பெற்றோரை யன்றி வேறு யாவரு மில்லை யாதலால் எங்கள் சங்கடங்களை விலக்கி யருள வேண்டு மென்று பணிந்தான். அருகிருந்த திருமாலும் பிரமனும் ஐயனே! கொடியவனான சூரபன்மன் தன் வலிமையால் ஆன்மாக்களை வருத்துவது சொல்லுந்தரமன்று. இனிச்சற்றுந் தாமதியாது இப்பொழுதே திருவருள் புரிதல் வேண்டு மெனப் பிரார்த்தித்தனர்.

அப்பொழுது, சிவபெருமான் அவர்கள் வேண்டு கோளுக் கிணங்கித் திருவருள் சுரந்து, இனி உங்கள் மனக்கவலையை விட்டு விடுங்களென்று, குகப்பெருமான் திருமுகத்தை நோக்கி, சண்முகா! மிக்க கொடுமை புரியும் வலியசூரபன்மனை அசுரர்கூட்டத்தோ டழித்து வேத விதியை நிலைப்படுத்தி இந்திர னரசுரிமையை அவனுக்கு மீட்டுக்கொடுத்து, தேவர் துயரைத்தொலைக் கக்கடவா யெனத் திருவாய் மலர்ந்தருள, முருகப் பெருமான் அங்ஙனமே செய்வேனென அங்கீகாரஞ்செய்ய, சிவபெருமான் ஏகாதச ருத்திரரைச் சிந்திக்க அவர்கள் உடனே அங்குவந்தெய்த நீங்கள் யாவரும் குமாரன் கரத்தில் ஆயுதங்களாக விருங்களென் றும் பல ஆயுதங்களாக்கிக் கந்தசுவாமி கரத்தி லளித்தனர். அவர்கள் (தோமரம்) இருப்புலக்கை, துவசம், வாள், வச்சிரம், அம்பு, அங்குசம், எறிமணி, கமலம், தண்டம், வில், மழு வென்னும் ஆயுத வுருவங் கொண்டு அறுமுகேசன் அத்தத்தி லமர்ந்தனர். அதன் பின்னர் எவ்வாயுதங்கட்கும் தலைமையானதும் ஒப்பற்றதுமாகிய ஒருவேலாயுதத்தைச் சிருஷ்டித்து அவர் திருக்கரத்தி லளித்துப் பன்னிரு படைகளாக்கி, இலக்கத் தொன்பது வகை

யினராகிய புதல்வர்களைப்பார்த்து நீங்கள் உங்கள் மூத்தோனாகிய முருகனோடு சென்று, அசுரர்களை யழிப்பீர்களாக வென்று அவர்கட்கு அம்பிகை வேற்படையும் தாம் வாட்படையும் முன்னரே கொடுத்திருப்பதோடு பலபடைகளையுங் கொடுத்து குமாரக் கடவுளுக்குச் சேனையாக்கி நந்தி, உக்கிரன். சண்டன், திக்கண்ணன், சிங்கன் முதலிய சிவகணத் தலைவரைக் கடைக்கணித்து நீங்கள் இரண்டாயிர வெள்ளம் பூதகணங்களோடு சண்முகன் சைநியங்களாகச் செல்லக்கடவீரென்று கட்டளை யிட்டு, அவர்களையே சேனைத்தலைவர்க ளாக்கியமைத்து, மகாவல்லபமுடைய மனோவேகத் தேரினைச் சிருஷ்டித்துக் கொடுத்து, இனி நீ யுத்தத்திற் கேகுகவென, குமாரக்கடவுள் உமாபிராட்டியாரையும் சிவபெருமானையும் நமஸ்கரித்து நேர் நின்று துதிசெய்ய, சிவபெருமான் குமாரனைத் தழுவிக்கொண்டு திருத்தொடைமீ திருத்தி உச்சிமோந்து பார்வதி தேவியார் திருக்கரத்திலளித்தனர். அப்படிக் கொடுத்தவுடனே, ஷட்சமயத் தலைவியாகிய பரமேசுவரி இருபையோடணைத்துக் கொண்டு உச்சிமோந்து "மகனே! இலக்கத் தொன்பது வீரர்களும் சைநியங்களுமாகப் புடைசூழ்ந்து வரச் சென்று, வலிமிகுந்த அசுரர் தொகுதியை யழித்துத் தேவர்கள் மனோபீஷ்டத்தை முடித்து வருக" என்றாசீர்வதித் தருளினர்.

" இவ்வகை யெல்லாம் விரைவுடனுதவி
யேகுதி நீயெனக் குமரன்
மைவிழி யுமையோ டிறைவனைத் தொழுது
வலங்கொடே மும்முறை வணங்கிச்
செவ்விதி னெழுந்து புகழ்ந்தன னிற்பத்
திருவுளத் துவகையாற் றழுவிக்
கைவரு கவானுய்த் துச்சிமே லுயிர்த்துக்
கருணைசெய் தமலைகைக் கொடுத்தான்.



கொடுத்தலும் வயின்வைத் தருளினாற் புல்லிக்
குமரவேள் சென்னிமோந் தன்பா
லடுத்திடு மிலக்கத் தொன்பது வகையோ
ரணிகமாச் சூழ்ந்திடப் போந்து
கடக்கரு மாற்ற லவுணர்தங் கிளையைக்
காதியிக் கடவுளர் குறையை
முடித்தனை வருதி யென்றருள் புரிந்தாள்
மூவிரு சமயத்தின் முதல்வி.”

தமதன்னையாராகிய பார்ப்பதியம்மையார் இவ்வாறு திருவருள் செய்த மாத்திரமே சண்முகக்கடவுள் சாஷ்டாங்க மாகப் பணிந் தெழுந்து தாய் தந்தையர்பால் விடைகொண்டு சேனா சமூகத்துடன் நிலவுல கடைந்து அசுர சங்காரமுடித்து அமரர் பதவியை யளித்துத் தெய்வயானை நாயகியார் வள்ளி நாயகியாரை மணந்து கந்தகிரியில் வீற்றிருந் தருளினர்.

---

இருபத்தேழாவது

# இரேணுகாநுக்கிரகம்.

---

பற்பல சாஸ்திரங்களையுங் கற்றுணர்ந்த அயேத்திய வருமனென்னும் மன்னவன் மகளாய் அழகிற்கோர் எல்லையாகச் சனித்த இரேணுகை யென்பாள் அருந்தவஞ் செய்த சமதக்கினி முனிவர் மனைவியாயினள். குற்ற மற்ற கற்பின் மேம்பாடுடைய

ளள். இல்லற தருமந் தவறாதவள். ஒருநாள் நீர் முகக்கச்சென்ற போது கிருத வீரிய மன்னன் புதல்வனான கார்த்த வீரியன் என்னும் மகாபலசாலி வழியிற் கண்டனன். கண்ட பொழுதே மன்மத பாணத்திற் கிலக்காய் ஆண் தன்மையுடைய கார்த்த வீரியன் இரேணுகைக் கெதிரடைந்து நின்றான். இரேணுகையோ கற்புடையாளாதலின் தனது புறங்காலை நோக்கி நின்றனளன்றி, அவனையொரு சிறிதுந் தலையெடுத்துப் பார்த்திலள். அதுகண்ட மன்னர் மன்னனாகிய காத்தவீரியன் யாது புரிவதென்று கருதி.அவள் திரட்டுகின்ற நீரின்மேலே ஓர்பனையளவு ஆகாயத்தில் விளக்கமாகத் தோன்றினான். அதனால் நீர்ப்பரப்பில் விளங்கிய அவன் நிழலைச் சமதக்கினி முனிவர் மனைவியாகிய இரேணுகை கண்டாள். அப்போது மன்மதனும் தன் வன்மையைக் காட்டினனாக, இரேணுகை பிரதி பிம்பத்திற் சென்ற தன்மனதை, தனது இயற்கைக் கற்பின் வன்மையால் வழிப்படுத்திக் குடத்தில் நீரெடுத்துக்கொண்டு மீண்டு தமதாச்சிரம மெய்தினள். இரேணுகை வந்தவுடனே ஆண் சிங்கம்போன்ற சமதக்கினி முனிவர், தன் மனைவி நீர்கொண்டுவரச் சென்றவள் தாமதித்த வகையை ஞானதிருஷ்டியால் நோக்கிக் காத்தவீரியன் தவறுதலையுணர்ந்தனர். உடனே வடவாக்கினிபோல் கோபித்துத் தன்மகன் பரசுராமனை நோக்கி, இராமா! இரேணுகையின் பேரழகைக் காத்தவீரியன்காமுற்றான். அவன் இளமையும் அரசுரிமையும் வலிமையும் அறியாமையும் சேர்ந்துள்ள தன்மையில் எம்மை யொரு பொருளாகக் கருதாது இவளை யினிவலிந்திழுப்பான். யாம் சொல்வதுகேள். எம் கட்டளைப்படி நிற்பையாயின், இவள் சிரசைத்துணிப்பாய் விரைந்து செல்கவென, இராமன் தன் குருவாகிய தந்தை கட்டளையைச் சிரமேற்கொண்டு தாயை யழைத்துக் கொலைக்களமெய்தி, வாளைக் கையிலேந்தித் தன் தாயின் சிரசைத் தள்ளித் திரும்பியடைந்து தந்தையைப் பணிந்து நிற்க, சமதக்கினி இராமா! நீ யெமது

சொற்படி நடந்தாயேனும் தாய்க்கொலை நன்றன்று உலகம் பழிக்கும். நீ மீண்டும் அங்கெய்தி அவள் துண்பட்ட சிரத்தைக்கழுத்துடன் சேர்த்துப் பொருத்தி யெழுப்பி அவளைப் பணிந்து தாயே! உன் விருப்பின்படி செல்லுகவென விடுத்து வருகவென, அவன் அங்ஙனமே செய்ய, அதனாலுயிர்பெற்ற இரேணுகை கணவனை யிழந்த தன்மையால் வருந்தி, பரசுராமன் இசைவு பெற்றுக் காஞ்சிநகரெய்தி, ஏகாக்கிர சித்தமுடையவளாய்ச் சிவலிங்கந் தாபித்துக்கிரமப்படி பூசித்து வருகையில் அவளுக்கெதிராக உமாசமேதராகச் சிவபெருமான் காட்சிதந்தனர்.

இரேணுகை உள்ளங்களித்துக் கைகுவித்துத் துதிசெய்து தன் குறைகளை யெடுத்துக் கூறினள். நீங்களே உலகிற்குத் தாய் தந்தையர். தாய் தந்தையர்பாற் குறை கூறிக்கொள்ளாதவர்கள் யாவர்? நான் கருதாதிருப்பினும் காத்தவீரியன் என்னைக் கருதிவஞ்சித்ததால் என் கற்புதிரிந்து என் கணவரா லவமதிப்பெய்திப் பழிப்புற்றேன். அப்பழி நீங்க உம்மைப்பூசித்தேன். என்னைக்காப்பது கடனும் எனப்பலவாறு பிரார்த்திக்காள். தாயுந் தந்தையுமாய் யாவரையுங் காக்குஞ் சிவபெருமான் புன்னகை யரும்பி, எம்மை விரும்பினவற்றைக்கேள். இமாசல மங்கை அவற்றைக்கொடுப்பாள் என, இரேணுகை எல்லையில்லாத துன்பெய்திய அடியாள் தேவரீர் திருவருளால் மக்கட்கெல்லாம் வழிபடு தெய்வமாகி அவரவர் விரும்பிய சுகபோகங்களை யநுக்கிரகிக்க வரந்தரவேண்டும். யான் பூசித்த இவ்விலிங்கத்தில் தேவரீர் எழுந்தருளியிருந்து பலர்க்கும் அருள் புரிய வேண்டுமென்று பிரார்த்திக்க, சிவபெருமான் உமாதேவியார் மூலமாக அவ்வரங்களை இரேணுகைக்குக் கொடுத்து, பூலோகத்தில் கலியுகத்தில் மானுடர் விரும்பிய எண்ணங்களை முடிக்கவும், இழிகுலத்தோர் விரும்பியவற்றை அவர்களுக்குக் கொடுக்கவும், அவளுக்குத் தெய்வ

வடிவமும் அநுக்கிரகித்து, உமாதேவியாரும் சிவபெருமானும் அந்தர்த்தான மானார்கள். இரேணுகை சர்ப்ப குண்டல முடையவளாய் வாளுங்கேடகமுந் தாங்கிய கையை யுடையவளாய், போதராஜன் முதலிய சிறுதேவ கணங்கள் புடைசூழத் தெய்வமாக விளங்கினள். இவ்விரேணுகை சிவபக்தி யில்லாதாரை மிருதியும் வருத்துவா ளெனப் பெரியாரும்பணித்துள்ளார்.

பாம்புசேர் தோளிணையாள் பாளயத்து மாமாரி
சாம்பசிவன் றன்னடியைச் சாராரை—வேம்பின்
இலையை யுடுத்தியவ ரீனமானம் போக்கித்
தலையில்விளக் கேற்றிவைப்பா டான்.

## காஞ்சிப்புராணம்.

எம்மை வேட்டவை யியம்புதி யிமயமீன் றெடுத்த
கொம்மை மென்முலை யுனக்கவை தருமெனக் கூறி.

அண்ண லாருமை கூற்றிறு லவட்கவை யுதவி
மண்ணின் மேற்கலி யுகத்துறு மானிடர் கருது
மெண்ண மெண்ணியாங் கியாவையு மிழிகுலத் துள்ளார்
நண்ணி வேட்டன சாலமிக் களிப்பவு நல்கி.

கொம்பனுள்பெறத் தெய்வதத் திருவுருக் கொடுத்துக்
கம்பனார்மலை மகளொடுங் கரந்தருள் செய்தார்
வம்பு வார்குழ லிரேணுகை மடந்தையப் பொழுதே
யம்பு விக்கொரு தெய்வத மாயின ளம்மா.

காதரா வணியினுள் பலகைவாட் கையினுள்
போதரா சன்முதற் பலகணம் புடையுற
வேதரா சிகள்பயில் விரியெழிற் காஞ்சியின்
மாதரா ளாயிடைத் தெய்வமாய் வைகினள்.



## இருபத்தெட்டாவது.

# வச்சிர பஞ்சர கவசமுரைத்தது.

கமலாசனனாகிய பிரமதேவனும் சங்கு சக்கர கதா கட்க கோதண்டங்களாகிய பஞ்சாயுதங்களை யேந்திய பன்னக சயனனும் வாயிற் காவலரையடைந்து தமது வருகையை யுணர்த்தும்படி வேண்டி உள்ளங்கையைத் தலையணையாக வைத்து முன்றிலிற் றுயிலும்படி பேராசுசெய்துபலரையும் பெருந்துன்பு புரிந்த தூர்க்கனையும். சண்டன் முதலிய சண்டகர்களையும், துண்டஞ்செய்துதானிரிணை யண்டிவழுத்திய அண்டர்களுக்குஉதவியாங் டாங்குப்புரியும் அம்பிகையின் பேருதவிக்குக் கைம்மாறு செய்தல் வேண்டுமென்று ஒருகாலத்தில் ஒன்று கூடிய திருமால் திசைமுகன் இந்திரன் முதலிய திக்பாலர்கள் கருடகாந்தர்வ சித்த வித்தியாதராதிகணங்கள் தாங்கள் செயற்பால திதுவெனத் தெரியாதவர்களாய், தேவியார் நாத ஸ்வரூபியாக விளங்குதலின் அவரை மகிழச்செய்வது துதியேயாம். ஆதலின் அத்துதியும் அடியேங்களைக்காக்கவென்னுங்கருத்துடைய தாயிருத்தல் வேண்டு மெனக்கருதிப் பின்வருமாறு துதி செய்வாராயினர். அதுவச்சிர பஞ்சர கவசமெனப்படும். அதுவருமாறு:—

அங்கையிற் கரகந் தாங்கும் பிரமாணி யருளி னோடுந்
துங்கமென் சென்னி காக்க வயிணவி துகளி லாக
மெங்கணுங் காக்க செய்ய வேங்கெழி லுருத்தி ராணி
தங்குமென் டிசையு மன்பு தழைத்திட வினிது காக்க. (க)

கொன்னுனைச் சூலி சென்னி மயிரினைக் குறித்துக் காக்க
மன்னுவெண் பிறைதாழ் சென்னி வயங்கொளி நெற்றி காக்க.
பன்மயிர்ப் புருவ நாளும் பரிவொடு முமையாள் காக்க
வென்னையாள் முக்க ணீச னிறைவிகண் ணிணைகள் காக்க. (உ)

வயமிகு மிமய வல்லி மூக்கினை மகிழ்ந்து காக்க
செயையொடு விசையை மேல்கீ ழிதழினைச் சிறந்து காக்க
வயிலுடைச் சுருதி தூய வஞ்செவி காக்க தண்ணென்
பயின்மல ருறையுஞ் செல்வி பல்லினை யுவந்து காக்க. (௩)
சண்மென் கபோலங் காக்க தவளநாண் மலரின் வைகு
மொண்டொடி நன்னுக் காக்க விசையைமங் கலைமற் றெருவ்வாக்
கண்கவர் நாடி காக்க காத்தியா யனியெஞ் ஞான்று
முண்டக மலரிற் றூய முகத்தினைச் சிறந்து காக்க. (௪)
காளமுண் டிருண்ட நீல கண்டிமென் கழுத்துக் காக்க
கோளில்பூ தார சத்தி சுவர்புறங் காக்க கூர்மி
நீளொளிச் சந்தி காக்க வயிந்திரி நெறியி ரேறுந்
தோளிணை காக்க பத்மை துணைமல ரங்கை காக்க. (௫)
கமலைகை விரல்கள் காக்க விரசைகை யுகிர்கள் காக்க
திமிரமுண் டொளிரும் வெய்யோன் மண்டலத் துறையுஞ்செல்வி
யெமதிரு வாகு மூலங் காக்கவா னவர்க ளேத்த
வமிர்தல கரிநா ளெனு மகன்மணி மார்பங் காக்க. (௬)
தரித்திரி யித்தயங் காக்க தயித்தியர்ச் செகுப்போண் மிக்க
கருத்தொடு முலைகள் காக்க சகத்தினி லிறைமை பூண்டோள்
திருத்தகு வயிறு காக்க திகழ்தபோ கதிதன் னுள்ளத்
தருத்தியி னுந்தி காக்க வசைவளர் முதுகு காக்க. (௭)
கருத்தரு விகடை காக்க கடித்தடம் பாமை வாய்ந்த
குருமணிச் சகனங் காக்க குகாரணி குய்யங் காக்க
வருடர வரும பாய கந்தினி யபானங் காக்க
தெருளுடை விபுலை யென்றுஞ் சிறப்புடைக் குறங்கு காக்க. (௮)
லளிதைமென் முழந்தாள் காக்க வியர்சபை கணைக்கால் காக்க
களித்தரு கோரை வாய்ந்த பட்டினைக் காக்க மிக்க
வளிகொள்பா தலத்திற் செல்வோ ளணிகெழு புறந்தாள் காக்க
வொளிர்நகம் விரல்கள் சந்திரி யுக்கிரி யுவந்து காக்க. (௯)

தலத்துறை மடந்தை யுள்ளங் காலினைக் காக்க தண்ணென்
மலர்த்திரு மனையைக் காக்க வயங்குகேத் திரதை யோங்கி
யுலப்பில்கேத் திரங்கள் காக்க பிரியகரை யொழிவ றுது
நலத்தகு மக்க டம்மை நன்குறக் காக்க வன்றே. (கய)

உயர்சனு தனியெஞ் ஞான்று மொழிவறு மாயுள் காக்க
மயர்வறு சீர்த்தி யாவு மாதேவி காக்க மிக்க
செயிரறு தருமம் யாவுந் தனுத்திரி சிறந்து காக்க
வியல்புடைக் குலத்தை வாய்ந்த குலதேவி யினிது காக்க. (கக)

சற்கதிப் பிரதை நல்லோ ரியையினைத் தயாவிற் காக்க
விற்கொடும் போரி னீரில் வெளியினில் வனத்திற் சூதி
லிற்புற மதனி லோங்கு சர்வாணி காக்க வென்றுப்
பொற்றரு மலர்க டேவிப் புங்கவ ரேத்தி னாரே. (கஉ)

இவ்வகையாகத் துதிபுரிந்த இமையவர்கட்கு மாதேவி மனமிரங்கினவராய்ப்பிரசன்னையாகி. அமரர்களே! நீங்கள் என்னைத்துதி செய்த இவ்வச்சிர பஞ்சரகவசத்தைச் சபிப்பவர்களைச் சுரப்பிணி வருத்தாது. இதனை யெட்டுருச்சபித்துச் சலத்தைக்குடித்தால் வயிற்று வலி நீங்கும். இரவில் பாராயணஞ் செய்து கொண்டு வழிநடந்தாற் பேய் பூதங்கள் அணுகமாட்டா. பிரசவவேதனை யுறுகையில் நீரை யபிமந்திரித்துக்கொடுத்தால் உடனே பிரசவிப்பர். யுத்தபூமியிற் சபித்தால் வெற்றி யுண்டாகும். இதனைத்திடபக்தியோடு சபிப்போரை நமது சக்திகள் நாடோறும் இடைவிடாது பாதுகாப்பார்கள் என்று அநுக்கிரகித்தனர்.

[இக்கவசம் நாடோறும் அன்போடு பாராயணஞ்செய்வோர் தமது இஷ்டசித்திகளையெய்தி அம்பிகையின் திருவருளடைவாரென்பது நூற்றுணிவு. ஆதலின் இதனை இங்கு விரித்தெழுத நேர்ந்தது.]


## இருபத்தோன்பதாவது

# நவராத்திரி மகிமை.

துருவசிந்து வென்னும் மன்னவன் மகனும் சுபாகுவின் மருமகனுமாகிய சுதர்சனனெனும் மன்னவன், தேவியின் அநுக்கிரகம் வகிக்கப்பெற்றவனாய் இருந்தமையின், சுபாகு தன்மகளாகிய சசிகலை சுதர்சனனையே மணக்கவுறுதியுற்றிருப்பது கருதி அவள் கருத்தை முடிக்க விரும்பியும் பிறமன்னர் வன்மைக்குப் பயந்தும், வஞ்சகமாகச சுதர்சனனுக்கே மணமுடித்துத் தந்தனன். அவன்பால் விடைகொண்ட சுதர்சனன் தன் நகரத்திற்குப் பிரயாண மாகுகையில், யுதாஜித்து என்போன் பல அரசர்களோடு கூடிச் சுபாகுவை யெதிர்க்க, தேவி பிரத்தியக்ஷமாய் யுதாஜித்துவையும் அவன் மருமகன் சத்திரஜித்தனையுங் கொன்று சுபாகுவுக்கும் சுதர்சனனுக்கும் வேண்டிய வரந் தந்தனள். அப்பொழுது சுபாகு.

நமோ தேவ்யை ஜகத்தார்யை ஶிவாயை ஸததம்நம:
துர்காயை பகவத்யைதே காமதாயை நமோ நம:
நமஶ்ஶிவாயை ஶாந்த்யை தேவித்யாயை மோக்ஷதேநம:
விஶ்வவ்யாஶ்தை ஜகந்மாத ஜகத்தார்யை நமஶ்ஶிவெ. !!

என்று பலவாறு துதிசெய்து, தாயே! இத்தகைய பெருங் கருணைபுரிந்த உமது தோத்திரத்தையேனும் பீஜாக்ஷர மந்திரத்தையேனும் அறிந்தவனே வென்று புகழ்ந்து நிற்ப, தேவி அரசனை நோக்கி நீ விரும்பியது யாதென, சுதர்சனன் அம்பிகையை யடிபணிந்து பலவாறு பிரார்த்திக்க, அன்னை, சுதர்சனனைநோக்கி



நீ அயோத்தியடைந்து உன்குலத்திற்கேற்ப அரசநீதி நடத்தி என்னை நாடோறும் மறவாது தியானித்து வருக. கிருஷ்ணபக்ஷ அஷ்டமி நவமி சதுர்த்தசி இவை எனக்கு விசேஷித்த தினங்கள். நாடோறும் திரிகாலபூஜையும்அஷ்டமிமுதலிய நாட்களில் எனக்குப்பலியோடு விசேஷபூஜையும்நடத்துக. சரத்ருதுவில் வரும் நவராத்திரியிலும், சைத்ர ஆஷாட ஆஸ்வீஜ மாகமாசங்களிலும் கிருஷ்ணாஷ்டமிநவமிசதுர்த்தசிதிதிகளிலும்எனதாகமவிதிமுறை பூஜிக்கக்கடவையென்றருளி அந்தர்த்தானமாயினர். அதன்பின்னர். சுதர்சனன் தன்நகரெய்தி. தேவியைச்சிங்காதனத்தில் விக்கிரகரூபமாக எழுந்தருளச்செய்து மகோற்சவ முதலியன சிறக்கக்கொண்டாடி அரசுநடத்திஅம்பிகையின மகிமாவிசேடங்களைத் தேசமெங்கும் பரவச்செய்து விளங்கினன். சுதர்சனனும் சுபாகுவினுலும் அநுஷ்டித்த நவராத்திரி விரத முறையைச் சொல்லுகின்றோம்.

நவராத்திரிக்கு வேண்டிய பூஜோபகரணங்களை அமாவாசையன்றே சேகரித்துக் கொண்டு அன்று ஏககால போஜனஞ்செய்து பிரதமையில் சுபகரமான வேதிகையமைத்து. தேவியின் பூஜாவிதியுணர்ந்தவர்களும் பக்தியுடையவர்களு மாகிய பிராமணர்களில் ஒன்பதின்மர் ஐவர் மூவர் அல்லது ஒருவரை யாவது ஒன்பது தினங்களும் அர்க்கிய பாத்திய ஆசமனங்கள் கொடுத்துப் பூஜா மண்டப மடையவேண்டும். அந்தணர் வேதகோஷஞ் செய்ய வெண்பட்டு விரித்த சிங்காதனத்தின்மேல் சங்குசக்கர கதா பத்மங்களைத் தாங்கிய சதுர்புஜத்தோடு கூடிய தேவி ரூபத்தையாவது, பதினெண்கரங்களோடுகூடிய தேவி ரூபத்தையாவது, வஸ்திராபரணங்களாலலங்கரித்து எழுந்தருளச் செய்து, கும்பபூஜைக் காகக் கலச ஸ்தாபனஞ்செய்து ஐவகைத்தளிர்களை மேலே செருகிமங்கல வாத்திய முழங்க, அம்பா! நவராத்திரி விரதத்தைச் செய்கின்றேன். இடையூறின்றி அநுக்கிரகிக்கவேண்டும். சக்தியளவாகச்

செய்கின்றே னென்று சங்கற்பித்து, விதிப்படி கும்பத்தையும் பிம்பத்தையும் பூஜித்து நவாவரண பூஜையுமுடித்து, பழ ரசங்களால் அர்க்கியமளித்து இளநீர் மாதுளை வாழை பலா மா முதலிய கனிகளை மிகுதியாக வைத்து அன்னநிவேதனஞ் செய்தல் வேண்டும். [பூஜிப்பவர் மாமிசபக்ஷகராயின் மகிஷபலி மேஷபலி வராஹபலி முதலியவற்றைத் தந்து] அதன் பின்னர் ஒருமுழ நீளமும் அகலமுமுள்ள திரிகோணமமைத்து அதில் தண்டுலமிட்டு ஹோமஞ்செய்யவேண்டும். நவராத்திரி பூஜையை அநேக திரவியங்களால் நிருத்த கீத வாத்தியத்தோடு மூன்றுகாலமும் செய்யவேண்டும். ஒன்பது நாளும் விரதமிருப்போர் உபவாசியாயிருந்து பூஜை முடித்துப்பின்பு புசித்து, சயனாதிகளை விலக்கி நிலமிசைப் படுத்தல் வேண்டும். பிரதமையில் அஸ்தநக்ஷத்திரங்கூடுமாயின் அது விசேடதினம். அத்தினத்தின் பூசையால் அம்பிகை ஸர்வாபீஷ்டங்களையுங் கொடுப்பாள்.

தேவியை யுத்தேசித்துப் பலியிடும் மகிஷ முதலியவை சுவர்க்கமடையும். அதனைக்கொன்றவர்களும் நரகமெய்தார். எனெனில் ஜீவபரமாக எதைச்செய்யினும் பாபமுண்டாம். அருட்பரமாக எதைச்செய்யினும் புண்ணியமே யுண்டா மென்பது பிரமாணம். கலசபூஜை முதல் ஹோமாந்தம் செய்யத் தகுவனவற்றை முடித்துப் பின்னர், கன்னிகைகளைப் பூஜிக்க வேண்டும். அக்கன்னிகைகளை இரண்டுமுதல் பத்துவயதளவுமுள்ள கன்னிகைகளாய், முறையே குமாரி திரிமூர்த்தி கல்யாணி ரோகணி காளிகா சண்டிகா சாம்பவி துர்க்கா சுபத்திராவென்பன அவர்கட்குப் பெயராம். ஸ்ரீரஸ்து, ஸ்ரீயுக்த மென்னும் பதங்களை ஆதியாகவுடைய வேமந்திரத்தாலும் அதனையுணராதவன் பீஜமந்திரத்தாலும் பூஜிக்கவேண்டும். ஒரு வயது கன்னிகையும் பத்து வயதுக்கு மேற்பட்ட கன்னிகையும் பூஜார்ஹமாகார். குமாரி முதலாகச்

சொல்லிய கன்னிகைகளில் முதல் நாள் ஒருகன்னிகையும். இரண்டா நாள் இரண்டு கன்னிகைகளுமாக நாளொன்றுக் கொருகன்னிகையாக வுயர்த்தியாக வருவித்துப் பூஜிக்கவேண்டும். நாளொன்றுக்கு ஒவ்வொரு கன்னிகையாகவும் பூஜிக்கலாம். இப் பூஜை தன சம்பத்திற் கேற்ப விசேடமாகச் செய்யத்தக்கதன்றி லோபமாகச்செய்யக்கூடாது.

குமாரியைப்பூசித்தால் தரித்திரநாசம் சத்துருக்ஷயம் ஆயுள் விருத்தி. திரிமூர்த்தியைப் பூசித்தால் தர்மார்த்தகாமியம் தன தானியவிருத்தி. புத்திராபிவிருத்தி. கல்யாணியைப் பூசித்தால் வித்தை ஜயம் ராஜ்யசுகம். ரோகிணியைப் பூசித்தால் ரோக நாசம். காளியைப்பூசித்தால் சத்துருநாசம். சண்டிகையைப் பூசித்தால் ஐசுவரியம். சாம்பவியைப் பூசித்தால் யுத்தத்தில் ஜயம் துக்க தரித்திராதி நிவர்த்தி இராஜசம்பத்து. துர்க்கையைப்பூசித் தால் சத்துருநாசம் சாத்தியப்படாத காரியங்களையுஞ் சாதிக்கும் ஆற்றல் பரலோகசுகம். சுபத்திரையைப்பூசித்தால் மனோரதசித்தி இவை கைகூடும்.

குமாரஸ்யச தத்வாநி யாஸ்ருஜத்ய பிலீலய
காதிநபிச தேவாம்ஸ்தான் குமாரீம் பூஜயாம் யஹம். (க)

சத்யாதிபிஸ் த்ரிமூர்த்திர்யாத் தர்ஹிநாநா ஸ்வரூபிணீ
த்ரிகால வ்யாபிநீ சக்திஸ் த்ரிமூர்த்திம் பூஜயாம் யஹம் (உ)

கல்யாண காரிணீ நித்யம் பக்தாநாம் பூஜிதாநிஶம்
பூஜயாமிசதாம் பக்த்யா கல்யாணீம் ஸர்வகாமதாம். (ஙூ)

ரோஹயந்தீச பீஜாநி ப்ராக்ஜந்ம ஸஞ்சிதாநிவை
யாதேவி ஸர்வபூதாநாம் ரோஹணீம் பூஜயாம்யஹம். (ச)

காளிகா லயதே ஸர்வம் ப்ரஹ்மாண்டம்ஸ சராசரம்
கல்பாந்த ஸமயே யாதாம் காளிகாம் பூஜயாம் யஹம். (டு)

சண்டிகாம் சண்டரூபாஞ்ச சண்டமுண்ட விநாஶிநீம்
தாம்சண்ட பாபஹாரிணீம் சண்டிகாம் பூஜயாம்யஹம். (௬)

அகாரணாத் ஸமுத்பத்திர் யந்மயை: பரிகீர்த்திதா
யஸ்யாஸ்தாம் சுகதாந்தேவீம் ஶாம்பவீம் பூஜயாம்யஹம். (௭)

துர்காத்ரா யதிபக்தம்யா ஸதா துர் திநாகஶநீ
துர்ஞ்ஞேயா ஸர்வ தேவாநாம் தாம் துர்காம்பூஜயாம் யஹம். (௮)

சுபத்ராணிசபக்தாநும் குருதே பூஜிதேஸதா
அபத்ர நாஶிநீம் தேவீம் ஸுபத்ராம் பூஜயாம் யஹம் (௯)

இந்த நவராத்திரி விரதத்தை எண்ணிறந்த தேவர்கள் அனுஷ்டித்து இஷ்டசித்திகளை யடைந்துள்ளார்கள் ஸ்ரீராமபிரான் அநுஷ்டித்து இழந்த சீதாபிராட்டியையும் இராஜ்ய சம்பத்தையும் எய்தினர். ஸ்ரீராமமூர்த்தி அநுஷ்டிப்பது கண்ட சுசீல னென்னும் வைசியன் அனுஷ்டித்துச்சகல சம்பத்துகளை யெய்தினன். அநுஷ்டித்துப் பலபேறுகளைப் பெற்றோர் எண்ணிறந்தோர்.



## முப்பதாவது

# நவசக்திகட்கருளியது.

---


ஸர்வ ஜகந்மாதாவாகிய பரமேசுவரியார் நவசக்திகட் கருளியதைக் கூறமுன்னர் உலக அளவினைக் கூறியருளுதல் இன்றியமையாததாகலின், உலகவளவைச் சுருக்கிச் சொல்லுகின்றேன். அணு எட்டுக் கொண்டது திரிசரேணு. திரிசரேணு எட்டுக்கொண்டது இலீகை. இலீகை எட்டுக் கொண்டது யூகை. யூகை எட்டுக் கொண்டது யவை. யவை குறுக்காக எட்டுக் கொண்டது மாநாங்குலம். மாநாங்குலம் இருபத்து நான்கு கொண்டது முழம். முழம் நான்கு கொண்டது வில். வில் இரண்டு கொண்டது தண்டம். தண்டம் இரண்டாயிரங் கொண்டது குரோசம். குரோசம் இரண்டு கொண்டது கெவியூதி. அக்குரோசம் நான்கு அல்லது கெவியூதி இரண்டு கொண்டது யோசனை. அந்த யோசனை நூறு கோடி கொண்டது பிருதிவி தத்துவத்திலுள்ள ஓரண்டத்தின் விரிவு. உயரமும் அவ்வளவினதேயாம்.

பிருதிவி தத்துவத்தில்ஆயிரகோடி அண்டங்களுண்டு. அதைக் கடந்த அப்பு தத்துவம் பதின்மடங்கு விரிவு முயர்ச்சியும் ஏற்றங் கொண்டிருக்கும். அப்பு தத்துவத்தைப்பற்ற, தேயுமுதற் பிரகிருதி யீறாக அண்டங்கள் பதின் மடங்கு விரிவும் உயர்ச்சியும் அதிகரித்திருக்கும். முன்னைய பிரகிருதியைப்பற்ற இராகம் நூறுபாகம் விரிவும் உயர்ச்சியும் ஏற்றங்கொண்டிருக்கும். இவ்விராகத்தைப்பற்ற வித்தியா தத்துவம் நூறுமடங்குவிரிவும் உயர்ச்சியுங் கொண்டிருக்கும். அவ்வித்தையைப்பற்ற நியதிதத்துவம் நூறு

மடங்கு விரிவும் உயர்ச்சியுங் கொண்டிருக்கும். அந்நியதியைப் பற்ற, காலதத்துவம் நூறு மடங்கு விரிவும் உயர்ச்சியுங் கொண்டிருக்கும். முன்சொன்ன காலத்தைப்பற்ற, கலாதத்துவம் நூற்றிருபதினாயிரம் விரிவும் உயர்ச்சியுங் கூடும். அதன் மேல்.மாயை சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் முதலிய தத்துவங்கள் ஒன்றற்கொன்று முறையேகோடி, கோடியே பதினாயிரம்.இலக்ஷம் இரண்டிலக்ஷம். மூன்று லக்ஷமுதலிய பாகங்கள் அதிகப்பட்டு நிற்கும்.

இங்ஙனமிருக்கும் அண்டவிரிவில் பிருதிவிதத்துவ மாகிய நிவிர்த்தி கலையில் ஒரு தட்டில் தேங்காய் விளங்காய் பரப்பினது போல ஆயிரக்கோடி யண்டங்களுண்டு. அவை பொன் மயமாய் அருக்கர் பதினாயிரவர் உதயமானாற் போலக் குக்குடாண்டம்போலிருக்கும். அண்டகடாகப்புறம்பே இந்திரதிக்கு முதலிய பத்துத்திக்கிலுமுள்ள நூறுபுவனங்களுண்டு. அவற்றின் மேல் காலாக்கினி ருத்திரர் முதலினோர் புவனம் ஆறு. அவற்றின் மேலிரண்டு. ஆக அப்புவனத்தில் நூற்றெட்டு அண்டங்களுண்டு. அவை யொழியப் பத்துப் புவனங்கள் பூமியின் மேல் உயரவிருக்கும். பத்துப் புவனங்கள் பூமியின் அதோ முகத்திலிருக்கும். பத்துப் புவனங்கள் பூமியின் ஈசானத்திலிருக்கும். இன்னும் வடக்கிலும் வாயுமூலையிலும், மேற்கிலும், நிருதிதிக்கிலும், தெற்கிலும், அக்கினிதிக்கிலும், கிழக்கிலும். முறையே பப்பத்துப் புவனங்களும் ஒழிந்த ஆறுபுவனமும் காலாக்கினி தத்துவத்திலுமிருக்கும். இதன் மேற் பிரதிஷ்டாகலை. இப்படியே கலைகள் தோறும் அண்டங்கள் எண்ணிறந்தனவாக விரியும், [இவற்றின் விரிவெல்லாம் சிவாகமப் பெருங்கட லுட்காண்க. இங்கு விரிவஞ்சி நிறுத்தப்பட்டது.]

இத்தகைய அண்ட கோடிகளைத் தொழிற் படுத்தி நடத்தும் பரமேசுவரி தமது காருண்யத்தால் அவை யென்றுஞ் சரிவரத் திதி புரிவதற்காக ஸஹஸ்ரவிலோசனி, ஸஹஸ்ரானனி,



ஸஹஸ்ரபுஜை, அஶ்வாரூடை, அயோமுகி, த்வங்கை, பிரேதா சனி,விஶ்வை, கௌரி யென்னும் நவசக்திகளைப் படைத்து அண்டகோடிகள் நிலைகுலையாமல் ஆதாரமாகக் காவல்புரியக் கட்டளையிட்டுள்ளனர்.

"ஆயிரங் கண்ணி யன்ன முகத்தினை ளன்ன கையள்
பாய்பரி யூர்தி வெய்ய வயோமுகி தொனிகை பண்டிற்
றீயவெம் பிணத்தின் மேலோள் விசுவை கௌரி செப்பு
மேயவொன் பதின்ம ரிந்த வியனுலகளிப்ப ரன்றே."

---

முப்பத்தோன்றாவது

# முப்பத்திரண்டறம் வளர்த்தது.

---

அந்தர மளாவிச் சுந்தரமுடைய மந்தரகிரியில், பலதேவமுனிவர் பணிசெய்யப், பார்வதி பரமேசுவரர் எழுந்தருளியிருக்கும் ஒரு சமயத்தில், பார்வதி தேவியார் விநோதார்த்தமாக விமலர் திருவிழிகளைப் பின்புறத்திலிருந்து கொண்டு இருதிருக்கரங்களாலும் பொத்தினர். அங்ஙனம் புதைத்த வளவில், அவ்விழிகளினொளி மறைய எல்லாவுலகங்களும் திசைகளும் தேவருலகமும்இருண்மயமாயின. மாந்தரும் வானவரும் உலகினையும் ஆங்காங்குள்ள பல பொருள்களையுங் காணாராயினர். பிரமதேவன் சிருட்டியும் முனிவர் யாகங்களும், ஏனையோர் தானம் தவம் தெய்வ வழிபாடு கலவியின்பம் அறிவு நூற்கேள்வி முதலியன ஒன்று மின்றி மயங்கின. அதனால், தேவர் முனிவர் முதலானோர் ஒன்றுந்தோன்றாமல், ஆங்காங்கு வருந்தி நின்று பெருங்குரலிட் டழக்கேட்ட அம்பிகை தமது திருக்கரத்தை நீக்கச் சிவபெருமான் திருவிழி திறந்தனர்.

உடனே ஒளிமழுங்கி நின்ற சூரிய சந்திர நக்ஷத்திரங்க ளெல்லாம் விளங்கின. படைத்தல் காத்தல் முதலிய அரசியல் நன்கு நடந்தன. வேள்விகள் நிகழ்ந்தன. தேவர் முனிவர் முதலினோர் களித்தனர். இறைவர் திருவிழியை அம்மையார் மூடித்திறந்த சிறு காலம் உலகங்கட்கு எண்ணிறந்த காலங்களாய் அவரவர் செய் கடன் முதலியன நிகழ்வொட்டா தொழிந்தது. அதனால் சிவபெருமான் இரக்கமெய்தி அம்பிகையின் திருமுகத்தை நோக்கி,தேவி! எமது திருக்கண்களைப் பொத்தினமையால் படைப்பின்றிப் பாவம் வளர்ந்தது அஃதுன் பாலது. அதற்கு நீயே தீர்வு செய்யவேண்டும்.

“ இகப்பருங் கருணை பூண்ட மெ[illegible]த்து நந்த
மகத்தடி யவர்க்கும் பாவ மணுகுவ தில்லை யேனும்
வகுத்தவா புரிதி யெல்லாக் கருமமு மரபி னல்யா
நிகழ்த்திய வாறே பற்றி நிகழ்த்திடு முலகங் கண்டாய். ”

அம்பிகையே! எனக்கும் உனக்கும் நம்மன்பர்களுக்கும் பாவம் வந்தணுகுவதில்லை யானாலும், யான் கூறிய படியே நீ புரிதல் வேண்டும். ஏனெனில், நாம் எதனைச் செய்கின்றேமோ அதனையே உலகமும் விரும்பிச்செய்யு மாதலின் எனக்கூற, தேவியார் அங்ஙனமே செய்யத்தக்க தென்றிணங்கி,பரிகாரம்யாது?காலமெது?இடமெது?இவற்றையுங்கூறுகவென,உமையே! எம்மையர்ச்சிர்த்தல்எமதுநாமங்களை யுச்சரித்தல்அடியவரைவழிபடுதல் இவையேபிராயச்சித்தங்கள். விடியல் முதலிய ஆறுகாலங்களும் புண்ணியஸ்தலங்களும் அதற்குரிய காலமும் இடமுமாம். இனி, பூசையானது நித்தியம் நைமித்திகம் காமியமென மூவகைப்படும். அவற்றில் நிலவுலகொழிந்து ஏனையுலகங்களில் நிகழும் பூசை நித்தியமாகுமன்றி நைமித்திகமும் காமியமுமாகா. . இம்மூவகைப் பூசை

யும் செய்தற்கு நிலவுலகிற் பரதகண்டமே உரிய இடமா மென்றனர். தேவி சிவபெருமானை நோக்கி. பரதகண்டத்தில் பல புண்ணிய க்ஷேத்திரங்க ளிருத்தலின் அவற்றில் உயர்ந்ததலம் யாதெனவினவ, சிவபெருமான் பெண்ணே! எண்ணிறந்த சிவதலங்களில் சிறந்தன ஆயிரத்தெட்டு. அவற்றிற் சிறந்தன நூற்றெட்டு. அவற்றிற் சிறந்தன அறுபத்தெட்டு. அவற்றிற் சிறந்தன காசி காஞ்சியெனு மிரண்டு. அவற்றினும் நமக்குச சிறந்தது காஞ்சி. நீ அந்நக ரத்திற் கழுவாய் புரியக்கடவை. முன்னே நமதிடப தேவரும் ஆங்கு என்னை யர்ச்சித்துச சிவாபராதத்தை விலக்கிய விடமாமெனக்கூற, பிராட்டியார் பெருமானை விடைகொண்டு புறம்போந்து, பலதோழிமார்களுடன் விமானத்தி லூர்ந்தனர். அப்பொழுது திருமகள் கலைமகள் சப்தமாதர் பல தேவமாதர்களும் வந்தனர். மத்தளமுதலிய வாத்தியங்களும், சாமரை குடை கொடி விசிறி பஞ்சதருக்கள் தீர்த்தங்கள் புடைசூழ்ந்துவர ஆகாயவழியே சென்று, காசிக்ஷேத்திர மெய்திச சிவார்ச்சனை செய்து தம் பெயராற் சிவலிங்கப்பிரதிஷ்டை பண்ணி, அங்கு நின்றுவிமானமூர்ந்து தொண்டைநாடெய்தி, துலாமாச பூரநக்ஷத்திர சோமவார கிருஷ்ணபக்ஷ அஷ்டமி திதி கூடிய சுபதினத்தில் காஞ்சி நகரத்தை வந்தடைந்தனர்.

மாஸே சாம்வ யுஜே ரபாதுஸதுலே
   பூர்வாங்கதே பல்குநீங |
ஸோமே ஸோமதினே ஶுபே ஶிவதிதா
   பக்ஷே வளர் க்ஷேத்ரே |
தேவீப் ராபகிரீந்த்ர ஜாத்ரீ ஜகதாம்
   கல்யாண ஸம்பத்தயே |
காஞ்சேம் காஞ்சன தோரணிம் கலிமீல
   புத்வம்வி நீம் ப்ராக்தநீம். ||

பிரளய காலத்திலும் அழியாது நிலைபெற்றுள்ள காஞ்சிப்பதியை அம்மையார் கண்கள் களிக்கக்கண்டு பெருமகிழ்ச்சிகூர்ந்து கைகுவித்து உடல் புளகிக்க அங்குள்ள தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து ஏகம்பவாணரை யர்ச்சிக்கச் சங்கற்பஞ்செய்து கொண்டு கங்கண மணிந்தனர். (அதனால் அத்தீர்த்தத்தைக் கங்கண தீர்த்தமென்றும் அப்போதர்ச்சித்த சிவலிங்க மூர்த்தியைக் கங்கணேசுவரரென்றும் சொல்லுவார்கள். பின்னர் கடக மணியும் போதர்ச்சித்த சிவலிங்கத்தைக் கடகேசுவரரென்பர். இவ்விரு மூர்த்திகளைத் தரிசித்தோர் மல நோய் நீங்கித் தற்போத மிழந்து முத்திபெறுவார்கள்.) அங்குநின்றும் பிலாகாச மெய்தித் துதித்து உலகாணித் தீர்த்தக் கரையை யடைந்து அங்கே தங்கியிருந்து தவஞ்செய்யக் கருதித் தேவர்களுக்கு விடை கொடுத்தனுப்பி விட்டு தருமங்கள் முப்பத்திரண்டையும் வளர்க்கத் தொடங்கினர்.

தெய்வந்தென் புலந்தார் பூத மானிடம் பிரம மென்றோர்
சைவகை யெச்சஞ் சூக்தந் துறந்தவர் மடந்த ளன்பு
செய்யுமில் வாழ்வார்க் கில்ல மனைக்குப கரணந் தேம்பூப்
பெய்தமை தண்ணீர்ப் பந்த ரெங்கணும் பிறங்கு சோலை.

இரப்பவர் குருட ரெவ்வ முற்றவர்ப் புரக்தல் வெந்நோய்
திரக்குநன் மருந்து தூவாய் மகவினை யோம்பல் சுண்ணம்
பரித்தபா கடையே யெண்ணெய் பைம்புனல் குளிப்பவேண்டு
மருக்கிளர் துவர்க ளாதி மலரணை நிலஞ்ன் னனி.

கடிமணம் விளக்கு மாறுக் கடனொழித் திடுத லீசு
னடியவர் விழைவ வீகை யக்கமா மணிவெண் ணீறு
படியிலாக் கடவுட் பூசை யுபகர ணங்கள் பாசந்
தடிதரு வேத வாய்மைச் சைவநூல் புராண நல்கல்.

சிவபிரா னடிக்கீழ்ப் பத்தி செவியறி வுறுத்த லோடு
மூவகையி னபயம் யார்க்கும் வழங்குக வுள்ளிட் டோது
நவையிரி யறமெண் ணான்கு நாடொறு நிகழ்ச்சி மாணப்
பவநெறி தூக்கு ஞானப் பைந்தொடி சிறுவிப் பின்னர்.

இவ்வகையாகத் கருமங்களை யெல்லாம் பெருக்கச் செய்து கொண்டு, கம்பாநதிக்கரையில் செழித்துப்படர்ந்த ஆம்பர (மா) நிழலில் எழுந்தருளிய ஜோதிலிங்க மூர்த்தியாகிய ஏகாம்பரநாதனைத் தரிசிக்கும் அன்பு முன்னின்றீர்ப்ப பாங்கியர் முதலிய மாதர் புடைசூழ வீதிவழியே சென்று நகரினைப்பிரதக்ஷிணம் வருகையில், உடன்வந்த திருமகள் கலைமகள் இமையவர் மகளிர்கள் காளிகள் சாஸ்தா யோகினிகள் சப்தமாதர்கள் ஆகிய இவர்களை அவரவர்களுக்குரிய இடங்களிலே காவலாகத் தங்கியிருக்கும்படி கட்டளையிட்டனர்.

ஸம்ஸ் தாப்யயோகினீஸ்ஸர்வா: கமலாதீஸ் சகந்யகா: |
ஸமமோசப் ஸரஸோப்ருந்தாந் நவஸங்க் யாஸ்சஸக்திகா: ||
மாத்ருஸ்சகாளிஸஹி தாஸ் ஸஹ ஸாஸ்தாரமஹேஸ்வரீ |
க்ரமேண ஸர்வாண் வைஸாநீ ஸ்தாநாநீ ஸ ஸமாஹிதா ||
தத்ர தத்ர சஸம்பூஜ்ய பூர்வாமாரப் யஸாதிஸம் |

இறைவியார் இப்படி நியமனஞ்செய்து கீழ்த்திசையிலிருந்து சிவாலயங்கடோறுஞ் சென்று தரிசித்து அர்ச்சித்து திரு ஏகம்பவாணர் திருவாலய மெய்தி உள்ளன்போடு பணிந்து சந்நிதியடைந்து, தோழியர் இருபுறமும் சாமர மிரட்ட, மகாமண்டபத்திற் சிறிதிருந் திளைப்பாறி, தோழிகளே! எனதிறைவர் திருவிழிகளைப் பொத்தியதற்காக் கழுவா யியற்றுக வெனுங்கட்டளையேற்று ஈங்கு வந்துள்ளேன். நீங்கள் யான் வேண்டுவனவற்றைக் கொண்டுவா

ருங்க ளெனக் கட்டளையிட, அதனைக்கேட்ட தோழிகள் தாயே! யாங்கள் செய்யும் பணியாவை யெனவினவ, அம்பிகை அவர்களிற் சிற்சிலரை நோக்கி, நீங்கள் தனித்தனி நதிக்கரையிலுள்ள மாயிலை வில்வம் வாழை பலா மா முதலிய கனிகள் இலைகள் சந்தன முதலிய வாசனைத்திரவியங்கள் ரத்தினு பரணங்கள் ஆடைவகைகள் பஞ்சகௌவியம் அபிடேகத்திரவியம் நிவேதனம் முதலியன கொண்டுவாருங்கள். சிலர் அலங்காரஞ் செய்யுங்கள் என, அவரவர்க்கேற்ற பணிவிடைகளைச் செய்யும்படி கட்டளையிட, அப்பணிப்பெண்கள் அவ்வத் தொழிலிற்றலைப் பட்டு நின்றனர். உமாபத்திரி கீர்த்திமதி யென்பார் வடக்கிலுந் தெற்கிலுங் கிணறெடுத்துக் கங்கை காளிந்தி நதிகளை நிரப்பினர். சிலர் அக்கினிதிசையில் கிணறெடுத்து மடைப்பள்ளி யமைத்தனர். சிலர் வேகவதிக்கரையில் அம்பிகாவன மென நந்தனவன மமைத்தனர். சிலர் வாழை கமுகு கரும்பு இவற்றைத் தூண்களி கட்டி மலர் மாலை மணிமாலை தொங்கவிட்டு விதானங்கள் கட்டி ஆலயத்தை யலங்கரித்தனர். சிலர் சித்திரான்னங்களைச் சமைத்தார்கள். பலவகைமலர் மாலைகளைப் பனிநீர் தெளித்துக்குடலையில் நிறைத்தார்கள். சிலர் திருமஞ்சன தீர்த்த மமைத்தார்கள். சிலர் பலபழவர்க்கங்களைக் கொணர்ந்தார்கள். பால் தேன் நெய் கரும்பிரசம் தயிர் பட்டாடை ஆபரணங்கள் சந்தனக்குழம்பு புநுகு கர்ப்பூரம் குங்குமம் கண்ணடி தீபங்கள் தூபங்கள் இவற்றைச்சித்தப்படுத்தினர். சிலர் யாழ்முதலியவற்றுடன் பாடினர். சிலர் பரதநூற்படி யாடினர்.


அன்னையா ரேவியபணிகள் இங்ஙனம் நிகழ்கையில், தாம் மணிமண்டபத்தினின்று, உமாபத்திரை யுண்டுசெய்த கூவலை யடைந்து இறைவரைச் சிந்தித்து விதிப்படி நீராடி உடலீரம் புலர்த்தி இரண்டு பட்டாடை யுடுத்து, திருநீறு கண்டிகை புனை

ந்து அநுட்டான முடித்து, பூஜோப கரணங்களைத்தோழிமாரேந்தி வர இரண்டா மாவரண மடைந்து, சங்குமுதலிய வாத்தியங்களொலிக்கவும் கின்னரர் கீதம்பாடவும் நாடகப் பெண்கள் நடிக்கவும் அந்தணர் வேதமோதி வரவும், நிருதிதிக்கினும் வாயுதிக்கினும் முறையே வீற்றிருக்கும் கணபதி கந்தர்களைப் பூசித்து விடைத் தேவருள்ள விடத்தை மேவி, துவார பூசையை முடித்து ஏகம்பவாணரைக் கண்களாற்கண்டு ஆசையால் அடியற்ற மரம் போல் வீழ்ந்து சிவநாமோச்சாரணஞ் செய்து ஆநந்தபரவசமாய்ப் பணிந்து சிவானந்தமயமாக விளங்கினள். உடல் முழுதும் ஆநந்தக்கண்ணீர் நனைக்க என்புருக மெய்புளகிக்க மொழிகுளற ஞான பூசை செய்து சந்திர சேகரா! படைத்தற்றொழிலைத் தடுத்த பாவத்தை விலக்க இன்று யான் தேவரீர் பூசையைக் கொண்டேனுதலின், ஊறு நீக்கி முன்னின்று அநுகிரகிக்கவேண்டு மென்று சங்கற்பித்து, பூதசுத்தி அந்தர்யாகம் பாத்யமுதலிய தீர்த்த சுத்தி இவைசெய்து, சிவலிங்கத்தின் மீதுள்ள பண்டைய மலரை மாற்றி ஆதாரசத்தி முதல் குடிலா சத்தியீறுயமைந்துள்ள சிவாதானத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானை, ஞானநோக்காற்றரிசித்துப் போற்றி, பாத்தியம் ஆசமனம் அர்க்கியம் இவற்றைக் கொடுத்து மதுபர்க்க மூட்டி மீண்டும் ஆசமனங்கொடுத்து, இனிய அன்னத்தை நிவேதித்து, எண்ணெய் மாநெல்லி மஞ்சள் இவற்றின் காப்பிட்டு, பஞ்சகௌவியம் பஞ்சாமிர்தம் இளநீர் கருப்பஞ்சாறு பழவர்க்கங்கள் சந்தனம் சுத்தோதகமாகிய இவற்றினால் மஹாருத்திரமோதி யபிடேகித்து, வஸ்திரத்தினால் திருமேனியை யொற்றிப்பட்டாடை முப்புரிநூல் சந்தனம் ஆபரணம் மலர் மாலை இவற்றாலலங்கரித்துத் தூபதீபங்காட்டி நிவேதனமூட்டி ஆசமனார்க்கியம் தாம்பூலமளித்து, பிரதக்கணம் நமஸ்காரம் தோத்திரம் பஞ்சாட்க்ஷரஜபம் முதலிய பூஜைமுற்றுஞ் செய்து முடித்து, பிலத்தருகே யடைந்து முப்பத்திரண்டு தருமங்களையும் முறைப்

## முப்பத்திரண்டாவது.

# வித்யாவதிக் கநுக்கிரகம்

அதிரூப சௌந்தரியவதியாகிய வித்தியாவதி யென்னும் வித்தியாதரப் பெண் பூர்வம் தன் இளம் பருவத்தே தந்தையாகிய விசுவாவசுவைப்பணிந்து. எந்தையே! யான் ஸர்வலோகமாதாவாகிய பரமேசுவரியைத் தியானஞ் செய்யும் பேரவா வுடையேனாகலின். அம்மகாதேவியின் மந்திரத்தை யெனக்கு உபதேசிக்கவேண்டுமென வேண்டி அவன்பா லுபதேசிக்கப் பெற்று. நான் எந்தஸ்தலத்தில் அம்பிகையைத் தியானஞ்செய்து தவமிருத்தல் தகுமென வினவ, விசுவாவசு அம்மணீ! சக்திபீடங்கள் அறுபத்து நான்களுளொன்றாய்த் துவாதசாந்தத் தலமாய் எண்ணிய பேர் எண்ணியவரங்களை யெளிதாகவே கொடுத்தற்கிடமாய் மீனாக்ஷி தேவியார் எழுந்தருளியுள்ள மதுரைப்பதியே யுக்தமானவிடம். நம் மூதாதைகள் பலர் அந்நகரில் அம்பிகையை வேண்டி அரும் பெருவரங்களைப் பெற்றுள்ளார்க ளெனக்கூற. வித்தியாவதி தந்தைபால் விடை கொண்டு புறப்பட்டு, காடு மலை நதிமுதலியன கடந்து தென்னாடடைந்து கடம்பாரண்ணியத்துட் புகுந்து பொற்றாமரைத் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து தைமாசத்தில் அம்பிகையை நோக்கி ஐம்புலன்களையும் ஒருவழி நிறுத்தித்தவஞ் செய்பவள் ஆகாரத்தில் வெறுப் பெய்தி, தைமாசமுழுதும் பகற் காலத்திற் புசித்தும். மாசிமாசத்தில் இரவிற் புசித்தும். பங்குனி மாசத்தில் கிடைத்தபோது புசித்தும், சித்திரைமாசத்தில் கந்த மூலங்களை யுண்டும். வைகாசிமாசத்தில் எள்ளுப்பொடியைத் தின்றும். ஆனிமாசத்தில் சாந்திராயண மநுஷ்டித்தும், ஆடிமாசத்தில் பஞ்சகவ்வியநுகர்ந்தும். ஆவணிமாசத்தில் பாலைப்பருகி



யும். புரட்டாசி மாசத்தில் சுத்த ஜலத்தை யுட்கொண்டும், ஐப்பசிமாசத்தில் தருப்பைநுனியிலுள்ள நீரைப் புசித்தும். கார்த்திகை மாசத்தில் வாயு [காற்றும்] பக்ஷணஞ் செய்தும், மார்கழி மாசத்தில் நிராகாரமாயிருந்தும் தாங்கிடல் வணங்கிடந்தாள்.

ஏகாஹாரே ணைகமாஸ மேகம் நக்தாஶ நேநச |
அயாசிதாஶநேநைக மந்யம் ஶாக பலாஶநாத் ||
திலபிஷ்டே நேகமாஸ மந்யஞ் சாந்த்ராயணே ந ச |
பஞ்சகவ்யஶ னேநைக மந்யம் பாநீய பாநத: ||
பயோவ்ர தேநைகமாஸம் குஶாக்ரம்புவ்ரதே நச |
வாயவ்யாஹாரேணை கமாஸம் நிராஹாரேண சக்ரமாத் ||

பெரும்பக லல்லூண் கங்குலூ ணுதவப் பெற்றலூ ணிலைமுகர்பல்லூண், அரும்பொடி யெள்ளூண் சாந்தி ர யணமா னைந்துபால் நறியநீர் தருப்பை, இரும்புநு னுனிநீர் காலிவை நுகர்ந்து மியர்தரும் பட்டினி யுற்றும், வரம்புற விடாறு திங்களு ேநாற்று வாடிமேல் வருஞ்சுரு மதியில்.

யாதேவி ஜகதாம்கர்த்ரீ ஶங்கரஸ் யாபி ஶங்கரீ |
நமஸ்தஸ்யை ஸுமீ நாக்ஷ்யை தேவ்யை மங்களமூர்த்தியே |
ஸக்ருர்தாராத்ய யாம்ஸர்வ மபீஷ்டம் லபதேஜந : | நமஸ் * * ||
யஸ்யா: ப்ரஸாதலேஸேந போகமோக்ஷௌ நதூர்லபௌ | நமஸ் *
யயாஶிவோபி யுத்தஸ்ஸந் பஞ்சக்ருத்ய ம்கரோதிஹி | நமஸ்தஸ்மை
யஸ்யா: ப்ரீத்யர்த்த மநிஶம்லாஸ்யம்குர்பந்ஶி வோபமௌ | நமஸ் *
லக்ஷ்மீஸ்ரஸ்வதீ முக்யா டஸ்யாஸ் தேஜ: கணோத்பவா: | நமஸ்
யாதேவீ முக்திகா மாநம் ப்ரஹ்மவித்யாப் ரதாயிநீ || நமஸ் * *
யஸ்யா:ப்ரணமமாத்ரேண வர்த்தந்தேஸர் வஸம்பத: | நமஸ் * * ||
யாஸ்துதாஸர் வபாபக்நீ ஸர் வோபத்ரவநாஶிநீ | நமஸ் * * ||

யயா தேவ்யாவிரஹிதஸ் ஶிவோபிஹி நிரர்தக: | நமஸ் * * ||
சராசரம் ஜகத்ஸர்வம் யஸ்யா: பாதஸமுத்பவம் | நமஸ் * * ||
இதிஸ்துத்வா மஹாதேவீம் ப்பரணம்ய சபுந: புந: |
அநுஜ்ஞயாஸா மீநாக்ஷ்யா: ப்ரார்த்தயா மாஸகந்யகா. ||

என்றிங்ஙனம் பிரார்த்தித்த வித்தியாவதிக்கு மாதேவி கருணைபூதையாய் மூவாண்டு வாய்ந்த இளங்கன்னிகையாய்க் காக்ஷி தந்து, ஹே வித்தியாவதி! உனது அன்பிற்கு வியந்தோம்! நீவிரும்பிய வரம்யாது? விளக்குகவென! வித்தியாவதி சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, தாயே! உனது பாதாம்புயத்தில் நீங்காதபக்தி பாலித்தருளுவதோடு இக்குழந்தை வடிவாய் அடியேன் மடியில் வளர்ந்தருள வேண்டுமெனப் பிரார்த்திக்க, மாதேவியானவள் நீ மறு ஜனனத்தில் சோழ பரம்பரையில் காஞ்சனமாலை யென்னும் பெண்ணாகப் பிறந்து மலயத்துவஜபாண்டியனுக்கு மனைவியாகிப் பல சுகங்களையும் அனுபவிப்பாய். அக்காலத்தில் மயலத்துவஜன் மகப்பேறின்றிப் புத்திரகாமேஷ்டி யென்னும் யாகஞ் செய்வான். அப்போது மும் மூலக்கன்னிகையாய்த் தடாதகை யென்னும் பெயரோடு உன் அருந்த வப்புதல்வி யாகவருகவே மெனன்றநுக்கிரகித்தனள். தேவர்கள் மலர்மாரி வருஷித்தார்கள். இதன் தொடர்பு தடாதகைப் பிராட்டியார் திருவவதாரத்திற் காண்க.

மத்புத்ரீபவதீ பூத்வா ரூபேணைவம் விதேநச ||
ஆலிங்க நாதிக்ருத்யேந ஸந்தோஷ்யப்ரதிவாஸரம் |
முக்திம்புந: ப்ரயச்சார்யேஸா மீநாக்ஷீ மஹேஶ்வரீ. ||
மலயத்வஜ பூபாலம் பதிம்லபத் வாம ஹௌ ஜஸம் |
அநுபூய சிரம்காலம் தேநஸார்த்தம் மஹாஸுகம் ||
தத்ஸ்துபுத்ரகாமேஷ்ட்யாம் ஸஞ்ஜாதாம் ஜாதவேதஸ||
குசத்ரய யுதாம் புத்ரீம் மாம்லப்த்வா மதநுக்கிரஹாத் ||




## முப்பத்துமூன்றுவது

# தடாதகாவதாரம்.

பக்தாநுக்கிரக நிமித்தமாகப் பரமேசுவரியார் செந்தமிழ் நாட்டிலே திருவவதாரஞ்செய்தருளியசரிதையைச் சொல்லுகின்றோம். மதுரைமாநகரத்தில் அரசுபுரிந்து வந்த குலசேகர பாண்டியன் புதல்வனுகிய மலயத்துவஜன் வடமொழி தென்மொழிகளில் வல்லவனுய் நீதி முறை தவறாது அரசு செய்து வருகையில், சோழ ராசர்களிற் சிறந்த சூரசேனன் மகளாகிய காஞ்சன மாலையை விவாகஞ் செய்தனன். (இக்காஞ்சன மாலை பூர்வம் விச்சாவதி யாயிருந்தவள். விச்சாவதி யநுக்கிரகத்திற் காண்க.) அழகிற் சிறந்தவன். எண்ணில்லாப் போகமாதர்களை யுடையவன். குறையொன்று மின்றிப் பெருஞ்சிறப்போடு வாழ்ந்திருந்தும் மகவில்லாக் குறை யொன்றுற் றிருந்தான். இவன் அநந்த அசுவ மேதங்களை யாற்றி வந்தமையின், இந்திரன் தன் பதவிக்கு இடையூறெயது மென்று எண்ணியவனுய் மலயத்துவஜ பாண்டியனை யடைந்து, மகிபனே! நீ புத்திரப்பேற்றினை விரும்பியவனுதலின் புத்திரகாமேஷ்டியைச் செய்தல் வேண்டு மெனத் தூண்டிச்சொல்ல, பாண்டியன் பல அந்தணரை வருவித்து அவ்யாகத்தைத் தன்மனைவி காஞ்சனமாலையோடிருந்து செய்து முறைப்படி முடித்தனன். அப்பொழுது அவ்யாக குண்டத்தில் தீயானது கொழுந்து விட்டெரியும் சமயத்தில் ஸம்பூர்ணுகுதி கொடுத்தவுடன் ஸர்வலோக மாதாவாகிய பரமேசுவரியார் மூன்று வயதோடும் திரிபுரசுந்தரி யெனும் தமது திரு நாமத்திற் கேற்ற திவ்வியவடிவோடும் சிறந்த ஆடையா பரணுதிகள் பூண்டு மும்முலைக் கன்னிகையாகத் தோன்றி யவதரித்து மெல்ல நடந்து மலயத்துவஜன் பாற்செல்ல, பாண்டியனும் காஞ்சனமாலையும் மனம் பூரித்து எடுத்து மகிழ்வோடு முத்தமிட்டு அணைத்துக் கொண்டு ஆநந்த மெய்தினர்.

ஆயினும், மலயத்துவஜ பாண்டியன், யான் ஆண்மகவு பெறுதல் வேண்டியாகஞ் செய்ததற்குப் பெண்மகவு உதிப்பினும் அதி சௌந்தரிய வதியா யிருப்பதோடு, என்பகை மன்னர் பரிகசிக்கும்படி மும்முலைப் பெண்ணாகப் பிறந்ததேயென மனம் வருந்துகையில்சிவபெருமான் ஆகாயவாணியால். "அரசனே! நின்புதல்வியாக வந்த இக்குமாரிக்குத் தடாதகையென நாமகரணஞ்செய்து குமாரனுக்குச் செய்வன போலச் சடங்குகளையெல்லாஞ்சிறிதுங் குறைவின்றிச் சுபகரமாக நடத்துக. இவளுக்குக் கணவன் வருகையில் இடையிலுள்ளஸ்தனம் மறைந்துவிடும். அது கருதி வருந்தற்க" எனக் கூற மன்னவன் அங்ஙனமே மனங்களித்துஸர்வாடம்பர பூர்வமாகப் புத்திரிகா மஹோற்சவங் கொண்டாடினன். தடாதகைப் பிராட்டியார் வளர் பிறைச் சந்திரன்போல வளர்ந்து அரசுரிமைக்குரிய அஸ்திர சஸ்திர வித்தைகள் இரதாரூட அசுவாரூட கஜாரூடங்கள் முதலிய யாவுந் தேர்ந்து விளங்குவது கண்டு உரிய பருவத்திலே மலயத்துவஜன் மகளுக்கு இராஜ்யபாரமளித்து மகுடாபிஷேகஞ் செய்வித்துத் தேவலோகெய்தினன். தடாதகைப்பிராட்டியார் பலதேச மன்னர்களையும் அடக்கி அவர்கள்பாற் கப்பங் கொண்டு விசேஷமாகத் தான கருமங்களை அபிவிர்த்தி செய்து அரசு நடத்திவந்தனர். அம்பிகை கன்னிப் பருவத்தில் அரசாண்டமையின் பாண்டி நாட்டிற்குக் கன்னி நாடென்றொரு காரணப் பெயரும் வழங்குகின்றது.

"மன்னவநின் றிருமகட்கு மைந்தர்போற் சடங்கனைத்தும் வழாது வேண்டும், சொன்னமுறை செய்துபெயர் தடாதகையென் றிட்டுமுடி சூட்டு வாயிப். பொன்னனையா டனக்கிறைவன் வரும் பொழுதோர் முலைமறையும் புந்தி மாழ்கே, லென்னவர னருளாலோர் திருவாக்கு விசும்பிடைநின் றெழுந்த தன்றே."



முப்பத்து நான்காவது.

# தடாதகையார் திக்கு விஜயம்.

---

ஸ்ரீமீனாக்ஷி தேவியார் மலயத்துவஜபாண்டிய குமாரியாய்த் திருவவதாரஞ் செய்து தடாதகைப்பிராட்டியாரென்னுந் திருநாமத்தோடு பாண்டிய நாட்டினை அரசுபுரிந்து வருகையில் மணப்பருவமடைந்தாராகக்கண்ட தாய் காஞ்சனமாலை தன் புதல்வியருக்குத் திருமணமுண்டாகவில்லையே யெனவருந்திநிற்ப, பிராட்டியார் அன்னையே! நீகருதியது நிகழுங்காலத்தில் நிகழும். இப்போது யான் திசைகடோறுஞ் சென்று என்வென்றியை நிலைநிறுத்தி வருவேனென்று நாற்பெருஞ் சேனையையுந் திரட்டிக் கொண்டு சுமதியெனும் மந்திரியுடன் வர, மாதர்சேனை யநேகம் தம்மைப் புடைசூழப்போர்க் கோலங் கொண்டெழுந்து பல மன்னர்களை வென்று தமக்கு நிகர்வா ரின்மையால் திசைப்பாலகரை வெல்லக் கருதி இந்திரதிசையை யடைந்து அவனோடுபொருது அவனை வென்று அவனாற் கொடுக்கப்பட்ட பலதிறைகொண்டுதிரும்பினர்.

ஸம்மர்பிதம் கல்பவ்ருக்ஷம் காம தேனும் ப்ரக் ருஹ்யச |
சிந்தாமணிக்கருதாம்மாலா மமாராணுஞ்ச துர்பலாம் ||

இந்திரனாற் கொடுக்கப்பட்ட காமதேனு கற்பகவிருக்ஷம் சிந்தாமணி ஐராவதமுதலிய பலபொருள்களையுங்கொண்டு அப்படியே அக்கினிமுதலிய திக்குபாலர்களையும் வென்று அவரவர்பாற் றிறைகொண்டு. இறுதியில் கைலாயகிரியை யடைந்து முதற்பெருங்காவலாயுள்ள திருநந்தி தேவர்கண்டு, வெகுண்டு இறைவர்க்குணர்த்திக் கட்டளை பெற்றுப் பூதகணங்களைப் போருக்கனுப்ப, தேவியார் அவர்களையெல்லாம் துவம்சஞ்செய்து சிலரைக்கொன்றும் பலரைப்பயந்து புறமுதுகுகாட்டி யோடவுஞ்செய்தனர்.

இவ்வாறலாறுகளை யெல்லாம்அறிந்த சிவபெருமான் தாமே போர்க் கோலங் கொண்டாராய் யுத்த பூமியை யடைய இன்னும் யாவர் யுத்தத்திற்கு வரினும் அநாயாஸமாக அவர்களையும் வெற்றிகொள் ளும் ஆற்றலோடு நிற்கின்ற அம்மையாராகிய தமது வாமபாதி யைக் கண்டனர். அம்மையாரும் தமது வலப்பாகப் பாதியாகிய பரமேசுவரரைக்கண்டனர். அவ்விதங்கண்டமாத்திரமே இடையிலி ருந்த ஒரு ஸ்தனமானது மறைந்து விட, மனதில் நாணமும் அச்ச முங் கொண்டார் போன்று சிரங்குனிந்து நிலத்தைநோக்கி நிற் கையில், பூர்வ விர்த்தாந்தங்களைத் தெரிந்த சுமதியென்னு மந்திரி பணிந்து, தாயே! இச்சிவபெருமானே உனது கணவனென்றனன்.

இதிதாந்நிர் பயாந்க்ருத்வா தத்பாணிக்ரஹணோத்ஸுக |
கத்வா தடாதகாம் பஸ்யந் தஸ் தௌசாபதரோமுகா ||
தஸ்யதர்ஸ நமாத்ரேண தஸ்யாஸ்து விக்ருத: குச: |
அத்ருஸ்யதாம் த்ருதம் ப்ராப மதக்ரே விஸ்த்யஸைலவத்: ||

நிகடஸ்தாஸ் ஸர்வ ஏவ தாரத் ருஷ்டவாவிஸ்மிதா: ஸ்திதா
ஸார்தர கச்சந் மஹாமந்திரீ ஸுமதிஸ்ச புராதந: ||
அயமேவாநகேபர்தா தவேத்ய கத்யத்ரஹ: |
ஸ்ருத்வாதடாதகா கந்யா விலோக் யாத் யந்த ஸுந்தரம். ||

சிவபெருமான் தம்முன்னர் நாணமெய்தினூர் போல நிற்கும் பிராட்டியாரைப் பார்த்து. நீ நின் நகரிற்குச் செல்லுக யாம் அங்கு வந்து உம்மை மணஞ்செய்வோ மென இறைவியார் அங்ஙன மே மதுரைமா நகரிற்குப் பல வளங் கனோடெய்தினர். சிவபெரு மான் ஸமஸ்த தேவர்களோடுஞ் சென்று தேவியாரை மணவினை முடித்து பிராட்டியார் வகித்த அரசுரிமையைச் சோமசுந்தரபாண் டியரெனும் பெயரோடுசில காலம் வகித்து, பின்னர் உக்கிரகுமார பாண்டியர்பால் ஒப்புவித்துத் தமது சுயஞ் சோதி வடிவெய்தினர்.



## முப்பத்துஐந்தாவது.

# அந்தணகௌரிக்கருளியது.

---

பாண்டிவள நாட்டிலே பல சிறப்புகளோடு விளங்கும் மதுரை நகரத்திலே அந்தணர் குலத்திலே விரூபாக்ஷனென்னும் பெயருடைய ஒருவனிருந்தனன். அவன் மனைவி சுபவிரதையென்பாள். இவர்களிருவரும் பலதவஞ்செய்து சப்தமாதர்கள் திருவருளால் ஒரு பெண்குழந்தையைப் பெற்றனர். அக்குமாரி கௌரியென்னும் பெயர் வாய்ந்து கௌரியம்மையார் கால பாதத்தில் கருத்து மிகுந்து தந்தையாகிய விரூபாக்ஷனை யெய்தி. எந்தையே! பிறவியை அடியோடகற்றும் ஆற்றலுடைய மாதேவியின் மந்திரத்தை எனக்குபதேசித் தருள்கவெனக்கேட்டு அவளதனைத் தெளிந்து நாத்தழும்பேறப் பன்னாள் ஜபித்து அம்பிகையின் அநுக்கிரகத்திற்கு அருகாமையாயிருக்க. அந்தணர்வழக்கப்படி அரிவையரை அவர் தம் அறியாப்பருவத்தே மணவினை செய்ய வேண்டிய காகலின். எட்டு வயதாயினவே. இன்னும் மணநாயகன் தகுதிபெற வரக்காணகிலேனே என விரூபாக்ஷியார் விசன மெய்தியிருந்தனர்.

அத்தருணத்தில், அயர் புலத்திலுள்ள அந்தணப் பிரமாசாரியொருவன் திருமாலுக்கடிமை பூண்டவன் பிச்சை புக்குப்புசிப்பவன் அங்கெய்த அவனைக்கண்ட விரூபாக்ஷர் அவ்வந்தணப்பிரமசாரிக்குத் தன் பெற்ற கரும்புதல்வியை மணவினைமுடித்துக் கொடுப்பதாகத் தன்னுட்டுணிந்து உறவினர் முதலிய ஒருவரையும் வினவாது அவனுக்குத்தத்தஞ்செய்து மணவினைமுடித்துத்தந்தும் பலபொருள்களை ஸ்ரீதனமாகக் கொடுத்து விடுத்தனன், பிச்சைக்குவந்தவன் பெண்ணினைக்கட்டிக்கொண்டு தனதிருக்கையையடை

யந்நாணச் சகியராய் ஒரு புடையொதுக்கி வைத்திருந்தனர். அப்
படிச் சிலகாலஞ் செல்ல. ஒருநாள் அவ்வீட்டார் யாவரும் அயலூ
ரில் நடக்கும் உறவினர் விவாகத்திற்குச் செல்ல. நேர்ந்தமையின்
வைணவ மிகுந்து விளங்கும் அவன் தாய் தந்தையர் கௌரியாரை
ஒரு புறத்தே தனியே விடுத்து அறைகளைத் தாளிட்டுக்
கொண்டு சென்றனர். தனித்திருக்குங் கௌரி தன் வழக்கப்
படி கௌரிதிருமந்திரத்தை ஜபித்துக்கொண்டே சிவ சின்னங்
களைக்காணப் பெறாது வருந்துகையில். சிவபெருமானே ஒரு
விருத்தவேதியராய் அங்கடைய. பெரியோரே! இங்கெழுந்தருளிய
காரணம் யாதென வினவ, பெரியோர் யாம்பசித்து உன்னிடம்
வந்தோ மென. எம்மவர்கள் வீட்டைத் தாளிட்டுச் சென்றார்க
ளென, அவர் நீ தொடுமுன்னர் அப்பூட்டுந் திறபடுமென. கௌரி
அங்ஙனமே மடைப்பள்ளியைத் திறந்து அறுசுவையுண்டி சமை
த்துப் பலகாரவகைகளுடன் முதியோருக்கு இனியமொழிகள்
பகர்ந்து ஊட்ட அதனைப் புசித்துக் காளைப்பருவமெய்தினராய்,
கலவைசாந்து முதலியவிளங்க வீற்றிருக்கக் கண்டு கை நெரித்து
வியர்த்துநிற்கையில். அயலூர்ச்சென்ற அவர்கள் அங்கடைய அந்த
ணமுதியோர் பச்சிளங்குழந்தையாய்த் திருநீற்றுக்காப்போடு காண
ப்பட அவர்கள் இக்குழந்தை யாவருடையதென. கௌரீ அயல்
வீட்டாருடையதென நீயும் அக்குழந்தையுமாகாமையின் ஈண்டி
ருந்துபுறஞ்செல்கவெனத் துரத்த கௌரிவீதியினின்று வருந்துகை
யில், குழந்தை வடிவு கரந்து சிவ பெருமானாகவும். கௌரி
கௌரியம்மையார் வடிவெய்தவும் இடப வாகன மூர்ந்து ஆகாய
வீதியால் கைலாய பதவி யெய்தி கௌரி கௌரியின் கமலசரணங்
களிற் கலந்தனள்.

---



முப்பத்தாறுவது

# ரத்தபீஜவதம்.

---

பிரமதேவனுர் பெருவரம் பெற்றவர்களும் இரணியகசிபன் மரபினருமாகிய சும்ப நிசும்பர்வதச் செயல் மேற்கொண்டிருந்த சங்கரியின் வஸ்திரங்களாற் சங்கரிக்கப்பட்ட செய்தியை அவ்வசுரர் கட்கிளையா ளாகிய குமோதி யென்பவள் பெற்ற புத்திரனும் கொடியோனுந் தன்னுடலுதிரத்தில் ஒரு துளி யெக்காலத்தாயினும் எவராலாயினும் எக்காரணத் தாலாயினும் நில மிசை வீழ்ந்தால் அவ்விரத்த பிந்து தன் போன்ற தானவனாகி உயிரேற்றுத் தனக்குதவியான மாறுவரம் பெற்றவனுமாகிய ரக்த பீஜனென்னுங் காரணப் பேர்வகித்தவன் அறிந்து தன் மாதுலரைக் கொன்று தீதிழைத்தவள் சேயிழை யென்று நாணமெய்தி அத்தகைய நங்கையை அரைநொடியிற் சங்கரிப்பேன். என் ஆற்றல் நன்றாயிருந்தது என வீராட்டகாசத்தோடு தோள் கொட்டி அன்னையா ரருகடைந்து அறை கூவ அப்பொழுது சமர்களத்திருந்த சப்த மாதர்கள் கண்டு அம்பிகை கட்டளையால் அமரியற்றி அரிய அஸ்திர சஸ்திரங்களால் அவனுடலம் சல்லடைக் கண்களாகத் துளைத்தனர். அக்காயங்களின் வழியே பெருகிய சோரிக்கு அளவின்றி அவன் உதிரத்துளி ஒவ்வொன்று ஒவ்வோரசுரவடிவேற்றுத் தனித்தனி யெதிர்ப்பக் கண்டு சப்தமாதர்கள் விரைந்து ஓடி வந்து விமலையின் திருவடியில் வீழ்ந்து விண்ணப்பிக்க பார்வதி புன்னகையரும்பித் தன் மேனி நோக்க ஆங்கிருந்து காளி தோன்றினள். சப்தமாதர்களே! நீங்களிருக்க வென்றவர்களை அங்கே நிறுத்தி காளிதேவியை நோக்கி இவர்க ளிரத்தபீஜனுக்கு எதிர் நிற்க வியலாது இமைப்பிற் றிரும்பின ராகலின் யானே அவனோடு போர்செய்து கொல்லுவேன். அவனிறக்கு மெல்லை

யுமவனுடலினின்று முதிரத்துளி ஒன்றும் நிலமிசைவிழாது உன் கைக் கபாலத் தேந்தியும் உனது நாவை வளைத்து நீபருகக் கடவாய் என்று பணிந்து அங்ஙனமே அவள் உதிரபானஞ் செய்து வர இறைவியார் இரத்த பீஜனை யெதிர்த்து இணையில்லாப் போர் செய்து இமைப்பொழுதிலழித்து இமையவர் துயரை யொழித்து அவர்களைச் செல்ல விடையளித்து காளியைக் களிப்பித்துத் தெய்வீகமுஞ் சிவபெருமானோடு நடனஞ்செய்து அவர்பக்கலில் வசித்தலும் ஆகியவரங்களை யளித்துச் சப்தமாதர்களுக் கனுக்கிரகித்து மறைந்தனர். இக்காளியே திருவாலங் காட்டிலிருந்து இறைவனோடு நிர்த்தப்போர் செய்தவள்.

---

## முப்பத்தேழாவது

# பண்டாசுரவதம்.

---

வெள்ளி மலையாகிய திருக்கைலாயகிரியி னின்றும் உமாபிராட்டியார் சிவபெருமானுடன் ஒரு உத்தியானவனத்திற் கெழுந்தருளி உல்லாசமாகவுலாவி அங்குள்ள மலர்கள் கனிகள் கொடிகள் முதலிய விசேஷங்களைத் திருக்கண் ணோக்கஞ் செய்து கொண்டிருக்கையில், சிவாக்கினையின்படி அருகிருந்த கணங்கள் அதிரம்மிய மான பறவைத்தொகுதியில் ஓரன்னத்தையும் ஒருகிளியையும் பற்றிக்கொணர, சிவபெருமான் அவற்றைநோக்கி நீங்கள் நாடோறும் எங்கே வசிக்கின்றீர்க ளெனவினவ, கிளியானது ஐயனே! நான் இந்தச் சோலையிலேயே வசிக்கின்றே னென்றது. அன்னமோ யான் வெகுகாலம் தேவலோகத்துக் கற்பகச் சோலையிலிருந்தேன். தேசசஞ்சாரஞ் செய்ய விரும்பிப் பலவிடமுஞ் சென்றேன். நான் சஞ்சரியாதவனமும் மூழ்காத தீர்த்தமு




மில்லை. இறுதியில் இத்தாமரைத் தடாகத்தில் வசிக்கின்றேன். தேவரீர் சடைமுடியிற் றங்கிய கங்காநதியினுற் சிறப்பு செய்யப் பட்ட இத்தீர்த்தத்தை விட்டுப்போக மாட்டாதிருக்கின்றேன் என க்கூற, அவ்வன்னத்தின் வார்த்தையைக் கேட்ட சிவபெருமான் புன்னகை புரிந்தனர். அப்பொழுது அப்பறவைகளிரண்டும் விடை கொண்டு சென்றன.

கங்காதேவியின் பெயரை அன்னஞ் சொல்லியபோது சிவ பெருமான் மனமகிழ்ந்து சந்தோஷித்தன ரென்று, அருகிருந்த அம்மையார் சினமெய்திக் கண்களில் நீர்த்துளி சிந்தி மனம்பொ ருது, நமது பெருமான் கங்கையின்மீதுள்ள அன்பு நம்மீது வைத் தாரில்லை. பூர்வம் பர்வதராஜ குமாரியாய்த் தவம்புரிந்து கொண் டிருக்கையில், திருமணம் நிறைவேற்ற விரும்பிய மன்மதன், யோக நிலையிலிருந்தார் மீது மலர்க்கணைசிந்த, ஒரு சிறிதும் அன் பின்றி அவனை யெரித்தனர். அதனைப் பொறுத்தோம். ஆயினும் நம்முடைய நிலைமையாகிய சக்திமயம் விசேடமென்பதை யறிவு றுத்த ஒரு செயல் செய்வோமென்று கோபித்து, மன்மதனெ ரிந்த சாம்பர் மலையைநோக்கி இதினின்று பண்டாசுரனென் னும் அசுர நாதன் எழுக வெனககருத, அக்கணமே அசுரரிற் கொடியோனுக அவன் தோன்றி, பத்துக்கோடி வருஷம் பெருந் தவம் புரிந்து, தேவர் மனிதர் முதலானுருடலிற் புகுந்து அவர்க ளுடைய சுக்கில சுரோணிதங்களை யெடுத்துப் பருகத்தக்கவலி பெற்று, அங்ஙனமே தேவர் முனிவராதியரைப் பல ஹீனப் படுத் திக் கொன்று வந்தனன்.

இதுகண்டவர்கள் அதிசயித்து இவ்விளைவிற்குக் காரணம் யாதென்றுணரமாட்டாது சிவபெருமானபால் விண்ணப்பித்து அவர் திருவருளால் இவ்விர்த்தாந்தத்தை யறிந்து, இவனையகற்

றும் உபாயம் ஏதேனும் செய்யவேண்டும், எங்களுயிரைக் காக்க வேண்டுமென்று பலவாறு பிரார்த்திக்க, அம்மையப்பர் பலகோடிசத்திகளைப் படைக்க, அச்சத்திகள் தேவர் வித்தியாதரர் கந்தர்வர் இயக்க அசுரர் பாதலர் முனிவரென்று வேறுபாடு கருதாது வாயிற் பெய்து விழுங்க, பண்டாசுரன் தெத்தென அவர்களுடலை விட்டு வெளியே போயினன். அப்பொழுது சிவபெருமான் தேவியார் திருமுகத்தை நோக்க, திரிபுரையென்னுஞ் சத்தி ஒருகையிற் கரும்புவில்லும், ஒருகையில் மலர்ப்பாணமும், ஒருகையில் அங்குசமும், ஒருகையின் மலர் மாலையுந் தாங்கி மூன்றண்டங்களையும் கொண்டு தோன்றினள். அவளை நோக்கி நீ பண்டாசுரனைச் சங்கரித்து வருக வெனக்கட்டளையிட, திரிபுரை கரும்புவில்லை வளைத்து மலர்ப்பாணங்களை விடுத்து அப்பண்டாசுரனை யழித்து அம்பிகை யிடமெய்தி விண்ணப்பித்து வணங்கினள். பண்டாசுரன் காரணமாக அழிந்த அண்டங்கள் மூன்றையும் பண்டு போலப்படைத்துத் திரிமூர்த்திகளையும் அவர்கள் முசுசெயல்களையும் நிலைபெறுத்துக வென ஆஞ்ஞாபிக்க அங்ஙனமே யியற்றினள்.

"அண்டமூன் றவத்திடு லரனை யேமுதற்
பண்டைய மூவரைப் பயந்து பால்வளை
யொண்டொடி யவரைநீ யுதவி முற்செயல்
கொண்டளித் திடுமுறை கொடுத்தி யென்றனன்."



## முப்பத்தேட்டாவது

# சண்ட முண்ட சம்ஹாரம்.

அமரர்களுக்கு சுந்தோப சுந்தர் புதல்வர்களாகிய சும்பன் நிசு பமெனன்னும் அசுரராலெய்திய இடரினை யகற்ற இமயவல்லியார் வாமளித்த பின்னர் மலைச்சாரலில் தமது கணங்களோடு எழுந்தரு ளியிருக்கக் கண்ட சும்ப நிசும்பர்களின் நண்பர்களாகிய சண்டன் முண்டன் என்னுந் தானவரிருவரும் நமக்கும் தமது நண்பர்க்கு மேல் விளைவது இந்தகைத் தென்று சித்தத்தில் தெரியாது உத்த மியாகிய உமாதேவியின் பேரழகைக் கண்டு மனமயங்கி இத்த கைய சவுந்தரியமுடைய மங்கையை திரிலோகங்களில் எங்குங் கண்டிலோம். இப்பேயழகுடையாள் தவஞ்செய்வானேன்? வனத் தில் வசிப்பானேன்? காய் கனி கிழங்கு சருகுகளைப் பட்சிப்பானே ன்.? இவளூழ்வினை யிருந்தவாறேது? இவளுக்கு நல்வினை நாமே யளித்துச் செல்வத்திற் சிறக்க விளங்கும் பதவியை நல்குவோ மென்றுகருதித் தேவியின் சமீபத்தி லெய்திப் பெண்ணே! உன்சரீ ரகாந்தி எங்கள் மனதைக் கவர்ந்து உனக்கு நன்மை செய்யு மாறு தூண்டா நின்றது. அதனை நீ மறுது 'அங்கீகரிப்பையாயின் எட் டுணையுங் குறைவின்றி யிமையவர்களு மடிபணிய இவ்வுலகில் வாழலாகும். அஃதென்னெனில் சொல்லுதற்கரிய வல்லபமு டைய சும்பாசுரனென் றொருவனுளன். நீயவன்பா லெய்துவை யாயின் அவனுன்னை யங்கீகரிப்பான். யாங்க ளங்கீகரிக்கச்செய் வோம் எனக்கூற, அம்பிகை அருந்தவ நிலையிலுள்ள யான் ஆடவ ரோடுரையாடேன். அவரையும்பாரேன் ஆதலின் அரைக்கணத்த ப்புறம் போ மின் என்றகற்ற அச்சண்ட முண்டர் சும்பா சுரன்பால் விரைந்தோடி தேவியின் சிறந்த பொலிவை வியந்துகூறி அச்சம்

பன் கட்டளையால் சிலபடையோடு மீண்டும் தவத்துறை யெய்திப் பலவாறு பிரார்தித் தழைத்தும் வராமைநோக்கிய சண்டமுண்டர் வலிதில் கைப்பற்றி யீர்க்கக் கருதுகையில் விமலை வெகுளிகொள்ள அக்கணமே அம்மையார் தோளிலிருந்து அநேகஞ் சேனையும் ஒருசத்தியுந் தோன்றிப் பெரும்போர் செய்து அசுரச் சேனையையுஞ் சண்டமுண்டர்களையும் அதஞ் செய்தனர். அம்பிகை அச்சத்தியை நோக்கி நீ சண்டனையும் முண்டனையுஞ் சங்கரித்தமையால் சாமுண்டி யென்னும் பெயர் பெற்றுவாழ்க வென விடுத்தனர் பின்னர் சும்ப நிசும்பர்களுங் கொல்லப்பட்டார்கள். [சும்சரி சும்பரிற் காண்கரிற் காண்க.]

## முப்பத்தோன்பதாவது

# சும்பநிசும்ப சம்ஹாரம்.

தேவர்கள் பலரையும் இம்சித்த இரணியகசிபன் மரபிலுதித்த சுந்தோப சுந்தர்களின் புதல்வராகியசும்ப நிசும்பர் புஷ்கரத்திலே பிரமதேவனை நோக்கிப் பஞ்சாக்கினி மத்தியிலிருந்து ஐம்புலங்களையடக்கி யெண்ணில்லாக் காலம் அருந்தவஞ் செய்து அவ்வன்ன வாகனனால் அமர்க்களத் தெதிர்த்த அனைவரையும் வெல்லத்தக்க பேராற்றலுற்று இந்திராதி தேவர்களை யிமைப்பொழுதும்விடாது இன்னல் செய்துழக்கு நாளில் அதனைச் சகியாத தேவர்கள் இமய வல்லியாகிய இறைவியை நோக்கிப் பெருந்தவஞ் செய்து தமக்குற்ற இடுக்கண்டீர்க்க கருதிநிற்கையில் அம்பிகை அமரர்க்குக் காட்சிதர அவர்கள் அன்னையினடிமலர் பணிந்துவேத வாக்கியங்களாற் றுதித்து தமக்கெய்திய துன்பங்களும்படிச் சும்பநிம்பர்களைச் சங்கரிக்க வேண்டுமென்று பெரிதும் பிரார்த்தித்து



விண்ணப்பிக்க அன்னவர் வேண்டுகோட் கிணங்கிய அன்னை யங்ஙனமே செய்வலென்றருளி மலைச்சார லெய்தித்தவ வடிவம் வகித்துத் தமது தோழியரோடு தங்கியிருக்கையில், ஆங்குதன்பியற்றி யசண்ட முண்டர்களைச் சங்கரித்தனர். [சண்ட முண்ட சம்ஹாரத்திற் காண்க.] அங்ஙனம் சண்டன் முண்டன் என்னுந் தானவர் இறந்த செய்தியை யுணர்ந்து சும்பன் நிசும்பனென்போர் அநேக அசுரச் சேனை யோடு பிரளயகால சமுத்திரம்போல ஆர்ப்பரித்து வடவாக்கினி போல உருட்டி விழித்துச் சண்டமாருதம் போல சுவாசித்து இடிபோலக் கர்சித்து அம்பிகையை யெதிர்த்துப் பலவகை தேவாஸ்திரங்களைக் கார்கால மேகம் போலக் கணக்கின்றிப் பிரயோகித்தனர். அவற்றைக் கண்ணுற்ற அம்மை தமது திருமேனியி னின்று அபிராமி, மாயேஸ்வரி, கௌமாரி, நாராயணி, வராகி, உருத்திராணி, காளி. என்னுஞ் சப்தமாதர்களை யுஞ் சில சிவ தூதியரையு முதிப்பித்துச் சும்ப நிசும்பரோ டுத்தத்திற்கனுப்பினர். கௌரியம்மையார் விடுத்த சப்தமாதர்களுஞ்சிவ தூதியர்களுந் தங்க டங்கட்குறிய வாகனரூடர்களாய் பலவகை ஆயுதங்களைத் தாங்கிச் சும்ப நிசும்பர்களை யெதிர்த்து அவர்கள் சேனைகளை பலவகையாகத் துன்பு செய்து புறம் போய் ஓடாத வண்ணம் ஒரு சேரத்திரட்டி யழித்தனர். மாபாவிகளாகிய சும்ப நிசும்பர் சப்த மாதர்களுக்கு ஆற்றமுடியாராய் யுத்தபூமியினின்று தமதுமாயாவல்ல பத்தால் மறையத்துணிகையில்அம்பிகையே அவ் விருவரையும் ஓடாது நிறுத்தி யெண்ணிறந்த அஸ்திர சஸ்திரங்களால் அவர்களுடலைத் துளைத்து முதலிற் நிசும்பனையும் பின்னனர் சும்பனையுமழித்து தேவர் துயரை யொழித்தனர். அதுகண்ட அமரர் அக மிகமகிழ்ந்து முகமலர்ந்து பலவாறு துதித்து ஆனந்தக் கூத்தாடினர். இதன் தொடர்ச்சி [ரக்த பீஷத் வதத்திற் காண்க.]

நாற்பதாவது

# ரக்தாசுர ரக்தவீரசங்காரம்.

பொன்னுலகத்திற் கிறைவனாகிய இந்திரன் தன்பெருஞ்செல்வந் துய்த்துப் பொற்சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆடல் பாடல்களைக் கேட்டு ஆநந்தித்துக் கொண்டிருக்கும் ஒருசமயத்தில் சப்த முனிவர்கள் அங்கடையக் கண்டு அதிசீக்கிரமாகத் தன்பீடத்தை விட்டெழுந்து எதிர்சென்று பணிந்து அவர்களை வருவித்துத் தக்கபீடமாடத்திலமர்த்தி. ஸ்வாமிகளே! நீங்களெல்லாம் இங்கெழுந்தருளது தவஞ்செய்தேன். தங்கள் வருகையினாலே என்செல்வங்களெல்லாம் இன்றல்லவோ தழைக்கப்பெற்றேனென்று உபசார மொழிகூறிப் பன்முறை சாஷ்டாங்கமாகப் பணிந்து ஒருபுடைநின்று அடியேனுக்கு எல்லாச் சுகங்களுமிருந்தும் ஒருதுயர மட்டும் என்னைப்பீடிக்கின்றது அதாவது அசுரர் புரியுந் துயரத்தை யாற்றகில்லேன். அசுரர்கள் தேவர்களையும் பூலோகத்திலுள்ள மனிதர்களையும் பெரிதும் இடர் புரிகின்றார்கள். அவ்வசுரர்களையடக்கி அமரரையும் பூவுலகையுங் காக்குங்கடன் என்னுடையதேயாயினும் அதனைச் செய்யும் ஆற்றல் ஒருசிறிதும் எனக்கில்லை. அச்செயல் தங்களால் செய்யப்படவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். இக்கற்பக நாட்டில் எண்டிசைகளிலும் மறைந்துகொண்டிருக்கும் அசுரர்கள் இறக்கும்படி வேதமந்திரத்தால் யாகஞ்செய்து தேவர்களையும் மானுடர்களையும் காப்பாற்றும்படி மனமிரங்குவீர்களாக வென்று பன்முறை பிரார்த்திக்க, சப்த முனிவர்கள் இந்திரனை நோக்கிச் சொல்லுகின்றார்கள்: இடபாரூடராகிய சிவபெருமானுக்குப் பிரீதியாய் நாடோறுஞ் செய்யும் சிவார்ச்சனை முதலியவற்றை ஒருபோதுங் கைவிடலாகாது. திரிகா



லங்களிலும் அச்சிவார்ச்சனைக்குக் குறைவுசெய்யோம் வேறொன்றுபுரிவதனால் தங்கள் கடைமைப் பாடுகை நெகிழுமெனக் கூற, ஆகண்டலன் அகந்தளர்ந்து இத்துயரை யகற்றுவான் ஆற்றத்தக்க செயல் பிறிதொன் றிலதெனப் பெரிதும் வேண்டிக் கலைகூட்நல் கண்ட கருணைரூபிகளாகிய முனிவர் அதற்குத் தம்முள்ளமிரங்கி அப்பொன்னகரத்தின் அஷ்டதிசைகளிலும் புகுவாராயினர். இந்திரன் அவர்களைப் பின்றொடர்ந்து சமிதை தருப்பை முதலிய யாகோபகரணங்களையனுப்ப அம்முனிவர்கள் யாககுண்டந் திருத்தி, அக்கினி யெழுப்பி வேதமந்திரத்தால் ஓமஞ் செய்தார்கள். அவர்கள் செய்தன தீயனைச் செருக்குஞ் சற்கருமமேயாயினுஞ் சிவார்ச்சனை யினின்றுந் தவறினராதலின் அத்தோஷ விசேடத்தால் அவ்வவர்கள் யாககுண்டங்களினின்றும் மிகக்கொடிய பயங்கர ரூபிகளாய் பல்லோரையுந்துயர் செய்யும் வக்ர தந்தத்தையுஞ் செம்பங்கியையும் மலையன்ன தோளையும் பெற்ற வொவ்வோரசுரராக எழுவர் தோன்றினர். அவர்கள் அரக்தாசுரன் - அரக்தவீரன் - பஞ்சராவணர் எனப்படுவர். அவர்கடோன்றியாங்கே தவநிலை மேற்கொண்ட சப்தரிஷிகளை முதலிற்றுராத்துவா ராயினர். அதனால் அவர்கள் அசுரருக்கஞ்சி அவர்தம் கட்புலனுக் கெட்டப்படாத நெடுந்தூரந் தகன்றனர். அவ்வசுரர் துளசிமாலை தரித்த திருமால் முதலிய தேவர்களை யெதிர்த்து அவர்கள் சகிக்க முடியாதோட அவ்வவ ருலகுவரையில் துரத்திச்சென்று அவர்களை யடக்கியும் அவ்வுலகங்களைப் பாழ்படுத்தியும் போரி லெதிர்த்த தேவர்களைப் புடைத்துக் கொன்றும் உலகினைக்காற்றி லகப்பட்ட பஞ்சுபோலாக்கினர். தேவர்கள் யாவரும் இத்துயர் சகியாது ஒருசேரத் திருக்கைலாய கிரியை யடைந்து வெகுகாலம் காத்திருந்தனர். திருமால் பிரமன் முதலினோர் தவச்செயலி லிருந்தனர். பின்னர், சிவகடாட்சத்தால் சந்நிதி யெய்தி விடையத்தை விண்ணப்பிக்கச் சிவபெருமான் தமது வாமபாக

த்துள்ள பிராட்டியாரைத் திருக்கணேக்கஞ் செய்ய தேவிதிரிசூல மௌரியாகிச் சூலாயுதமேந்திக்குண்டோதரனைத் துணைக்கொண்டு சிங்கவாகன மூர்ந்து அரத்தாசுரன் அரத்தவீரன் இவர்களைச் சங்கரித்தனள். [பஞ்சராவணர் வதம் பஞ்சராவணத்வம்சத்திற்காண்க] இவர்களோ டியற்றியபோரில் காளிகாதேவியும் சத்திகணங்களும் பெரும்போ ரியற்றி அவ்வசுரச்சேனை முழுவதையும் அழித்தார்கள்.

---

## நாற்பத்தோன்றாவது

# மகிடாசுரசங்காரம்.

---

திருமாலும் பிரமனும் தம்மிற் பகைத்துப் போர் செய்யப் படைத்தனுப்பிய புலிமுகன் மகிடனென்னு மிருவருஞ் செய்த துன்பைச் சகியாத தேவர் வேண்டிக்கோளால் அம்பிகையால் அனுப்பப்பட்ட துர்க்காதேவி புலிமுகனைச் சங்கரித்தனள். [இவ்வரலாற்றினை வியாக்கிர முகாசுர சங்காரத்தினிற் காண்க.]

புலிமுகனைப் பொருது கொன்ற துர்க்காதேவி மகிடாசுரனை யெதிர்க்க, அவன் வலிபொருந்திய கொம்பையும் தீச்சிந்தும் விழியையு முடையவனாய்ப் போர்க்கோலங் கொண்டு முன்னிற்க, தேவி சினமிகுந்து வெவ்விய ஆயுதங்களைச் செலுத்தினள். மகிடாசுரனும் பலமான ஆயுதங்களைக் கொண்டு பெரும்போர் புரிந்தனன். ஆகாயத்தில் தேவர்கள் கூட்டங்கொண்டு இவர்கள் யுத்தத்தை வேடிக்கை பார்த்திருந்தார்கள். இப்போர் நெடுநாள் வரையில் நிகழ்ந்தது. அப்படி யிருக்கையில், ஆலகால விஷம்போல வெளிவந்துள்ள மகிஷன் ஒருபெருங்குர லெழுப்பினன். அதனால்



அண்ட கடாகம் பிளவுபட்டது. ஆகாய வீதியிலுள்ள தேவர் சித்தர் முதலானோருந் திகைத்தனர். நக்ஷத்திரங்க ளுதிர்ந்தன. பூமியிலை குலுங்கியது. பிராணிகள் செவிடுபட்டன. மகிஷன் புரிந்த அட்டகாசத்தைக் கண்டு கடுங்கோப மெய்திய துர்க்காதேவி முகத்தில் அக்கினிச் சுவாலை அதிகரிக்கவும், கட்கடைகளில் தீப்பொறிகள் சிதறவும் ஹுங்காரஞ் செய்து பற்களை நெறு நெறெனக் கடித்து. கூர்மை தங்கிய வாட்படை யொன்றினாலே அம்மகிஷன் தலையை வெட்டினன். கடல் போலப் பெருகிய உதிரவெள்ளத்தில் விழுந்த அத்தலையானது சீக்கிரத்தி லெழுந்து சென்று இடிபோல முழங்கி இணையில்லாச் சமரிழைத்தது. அப்பொழுது துர்க்கை தனக்குக் கொடுக்கப்பெற்ற சூலாயுதத்தை யெடுத்து சஞ்சரிக்கின்ற அந்தலையின் கொம்புகட்கிடையே குத்தியழுத்திக்கொண்டு அசுரனை மிதித்துக் கொண்டு யுத்தத்தை முடித்தனள். துர்க்கையின் பாதங்கள் ஸ்பரிசிக்கப்பட்ட மாத்திரமே அவ்வசுரன் மகிடத்தலை யொழிந்து திருவருளால் மூதறி வெய்திக் துதிப்பானாயினன்.

" ஓரெட்டிதழ் வட்டத் துள்ளாய சட்கோணம்
பாரித்த முக்கோண வட்டப் பராபரையே!
வாரிப் படுநஞ் சமுதாக்கும் வால்வளைக்கை
வேரிக் கரும்பே வித்தின்றி விளைமூலமே.

முச்செயலுங் காட்டி யவைபுரக்கு மூவரைத்
தனிச்செயலிற் காட்டி யவருளத்து மெட்டாயாற்
பச்சையிளங்குதலைக் கிள்ளாய் பரையேநின்
விச்சையினை யென்றால் விளைந்துணர வல்லாரார்.

என்றிப்பலப்பலவாறு துதிசெய்தமகிடா சுரன்பால் மனமிரங்கிய துர்க்காதேவி அவனுக்குத் திருவருள் பாலித்து, திருக்

கைலாய கிரியிலுள்ள சிவகணங்களில் ஒருவனுருகும்படி யநுக்கிரகித்துத் தென் கைலையை யெய்தினள். அதனால் திருமாலும் பிரமனும் தமக்கு மகிடாசுரன் புலிமுகா சுரனென்னு மிவர்களா லெய்திய துன்பமகன்று சுகமெய்தினர். உலகம் நன்னிலை யெய்தியது.

என்னப் பலவோ றெடுத்தேந்தி நின்றிரந்து
பன்னிப் பரசுதலு நன்கருணை பாலித்தாள்
பொன்னெனுத் திலங்கு சடையோர் புகழ்கணத்து
மன்னிப் புகப்பணித்தா டென்கயிலை மன்னினள்.

---

நாற்பத்திரண்டாவது

## வியாக்கிர முகாசுரசங்காரம்.

---

ஒரு காலத்தில் திருமாலும் பிரமனும் ஒருவரி லொருவர் மேம்பட்டவரென் றிறுமாந்து பெரும்போர் புரிந்தனர். அப்பொழுது வேதங்களும் பிரணவமும் அசரீரியும் நீங்கள் சமானஸ்தர்கள் போர் புரியவேண்டா மென்று பலவாறு கூறவுங் கேளாராய்ப் பலவகை அஸ்திரங்களைப்பிரயோகித்தும் பெரும்போர் செய்தும் ஒருவரை யொருவர் வெல்லமாட்டாதவராய், இனி நம் மாயா வல்லமையால் வெல்லலாகு மென்று மயங்கிக் கருதினர். அப்படி யோசித்த அடைவே திசைமுகன் மகிடாசுரனைப் படைத்துத் திருமால் மீது போருக்கும் போக்கினன். அதுகண்டு திருமாலின் கருத்துப்படி அவர் கிளைவினின்றுதித்த புலிமுகன் மின்னலைப்போல ஒளி வீசிப் பிறைச்சந்திரன் போன்று வளைந்



துள்ள பற்களையும் தீயைச் சிந்தும் விழிகளையும் அநேக உயிர்களைக் கொல்லும் உசுவாச நிசுவாசங்களையு முடையவன். பிரமனாலனுப்பப்பட்ட மகிடாசுரன் திருமாலைத் தொடர்ந்து பலநாளுந் துன்பு செய்து வருத்தினன். புலிமுகாசுரன் பிரமனை இம்சித்தனன. இவ்விரண்டசுரர் பெருஞ்சேனையும் தேவர் முனிவர்முதலானோரைத் துன்பு புரிந்தன. உலகம் நிலைகுலைந்தது. கடல்பெருகியது. அண்ட முகடதிர்ந்தது. குலகிரிகள் நடுங்கின. திசைகள் செவிடுபட்டன. உலகமெங்கும் எண்ணிறந்த உற்பாதங்களுண்டாயின. அச்சமயத்தில் மகிடாசுரனுக்குச் சமமாக யுத்தஞ்செய்ய வாற்றாது திருமால் மறைந்தனர். புலிமுகாசுரனுடன் போர் செய்யவியலாது பிரமனும் அஞ்சியோடிப் போயினன். உலகமுழுவதும் துன்பெய்தின. தேவர்கள் இதுகண்டு மனமயங்கி வருந்தித் திருக்கைலாய கிரியை யடைந்து பலகாலஞ் சிவார்ச்சனைபுரிந்து சிவபெருமானைத் தரிசித்துத் தங்கட்கு மகிடன் புலிமுகனாகிய இவர்களால் நிகழ்ந்த துன்பத்தை விண்ணப்பிக்க, சிவபெருமான் மாதேவியார் முகத்தை நோக்க அம்மையார் திருவருளால் ஆயுதங்களேந்திய பதினெட்டுக் கைகளோடு துர்க்காதேவி யவதரித்து எனக்குரிய கட்டளை யாதெனவினவ, அவளுக்கு மகாகோபமுடையசிங்கவாகனமும்சூலப்படையு முதவிப்புலிமுகன்மகிடனென்னு மிருவரையுஞ் சங்கரித்து வருகவெனக் கட்டளை தந்தனர்.

"வெம்பு லிக்கெது முகத்தினன் மகிடவெந் தொழிற்கொலையரக்
கும்பரோடரி மலர்ச்சரோருக னுலைந்து தம்பத மிழந்தனர் [கனு
செம்பு னற்படவவர்ச செருத்திவர் சிறக்கு மப்பத மளித்தியென்
றம்பி கைத்திரு வாய்ம லர்ந்திட வக்க ணத்தழல் விழித்தனள்.


அண்ட கோளகை யதிர்ந்திடப்புவி யதிர்ந்திடப்புலி நிசாசரன்
மண்டு வெஞ்சமர் முகத்து நின்றமர் மலைந்து ருவழி மடித்தனள்.

அக்கட்டளை யேற்ற துர்க்காதேவி அன்னையையும் அப்பனை யையும் பணிந்து விடைகொண்டு பெருஞ் சேனையோடு அவ்வசுரனி ருக்கு மிடத்தெய்தி, புலிமுகனைக் கண்டு, பலவாறு போர் செய்து இறுதியில் சிங்கவாகனத்தோடு அவன்மீது பாய்ந்து சூலப்படை யாற் குத்தி அவனுயிரைத் தொலைத்தனள். பின்னர் மகிடனையுஞ் சங்கரித்தனள். [இதன் விரிவு மகிஷாசுரியிற் காண்க.] திருமா லும்பிரமனும் உலகமும் சுக மெய்தின

## நாற்பத்து மூன்றாவது.

# ருருசங்காரம்.

மனோகரமான ரூபத்தையும் காந்திபொருந்திய தேகத்தையும் பிடியானை போன்ற கடைவாயையும் பூர்ணசந்திரன் போன்ற முக மண்டலத்தையு முடைய உலகமாதாவாகிய தாக்ஷாயணிதேவியை பொதியமலையில் ஒருகாலத்தில் ருருவென்றும் அசுரன் கண்டு மதியின்றி மன்மதபாணங்கள் மார்பிற்பட் டுருவப்பெற்று, அநேக கோடி வருஷங்கள் சூரியகிரணங்களாற் சுடப்பட்டதேக முடைய வன் போன்றவனாய், ஆகாரதேகாபிமானங்கள் நீங்கி நிச்சலமான தவம்புரிகையில், பிரமன் பிரசன்னமாகி, யாதுவிரும்பி இத்தகை ய கொடுந்தவம்புரிக்கின்றனை யெனவினவ ருரு தியான யோகத் தால் அரைக்கண் மூடிக்கொண்டு நின்று, 'ஸ்வாமீ! பேரழகியான தாக்ஷாயணி எனக்கு மனைவியாயிருக்கவும், சிவன் என்னிடத்தில் விருப்பமாயிருக்கவும், மாதர்காரணமாக எனக்கு மரணம்வராம லும், மங்கைப்பருவஸ்திரீகள் அநேகர் எனக்கு மனைவியராயிருக்



கவும். என்னைப் பகைப்பவர்கள் மகாதைரிய காம்பீர்யவான் களாயிருப்பினும் சாமானியர்களாய்ப் பலஹீனர்களாகவும். வரங் கொடுத்தருள வேண்டுமெனக்கேட்கபிரமதேவர் புன்னகைசெய்து சொல்லுகின்றார்.

அடா துர்ப்புத்தீ நீ விரும்பியவரங்கள் திரிலோகத்திலும் அசாத்தியமானவை இவற்றுட் சிலவற்றைப் பெருங்கஷ்டத்துடன் பெறினும் பெறக்கூடும் ஆயினும் ஸர்வைஸ்வரியாகிய தாக்ஷாயணியெனும் உமாபிராட்டி ஒருகாலத்திலும் உனக்குமனைவியாகக் கிடைப்பாளென்பது கிடையவேகிடையாது. பாபீ! சிவபெருமானும் உனக்கு அடங்கியிருக்கப் போகிறதுமில்லை. தாக்ஷாயணி உனக்குமனைவியாகும் பக்ஷத்தில் ஸர்வேசுரனாகிய சிவபெருமான் மற்றொரு ஸ்திரீயைத் தேடிக்கொள்ளவேண்டுவது ஆவசியகம் அப்பெருமானே அம்மகாதேவியைமனைவியாகக் கொண்டமையின் அத்தேவிக்குச் சுகோதய நிமித்தமாய்த் தமது ஜடாடவியில் கங்கையையும் சந்திரனையும் அணிந்துக்கொண்டு அவ்வம்மைக்கு உபசாரஞ் செய்யு நிமித்தமாக எண்ணிறந்த மார்க்கங்களை ஏற்படுத்தியுள்ளார். அவ்வகையபெருமாட்டி உனக்குச் சாத்தியமானவளல்லள். நீ திவ்யமான அப்சரஸ்திரீகளோடு கிரீடைசெய்து கொண்டு உன்பிராணனைகாத்துக் கொள் நான் கூறியவார்த்தைகள் உனக்கு இதமாகத் தோற்றாத பக்ஷத்தில் நீயே அம்மகாதேவியால் நேரிற் சென்று உன் விருப்பத்தைப் பிரார்த்தனை செய்து விண்ணப்பஞ் செய்துகொள். அப்பொழுதே காளராத்திரியாகிய அத்தாக்ஷாயணியும் திரிபுராரியாகிய அச்சிவபிரானும் உன்னைச்சங்கரித்து விடுவார்களென்று விளக்கிப் பிரமதேவர் அந்தர்த்தானமாயினர்.

பிரமதேவர் கூறிய சத்போதனையைக் கைக்கொள்ளாத ருரு உடனே பொதியமலைக்குப் போய் அங்கேபரமேசுவரனைநோக்கிப் பெருந்தவம் புரிந்தனன். அத்தவ விசேஷத்தாற் றோன்றிய அக்

கினியானது மலயாசலத்தைத் தகிக்கத் தொடங்குகையில் சிவ பெருமான் அவன் தபோக்கினிக்குப் பயந்தார்போலத் தாக்ஷா யணியை யுடன்கொண்டு பொதியத்தை விட்டு வேற்றிடஞ் செல் லத் தொடங்கினர். தேவி அதுகண்டு ஸ்வாமி யாதுகாரணமாக இவ்விடம் விட்டுச் செல்லுகிறீர்? தாங்கள் இவ்வக்கினியையடக்க லாகாதா? அடக்காவிடினும் வேற்றிடஞ்செல்வானேன்? அதன் உண்மையை யுரைக்க வேண்டுமெனக் கேட்க சிவபெருமான் எ பிரியநாயகி! ருருவென்னும் அசுரனொருவன் உன்னைமனைவி யாகப் பெறவிரும்பி உக்கிரமான தவம்புரிகின்றான். அவனது தபோக்கினி உலகங்களைக் கொளுத்துகின்றது. நான் அதைநிவார ணஞ் செய்யவலியுடையேனல்லேன். உனக்குச் சக்தியிருந்தால் திரிலோகங்களையுங் காத்து ஆத்மரக்ஷணஞ் செய்து கொள்ளலாம். என்மேற்கோபம் வேண்டாம். உனக்கோர் நமஸ்காரம். நீவேற்றுரு வேற்று அவனிடஞ் சென்று அவன் தவத்தையழிக்கவேண்டுமெனக் கூறினர்.

பார்வதிதேவி அவ்வார்த்தைகளாற் பெருங்கோபமெய்தி உக் கிரவடிவேற்று அப்பொதிய மலையின் வனத்திலே ஒருயானையின் மத்தகத்தைக் கைமுஷ்டியாலுடைத்து அதனையுரித்து அதன் சரு மத்தைப் போர்த்துக்கொண்டு பலயானைகளைக் கொன்று புசித்து உடல்முழுதும் உதிரமயமாயுள்ள சிங்கமொன்றனைக்கண்டு விநோத மார்க்கமாகச் சங்கரித்து அதன்றோலையுடையாக வணி ந்து. அச்சிங்கத்தின் உதிரத்தைத்தலை மயிர்முழுதுந் தடவிச் செவ க்கச் செய்துகொண்டு பெருவயிற்றுடன் விகாரரூபமுற்று அண்ட முகடு பிளவுறும்படி அநேக ஹுங்காரங்கள் செய்துகொண்டு. அவ்வசுரன் தவம்புரியுங் குகையையணுகி பாதங்களாலுங்கை முஷ்டிகளாலும் அக்குகையை யுடைத்திருந்த கதவையடைத் தெறிந்து ஹ ஹ ஹ ஹ ஹ ஹ ஹ வென்றட்டகாசமாகச்,சிரித்து

பிரளய கால மேகம்போற் கர்ச்சித்து அரைக்கண் பார்வையிலிருக்கும்அவ்வசுரனைக்கண்டு. இதோ நீ கோரியிருந்த தாக்ஷாயணியாகிய யான் வந்திருக்கிறேன். என்ன செய்யப்போகின்றாய். இதற்காக என இன்னுங்கஷ்டமான தவஞ்செய்யவேண்டும் ? உன் மனதிலுள்ள கோரிக்கையைச் சொல்லுக ? நீ தவம்புரிந்து அநுபவிக்கக் கருதிய கோரிக்கைகளை இப்பொழுதே சுலபமாக அநுபவிக்கலாமென்று சொல்லிக்கொண்டிருக்குங் கோரப்பல்லோடு கூடிய மகாபயங்கர சுரூபமுடைய தாக்ஷாயணியை ருருபார்த்து மிக்க பயமெய்தி உடல் நடுக்கத்துடன் நிலமிசைவிழுந்து மீண்டுந்தைரியங்கொண்டெழுந்து நீ தாக்ஷாயணியன்று. உண்மையையுரைக்கவேண்டும் நீ காளராத்திரியே தாக்ஷாயணியோ மிகரம்மியமான தேகத்தையும் பூர்ணமாசந்திரன் போன்ற முகத்தையும் சௌந்தரியத்தையும் பூரித்தகுசமண்டலங்களையும் பெற்றவள். நீயோ கோரரூபி நீ யவளல்லை. யானே கோபாக்னியால் திரிலோகங்களையும் எரித்து விடுவேன். நீ யிங்கிருந்தால் எரிந்துபோவாய். உயிர்பிழைத்துடனே யோடிப்போ அல்லாவிடில் இப்பொழுதே உன்னையமபுரத்திற் கனுப்பிவிடுவேன் என்று கதாயுதத்தால் பார்வதிதேவியைபடிக்க அம்பிகைகடுங்கோபமெய்தி கைமுஷ்டியாலடிக்க ருரு அஸ்திரசாஸ்திரங்களாலடிக்க. மாதேவி மலைப்பாறைகளாலும் மரங்களாலும் அநேக ஜலாக்கிநிருஷங்களாலும் விஷசர்ப்பங்களாலும் தந்தங்களாலும் நகங்களாலும் அடிக்க. குரூரனாகிய ருருவின் உடலினின்று சிந்தும் உதிரத்துளிகளொவ்வொன்றினின்றும் ஒவ்வொரு ருருவடிவாக விருத்தியாகி. பேருருவுடையவரும் சிற்றுருவுடையவரும் கோரவுருவுடையவரும விகாரவுருவுடையவரும் சமானசகிதமான பராக்கிரமமுடையவருமாக மாயையாலுதித்தனர்.

எண்ணிறந்த ருருவடிவேற்ற ராக்ஷஸத்தொகுதியைத்தேவியார் கண்டு. அபாரமான சத்துருசேனையைப் பக்ஷிக்கத்தக்கவல்ல

மையுடைய மகாவிகிர்த கோர ரூபங்களை வகித்த சண்டிகா சைநி யத்தைச் சிருஷ்டிசெய்ய அச்சண்டிகாசைநியம் ராக்ஷஸத் தொகுதி யைக்கொன்று ஒருதுளியுதிரமுங்கீழே விழாமற் பருகிப் பிரமத் தனுகவிருக்கும் ருருவின் மாயையுமழித்தனர். பார்வதியும் அவ் வசுரருதிரத்தையருந்தி அவனுக்கு எஞ்சிநின்ற மாயையையும் விலக்கிமீண்டும் அற்புதக்கணக்கான மாயைவகித்த ருருவுடன் போர் புரிந்தனள். அப்பொழுது ருருபார்வதியைப் பிரமிக்கச் செய்யவேண்டு மென்னுங் கருத்தால் வாயுவேகத்துடன் திரி லோகங்களிலுஞ் சஞ்சரித்துப் போவதும் வருவதுமதெரியாதுல வுகையில் தேவியார் ஸ்தூலாகாரமாய்ச் சிறிது நின்று பிரளயகால சூரியர்போன்று ஆச்சரியமும் பராக்கிரமமுடையகணக்கிடப்படாத பெரியதோர் விசுவரூபமெடுத்து நின்றனர். இச்சண்டிகா நாயகி யின் உருவப்பிரமாணங்கூறச் சதுர்முகப்பிரமனுக்குஞ் சாத்தி யப்படாது.இந்தப்பிரமாண்டம் ஒருஸ்வல்பவஸ்து வாயிருந்தது. பிரளயகாலருத்திரனும் சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியத்தலைவர் களும் அணுவளவாயிருந்தனர்.

இவ்வகையாக ஜகதீஸ்வரிவிஸ்வரூபங் கொண்டிருக்கையில் ருருவென்பவன் காலெடுத்து வைக்கவும் இடமில்லாமல் அப் பொழுதும் தன் மூடத்தனத்தால் பராக்கிரமங்காட்டக் கருதிநிற்க மகாதேவி அவன் கைகளைப் பிடித்து வஜ்ராயுதம் போற் பிரகாசிக் கும் தன் கைந்நகத்தால் அவன் சிரசைக்கிள்ளி யெறிந்து அவன் தோலையுரித்து அதனைத்தன்னுடலின் மேற்போர்த்துக் கொண்டு அவனுடலைக் கைமுஷ்டிகளாற் குத்தி அதினின்ற கொப்பளித்த உதிரத்தைப் பருகி, அவன்மாமிசத்தையும் புசித்துக் களித்து, அவன் தலையை மாமிச நீக்கிக்கபாலமாக்கிக் கரத்திற்றாங்கி அநேக பிரமதகணங்களாற் சேவிக்கப்பட்டு ஷட்குணைசுவரிய சம்பன்னராக விளங்குஞ் சிவபெருமான் எழுந்தருளியுள்ள விடத்திற்குச் செல்லு

கையில், கபாலமாலிகாபரணராகிய சிவபெருமான் தாக்ஷாயணி யைக்கண்டு மனங்களித்து அநேகவகை உபசார வார்த்தைகள் கூறினர். அப்பொழுது தாக்ஷாயணி தன்கரத்திற்றாங்கியருருவின் கபாலத்திலிருந்த அவனுதிரத்தில் மகாதேவிபானஞ் செய்து மிகுந்ததிற் சிறிது தானும் பருகவிரும்பினமையின் அதனைக்கொடு க்கவாங்கிப் பானஞ்செய்தனர். யானைத்தோலும் சிங்கத்தோலும் ருருவின் தோலுமணிந்து உதிரத்தால் நனைந்துவிளங்குந்தேவியைச் சிவபெருமான் அணைத்துக் கொண்டனர். பின்னர் உமாதேவியார் விநோதார்த்தமாகச் சிங்கத்தோலையும் யானைத்தோலையும் சந் தோஷ பூர்வமாகச் சிவபெருமானுக்குக் கொடுக்க, அவர் அவ்விரு சருமங்களையும் பெற்று சிங்கத்தோலையிடையிற் கட்டி யானைத் தோலைமேலே போர்த்துக் கொண்டனர். பார்வதி தேவிதன் சத் துருவான ருருவின்தோலைப்போர்த்துக் கொண்டு சந்தோஷத் துடன் தோழிமாரோடிருந்தனள். சுராசுரர்கள் ருஷிகள் கின்ன ரர் கிம்புருஷர் பிரமன் திருமால் முதலிய யாவரும் லோகசம்ரக்ஷ ணநிமித்தமாக ருருவென்னும் அசுரனைச் சங்கரித்து இவ்வகைய சண்டிகாரூபத்தைத் தரித்தீர்கள். பயங்கரமான இவ்வுருவத்தை இனி நீக்கவேண்டும். சரத்கால சந்திரன் போன்ற வடிவோடு விளங்கவேண்டுமென்று பலவாறு பிரார்த்தித்துப் பூஜித்தமை யின் பார்வதிபரமேசுவரரிருவரும் திவ்விய சுந்தரவடிவம் வகித் துச் சந்தோஷித்திருந்தனர். தேவர்களும் சந்தோஷித்து மலர்மாரி சொரிந்து வாழ்த்தினார்கள்.

நாற்பத்து நான்காவது.

# சோமநந்திக் கனுக்கிரஹம்.

---

முன்னொருகாலத்தில் மந்திர கிரியானது சிவபெருமான் பிரா ட்டியாரோடும் தன்பால் வசித்திருக்கவேண்டுமென்று கடுந்தவம் புரிந்தமையின் சிவபெருமானும் பிராட்டியாரும் அச்சைலத்தின் கண்ணே சிலகாலந்தங்கியிருந்தனர். அங்ஙனம் நிகழ்கையில் அசு ரார்துயர் அவனியில் அதிகப்பட்டமையின், பிரமதேவர் இறைவ ரையணுகி எந்தையே! அல்லல்புரியும் அசுரார் துயரையகற்ற அம்மையார் திருமேனியினின்றோர் சத்தியைத் தந்தருளவேண்டு மெனவேண்ட, சிவபிரான் அங்ஙனமே புரிதுமென்று ஆரணனை யனுப்பிவிட்டு கண்ணுதல் விநோதார்த்தமாக விமலையைநோக்கி. ஏகாளீ! [கருநிறமுடையாளே] வருகவெனவிளிப்ப தேவியினை மெய்தி, மன்மதனைபொரித்தருளிய தேவரீருக்குக் காமமிகுந்து இவ்வாறுரைப்பது யாதுகாரணம்?

புகலருங் கவினொடு பொலிந்து பொற்புடை
வகைநலப் பேரணி வயங்கப் பூணினு
நகைமுகக் கணவனுண் ணயக்கி லாளெனின்
மகளிருட் பதடியம் மடந்தை யென்பவே.


ஆதலால் இக்கரியமேனியில் தேவரீருக்குத் திருவுள்ள மில்லையாயின், பெருந்தவம்புரிந்து செய்யமேனியையெய்து வேனென்றெழுந்து செல்ல, சிவபெருமான் பெண்ணே! விநோத மாகக்கூறியதற்கு வெகுளல் வேண்டாமெனப் பலவாறு தடுப்ப வும், இறைவிசம்மதியாளாய் இமாசலமெய்தித் தவஞ்செய்யத்



தொடங்கினள். அக்காலத்தில் அம்மோர் புலியானது பெருங்கோ பத்தோடும் கைகால்களியக்க மின்றியுமிருக்க, அம்மைமாதேவி கண்டு திருவுள்ளமுகலிய அதுமுன்பலமகனாய் பிணிநீங்கிப் பேரு ணர் வெய்தி பண்டேசுவரன் பாரிசை டென்றறிந்து வந்த எனது பாக்கியம் நன்றென்று நமஸ்கரித்திருந்தது.

அக்காலத்தில் பிரமதேவர் அம்பிகையை யடிபணிந்து, அன் னாய்! அவனி முழுவதும் அசுரர்கள் அதிகரித்திருக்கின்றனர். அங்ஙனமே அம்பிகையே! நீங்களிர அநுக்கிரகம் புரிந்து கொண்டிய கமாதல் அறிகிலேன் எனவுரைக்க, அம்மாதேவி யான் இக்கருமத் தைநன்று வென்னிடமிருப்பு இயற்றுவேனன். என்கருத்தையாது எனக்கூற அன்னவாகனன் அகிலமாதாவின் அடிமலர் பணிவி, எம்பெருமாட்டியே! இதற்காகவா வதரிசெய்யவேணும்? இவ் வடிவங்கன்று கௌரியென்னும் பெயரைப் புனைந்து கௌரிமெய்துக. அத்தேவிக்கிய கரியமெய்யினின்று சர்வவல்லப மெய்திய காளராத் திரியைப் படைத்து அசுரர்களை யெல்லாம் நாசஞ்செய்து அம ரர்களுக்குற்ற துன்பினையகற்றியருள்க வென்று பிரார்த்திக்க, தேவியுடனே அக்காருருவகன்று பொன்னுருவெய்தினள். அந்த கருப்புத்தோல்களும் அலர்மாரிசொரிந்து புநந்தக் கூத்தாடிப்பாடினர் கள். அம்பிகையகற்றிய சட்டைப்போன்ற அக்காருரு காளராத்திரி யெனும், சத்தியாக வாகிசசர் வேசுவரியைத் தாளிணை பணிய, மாதேவி அவளைநோக்கி நீ பிரமன் கட்டளைப்படி கொடிய அசுரர் களைச் சங்கரித்துத் தேவமுனிவர் கட்குதவியாயிரு வென்கட் டளையிட்டனள். உடனே பிரமதேவர் அவளுக்கொருசிங்கவாகனம் படைத்தளித்து அசுரர்களைப் போரில் வெல்லுக வெனவரமளிப்ப அவளும் [illegible] கன மூர்ந்து, விந்தமலையெய்தி அங் கிருந்த [illegible], பின்னர் எண்ணிறந்த தீயோரையும் வதைத்[illegible]

மகாதேவி பிரமனைநோக்கி இக்கொடிய புலியானது எம்மிடத்திலே பொருந்தியுள்ளதெனக்கூற. பிரமதேவன் தாயே! ஓரசுரன் இப்புலி யுருவாக வந்துள்ளான். பாம்பின்வாயில் அமிர்தைச் சொரிவது போல இவ்வபாத்திரத்திற் கருள்புரிதல் தருமமாகுமோ என. அம்பிகை அப்படி அரக்கனானுமென்ன மற்றவனானுமென்ன எம்பாதம் வணங்கிநின்றது எனக்கூறவும். பிரமன் திருவுள்ளப்படி புரிகவென்றகன்றனன். பின்னர் பரமேசுவரி தன் கணத்தவர்களாகிய மங்கையர் குழுவோடும் புலியோடும் மந்தரகிரியையெய்தினள். உடனே நந்திமுதலிய சிவகணத்தவர்களும் ஏனையோரும் தன்னைவணங்கச் சென்று சிவபெருமான் சந்நிதியெய்த. பரமேசுவரன் மனமகிழ்வுமிக்கு கௌரீ! வருகவென்று ஆலிங்கனஞ்செய்து தமது துடைமிசையமர்த்தினர். பின்னர் தேவியின் திருமுகத்தை நோக்கி மனக்கோபமகன்றதா? நம்முள்ளே நாம் மாறுபட்டால் உலகமுழுவதும் அழிந்துவிடும். நான் சூரியன் வடிவம். நீயோ சந்திரன்வடிவம். நீ வித்தை நான் அறிவு நீயென்னைப் பிரிந்தால் யான் ஈசுவரனென்று சொல்லத்தக்கவனோ? நீயென்னைப்பிரிய தக்கவளல்லள். தேவர்கள் காரியம் சித்தியெய்தும்படி நான் காளியென்று கூறியது நன்மையைப் பயந்தது எனக்கூறினர். அப்பொழுது மாதேவியின் தவஞ்செய்கையில். இப்புலியானது என்னை வணங்கிக்கொண்டு உச்சிவனார்த்தமாக என்னிடத்திலேயே தங்கியிருந்தது. எனக்குக் காவல் புரிந்து. என்பால் அன்புவைத்தது. இது கணநாதரில் ஒருவனாகித் தாவள்யமான திருவெண்ணீறணிந்த நமது நந்திதேவரோடு எனது அந்தப்புரங்காக்கும்படி யருளவேண்டுமென விரும்புகின்றேன். எனக்கூறியவளவில், சிவபெருமான் அதற்கிணங்கி ஆனந்த மெய்தியருள்புரிய, அப்புலியானது இரத்தின கஞ்சுகமணிந்து ஒளிவீசுகின்ற ஒரு பொற்பிரம்பேந்தி வாட்படை தாங்கி ஆயாத நித்தியத் தத்துவத்தையடைந்து, திருநந்தி தேவருடன்



சோமநந்தி யென்னும் பெயரால் யாவரும் பணியச் சந்தோஷித்துத் திருவாயில்காக்குந் தலைமை யெய்தி விளங்கிற்று.

---

நாற்பத்தைந்தாவது

## அமரர் மயக்கை யகற்றியது.

---

அநேக காலங்கட்கு முன்னர், அதிதிமைந்தர்களாகிய அமரருக்குந் திதிமைந்தர்களாகிய அசுரருக்கும் பெரும்பகை யுண்டாகி ஒருவரையொருவர் பகைத்து எண்ணில் காலம் கடுமையாகிய யுத்தம் புரிந்தனர். அவ்யுத்தத்தில் தானவர் வென்றனர். அவ்வமயத்தில் ஆகாயவாணியாய் சிவபெருமானுடனிருந்த உமாதேவியார் திருவுள்ளக் கருத்தின்படி இமையவர்க்கு ஆற்றலுண்டாகினமையின் அமரர்கள் அமர்செய்து எஞ்சினோரைத் துரத்தி வெற்றிமாலையணிந்து ஜயபேரி முழக்கிக்கொண்டு தெய்வசபையை யடைந்து போர்வென்ற இறுமாப்போடுற்றவர்களானமையின். இந்திரன் அகங்கரித்து ஆ! ஆ! எனதாண்மைத்திறத்தை யாவர் எடுத்துச்சொல்ல வல்லவரென்றான். அதுகேட்ட அக்கினிதேவன் என் ஆண்மைக்கு நிகராமா? என்றான். அதனைக்கேட்ட இயமன் அக்கினியைப்பார்த்து என்வல்லமைபோலாமா? என்றான். இதுபோலவே நிருதி அவ்வியமனையும். அந்நிருதியை வருணனும். அவனை வாயுவும். அவ்வாயுவைக் குபேரனும், குபேரனை ஈசானனும். ஈசானனைப்பிரமனும். பிரமனை விஷ்ணுவுமாக ஒருவரையொருவரிகழ்ந்து பேசித்தாந் தாம் சூரரென்று கருக்கிச் செருச்செய்யத் தொடங்குவதை மாதேவி கண்டு மனம் பொருது அக்கலகத்தைத் தவிர்க்கும்படி சிவபெருமானை வேண்ட

சிவபெருமான் அங்ஙனமே புரியத் திருவுள்ளங்கொண்டு ஓரியக் கவடி வோடாங்கடைந்து ஒருதுரும்பையவர்கண் முன்னேநட்டு இறுமாந்துலாவ, பிரமாதிதேவர்கள் அதனைக் கண்டு நீசெய்வது யாதென வினவ, நான் யாவனாயினுமாகுக. உங்கள் வலிமையை யான் விடுகின்றேன். இந்நாள் துரும்பைத் துண்செய்பவன் யாவனோ அவனே அசுரர்களை வென்றவீரன் வனெனக்கூற யகடின வார்த்தையைக் கேட்டவுடன் இந்திரன் தன் வச்சிராயு யதத்தை வீசி வீணாயினன். அங்ஙனமே ஏனையதிக்குப்பாலகரும் தங்கள் முழுவல்லபத்தோடு முயன்றும் அதனை யசைக்கமுடியா தகன்றனர். அதுகண்ட பிரமனும் விஷ்ணுவும் தங்கள் ஆயுதங் களைப் பிரயோகிக்க அவை பயன்படாதன வாகிக் கூர்மழுங்கின. அதனால் அச்சமெய்திய அமரர்கள் அவ்வியக்கனை நோக்கி நீயா வன் இயம்புகவென, உடனே அவ்வடி வேற்ற சிவபெருமான் மறைந்தருளினர். தேவர்கள் ஒன்றுந்தெரியாமல் மதிமயங்கிப் பிரமித்து நின்றார்கள். அப்பொழுது மலைமடந்தையாகிய மகேச் சுவரி அவர்கட்கு மயக்ககற்றி மதியூட்டத்திரு வுள்ளங் கொண்டு காட்சி தந்தனர்.

எதிர்காண நின்ற கருணைப் பிராட்டி யிருதாள் பழிச்சி யிமை யோர், முதிர்காதல் கொண்டு வழிபட்டு வண்கை முடிமீது கூப்பி யுலகம், பதினாலு மீன்ற முதல்வீ! இயக்கர் பதியா யினோந்த வவன் யார், மதியேமெ மக்கு மொழிகென்றிரப்ப மலைவல்லி யின்ன புக லும்.

எவன்வாணி கேள்வன் முதலோர் பதங்க ணிலைபேறு செய் யுமிறைவன். எவனைப் பொருட்கு மாதார மாகி யெவருந் தொழு படுபவன், எவன்முற்று மாக்கி நிலைசெய்து போக்கி யறிஞர்க் கினிக்கு மமுதன், அவனென்று காண்மி னிமையீரியக்க வடிவா கிவந்த வழகன்.

எவனுக்கு முற்றும் வடிவங்க ளாகு மெவனுண்மை யாரு மறியார், எவனெங்கும் யாவு மறிவுற்று நிற்ப னெவனு ணடக்கு முலகம், எவனைத் துதிக்கு மறையீறு முற்று மெவனங் கலைக்கு மரியான், அவனென்று காண்மினிமையீ ரியக்க வடிவாகி வந்த வழகன்.

எவனும் மெண்ணி னெவனைப் பழிச்சி னெவனைக்க ருத்தி னிறுவின். எவனன்பர் சேவை புரியிற்ப வங்க ளிரிவுற்று முத்தி மருவும். எவனுண்மை யின்ப வறிவாகி நிற்ப ளெவனென் வலத்தி லுறைவான், அவனென்று காற்மி னிமையீ ரியக்க வடிவாகி வந்த வழகன்.

என்று கூறினண் மறைந்தன ளுலகமீன் றெடுத்தாள்
அன்று மாலயன றொடக்கமா மமரர்க ளெல்லாம்
நன்று நம்மறி விருந்தவா றென்றுள நாணிச்
சென்று சேர்ந்தனர் கச்சியந் திருநகர்த் தேத்து.

உம்பர்கள் உமாபிராட்டியார் உபய பாதங்களிற் சாஷ்டாங்கமாகப் பணிந்து பலவாறுபசரித்து. தாயே இயக்கவடிவுடன் இங்கெய்தி எங்கள் வல்லமையை யகற்றியவன் யாவன்? என உணர்த்தியருள வேண்டுமெனப் பிரார்த்திக்க, பெருமாட்டி பெரிதுங்கருணை துளும்பி அவ்வாறு புரிந்தவர் சிவபெருமானே யென்று குறிப்பானுணர்த்தி, இனி நீங்கள் கச்சி நகரெய்திச் சிவார்ச்சனை செய்து கடைத்தேறு திரென்று அந்தர்த்தான மாயினர் தேவர்கள் யாவரும் நம்மறி விருந்தவாறு நன்றாயிருந்த தென்று நாணெய்தியவர்களாய்த் திருக்காஞ்சி யெய்திச் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்துப் பலமானவலி யெய்தி அம்பிகை வாழ்த்தித் துதித்தார்கள்.

நாற்பத்தாறாவது


# வாணிநாஸாக்ரகண்டணம்.

---

பிரமன் மாநதகுமாரர்களி லொருவனாகிய தக்ஷப்பிரசாபதி தான் புரிந்ததபோபலத்தால் சர்வலோகமாதாவாகிய சாம்பவியே தாக்ஷயணியாகவளர்ந்துவர இறைவர்க்கு மணமுடிந்தபின்னர் சிவ பெருமான் தேவியோடு திருக்கயிலையடைந்ததுமன்றி மாமனென த்தன்னை மதித்திலரென வெகுண்டு மகமொன்றுசெய்து அதிற் சிவபெருமானுக்கு அவிகொடாது திருமாலுக்கே அதனைக் கொடுக் கக்கருதிநிற்கையில் ததீசிமுனிவர்முதலானோர் பலவாறதடுத்து மதி கூறியும் நந்திதேவரே ஆண்டெய்தி இறைவர்க்குரிய அவியை யென்முன்னீகவென ஆவியளிப்பனின்ற தக்ஷன் அவியளிக்கிலே னென்றனன். இதனால் ஈசன்வெகுண்டு தக்ஷயாகசங்கார நிமித்தம் வீரபத்திரரையும் காளிகாதேவியையும் படைத்துப்போருக்கு விடு ப்ப அவர்களோடு போருக்கெய்திய எண்ணில்லாக்கணங்கள் அவ் யாகத்தை யழிப்ப வீரபத்திரர் பெருந்தேவர்களையெல்லாம் தொ லைத்துத் தங்களையுந்தடிந்தனர். அவ்வமயத்தில் அவரோடிருந்த காளிகாதேவிபெரிதுஞ் சினமெய்தி தேவஸ்திரீகளையும் தக்கன் மனைவியையும் பல்வேறு வகையாகத்தண்டம் புரிந்து வருகையில் ஆங்குற்று அதிவிமரிசையாக வீற்றிருந்த சரசுவதியை அலறும்படி யோடிப்பற்றி மூக்குமுனையை யரிந்துவிடுத்தனள் பின்னர்யாவர் க்கும் சிவகடாக்ஷத்தால் வீரபத்திரக்கடவுள் பண்டையரிலைமை யெய்த்த அநுக்கிரகித்த அவசரத்தில் தமதுஅறப்பட்ட நாசிநுனியு ம்வளரப்பெற்று மலரோனோடு கூடிமகிழ்ந்து வசித்திருந்தனர்.

---





## நாற்பத்தேழாவது

# பிரமானுக்கிரகம்.

---

பிரமன்சொல்லுவது நாரதனே! பூர்வத்தில் ஒருஜலப்பிரளயத்தில் ஸ்தாவரஜங்கமங்களெல்லாம் நாசமெய்தினான் மட்டிருந்தேன். சூரியசந்திரர்களையும் விருக்ஷங்களையும் பர்வதங்களையும்கூடக்காணவில்லை. இம்மஹார்ணவமான நாம்யாரால் உண்டாக்கப்பட்டோம். நம்மை ரக்ஷிப்பவர்யார்? நம்மைஒடுக்கிக்கொள்பவர்யார்? பூமிதோன்றவில்லை. இவ்வெள்ளத்திற்கு ஆதாரம்யாது? நாம்வசிக்கும் பங்கஜமலரை ஆதாரமாகக்கொண்டுள்ளது? பங்கஜம் ஜலமும்சேறும்அதற்குமூலமு பூமியுமாகலின் நாம்பூமியைக்கண்டுபிடிப்பது அவசியமென்றுகருதி பல்லாண்டுகள் வெள்ளத்தைத் தாண்டியும் பூமியைக்காணமல் வருந்துகையில் தவஞ்செய்கவென்ற அசரீரியுண்டாக ஆயிரம்வருடம்தவம்செய்கையில் நீ சிருஷ்டிசெய் என்றொருவாக்குண்டாயது. அதுகேட்டயான் ஒன்றையுங்காணுமல் எப்படிச் சிருஷ்டிப்பதென்று மயங்குகையில், மகாபலவான்களாகியமதுகைடபர்கள் என்னையணுகியுத்த முகமாகப் பிடித்தார்கள். பின்னர்நான் தாமரையின் நாளத்தைப்பற்றிக்கொண்டு ஜலத்தில் இறங்கினேன். அங்கேபரமாத்மாவும் மேகவர்ணனுகியும் பீதாம்பரதாரியாகவும் சேஷசயனராகவும் பஞ்சாயுதபாணியாகவும் விளங்கிய திருமாலைக்கண்டு துயிலுணர்த்தும்படி தேவியைத்துதிசெய்தேன். திவ்வியதேஜஸ்வினியும் திவ்வியமங்களையுமாகிய தேவி ஆகாசத்தில்பிரகாசித்து விளங்கினள். திருமால்மதுகைடபர்களைச் சங்கரித்தனர்.


---

## நாற்பத்தேட்டாவது

# பிரம விஷ்ணுக்கனுக்கிரகம்.

---

அதன்பின்னர் நானும் திருமாலுமாகவிருக்கையில் எங்கிட்கிடையே உருத்திரமூர்த்திதோன்றினர். அப்பொழுது எங்கள்மூவரால்தரிசிக்கப்பட்டவளாய் நின்மாலையாய் மனோகளையாய் விளங்கிய மகாசத்தியானவள் சந்தோஷசித்தமுடைய எங்களைக் கிருபாநோக்கஞ்செய்து பிரமவிஷ்ணு ருத்திரர்களே அசுரர்கள்சங்கரிக்கப் படார்களன்றோ? இனிமுயற்சியுடையவர்களாய் சிருஷ்டிதிதிசங்காரங்களைச் செய்து உங்கள்பதவிகளில் சுகமாகவாழுங்கள்என்றமதுரவாசகத்தைக் கேட்டு அம்பா பரந்தபூமியேகாணப்படவில்லை. சலமயமாயுள்ளதே பிரஜைகளெங்கே படைப்பதெப்படி சிருஷ்டி செய்யவுஞ் சக்தியற்றவர்களாயிருக்கிறோமென்று சொல்லிக்கொண்டோம். அதுகேட்டுதேவி புன்னகைசெய்து திவ்வியகாந்தியோடுகூடிய விமானமொன்றை ஆகாயத்தினின்று வருவித்து எங்களை நோக்கி நீங்கள்மூவரும் நிர்பயமாய் இதிலுட்காருங்கள். சிலஅற்புதங்களைக் காட்டுகின்றேனென அப்படியே பகவதியைத் தியானித்து அவ்விமானத்தில் உட்கார்ந்தோம். தேவியின் சக்தியால் அது ஆகாயத்திற் கிளம்பி மனோவேகமாய் ஓரிடத்திற்சேர்ந்து அவ்விடத்தில்சலத்தைக்காணவில்லை. பரந்தபூமியும் பத்திரபுஷ்பபலங்களும் குயிலோசையும் பர்வதங்களும் உத்தியானவனங்களும் நதிநடபாவி கிணறு தடாகங்களும் மிருகங்களும் ஸ்திரீபுருஷர்களும் மாடமாளிகைகளும் பர்னசாலைகளும் பொருந்திய ரம்மியமான நகரத்தையும் அங்கேவேட்டையாடும் தேவசமானனாகிய ஓரரசனையுங் கண்டு ஜலத்தையன்றி யாதொன்றறியதைநாம் சுவர்க்கம்போன்ற இந்நகரத்தை எங்ஙனங் காணப்பெற்றோம். இதுயாரால்படைக்கப் பட்





டது என்னும் சந்தேகம் தோன்றியபோது முன் காட்சியளித்த தேவி மீண்டும் அந்தரத்தில் எங்கட்குட் காட்சியளித்தாள்தேவியை நாங்கள் காண்பதன்முன்னே அவ்விமானம் மேலேகிளம்பி ஒரு முகூர்த்தத்தில் அதிமனோகரமான மற்றோரிடஞ்சென்றது.

---

நாற்பத்தோன்பதாவது

# பிரமவிஷ்ணுக்களுக்கு இந்திராதி லோகங்காட்டியது.

---

அங்கே நந்தவனமொன்றும் அதில் பாரிஜாத மரநிழலில் ஒரு காமதேனுவும் அதனருகே நாலுகோடுகளுடைய ஐராவதமும். அங்கே ஆடல்பாடல் அபிநயநாட்டிய விசேடங்களால் கிரீடிக்கும்மேநகாதி அப்ஸரஸ்திரிசமூகம் மந்தாரவிருக்ஷத்தின் கீழ்ப்படிக்கொண்டு உரமிக்கும்பல யக்ஷ கந்தர்வ வித்தியாதரர்களும் அங்கேபுலோமசைசமேதனான இந்திரன் வருணன் குபேரன் இயமன் அக்கினி சூரியன் முதலிய தேவர்களுமிருக்கஆச்சரியமடைந்தோம், அப்பொழுது இந்திரன்போல மகாதீரனாகிய ஒரு அரசன்வெளிப்பட்டுமனிதர்வசிக்கும் பூமியில்நின்றனன். அவனையாரெனத்தெரிந்திலோம். அதன்முன்னர் எங்கள் விமானம் மகாவேகமாக மற்றோரிடஞ் சென்றது.

அங்குபிரமனுலகமும் பிரமசபையும் அச்சபையில்சமஸ்ததேவதைகளும் நமஸ்கரிக்கத்தக்கவனாயுள்ள பிரமனொருவனுமிருக்கக் கண்டோம். அவனைச்சூழ வேத வேதாங்கள் தெய்வவடிவுற்றிருந்தன. அப்பொழுது திருமாலும் உருத்திரனும் அவற்றைப் பார்த்து

அதிசயமெய்தி என்னைநோக்கி இச்சதுர்முகப்பிரமன் யார்? என இவர்யாரோ அறியேன் என்றுகூறி என்மனதில் நாமார் நமக்கு மேம்பட்ட இந்தஅரியரன்யார் இந்தப்பிரமனும் இவனுக்குமுன்னே கண்ட இந்திரனும் இருவரும் நமக்குத்தோன்றுகின்றனவே இது சித்தப்பிரமையோ உண்மையோ என்று சிந்தித்துக்கொண்டிருக்கையில் விமானம் வேறோரிடத்திற்குப் போயிற்று.

ஐம்பதாவது

## திரிமூர்த்திகட்கு வைகுண்டங்காட்டியது.

அது அநேகயக்ஷர்கள்வசிப்பதும்கிளிகுயில்முதலிய பக்ஷிகளொலிப்பதும் வீணைமிருதங்கமுதலிய வாத்தியங்களொலிப்பதும் சுகப்பிரதமும் மங்களகரமும் ரமணீயமுமான ஸ்ரீகயிலாயமாய்க் காணப்பட்டது. அச்சமயத்தில் திவ்வியமங்கள ஆலயத்தினின்றும் திரிநேத்திரம் பஞ்சமுகம் தசபுஜம் சந்திரசேகரம் வியாக்கிரசர்மாம்பரம் கஜசர்மோத்ரீயமுடையராய்ச் சம்புவெளிவந்தனர். அவரிருபக்கலில், மகாவீரர்களாகிய கஜானனஷடானனர்களும் பின்புறத்தில் நந்திதேவர்முதலிய பிரமதகணங்களும் ஜயகோஷத்தோடு வந்தனர். அந்தச்சங்கரனை நாங்கள் மூவருங்கண்டு ஆச்சரியமடைந்தோம். பின்னர் அங்குள்ள பராசக்தி அம்சபூதங்களான சக்திபேதங்களைக்கண்டு சமூசயித்தோம். உடனே எங்கள்விமானம் அப்புறஞ்சென்றது.

அவ்விடமோ வைகுண்டம்.மனதாலும் ஊகிக்கமுடியாத சம்பத்துகள் காணப்பட்டன. அங்கேவிமாத்திலிருந்த நாராயணனைக்





கண்டு வியந்தோம். அங்கிருந்த விஷ்ணு எழுந்து ஒருமகாமண்டபத்தின் முன்னேவந்தனர். காயாம்பூரிதமும் பீதாம்பர சதுர்புஜ திவ்வியாபரண கருடவாகனராராய் திருமகள்சாமரை யிரட்டும் திருமாலே நாங்கள் விமானத்திலிருந்து கண்டு இப்படியும் உண்டோ வென்றெண்ணுகையில், எங்கள் விமானம் திருப்பாற் கடலே யடைந்தது.

---

ஐம்பத்தோன்றுவது

# பிரமவிஷ்ணுக்கள் யோகநித்திரை தரிசித்தது.

---

அந்தகக்ஷீராப்தியினிடையே எங்களுக்கு அதிதூரத்தில் ஒரு த்வீபங்காணப்பட்டது. மந்தாரம் பாரிஜாதம் தாழை சண்பக முதலியவிருக்ஷங்கள் புஷ்ப கந்தங்களோடு சூழ்ந்துநிறையப்பெற்றுவண்டுகளின் ரீங்காரமும் குயிலோசையும் நீங்காதசோலே யொன்றும் அதற்கிடையே பரமாத்புதமும்மங்களசொரூபமும்ரமணீயமும்இரத்தினகசிதமுமாகி நாலுவகை[ஆஸ்தரணம்] மெத்தைகளால் அடுக்கப்பட்டதும் சித்திரிக்கப்பட்டதும் இந்திரதனுசுபோன்ற மேற்பட்டுடைத்தாய்ப் பலவித திரைச்சீலேகளோடு கூடிகோடிசூரியப் பிரகாசமாய் வர்ணித்துகூறமுடியாததாய் ஒருகட்டில் காணப்பட்டது. அதன்கண்மகாபூஜ்யையான பரதேவிவீற்றிருந்தனள் அந்தத்தேவியோ இரக்தவஸ்திரமும்சந்தனப்பூச்சும் சிவந்தவிழிகளும்கோடிமின்னல் மின்னுவதுபோல் பளபளப்போடு கூடிய தேஜொருபமும் சிவந்த தந்தவரிசையோடு கூடிய அதரமும் ஆநந்தகரமாகிய முகமண்டலமும் கோடிலக்ஷ்மிகளேயும் ஒப்பிடற் கேலாத மங்

னகாரமும் சூரியபிம்பம்போ லொளிவிடுக்காந்தியும் அபயம் வரதம் பாசம் அங்குசங்களும் உடையவளாய் ஹ்ரீங்காரமாகிய சக்தி பீஜத்தை யுச்சரிக்கும் பக்ஷிஸமூகங்களை யுடையவளாய் பாலையாய் ஸர்வாலங்கார யௌவனமும் புன்னகையோடு கூடிய முகபங்கஜமும் சுவர்னமயமாய் அமைத்தகேயூர கிரீடாதி பலவகை ரத்நாபரணங்களும் பூரித்த தனபாரங்களும் ஸ்ரீசக்கர ரூபமாயிருக்கும் காதோலையுமுடையவளாய் ஹ்ருல்லேகை முதலியதேவகன்னிகைகளும் அநங்குசுமைமுதலியவர்களும் சூழ்ந்துடையவளாய் புன்னகையாலலங்கரிக்கப்பட்ட வாக்கையுடைய சுந்திரவதியாய் எப்பொழுதும் யாவராலுங் கண்டறியாதவளாய் விளங்குந்தேவி யந்திர ராஜமாய் அஷ்டகோணவடிவமாய் ஸ்ரீசக்கிரமாகிய பீடத்தின்மேல் வீற்றிருக்கத் தரிசித்தோம்.

அப்பொழுது நாங்கள் அந்தமகாதேவியைநோக்கி ஆச்சரியமெய்தித் தேவியென்றுணராது இந்தஸ்திரீயான இவள்பேர்முதலியன ஒன்றும்தெரியவில்லை. அநேகமுகங்களும் கரங்களும் விழிகளுமாகத் அதிதூரத்தேபிரகாசிக்கின்றாள். அப்சரஸ்திரீ யுமல்லள் கந்தர்வஸ்திரீ யுமல்லள் தேவஸ்திரீ யுமல்லள் என்றுபலவாறு சந்தேகமெய்தியிருந்தோம். அப்பொழுதுஎங்களில் விஷ்ணுமந்தஹாசத்தோடுகூடிய மாதேவியைப்பார்த்து ஞானவிசேஷத்தால் ஜகன்மாதாவென்று தீர்மானித்துத் தேவியின்மகிமைகளைச் சொல்லுகின்றார் பிரமருத்திரர்களே நாமெண்ணியபடி இவள்ஸ்திரீயல்லள் பகவதியாகிய தேவிநமக்கெல்லாம் காரணமாயுள்ளவள். மகாமாயசொரூபிணி வித்யாசொரூபிணி எங்கும்நிறைந்தவள் ஜகந்நாயகி தேவியின் இந்தஸ்வரூபத்தைத் தரிசிக்கப்பெற்றுத் தன்யராளேம். நாம் பூர்வத்தில்செய்த பெருந்தவப்பயனே சொரூபதெரிசனங்கிடைத்தது இவளேபரமேசுவரனுக்குச் சர்வசொரூபிணியும் மங்களத்தை நினைப்பிக்கின்றவளுமானவள். இவள்பெருமையைச்சொல்ல நான

ல்ல. பிறதேவர்கள்தான் எவ்வளவினர் இப்பரமேசுவரியின் லக்ஷம் பாகத்திற் கோர்பாகத்திற்கேனும் ஒப்பிடும் அளவுடையோ மல்லோம். முன்மகாபிரளயத்தில் குழந்தையாய் ஆலிலையிற் சயனித்துக் காற்பெருவிரலைக்கையிற்பற்றி வாயில்வைத்துச்சுவைத்து மகிழ்ந்திருந்தபோது என்னைத்தாய்போற்பார்த்து யான்கண்டுயிலுதற்குரிய ஊசல்முதலிய பாடல்களைப்பாடி ஆலிலையாகிய தொட்டிலையசைப்பவளுமா யிருந்தவள். இத்தேவியைச் சமீபித்துப்பாதத்தினின்று துதிசெய்வோம். ஒருவேளை துவாரபாலகிகளாகிய பாங்கியர்கள் தடுப்பார்களாயின் இங்கிருந்தே ஸ்தோத்திரஞ்செய்வோமென்றனர். மூவரும்ஏகாக்கிற ஆநந்தசித்தமுற்றுமென்மேலும்சந்தோஷமெய்தபிரணவோச்சாரணஞ்செய்து விமானத்திலிருந்து இறங்கவிரைந்தோம். தேவியப்போது கட்டிலினின்றுவெளிவந்து துவாரத்தையடைந்து புன்னகையோடு எங்கள் மூவரையும் ஸ்திரீரூபமாக்கினள்.

நாங்கள் யௌவன சௌந்தரிய திவ்வியாபரணாலங்கார ஸ்திரீகளாகி ஆச்சரியமெய்தி தேவியின் சந்நிதானத்தையடைந்து சங்கையின்றிக் கைகுவித்துதிருவடிநோக்கி நின்றோம். தேவிகருணையோடுங் கடாக்ஷிக்க நாங்கள்நமஸ்கரித்தோம் அப்பொழுது கோடி சூரியப்பிரகாசமாய் விளங்கும்பாதுகையைக் கண்டோம் அங்கேகண்ட அதிசயத்தை சொல்லுகிறோம் எண்ணிறந்த தோழியர்கள் எண்ணிறந்தவகையாகப் பணிவிடைசெய்து சூழ்ந்துநின்றனர்.


கணக்கில்லார் ஆடல்பாடல்களும் வேணுவீணை கானங்களுஞ் செய்துநின்றனர். இதுநிற்க நவரத்தினபாதுகையின்மீது விளங்கிய தேவியின்பாதத்தில் கண்ணாடிபோல விளங்கும்நகமத்தியில் அநேககோடிபிரமாண்டங்களும் அவற்றிலுள்ள சராசரங்களும் பிரமவிஷ்ணுருத்திரர்களும் வாயு அக்கினி இயமன்சூரியன் வருணன் துவஷ்டா குபேரன் இந்திரன்முதலிய தேவர்களும் மேருமுதலிய பர்வத

ங்களும்க்ஷீரமுதலியசாகரங்களும்கங்கைமுதலியாநதிகளும்விசுவாவ சுசித்திரகேது சுவேதன் சித்திராங்கதன் ஆஹா ஊஹூ முதலிய கந்தர்வர்களும் அப்சரசுகளும் தும்புருநாரதம் அசுவினிதேவதைக ள் வசுக்கள் சித்தர்கள் பிதுர்கள்முதலியோரும், ஆதிசேஷன்முத லியமகாநாகங்களும் கின்னரர்களும் அசுரர்களும் வைகுண்டம் பிர மலோகம் மகா கைலாச முதலியவைகளையும் சிருஷ்டிக்கப்பட்ட னையவுங் காணப்பட்டன. இவையேயன்றி என்பிறப்பிடமான பங் கஜமுங்காணப்பட்டது அதில்நான்முகனாகிய நானும் சேஷசாயி யாகிய நாராயணனும் மதுகைடபருமிருக்கக்கண்டோம். அதுவ ரையில் எனக்கு நூறுவருடங்கழிந்தன. அங்கிருந்த அதிசௌந் தரியமுடைய பாங்கிமார்களும் எங்களையும் பாங்கிமார்களெ ன்றே கருதிவேற்றுமையில்லாமல் அன்பு பாராட்டினார்கள். எங் கட்குப் பெண்ணுருவெய்தப் பெருவிட்டால் தேவியின் திவ்விய தரிசனமும் சமீபவாழ்க்கையுங் கிடைக்கப் பெறமாட்டோம்.

ஐம்பத்திரண்டாவது

# திரிமூர்த்திகட்கனுக்கிரகம்.

இப்படியிருக்கையில் ஒருநாள் விஷ்ணுமூர்த்தி மகாதேவியை விசேஷமாகத்துதித்து எனக்கு ஞானத்தைக் கொடுத்தருளவேண் டுமென்று பிரார்த்தித்து மௌனமாயிருந்தனர். அப்பொழுது உரு த்திரமூர்த்தி ஹேதேவி ஹேசிவே பிரமன்முதலாக எண்ணப்பட்ட நாங்கள் மூவரும் சிருஷ்டியாதிகளைச்செய்ய உத்தேசித்திருக்கும் போது உன்பாதரேணுவைச் சிரமேற்கொண்டுதான் செய்கின்றோ ம். நாங்கள்உலககாரணர்களன்று நாங்கள்விமானத்தில்வருகையில்



எங்களாற்காணப்பட்ட புவனங்களை நாங்களாபடைத்தோம். கண்டதுமில்லையே உன்னுடைய பாதசேவையைவிட்டுத் திரிலோகாதிபத்தையும் அடையவிருப்பமில்லை.உன்பாதசேவையால் எங்கட்குண்டாகிய பெண்ணுருவம் வெறுக்கத்தக்கதென்று உனக்குஎன்பால் தயையிருக்குமாயின் நவாக்ஷரமந்திரத்தை உபதேசித்தருளவேண்டும் ஹே ஜநநி பிரணவஸ்வரூபினி என்று பலவாறு பிராத்திக்க தேவி அங்ஙனமே நவாக்ஷர மந்திரோபதேசம் செய்தனள். அதனைப் பீஜாக்ஷரசகிதமாய்ச் சபித்துக்கொண்டு நிஷ்டையிலிருந்தனர்.

---

## ஐம்பத்துமூன்றுவது

# தேவி விஸ்வரூபம்.

---

ஜகந்மாதாவாகிய மஹேசுவரியைப் பிரணவசொரூபியென்றும் ஞானரூபியென்றும் அறிஞர்கள்கூறுவார்கள். ஆநந்தமயமாக விளங்கும் அப்பராசத்தி தன்னிச்சையால் வடிவெடுத்தகாலத்தில அவ்விறைவியின் விராட்சுரூபம் எங்ஙனமெனில் சுவர்க்கமே சிரசாகவும் ஆகாயமேகொப்பூழாகவும் சூரியசோமாக்கினிகளே திரிநேத்திரங்களாகவும் அஷ்டதிசைகளுஞ் செவியாகவும் பாதாளமே திருவடியாகவும் நக்ஷத்ரங்களே கொத்தாகத் தரித்த முத்துமாலையாகவும் ஆகாயவாசிகளாகிய தேவர்கள் தோள்களாகவும் சமுத்திரமே ஆடையாகவும் சப்தமேகங்களும் கூந்தலாகவும் வாயுவேகவாசமாகவும் ஏனையவை பிறவுறுப்புகளாகவும் திவ்விய திருமேனி தாங்கியுள்ளவர்.

அவ்வகிலமாதாவினிடத்தினின்றே ஸர்வப்பிரபஞ்சமும் தோன்றின. தாமரைமலரிநுள்ள பிரமதேவனேடு ஏனையவேதியர்கள்

திருமுகத்தினின்றும் இந்திரன் உபேந்திரன் ஆகியஇவர்களோடு முடியணிந்த அரசர்கள் திருத்தோளினின்றும் வைசியர்கள் திருத் தொடையினின்றும் சதுர்த்தரெனப்படுஞ் சூத்திரர் திருவடியினி ன்றும் அத்தேவியாரிடமே தோன்றினர்.

இஃது அம்மாதாவின் இச்சைவடிவாயெடுத்த தேகமாய் இய ற்கையாகவே நாமரூபங்களில்லையென வேதாகமங்கள் கூறும் ஆ யினும் அவ்வவ்வமயங்களிற் பக்தாநுக்கிரக காரணமாகவும் துஷ் டசங்கார நிமித்தமாகவுங் கொள்ளுந் திருமேனிகட்குக் கணக் கின்று!

---

ஐம்பத்துநான்காவது

## பிரமவிஷ்ணூத்பவம்.

---

முன்னிகழ்ந்ததொரு பிரமகற்பத்தில் பிரமேந்திராதிசகல தேவர்களும் மாநுடம் விலங்கு புள் ஊர்வன நீர்வாழ்வன தாவர முத லியயாவும் ஜலார்ணவத்திலழுந்தியழிந்த சங்காரத்தின்பின் க்ஷீரா ப்தியில்ஆலிலையின்மேல் குழந்தைவடிவாக அறிதுயிலமர்ந்திருந்த திருமால் உலகங்களைப் பண்டு போலப்படைக்கவேண்டு மென்னு ம்பகவதியின் திருவுள்ளக்குறிப்பின்படி தமது உந்தித்தாமரையி னின்றும் பதுமனைப்படைத்து அவனுக்கு வேதங்களையுணர்த்தி அவற்றின் உதவியால் உலகினைப்படைக்கும்படி கட்டளையிட்டனு ப்பபிரமனும் அங்ஙனமே முயன்று அதுகைகூடாமையின் திருமா லையடைந்து எந்தையே! எனக்குப்படைக்கும் ஆற்றல்கிடைக்கவில் லை யாதுசெய்வேனெனவருந்த திருமால்பிரமனைத் தன்னோடுடன் கொண்டு சிவசாம்பவியின் சந்நிதியடைந்து சங்கதியைச்சாற்றி





சிவபெருமான் அவ்விருவரையும் தமது திருநெற்றிவிழியால் சாம்ப ராக்கினபின்னர் அருகேதமது பக்கலில் எழுந்தருளியிருக்கும் சர்வசக்திபூதையாகிய தேவியைநோக்கி மாதேவி இவர்களையெழுப்பி உலகம்இதுமுதல் என்றமுள்ள முறைப்படி இலகும்படி நடத்த வேண்டுமென மாதேவிதனது கருணைவடிவாய் அவ்விருபெருந் தேவரையும் எழுப்பித் தமது அநுக்கிரகவிசேடத்தால் சிருஷ்டி திதியெனு இருதொழிலும் அவர்கட்கு இனிதுமுடியும்வண்ணம் கடாக்ஷித்துத் தமதிருக்கைக்கேக விடைதந்தனுப்பினர்.

சிவசந்நிதியில் நிகழ்ந்தது இச்சரிதையெனலும் நூல்வழக்கு.

13-காஞ்சிபுராணம் தழுவக்குழைந்தபடலம்.

அண்ணலாரருட் சத்தியுஞ் சிவமுமாயதன்மையினின்று தொட்டுலகம், பெண்மையாண்மை யென்றிருவகைப் புணர்ப்பால் பெண்ணுமாணுமாய்ப் பிறங்குமென்றியம்பிப், பண்ணைமாமறைக் கடவுளுங் கருதரிப்பாவையம்பிகையாயிடைகரந்து, மண்ணெலாமுடச்சதியெனும்பெயரால் வயங்குதக்கனுக் கொருமகளாயினள்.

---

ஐம்பத்தைந்தாவது


# பிரமன் சிருஷ்டி கைகூடல்.

---

ஒருகற்பாரம்பத்தில் பிரமன்சிருஷ்டிசெய்யக்கருதிய போது தமம்மோகம் மகாமோகம் தாமிசிரம் அந்ததாமிசிரமெனும் ஐவகையவித்தைதோன்ற அவற்றினின்றும் தோன்றிய ஐவகைச் சிருஷ்டிகள் பிரகாசமற்று இந்திரியங்களால் கிரகிக்கும் ஆற்றலற்றிருந்தன. முதலிற் படைக்கப்பட்ட பர்வதங்களும் விருக்ஷங்களும்

சஞ்சரிக்கமாட்டாதனவாயிருந்தன. இரண்டாவது விலங்குகளையும் படைத்து அவைஎவற்றையும் மனதிலுணர்ந்து பிரகாச மின் மையின் தேவர்களைப்படைத்து அவர்கள் ஞானவசிஷ்டர்களாயிரு ந்தமையின் உலகவிருத்தியாகாமைக்கு வருந்தி மானுடரைச்சிரு ஷ்டித்தான். அவர்கள் துக்கம்பிரகாசம் தமோகுணமுதலியன வுடையவர்களானார்கள். பின்னர், பேய்பூதமுதலியனபடைக்கப்பட் டன. மற்றொருவகையுங் கேட்பீர்களாக.

பிரமதேவன்பால் முதலில்மகத்தத்துவமும் பின்னர்தன்மாத் திரைகளும் பூதங்களும் அதன்பின் இந்திரியங்களும் பிரகிருதிசம் பந்தமாகப்பிறந்தன. பின்னர் பர்வதவிருக்ஷங்களாகிய தாவரசிரு ஷ்டியும் திரியக்குமுதலிய சிருஷ்டியும் ஊர்த்துவலோகதேவசிரு ஷ்டியும்அதன்பின்குமாரசிருஷ்டியுஞ் செய்யப்பட்டன. இவற்றுள் முற்கூறியமூன்றும் பிரகிருதியிற்பிறந்து ஜடரூபமாகலின் பிராகி ருத சிருஷ்டியென்றும் பிற்கூறியவை புத்தி பூர்வமாகலின் வைகிருத சிருஷ்டியென்றும்பெயர்பெறும். இனிக்குமாரசிருஷ்டி யாவது பிரமதேவன்தன்மனஸால் சநக சநந்தன சநற்குமாரர்ரிபு இவர்களைப்படைத்துச் சிருஷ்டிசெய்யும்படிவிடுப்ப அவர்கள் அங் ஙனம்புரியாது சிவத்தியானஞ்செய்து தவநிலைமேற்கொண்டனர். பின்னர் தர்மம் சங்கற்பம் மரீசி பிருகு அங்கீரசன் புலத்தியன் புல கன் கிருது தக்ஷன் அத்திரி வசிஷ்டன் இவர்களைமானஸிகமாகப் படைத்துச் சிருஷ்டிசெய்யும்படிவிடுப்ப. அவர்கள் வைதிகமார்க்க மேற்கொண்டு யாகாதிகளைச்செய்து உலகினர்துதிக்க நின்றார்கள். பின்னர் நீலலோகிதருத்திரருதவியால் ஷண்முகத்தினின்று தேவர் களையும் தோளினின்று பிதுரரையும் பிர்பாகத்தினின்று அசுரர்க ளையும் குறியிலிருந்து மாநிடர்களையும் குதத்தினின்று இராக்ஷஸர் களையும் தமோரஜப்பிரியர்களான நிசாசரர்களையும் சர்ப்பங்களை யும் யக்ஷபூதகந்தர்வர்களையும் படைத்தான். பார்சுவங்களினின்று



பக்ஷிகளையும் மார்பினின்று செம்மறியாட்டையும் முகத்தினின்று வெள்ளாட்டையும் பக்கங்களினின்று பாம்புகளையும் பாதங்களினின்று குதிரையானை சரபம் கவயமா ஒட்டைமான் முதலியமிருகங்களையும் விலாவிலிருந்து பசுக்களையும் உரோமம் கூபங்களிலிருந்து ஓஷதிகளையும் மரங்கொடி செடிகளையும் படைத்தனன். இப்படியே தன்னவயவங்களிலிருந்து பூதர் யக்ஷர் பிசாசர் அப்சரசுகள் நரர் கின்னரர் ராக்ஷர் பசு பக்ஷிமுதலியயாவுங் கூடியசராசரப்பிரபஞ்சம் ஒன்றின்பின் னொன்றாகத்தோன்றின. ஆயினும்அவை யாவும் நித்தியமாகநிலை பெருமாயின். திருமாலுடன் மாதேவியின் திருவருள்பெற்றுப்படைக்கப் பெற்றபின்னரே உலகசிருஷ்டி தன்னியல்பாக நிலவலாயிற்று. இந்தப்பிரபஞ்சத்திற்குக் கர்மங்கள் ஆதியாகியசிருஷ்டிகாலத்தில் நியமிக்கப்பட்டுள்ளன. அவை அங்ஙனமேகற்பங்கடோறும்தோன்றிநிற்கும் இவற்றின்விரிவெல்லாம் விளக்கப்பரவுமாதலின் இம்மட்டு. நிறுத்தினோம். இந்தப்பிரமன் திருமாலுந்தியிற்பிறந்தவன் திருமாலும் பிரமனும் மகேசனுடைய இருபுறத்திலுதித்தவர்கள். உருத்திரன் மகேசன் மார்பிலுதித்தவன். பிரமாவிஷ்ணு ருத்திரனெனப்படு மூவரும் ஒருவரையொருவர் படைத்தும்வென்றும் கற்பங்கடோறும்முறைமாற்றுவர். ஆனால் இவர்களையெல்லாம் படைக்கும்சக்தியொன்றே பராசக்தியெனப்படும்.

## ஐம்பத்தாறுவது

# பஞ்சராவணத்வம்சம்.

ஒருகாலத்திற் கற்பகாடெய்திய சப்தருஷிகள் இந்திரன் விருப்பால் அசுரர்களழியத்தக்க யாகஞ்செய்ய, அவர்கள் நியதிப்படி சதாகாலமுஞ் சிவத்தியானத்திலிருப்பது மாறியதோஷத்தால்

யாகாக்கினியினின்று அரத்தாசுரன் அரத்தவீரன் ஐவரிராவணருதித்து அம்முனிவர்களையலைத்தோட்டித் தேவர்களைத்துயர்செய்ய அம்பிகையின் கட்டளைப்படிதிரிசூலகௌரி முதலிருவரைக்கொன்றனள். [ரத்தசுர ரத்தவீரசங்காரத்திற்காண்க] திரிசூல கௌரியோடு சேனைபதியாகவந்த குண்டோதரன் பூதகணத்தலைவரிலொருவன் இவன் சிவபெருமானுக்கு ஒரேகாலங்களிற் குடைபிடிப்பவனும் பரமேசுவரியார்தலைவாயிலிற் பெருங்காவலாளனுமாவான். இவன் குறுகிய கைகால்களும் மிகப்பெரிய வயிறும் சுருண்டு நெரித்த செம்மயிரும் மலைகளையனைய வலியபுயங்களும் இடியேறுபோன்றகுரலும் தீப்பொறிசிந்தும் சிவந்துருண்ட விழியுமுடையவன். இவன் திரிசூலகௌரியின் விருப்பால் தனக்குப்போர்முனை கிடைத்ததற்குப்பெரிதுங்களித்து தோள்களைகொட்டி அப்பஞ்சராவணரை அறைகூவி அவர்களையெதிர்த்து அவர்கள்செய்யும் பலவகை மாயங்களையும் விலக்கி அவ்வவருக்கேற்பக் கதாயுத்தமும் முஷ்டியுத்தமும் மல்லயுத்தமும் செய்து வலசாரியிடசாரி சுழன்றும் மரங்களைப்பறித்தெறிந்தும் மரங்களைபிடுங்கியடித்தும் அவர்கள் சேனைகளிற் சிலரைக்காலுதையாலும் மிதியாலும் கைவிசையாலும் கோரமுகத்தாலும் அட்டகாசத்தாலும் தோன்புடைப்பாலும் கைந்நெரிப்பாலும் உருட்டியவிழிப்பார்வையாலும் மிதித்தொழித்து ஒவ்வொரு வருக்கும் பின்வாங்காது ஏககாலத்தில் எண்ணிறந்தவர்கள் போர்புரிந்தாற்போல இமைப்பொன்றிற்கு இடமொன்றுகாணப்பட்டு எங்குஞ்சுழன்று ஐவரும்ஒவ்வொருவராக மடியச்செய்தனன். திரிசூலகௌரியும் குண்டோதரனும் இங்ஙனமாக சப்தருஷிகள் யாககுண்டத்திலுதித்துப்பலவகைத்துயர்செய்த ஏழுஅசுரர்களையும் அழித்துச் சுரர்களுக்குச் சுகந்தந்து தேவர்கள் மலர்மாரிதூற்றிமகிழ்ச்சிகொள்ளச்செய்து திருக்கைலாயகிரியெய்தி அம்பிகை சந்நதியில் பணிப்பெண்ணுங் காவலாளுமாயமர்ந்தனர்.



## ஐம்பத்தேழாவது

# வாணாசுரசங்காரம்.

---

சுவர்க்க மத்திம பாதாளமாகிய மூன்றுலகங்களையு மடக்கி
யரசாட்சி செய்துவரும் வாணாசுரனது ஏவலைமேற்கொண் டொழு
கும் துன்முகன் துர்த்தரிசனன் என்னும் இருவர் அளவின்றிய
மாயஞ்செய்ய வல்லவர். எவ்விடத்திலும் காணப்படு மதிசயங்களை
வாணனுக்குத் தெரிந்து சொல்லுங் குணமுடையவர். அவ்விருவ
ரும் நமது அன்னையாகிய பார்வதி தேவியார் பூமாலையைக் கையிற்
றாங்கி. பூஞ்சோலையில் வீற்றிருக்க வந்து கண்டு இதோ சிறிது
தூரத்தில் காணப்படுவது மின்னலோ. அல்லது பெண்ணோ
வென்று சந்தேகித்து கடைசியில் பெண்ணென்றதெரிந்து இவளை
நமது வாணாசுரன் அடைந்தால் தவப்பயன் பெற்றவனாவான் என்று
நினைத்து விரைந்து சென்று அவ்வசுரனுக்கு முன்பாக நின்று
வணங்கி அரசே! ஒருநாளுங் கண்டறியாத அதிசயம் கண்டோம்.
அந்த வதிசயத்தைக் கண்டு தங்களுக்குத் தெரிவிக்க விரைவாக
வந்தோமென்று சொல்லவும், அவர்களை நோக்கி அஃதென்ன
அவ்வளவு அதிசயம் நீங்கள் கண்டது சொல்லுங்களெனவும், அவர்
கள், "மின்னென்பேமோ? மின்னொளி யென்பேமோ, பெண்
ணென்பேமோ, விளக்கென்பேமோ, இந்திராணி யென்பேமோ,
இராஜாக்களணியும் கிரீடமென்பேமோ? .

"மின்னென்கோ மின்னுட் டோன்றும் விளங்கொளி யென்
கோ மேலாம். பொன்னென்கோ விளக்கென்கோ மேற் பொன்
னுல கத்து மின்னார், மன்னென்கோ மன்னர் சூடு மணிமகு
டத்தா னென்கோ, என்னென்கோ வழகுக் கெல்லா மிருப்பெனு
முருவை யம்மா."

அழகுக் கெல்லா மிருப்பிடமாகிய சொரூபம் வாய்ந்த இத் தகைய பெண்ணை.

" மூவகை யுலகுக் கெல்லா முதன்மையா மரசு பெற்றாய்
தேவரெல் லாரு மேத்தி செய்பணி கேட்கச் செய்தாய்
மேவருஞ் செல்வம் யாவும் வேண்டுவ வெல்லாம் பெற்றாய்
மாவொளி பெற்ற மிக்க மணிக்குல மனைத்தும் பெற்றாய்.

முற்றுறா மெய்ம்பு பெற்றாய் முடிவிலா வாயுள் பெற்றாய்
பெற்றத னுலென் பேறு பெறக்கிடை யாத மின்னை
முற்றிழைக் கன்னி தன்னை முயங்குறப் பெற்று யென்னின்
மற்றவை பெற்ற பேற்றின் மாட்சியுஞ் சிறக்கு மம்மா.

செங்கையின் மீது பொற்பூச் சிறந்ததே மாலை யேந்திப்
பொங்கொளி மின்போ னின்ற பொருவரு மாதை நோக்கின்
மங்குல்போ னிறத்து மாயோன் மார்பினின் வைகு மின்னு
மிங்கிவட் கேவல் செய்யு மேந்திழை யார்க்கு மொவ்வாள்."

எல்லாச் செல்வமும் சிறப்பும் பெற்றிருக்கின்ற நீ அவளை உன்னிடத்தில் இருக்கப் பெற்றாயாகில் உன்னுடைய மாட்சிமை மிகச் சிறப்புற்றோங்கும். அந்தப் பெண்ணுக்குஊழியஞ்செய்யஇலக்குமியும்சமானமாக மாட்டாள்.மன்மதனைவென்ற பரமேசுரனும்அவளைக்கண்டால் அம்மன்மதனுணைக் குட்பட்டு நடப்பான். வீர வீரனே! நீ விரைந்துசென்று லுனக்கே மாலை சூட்டுவாள். இவ்வார்த்தைகளை வாணுசுரன் கேட்டு அதி மோகங்கொண்டு தூதர்களே! சேனைகள்சூழத் தேர் கொண்டுவரும்படி சொல்லி யதி லேறிக் கொண்டு செல்கின்றான். இப்படிச் செல்லும் வாணன் ஆகாயத்தை முட்டிய தலையும், செவ்வானம் போன்ற தலை ரோமமும், பிறைச் சந்திரன்போன்ற வக்கிர தந்தங்களும், அக்கினி கக்குங் கண்களும், தீச்செயல்களே-செய்யும் வமிமையும் எல்லா வுயிர்

களையும் வாயிலிட்டுண்டு வயிற்றி லடக்குவதும் மகா மேருவை நிகர்த்த புயங்களும், நீண்ட கைகளும், இயமன்போல முழங்கும் வீரக் கழல்களும், நீலமலை போன்ற கருநிறமும், பிரமதேவனிடத் தில் அரியதவஞ் செய்து அநேக வரங்களைப் பெற்றவன். சத்த கன்னிகைகள் பாடும் பாடலைக் கேட்டு உலை மெழுகுபோல மன முருகித் தேரையுஞ் சேனைகளையு நிறுத்திவிட்டு தனியனாய் வந்து பார்வதியைக் கண்ணால் கண்டு காமத்தீயால் உடல் வாடலானான்.

பார்வதியாரைக்கண்டு அவள்சாதாரணமான வுலகப் பெண் போல நினைத்து அன்னமே யமுதே கிளியே மானே மயிலே மின் னே மரகதமணியே பொன்னே யென்னாருயிரே இனிக்குங்கனி யே இங்குநின் நகாரணமென்ன? அநேகதவஞ்செய்தாலும் கிடைத் தற்கரிய வுன்னைக்காண்பதற்கு முன்னைநா னென்னதவஞ்செய் தேனோ! என்னையாள்வதற்கோ இங்குவந்துநின்றனை நீ சொல்லிய வூழியங்களைச்செய்வேன். எனக்கு எல்லாச் செல்வமும் இருக் கின்றன. இயமனும்பயப்படும் வலியுடையேன். இந்திரன்முதலிய தேவர்களெல்லோரும் ஏவல்கேட்க அரசுபுரிகின்றேன். மன்மதன் செய்யும் வருத்தத்தைநீக்கவேண்டும். மரணாவஸ்தை வரும்போ லெனக்குத் தோன்றுகின்றது. இன்பத்தை யனுபவிக்கவேண்டும் நீயெந்தப் பொருளைக்கேட்டாலும் கொண்டுவந்து கொடுக்கி றேனென்றனன்.

இப்படிச்சொல்லிய பாதகனாகிய வாணாசுரனைப்பார்த்து பார் வதிதேவியார் பின்வருவதறியாத தூண்டின்மீன் முதலியவற்றைப் போலக் கெட்டுப்போதற்கிருக்கின்ற வீணனே! பெண்கள் கருத் தறியாமல் ஆசைகொள்வது முறையன்று எனக்கூறவும் கொடி யவனான வாணன் பெருமூச்செறிந்து பெண்ணேயுன்னை விவா கஞ் செய்யும்வரை யென்னுயிர் தரியாது. காந்தருவ முறையாக உன்னை யான் முதலிலே மணந்து பின்பு விதிப்படி விவாகஞ் செய்

செய்கின்றேன் என்றனன். அதுகேட்டு தேவியார் வாணனே? எனக்கு வேண்டியவைகளை யெல்லாம் கொண்டுவந்து தருவதாக முன்னமே சொல்லினாய். ஆதலால் பாதிரிப் பழமும். அருகம் பழமும், ஆலப்பழமும். அத்திப்பழமும். சந்திரன் நக்ஷத்திரங்களி லுள்ள பிரகாசங்களையும் கொண்டுவந்து கொடுத்தால் நீ சொன்ன காரிய முடியும் என்றனள். வாணன் அவையனைத்தையு மாயையி னாலே செய்து கொண்டுவந்து வைத்தனன். மாயைக்கெல்லாந் தாயாகிய தேவியார் முன்பு அவையனைத்து மறைந்தோடிப் போயின. தன்னுடைய மாயை பொய்த்துப் போனதறிந்து வெயர்த்துப் புழுங்கி வருந்தி நின்று இவளைப் பயப்படுத்தினாலன்றி யிணங்க மாட்டாள் என்று நினைந்து வாளாயுதத்தை யெடுத்து உன்னைக் கொல்லுவேனென் றுரவாரித்து வந்தனன்.

அதுகண்ட தேவி தானும் வாளாயுதந் தாங்கி யுத்தத்திற்கு வந்து நின்றனள். அவளை வாணன் வாளையசைத்து வெட்டினான். அந்த வெட்டு தேவிமேல் தாக்காமல் விலக தேவி யவன் வாளைத் தன் கைவாளாலே யொரே வெட்டினால் துண்டித்து விட்டனள். பிறகு வில்லை வளைத்துப் பற்பல பாணவருஷஞ் செய்தனன். அவைகளையும் தேவி வாளால் வெட்டித் தள்ளினாள். வாண னுடைய வில் அம்பறாத்தூணி தேர்ச்சாரதி தேர்குதிரை யனைத் தையும் அக்கினி பாணத்தினாலே தரையிலே வீழ்த்தி விட்டனள். அவன் பயந்து மாயையாலே மறைந்துபோக நினைத்தனன். அது தெரிந்து சக்கராயுதத்தை வரும்படி நினைத்தலும் அது சூரியனைப் போலப் பிரகாசித்து வந்து வாணன் தலையை யறுத்துச் சமுத்தி ரத்திலே யெறிந்துவிட்டு தேவி பாதத்தை வணங்கி பூமியைக்கிழித் துக்கொண்டு பாதாளம் போய்ச் சேர்ந்தது. உடனே தேவர், முனி வர் முதலியோர் ஆடிப் பாடிப் பற்பல வாழ்த்து கூறி புஷ்பமாரி பொழிந்தனர்.



## ஐம்பத்தேட்டாவது

# குமாரி.

---

திசைகளெல்லாந் துதிக்கும் கயிலாயமலை மலைகளுக்கெல்லா முயர்ந்தது. வெள்ளி மலை யென்னும் பெயருடையது. சிவ பெருமானெழுந்தருளப் பெற்றது. சித்தர் முனிவர் யோகிகள் தொண்டர்கள் சிவன் முகதர்யுகாந்த காலத்தினுமழியாத நித்தியர் கணங்களோடு நிறைந்திருக்கப் பெற்றது. மலைகடல் நிலைகுலையுங் காலத்தும் கெடாத நிலையுள்ளது. சரியையாதிகள் செய்யும் புண் ணியர்களன்றிப் பாவிகளாலறியப்படாததாகிய அந்தக் கயிலாய மலையினுசியிலே சந்திர காந்தக் கற்களாலும் நவரத்தினங்களினு லும் தேவதச்சனால் செய்யப்பட்ட ஒரு கோயில் இருக்கின்றது. அதிலே ஆனந்த நிருத்தஞ் செய்து தேவர் முனிவர்களுக்குக் கருணை செய்து அனுப்பி விட்டு உமாதேவியார் சிவபெருமானை யருச்சித்துப் பூசை புரிந்தனர். இவ்வாறு மூன்றுயுகம் பூசை புரிவதைக் கண்டு திருவுளமிரங்கிச் சிவபெருமான் மகிழ் ந்து தேவியைப் பார்த்து உனக்கு வேண்டிய வரம் யாது கேட்க என்றருளிச் செய்தலும் தேவி சருவ சங்கார காலத்திலே உம்மோடு கிரீடை செய்து மகிழ்ந்திருக்க வேண்டும் என்று பிரார் த்தித்தனர். சிவபெருமான் தேவியை நோக்கி, முந்நூற்றறுபத் தைந்து நாளும் பதினைந்து கலையும் முப்பத்துமூன்று கலையும் பதினைந்து தற்பரையும் சேர ஒருவருடமாம். அவ்வருடம் நான்னி லக்ஷத்து முப்பத்தீராயிரஞ் சேரக் கலியுக முடிவாகும். அக்கலி யுகமிரட்டித்தால் துவாபரயுகமாம். அஃதிரட்டித்தால் திரேதயுக மாம். அஃதிரட்டித்தால்கிரேதாயுகமாம். அஃதிரட்டித்தாலொரு சதுர்யுக[illegible] சதுர்யுகமிரண்டாயிரமானும் பிரமாவு

கொருதினமாகும். அதுதின முப்பது ஒரு மாதம் அம்மாதம் பனிரண்டு ஒரு வயது. அவ்வயது நூறுனுற் பிரமப் பிரளயமுண்டாகும். அப்பிரளயம் பத்து நடந்தால் விஷ்ணுவுக்கொரு நாழிகை. அவ்விஷ்ணு பன்னிரண்டு பேர் இறந்தால் உருத்திரனுக்கு ஒரு க்ஷணகாலமாம். அப்போது சருவ சங்கார காலமுண்டாகும். அந்தக் காலம் உன்னோடு கிரீடை செய்து மகிழ்ந்திருப்போம். அதுவரை தென் சமுத்திரக் கரையிலே சத்த மாதர்கள் தோழியர்களாயிருக்க இலுப்பைப் பூமாலை தாங்கி யிடைக்கையைத் தொடையிலே வைத்துக் கொண்டு தவஞ் செய்து இருக்க வேண்டும். நீயிருக்குமிடங் கன்னிகா க்ஷேத்திரமெனவும் தவத்தலமெனவும் சொல்வார். ஞானவனமெனச் சொல்லும் அத்தலத்திலேநாமும் பிரமசாரியாய் வந்திருப்போம் என்று விடை கொடுத்தருளினர்.


---

ஐம்பத்தோன்பதாவது

# பிருங்கா நுக்கிரகம்.

---

திருக்கயிலாயகிரியில் பக்தாநுக்ரஹ காரணமாகச் சிவபெருமான் திருவோலக்கமுற்றிருந்தனர். திருமால் பிரமன் இந்திராதி திக்குப் பாலகர் அஷ்ட வசுக்கள் ஸப்தருஷிகள் நவசித்தர்கள் கின்நர கிம்புருஷ யக்ஷவித்யாதரராதி அஷ்டாதச கணங்கள் துவாத்சாதித்தர் முதலிய கிரகங்கள் இன்னும் இமையவர் யாவரும் சிவபிரானைத் தரிசிக்கத் திருக்கயிலாய கிரியை யடைந்து ஆங்குமுதற் பெருங் காவலாயுள்ள திருநந்தி தேவரைப் பணிந்து அவர் திருவருள் பெற்றவராய் முறைமுறையே அவர் விரும்ப மகாசந்நிதானத்துட் சென்று இருகண்களாரெம்பெருமானையும் இறைவியாரையும்



தரிசித்து அஷ்டாங்க பஞ்சாங்கமாகப் பணிந்து இருவரையும் பிரதக்ஷிணஞ் செய்து தமது குறைகளைச் சொல்லி யர்சித்து அவ்விருவராலும் அநுக்கிரகித்த வரங்களைப் பெற்று வருகையில், ருஷி சிரேஷ்டர்களிலொருவராகிய பிருங்கிருஷியானவர் பார்வதி தேவியாரைப் பணியாமல் சிவபெருமானை மாத்திரம் பணிந்து பலவகையாகப் பாடிப் புகழ்ந்து நிற்பது கண்ட இமயவல்லி, இம்முனிவன் யாவன்? எம்மைச் சிறிதும் மதித்திலன்? என்று முனிந்து சக்தியாகிய தனது கூறாகவுள்ள உதிர மாமிசங்களை அவருடலிற் சிறிதுமின்றி ஆக்கிராணித்துக் கொள்ள, அவர் சிவ கூறாகவுள்ள என்பையும் நரம்பையுமே உட்கொண்ட தோற்பதுமை போலத் தள்ளாடி நின்று தம்மைப் பிரார்த்தித்தது கண்டதாணு மனந் தரியாராகி ஓர் காலையுதவ, பிருங்கிமுனி களித்து மூன்று காலுடன் முன்னின்று கூத்தாடிப் பலவகையாகப் பாடிச் சென்றனர்.

உடனே சிவபெருமான் எமது சக்தியின் கூறு உன்னிடமிருந்து போகவே நீ எவ்வளவு கஷ்டப்படுகின்றனை. உலகமே சத்திமயம். நாம் அவளுடனேகூடினகாலத்திலேதான் உலகம் உச்ஜீவிக்கின்றது. நாம் தேவியைப் பிரிந்த காலத்து உலகினரும் தங்கள் தங்கள் தேவிமாரைப் பிரிந்திருக்கின்றனர். உதாரணமாக சனகாதி நால்வருக்கும் ஞானோபதேசம் செய்யும்போது எல்லாவுயிர்களும் காம விருப்பமில்லாமலிருந்தது. மறுபடியும் நாம் மலைமகளை மணந்து அவளுடன் வீற்றிருந்தபோது உலகமும் காமவிருப்பமுற் றிருந்தது.

“விரிபதுமத் திருமருமப் பெருமானாதி விண்ணவர்க்கு மண்ணவர்க்கும் வேந்தனாகி பொருவிலவ ருயிர்க்குயிரா யுணர்வுநல்கும் பொருவிடையோன் உமையோடு பொருந்த லின்றி, யருமுனிவர் பொருட்டாக யோகிபோல வமர்தலா லனைவோரு மரிவை மார்

தோள், மருவிமுயுங் குதலின்றி யிருந்தார் சஞ்சமலர் விதிக்கும் விதிக்குமுறை மாறித் றன்றே. "

" துன்னற்கரியவரியணை மேலுமை யோடிருப்பவுயிரனைத்து மின்னலகல விருங்காமவின்பமேவியிருந்தனவே "


மேல் நாமும் தேவியும் அபின்னப் பொருள்கள். நமது அஷ்டாஷ்ட மூர்த்தங்களில் அர்த்த நாரீசமூர்த்தம் ஒன்றேயாம். சத்தியையன்றிச் சிவத்துக்கோர் செயலில்லை யென்பதை.

சிவமெனும் பொருளு மாதி சத்தியொடு
சேரி னெத்தொழிலும் வல்லதா
மிவள்பிரிந்திடி னியங்குதற்கு
மரிதரிதெனுமறை யிரைக்குமா

னவபெரும்புவன மெவ்வகைத்
தொழினடத்தி யாவரும் வழுத்துதா
ளவனியினகனொடு தவமிலார்
பணியலாவதோ பரவலாவதோ.

காஞ்சிபுராணம்.

உமையும் தானும் வேறன்மை யுருவினிடத்துத் தெளிப்பான்
இமைய மயிலை யொருபாதி வடிவினிறவி நாற்கரத்து [போல்
மமைய வனசந்திரிசூலமபயம் வரத மிவைதாங்கி
கமையு முய்யக் கொண்டருளுநாரி பாகன் திருவுருவம்.



அறுபதாவது

# ஐம்பத்தோரக்ஷரீ.

---

திருக்கைலாயகிரியிலெழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானது பாகத்திற் சதாகாலம் பொருந்தியிருப்பவளும். பார்வதிமகேஸ்வரி கௌரி உமை முதலிய திருநாமங்கள் வகிக்கப் பெற்றவளு
' தேவி ஶப்த மயமான ரூபத்தையுடையவளாயிருக்கின்றாள்.

(ஶப்தமயமான ரூபம் ஐம்பத்தோரக்ஷரங்களின் வடிவம்

அகாரஸ்தஸ்யமூர்த்தாச லலாடம்தீர்கஉச்யதே|
இகாரம்தக்ஷிணம்நேத்ர மீகாரம்வாமலோசநம்||
உகாரம் தக்ஷிணம் ஶ்ரோத்ரமூகாரம்வாமமுச்யதே|
ருகாரம்தக்ஷிணம்தஸ்ய கபோலம் பரமேஷ்டிந:||
வாமம்கபோலம்ரூகாரம் லு லூநாஸாபுடேஉபே|
ஏகாரமோஷ்டமூர்த்வம்து ஐகாரமதரம்விபோ:||
ஓகாரம்ச ஔகாரம் தந்தபங்க்தித்வயம்க்ரமாத்|
அம்அஶ்சதாலுநீதஸ்ய தேவதேவஸ்ய தீமத:||
காதிபஞ்சாக்ஷராண்யஸ்ய பஞ்சஹஸ்தாஸ்சதக்ஷிணே|
சாதிபஞ்சாக்ஷராண்யேவம் பஞ்சஹஸ்தாஸ்துவாமத ||
டாதிபஞ்சாக்ஷரம்பாதா தாதிபஞ்சாக்ஷரம்ததா|
பகாரமுதரம்தஸ்ய மகாரம்பார்ஸ்வமுச்யதே||
பகாரம்வாமபார்ஸ்வம்து பகாரம்ஸ்கந்தஉச்யதே|
மகாரம்ஹ்ருதயம்ஶம்போ: மஹாதேவஸ்யயோகிந:||
யகாராதிஸகாராந்தம் விபோர்வைஸப்ததாதவ:|
ஹகாரம்நாபிரூபம்ஹி க்ஷகாரம்நாதஉச்யதே||
ஏவமஸப்தமயம்ரூப மகுணஸ்யகுணாத்மந:||

அப்படிச சப்தமயரூபமான தேவிக்கு, அகாரம்-சிரம், ஆகாரம் நெற்றி. இகாரம்-வலது கண், ஈகாரம்-இடதுகண். உகாரம்-வலது செவி. ஊகாரம்-இடதுசெவி. ருகாரம்-வலது கன்னம் ரூகாரம்-இடது கன்னம், லுகாரம்-வலது நாசி, லூகாரம்-இடது நாசி, ஏகாரம்-மேலுதடு, ஐகாரம்-கீழுதடு. ஓகார, ஔகாரங்கள் முறையே மேலுங் கீழுமுள்ள பல்வரிசைகள், அம்-வலதுதாடை, அ:-இடதுதாடை క, ఖ, గ, ఘ, ఙ, வலது பக்கத்து ஐந்துதிருக்கரங்கள். చ, ఛ, జ, ఝ, ఞ, இடது பக்கத்து ஐந்து திருக்கரங்கள். ట, ఠ, డ, ఢ, ణ, வலது கால். త, థ, ద, ధ, న, இடதுகால், పகாரம்-வயிறு. ఫகாரம்-வலதுபக்கம், బகாரம்-இடது பக்கம், భகாரம்-தோள் మகாரம்-மனது. யரலவஶஷஸ-ரஸம் ரக்தம்-மாமிசம், மேதஸ்-எலும்பு, மஜ்ஜை-சுக்கிலம், என்னும் ஸப்ததாதுக்கள், ஹகாரம்-தொப்புள், க்ஷகாரம்-நாதம். என்று இவ்வாறாகச் சொல்லப்படுகிறது.

இப்படி குண சொரூபிணியாயும் நிர்க்குணியாயுமிருக்கிறவளுடைய ரூபமானது ஸப்தமயமாகும்.

---


அறுபத்தொன்றாவது

## அஷ்டாஷ்ட சக்திபீடங்கள்.

—(*)—(*)—

சத்தி தனது முழுமுதற் கருணையும் பலமும் வீரமும் செலுத்தி நிற்கும் ஸ்தலங்களே சத்தி பீடங்கள். அவை அறுபத்து நான்கு சத்தி பீடங்களாம். அவைகள் முறையே:—

கொல்லாபுரத்திலுள்ள இலக்ஷ்மீ பீடமும், மாதுபுரத்திலுள்ள ரேணுகா பீடமும், துளஜாபுர பீடமும், சப்தசிருங்க பீட



மும். இங்குளையிலுள்ள ஜுவாலாமுகி பீடமும், சாகம் பரியிலுள்ள பிராமரி பீடமும், ஸ்ரீபக்த தந்திரிகையிலுள்ள துர்க்கா பீடமும் விந்தியாசலபீடமும், ஸ்ரீகாஞ்சியிலுள்ள அன்னபூரணி பீடமும், விமலையிலுள்ள பீமாதேவி பீடமும். ஸ்ரீசந்திர கலையிலுள்ள கௌசிகி பீடமும். நீல பருவத்திலுள்ள நீலாம்பரி பீடமும். ஸ்ரீநகரத்திலுள்ள சாம்புநதேசுவரி பீடமும். நேபாளத்திலுள்ள இரகசியகாளி பீடமும். மதுரையிலுள்ள மீனாக்ஷி பீடமும். வேதாரணியத்திலுள்ள சுந்தரி பீடமும். ஏகாம்பர பீடமும்: மஹாசலத்திலுள்ள யோகேசுவரி பீடமும். சீனாவிலுள்ள நீலசரசுவதி பீடமும். வைத்தியநாதத்திலுள்ள வகலை பீடமும் மணித்தீபத்திலுள்ள புவனேசுவரி பீடமும். காமயோனிமண்டலமென்கிற திரிபுர பைரவி பீடமும். புஷ்கரத்திலுள்ள காயத்திரி பீடமும். அமரேசத்திலுள்ள சண்டிகை பீடமும். பிரபாசத்திலுள்ள புஷ்கரேக்ஷணி பீடமும். நைமிசத்திலுள்ள தேவி பீடமும். புஷ்கராக்ஷத்திலுள்ள புருகதை பீடமும், ஆஷாடத்திலுள்ள இரதி பீடமும். சண்டமுண்டியிலுள்ள தண்டினீபீடமும். பாரபூதியிலுள்ள பூதி பீடமும், நாகுலத்திலுள்ள நகுலேசுவரி பீடமும், அரிச்சந்திரத்திலுள்ள சந்திரிகை பீடமும், ஸ்ரீகிரியிலுள்ள சாரதா பீடமும். பஞ்சநதத்திலுள்ள திரிசூல பீடமும், ஆம்பிராதகேசுவரத்திலுள்ள சூக்ஷ்மபீடமும். மகாகாளத்தியிலுள்ள சாங்கரி பீடமும். மத்தியமாபிதத்திலுள்ள சர்வாணி பீடமும், கேதாரத்திலுள்ள மார்க்கதாயினி பீடமும் பைரவத்திலுள்ள பைரவி பீடமும், கயையிலுள்ள மங்கள பீடமும். குரு க்ஷேத்திரத்திலுள்ள ஸ்தாணுப் பிரியை பீடமும். வியபிராகுலத்திலுள்ள ஸ்வாயம்புவி பீடமும், கனகலத்திலுள்ள உக்கிர பீடமும், விமலேசுவரத்திலுள்ள விசுவேசை பீடமும், அட்காசத்திலுள்ள மஹானந்த பீடமும். மகேந்திரத்திலுள்ள மகாந்தகை பீடமும், பீமத்திலுள்ள பீமபீடமும், வஸ்திராபகத்திலுள்ள பவானிபீடமும், அர்த்தகோடிகையிலுள்ள உருத்திராணி பீடமும், அவிமுத்தத்திலுள்ள விசா

லக்ஷ்மி பீடமும். மகாலயத்திலுள்ள மகா பாகை பீடமும் கோகர்ணத்திலுள்ள பத்திரகாளி பீடமும். பத்திரகர்ணிகத்திலுள்ள பத்திரை பீடமும், சுவர்ணாக்ஷத்திலுள்ள உற்பலாக்ஷி பீடமும். ஸ்தாணுவிலுள்ள ஸ்தாண்வீசை பீடமும், கமலாலயத்திலுள்ள கமலை பீடமும் சகமண்டலத்திலுள்ள பிரசண்டை பீடமும். குரண்டலத்திலுள்ள திரிசந்திரிகை பீடமும், மகோடத்திலுள்ள மகுடேசுவரி பீடமும். மண்டலேசத்திலுள்ள சாண்டகை பீடமும். காலஞ்சரத்திலுள்ள காளிபீடமும். சங்குகர்ணத்திலுள்ள தொனிபீடமும். தூலகேசுவரத்திலுள்ள தூலபீடமும், ஞானிகளிதயகமலத்திலுள்ள பரமேசுவரி பீடமாம்.

மேற்கூறிய அறுபத்து நான்கு சத்தி பீடங்களில் முதற் சத்தி பீடம் மதுரை யாகும் என்பதை,

"சேடு தாங்கு மூவுலகினிற் சிறந்தன சத்தி<br>
பீட மூவிரு பத்துநான் கவற்றின் முற்பீட<br>
மாடமோங்கிய மதுரையா மற்றது போகம்<br>
வீடு வேண்டிய சித்தியும் விளைப்பதென் றுன்னு"

எனக்கூறியுள்ளார்.

---

அறுபத்திரண்டாவது

# ஸ்ரீ கிருஷ்ணசாம்பவதானம்.

---

உலகபாரமொழிக்கும்படி திருவவதாரஞ் செய்த கிருஷ்ண மூர்த்தி சிவஞானத்தை யடையவும், ஓர் நற்புத்திரனைப் பெறவும் கருதி. உபமந்யு முனிவரிடம் வந்து அவரைப் பிரதக்ஷிணஞ் செய்து பணிந்தனர். அப்பொழுது உபமந்யு முனிவர் தமது கரத்



தாற்றிருநீற்றை எடுத்து கண்ணன் தேகத்திலணிந்து பாசுபத தீக்ஷை செய்து, பன்னிரண்டு மாத காலங்கள் பாசுபதவிரதத்தை யநுஷ்டிக்கச் செய்து குற்றமில்லாததும் உயர் கதியைக் கொடுக்க வல்லதுமான சிவஞானத்தை உபதேசித்தனர். அதனைப்பெற்ற கிருஷ்ணமூர்த்தி ஓர் நற்புத்திரனை யடையக் கருதிச் சந்திரசேகர ராகிய சிவபெருமானைத் துதித்துப் பெருந் தவங்களைச் செய்து கொண்டிருக்கையில், அத்தவத்திற்குக் களிகூர்ந்த சிவபெருமான் உமாதேவியாரோடும் காட்சிகொடுப்ப, கிருஷ்ணமூர்த்தி சாஷ்டாங் கமாகப் பணிந்து நிற்க, சிவபெருமான் உனக்கு யாது வரம் வேண் டும்? என வினவ எனக்கோர் வல்லபமிக்க நல்ல புதல்வன் வேண் டுமென விண்ணப்பிக்க அன்பர்கள் வேண்டியவற்றை யெல்லாம் கொடுக்கும் விரதங்களை மேற்கொண்ட சிவபெருமானும் உமா தேவியாரும் அவ்வாறே யோர் புத்திரனுண்டாவனென்று அருள் செய்து அந்தர்த்தானமாயினர். அவ்வகைய வரத்தைப் பெற்ற கண்ணமூர்த்தி களிப்பு மிகுந்து தன் மனையை யடுத்து வாழ்ந்திரு க்கையில், தன்னுடைய சாம்பவதி என்னும் மனைவியானவள் கரு ப்பமெய்தி, உடல் மதர்ப்புற்று, இடைபருத்து நடை தள்ளாடி சிவசத்தி கடாக்ஷங்களால் மிகப் பலசாலியான ஓர் புத்திரனை உத்த மமுகூர்த்தத்திற் பெற்றனள். அப்புதல்வனைக் கண்டு மனங்களி த்து கண்ணபிரான் அந்தணர் யாசகர் முதலியோர்க்குமணியும் பொன்னும் வஸ்திரமும் மகிழும்படி தானஞ்செய்தனன். சிவ பிரானருளிய புத்திரனாதலின் அவனுக்கு சாம்பன் என்று பெய ரிட்டனன். கண்ணன் தன் மனைவியோடும் சாம்பனோடும் மகிழ் ச்சி மிக்கு வாழ்ந்திருக்கையில், சாம்பன் பால்பருகியும் தவழ்ந்துந் நடந்தும், சிறுதேருருட்டியும் வளர்ந்து, முனிவர்களான் ஞானம டைந்து, யானை, குதிரை, தேர் இவற்றைச் செலுத்தும் வல்லப மும், வில், வாள், அஸ்திர முதலியவற்றின் பயிர்ச்சியுங் கற்றறிம தனன்.

---

அறுபத்துமூன்றாவது

# சம்புகுத்தமாகுத்தாநுக்கிரகம்.

---

துவாபரயுகத்தில் பார்வதி தேவியாருக்குத் தமது திருமேனியில் சரியாக இடப்பாகந் தந்தருளிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற உருத்திரகோடிக்கிரியில நெடுங்காலந் தவஞ்செய்து கொண்டிருப்பவர்களாகிய சம்புகுத்தன் மாகுத்தன் என்று சொல்லுகின்ற பெயரினையுடையவர்களாய் பாலுந் தேனும் கலந்தது போல் உடன் பிறந்த பரிவில் மிகுந்தவர்களாய் கருத்து மனமொத்தவர்களாய், இரண்டுடலுக்கொரு உயிரை யொத்தவர்களாய் இவ்விருவரும் வாழுங் காலத்தில் இவர்களில் மூத்தவன் பெருமை மிக்க சிவபெருமானை பெரிது பெரிது என்று சொல்லக்கேட்டு. தம்பியானவன் ஒரு முறைமையும் அறியாமல் சத்தியே பெரிது பெரிதென்று சொல்ல, இவர்களிருவருக்கும் சண்டையுங் கோபமுந் தணியாமல் ஊழ்வினை வசத்தால் உண்டாகி யொருவரை யொருவர் பகைக்கலானார்கள். இதனை யெந்த முனிவர்க்குச் சொல்லினும் அவர்கள் அத்தகைய பெரிய விஷயங்களை யெடுத்து விசாரம் செய்வது எம்போலியர்களுக்கு ஒரு சிறிதுந் தகுதியானதன்று என்று சொல்லினர்.

"வெம்பாவங் கடிந்த சம்புகுத்தன்
மாகுத்தனென விளம்பும் பேரோர்
பைம்பாலுந் தேனுமுடன் கலந்ததென
வுடன்பிறந்த பரிவின் மிக்கோர்"

ஒருடலுக்கோருயிரொத்திருவரும்
வையகாலத்திவரின் மூத்தோன்



பேருடைய சிவம்பெரிது பெரிதென்று
சொல்லக் கேட்டுப் பின்பிறந்தோன்.
ஒருநெறி யறியாது சத்தி பெரிதே
பெரிதென்றுரைப்ப விந்தப்
போருமுனிவுந்தணியாதாழ்வினைபுக்
குழிமாறு புகுந்து நின்றார்.
எம்முனிவர்க்குறைப்பினுமற்றெம்மனோர்
தெரிப்பரிதென்றெவருமஞ்சத்
தம்முனிவு தணியாது சங்கரனே
சான்றிதற்குச் சாலுமென்னு.
அம்முனிவர் கலந்தேகி யமலனைமுற்
பணிந்தியம்ப வமலனுங் கட்
கிம்முனிவு விடுமின்களிரு மொழியு
மொரு மொழியோ டொக்குமென்றான்.

இருவருந் தங்கள் கோபந்தணியாமல் இதற்குச் சிவபெருமானே சாட்சியாமென்று அவ்விருவரும் ஒருங்கே கூடிச் சென்று பரமேஸ்வரன் முன் பணிந்து விண்ணப்பஞ் செய்யத் திருவுளத்திற் கொண்டு சிவம் சத்தியென்கிற இரு மொழியுமொரு மொழியோடொக்குமாதலால் உங்கள் கோபத்தை விடுங்களென்று திருவாய் மலர்ந்தருளினர். சந்திரசேகரனுகிய பரமசிவம் இரண்டும் ஒன்றென்று அருள் செய்த திருவருளை மறுத்து இளையவன் பின்னும் பொறுமை இல்லாதவனுய் சத்தியே பெரிதென்று சொல்ல மூத்தவனும் புகையுயிர்த்துப் பொங்கி வேதமுறைப்படி சிவத்தையே பெரிதென்று சொல்ல இப்படிப் பேசுகிற இவ்விருவர்களின் மாறுபாட்டை நோக்கி பரமசிவத்தின் திருமுகத்தைப் பராசத்தியும் பராசத்தியின் திருமுகத்தைப் பரமசிவமும் பார்த்து நகைத்தருளினர்கள்.

ஒளியும் மாணிக்கமும் அமுதமும் மதுரமும் எள்ளும் எண்ணெயும் பொன்னும் பூஷணமும் சமுத்திரமும் அலையும்போல ஒன்ருய்ப் பிரியாமலிருக்கிற தங்களைப் பரிந்தடைந்த குற்றத்தினுல் சத்தி பெரிதென்றவனைச் சத்தியும் சிவம் பெரிதென்றவனைச் சிவமும் நீங்களிரண்டு கழுகு பட்சிகளாகிச் சுழலக் கடவீர்களென்று சபித்தார்கள். அவ்விருவரும் அப்பொழுதே கழுகுகளாகி நடுநடுங்கி எங்கள் குற்றத்தைப் பொறுத்தருளி எங்களய்யனே தாயே இந்தக் கழுகுருவம் விடுமிடமும் காலமும் கட்டளையிட்டருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய இந்த யுகம் நீங்கும்போது அந்தவரமுங்களுக்குத் தருகின்ருேம். அப்படித் தருகிறவரைக்கும் தவமும் அருச்சனையும் நீங்கள் இத்தலத்தில் செய்யுங்களென்று இளையவனுக்குப் பராசத்தியும் மூத்தவனுக்குச் சிவபெருமானும் கட்டளையிட்டருளினர்.

ஒழியாத பெரிய வினைச் சம்பந்தமும், அதனுலுற்ற கழுகுருவமும் ஒழியும்படி பூசையும் அன்புடன் செய்து சம்புகுத்தன் மார்குத்தனென்னும் இருவரும் பழைய தங்கள் உருவமடைந்தனர்.

---

அறுபத்துநான்காவது

# சிவசத்தி விபூதி.

---

உமாதேவியாரே சத்தி சிவபெருமானே சத்தியையுடையவன். சத்தி சத்திமான்களுடைய விபூதியிலே சமே இப்பிரபஞ்ச முழுதுமாம். ஜடரூபமான பொருளும், சித்ரூபமான பொருளும் ஆகிய இரண்டும் சுத்தமென்றும் அசுத்தமென்றும் பெயர்கள்



பெறும். அன்றியும் பரமென்றும் அபரமென்றும் பெயர்கள்பெறும் சித்ரூபமானது ஜடத்தைப் பொருந்திய பிரகிருதியையுண்டு செய்யும். அந்த ஞானரூபமே சுத்தமென்றும்பரமென்றும்சொல்லப்படும். ஜடமும் அசுத்தமும் அபரமென்று சொல்லப்படும். சித்தும் அசித்தும் முதலியவற்றிற்கெல்லாம் சிவனுஞ் சத்தியுமே தலைவர்கள். ஆனதினால்தான் பிரபஞ்சமுழுவதும் சிவசத்திகளின் சுவாதீனத்திலிருக்கின்றன. அவ்வாறன்றி இவர்கள் பிரபஞ்சத்தின் வசத்திலிருப்பவர்களல்லர். இவர்களிருவரும் பிரபஞ்சத்திற்குப் பாலகர்களாதலின் விசுவேசுரரென்று சொல்லப்படுவார்கள். சந்திரிகையின்றிச் சந்திரனும் பிரபையின்றிச் சூரியனும் பிரகாசியாததுபோல சிவபெருமானிருப்பினும் சத்தியையின்றி பிரகாசிக்கமாட்டான். ஆதலால் சிவனைப்போல சத்தியும் சத்தியைப்போலச் சிவனுமாகும். இவர்களுக்குள் தாரதம்மியங்கிடையாது. சத்தியையன்றிச் சிவனில்லை. சிவனையன்றிச் சத்தியில்லை. சிவன் சத்தியுடன் கூடியிருந்தே தேகிகளுக்குப் பத்தி முத்திகளைக் கொடுக்க வல்லவனாவான். ஏகமாகிய பராசத்தி அபரசத்திகளைச் சிருஷ்டி செய்யும். அச்சத்தியே மூலப்பிரகிருதி மாயை முக்குணங்களென்று சொல்லும்படிப் பிரியும் பராசத்தியே சிவதத்துவ முதலாகப் பிரகிருதியீறாக ஜக முழுவதையும் விரிக்கும் சிவபெருமானைப் பிரியாமல் எள்ளிலெண்ணெய்போல விளங்கும் பராசத்தி சிருஷ்டி காலத்தில் ஜனித்து அதனிடமாகக் கிரியாசத்தி தோன்றும் அந்தக் கிரியாசத்தி மூலப்பிரகிருதியை யதிஷ்டித்து நாத தத்துவத்தை யுண்டு செய்யும். நாததத்துவத்தினின்று விந்து ஜனிக்கும். விந்துவினின்று சதாசிவனுதிப்பான். சதாசிவத்தினின்று மகேசுவரனுதிப்பான். மகேசுவரனிடத்தில் சுத்தவித்தை தோன்றும். இவ்வகையாகத் தத்துவங்களெல்லாம் தோன்றியபிறகு அனந்தனென்னும் வித்தியேசுரனால் மாயையானது கால நியதி கலை வித்தைகளைத் தோன்றச் செய்யும். கலையி

னின்று இராக தத்துவமும் புருஷதத்துவமும் பிறக்கும். மாயையி னின்றுந் திரிகுணப்பகுதிகள் ஜனிக்கும். அம்முக்குணங்களினின் றுந் திரிமூர்த்திகளும் இருபத்து மூன்று தத்துவங்களும் பிறக்கும் அவற்றினின்றும் அளவின்றாய அண்டங்களும் தேகங்களும் ஜனிக் கும். ஆதலின் உலகமுழுவதும் சத்தி மயமேயாம். இச்சாசத்தி ஞானசக்தி கிரியாசத்திகளால் சிவபெருமான் உலக காரியங்களை நடத்துகிறான். அவற்றில் இச்சாசக்தி யறியும். ஞானசக்தியிதற் கிது காரணமென்றுணர்த்தும் கிரியாசக்தி விரும்பியதொழிலிலே செய்யும். பராசக்தியின்ஏவலால் அபரசக்தியுலகையுண்டு செய்யும் தாய் தந்தைகள் இல்லாது குழந்தையில்லாததுபோல சிவனும் சத்தியும் இல்லாவிடில் ஜகத்தில்லையாகும். சிவனே தந்தை, சத் தியே தாய் சிவனே பரமான்மா சக்தியே மனோன்மணி சிவனே மஹேசுவரன் சத்தியே மாயை சிவனே புருஷன் சத்தியே பிர கிருதி அன்றியும் அச்சிவனும் சத்தியுமே உருக்கிரன் உருத்திராணி யும். திருமாலும் கமலையும் பிரமனும், பிரமியும், சூரியனும் பிரபையும் இந்திரனும் இந்திராணியும். அக்கினியும் ஸ்வாஹா தேவியும். இயமனும் இயாமியும் நிருதியும் நைருதியும் வருண னும் கௌரியும், வாயுவும் சிவையும். குபேரனும் பத்தியும் சந்திர னும் உரோகிணியும், ஈசானனும் ஈசானியும், அனந்தனும், அனந் தையும், காலாக்கினிருத்திரனும் காளியும் சுவாயம்பு மநுவும் சதரூபையும். தக்கனும் பிரசூதையும் ருசியும் ஆகூதியும் பிருகு வும், கியாதியும் மரீசியும் சம்பூதியும். அங்கிராவும் ஸ்மிருதியும் காசிபனும் அதிதியும் வசிஷ்டனும் அருந்ததியுமாக ஆணுருவங்க ளெல்லாம் சிவனும் பெண்ணுருவங்களெல்லாம் சத்தியுமாம். இவ் வகையாகச் சிவனும் சத்தியும் ஒருவரையொருவர் பிரியாதுறை வார்கள். இவ்விதமான சிவசத்திகளின் விபூதிகளை அநேக ஆயி ரவருஷங்கள் சொன்னாலும் சொல்லி முடியாது. இச்சிவசத்திகள் விபூதிகளே நான்கு வேதங்களிலும் சொல்லப்பட்ட பரமரகசியப்

## சிவசக்திவிபூதி.

பொருள். இந்தக் கதையைச் சொன்னவர்களும் கேட்டவர்களும் தமதுறவினரோடு நெடுங்காலம் வாழ்ந்து உத்தம மைந்தர்களைப் பெற்று. சிவபக்த சிரேஷ்டர்களாகி தமது பாவங்களையெல்லாம் ஒழிந்து சுகவாழ்வடைவார்கள்.

---

இஃது
திருவிளையாடற் புராணம். விநாயக புராணம். காசிகாண்டம்,
உபதேசகாண்டம் இவற்றின் விருத்தியுரையாசிரியரும்,
சிவமஹா புராணம் முதலியவற்றின் மொழி
பெயர்ப்பாசிரியரும், சிவமஹாபுரா
ணம், பஸ்மமஹாத்மியம்
முதலியவற்றின்
நூலாசிரியரும், பற்பல
நூல்களின் பதிப்பாசிரியரும்; பரி
சோதனாசிரியரும் ஆகிய மஹா வித்வசிரோன்
மணி சென்னை கிறிஸ்டியன்காலேஜ் மாஜி தமிழ்ப்பண்டி
தர் சைவப்பிரசாரகர் ஈக்காடு-இரத்தினவேலு முதலியாரவர்களால்
இயற்றப்பட்டது.

சுபம்!! சுபம்!!!